2834

T. N. L. A Debates

OFFICIAL REPORT

VOL: VIII NO: 3

JUNE 17th 1985


328.31 NPS
NPS 8.3
136380

வெளியீடு 31-3-1986] [Issued 31-3-1986

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஜூன் 17, 1985 - தொகுதி VIII எண் 3

Monday, the 17th June 1985 - Volume VIII No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
**Legislative Assembly, Secretariat, Fort St. George.**
**Madras - 600009**

விலை] ரூ. 3-00] [Price Rs. 3-00

D
V211.31 N85
N85-8-3

கற்பக நூலகம் ... சென்னை-600 008
136380

## உள்ளடக்கம்

| | பக்கங்கள் |
|---|---|
| 1 வினாக்கள்—விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 603—645 |
| 2 தகவல் கோரல்— | |
| (அ) சென்னைப் பெருநகர் மேம்பாட்டுக் குழுவின் முடிவுகள் | 646 |
| (ஆ) தமிழ்நாடு தேர்வாணைக் குழு 1978-79 ஆம் ஆண்டுக்கான அறிக்கையை 1985-ல் பேரவையில் வைத்திருப்பது | 646—647 |
| 3 கவன ஈர்ப்புகள்— | |
| (அ) கர்நாடக மாநிலத்தில் பயிற்சிபெற்ற ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு | 647—650 |
| (ஆ) சென்னையில் உள்ள ஓட்டல்களில் விற்கப்படும் உணவுப் பொருட்களின் விலை யேற்றத்தால் ஏற்பட்டுள்ள நிலை | 651—652 |
| 4 வரவு-செலவுத்திட்டம், 1985-86, வாக்கெடுப்பு —தொடர்ச்சி | 662—675, 678—735 |
| கோரிக்கை எண் 35—நுகர்பொருள் வழங்கல் | 652, 653, |
| மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு | 718—735 |
| திரு. எ. தெய்வநாயகம் | 653—657 |
| *திரு. சா. ஞானசுந்தரம் | 657—662 |
| *திரு. ச. குமரகுருபர ராமநாதன் | 662—668 |
| டாக்டர் கே. சமரசம் | 668—675 |
| *திரு. தோ. வீரய்யன் | 678—686 |
| *திரு. எப். எம். இராசரத்தினம் | 686—690 |
| *திரு. டி. தீர்த்தகிரிகவுண்டர் | 690—701 |
| திரு. எஸ். என். இராமசாமி | 701—704 |
| திரு. மா. சின்னராசு | 704—711 |
| *திரு. எஸ். சிவராமன் | 711—718 |
| 5 அறிக்கை அளித்தல்— | |
| சென்னைப் பெருநகர் மேம்பாட்டுக் குழுவின் முடிவுகள் | 675—678 |
| 9 பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | 736 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1985, ஜூன் 17, திங்கட்கிழமை.

ஆனி 3, குரோதன—திருவள்ளுவர் ஆண்டு-2016.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

"செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்"

செவிக்குக் கேள்வியாகிய உணவு இல்லாதபோது, அதற்குத் துணையாக உடலை ஓம்புமாறு வயிற்றிற்கும் சிறிது உணவு தரப்படும்.

## 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### தொழிலாளர் பணியினை நிரந்தரமாக்கல்.

**294—(* வினா எண் 65)—திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இரண்டாண்டுகளில் 480 நாட்கள் பணிபுரியும் தொழிலாளியை நிரந்தரமாக்க வேண்டும் என்ற சட்டம் எப்பொழுது முதல் அமல்படுத்தப்பட்டது ?

(ஆ) இதனைக் கடைபிடிக்காத நிறுவனங்கள் யாவை ?

(இ) அவைகளின் மேல் அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** தலைவர் அவர்களே, (அ) தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுதியை அளித்தல்) சட்டம், 1981, 1—1—1982 முதல் இம்மாநிலத்தில் அமலுக்கு வந்தது.

(ஆ) மற்றும் (இ) : நிறுவனத்தாரர்களின் கோரிக்கைகளின் மேல், அவர்கள் அரசிற்கு சமர்ப்பிக்கும் இச்சட்ட சம்பந்தமான வருடாந்திர அறிக்கையின் கெடுவினை 31—12—1984 வரை தள்ளி வைத்தது. மேலும், இச்சட்டத்தினை எதிர்த்து சில நிறுவனங்கள்

உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தன. 5—2—1985-ல் நீதிமன்றமும் சட்டத்திற்கு பாதகமான தீர்ப்பினை அளித்ததால், அதன்மீது உச்சநீதிமன்றத்தில் அரசு மேல்முறையீடு தொடர உள்ளது. மேற்கண்ட காரணங்களினால், இச்சட்டத்தினை முழுமையாக அமல்படுத்த இயலவில்லை. எனவே, இச்சட்டத்தினைக் கடைப்பிடிக்காத நிறுவனங்களின் பெயர்ப் பட்டியலைச் சேகரிக்க தொழிலாளர் துறை ஆணையர் தேவையான நடவடிக்கை எடுத்து வருகிறார்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லக்கூடிய நேரத்தில் 1—1—1982 முதல் இந்தச் சட்டத்தை அமல்படுத்துவதற்கு முயற்சி எடுத்ததாகச் சொல்லப்பட்டது. ஆனால் அரசு நிறுவனங்களில் குறிப்பாக, எலக்ட்ரிசிடி போர்டு. டிரான்போர்ட் கார்ப்பரேஷன் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களான ஸ்பின்னிங் மில்ஸ், ரப்பர் கழகம் போன்ற அரசு நிறுவனங்களில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் 480 நாட்கள் பணிபுரிந்ததற்குப் பிறகும், அவர்கள் நிரந்தரம் ஆக்கப்படவில்லை என்பதைப் பற்றி அரசினுடைய கவனத்திற்குப் பல முறையீடுகள் மூலமாகக் கொடுத்ததற்குப் பிறகும், அவர்களை நிரந்தரம் ஆக்குவதற்கான எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே இதுபற்றி அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அப்படி என்றால், அந்த நிறுவனங்களில் இந்தச் சட்டத்தை அமல் படுத்துவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபடி, அப்படிப்பட்ட நிறுவனங்களில் படிப்படியாக இன்றைக்கு நிரந்தரமாக்கப்பட்டு வருகிறார்கள். இந்தச் சட்டத்தின்படி இதுவரையில் 22,600 தொழிலாளர்கள், பல்வேறு நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்பட்டு இருக்கிறார்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, உயர் நீதிமன்றத்தினுடைய ஒரு தீர்ப்பின் காரணமாக இதை அமல் படுத்த முடியாத ஒரு நிலை ஏற்பட்டு இருக்கிறது என்றும்,





ஆகவே இதைப் பற்றி உச்சநீதிமன்றத்தில் அப்பீல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும் சொல்லியிருக்கிறார்கள். உயர்நீதி மன்றத்தினுடைய தீர்ப்பின் காரணமாக பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டது மட்டுமல்லாமல், ஒருபுறத்திலே உச்சநீதிமன்றத்திலே அப்பீல் செய்ய இருந்தாலும், அவசரமாக ஒரு ஆர்டினன்ஸ் கொண்டு வந்து, இந்தச் சட்டத்தின் மூலமாகத் தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகள், பாதுகாப்புகள் போன்றவைகளைக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்ப்பிலே இரண்டு அம்சங்கள் இருக்கின்றன. சில அடிப்படைச் சட்ட நுணுக்கங்களைப் பற்றி இந்தத் தீர்ப்பு வந்திருக்கிறது. இது சம்பந்தமாக இன்றைக்கு சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்ய அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. பிறிதொரு விளக்கம் இந்தச் சட்டத்திலே 3, சப்-கிளாஸ் 2-ன் கீழ் வரும் விளக்கங்கள் முக்கிய பிரிவு விளக்கமாகச் சொல்லப்பட்டு விட்டதால், இது சம்பந்தமாக பொருள் விளக்கம் கிளாஸ் 3(2) எக்ஸ்பிளனேசன் தேவையற்றது என்றும், ஒப்பந்தங்கள் மற்றும் தொழிலாளர்கள் நீதிமன்றத்தின் தீர்ப்பு ஆகியவை இந்தச் சட்டத்தின் பிரிவு 3, சப்-கிளாஸ் 1-ன்படி பாதிக்காது என்றும் நீதிமன்றம் கூறியிருக்கிறது. இது தவிர, மேலே கிளாஸ் 3(2)-லே உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பைக் கருத்தில் கூட்டத் தொடரிலேயே—இன்றைக்கு அவசரச் சட்டம் என்பதை கொண்டு தேவையான திருத்தங்களை இந்த சட்ட மன்றக் கூட்டத் தொடரிலே கொண்டுவர இருக்கிறோம்.

**திரு. மா. சின்னராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்த சிறந்த தொழிலாளர் நலச் சட்டத்தின் மூலம் தொழிலாளர்கள் பெரிதும் பயன் அடைவார்கள் என்பது உண்மை. ஆனால் இந்தச் சட்டத்தை அறிமுகப்படுத்தியதற்குப் பின் இதிலே நிரந்தரம் ஆக்கப்பட வேண்டிய கட்டாயம் வரும் என்று கருதி பல தொழில் நிறுவனங்கள் நான்கு ஆண்டுகள், ஐந்து ஆண்டுகள் என்று வேலை செய்த தொழிலாளர்களை

[1985 ஜூன் 17

நிரந்தரம் ஆக்காது 50, 100, 200 என்ற அளவில்கூட வேலையில் இருந்து எந்தவிதமான முன்னறிவிப்பும் இல்லாமல் நீக்கி விடுகிறார்கள். அப்படிப்பட்ட புகார்கள் வருகிற இடத்தில் அதைப்பற்றித் தனியாக அரசு, அதிகாரிகள் மூலம் விசாரித்து உடனடியாக மீண்டும் அவர்களை வேலையில் அமர்த்த வேண்டும் என்கிற உறுதியினை இந்த அவைக்கு முடிவதற்குள் வழங்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன தகவல்களை அரசு தீவிரமாகச் சேகரித்துக் கொண்டு வருகிறது. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு வந்த பிறகு உரிய நடவடிக்கைகள் எடுத்து பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு நிச்சயம் பாதுகாப்புக் கொடுக்கும்.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிலாளர் நலச் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பித்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக பல தொழிற்சாலைகளில் பயிற்சியாளர்கள்—அப்ரண்டிஸ்—என்று நான்கு ஆண்டுகள் ஐந்து ஆண்டுகள் வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அதைக் கட்டுப்படுத்த இந்தச் சட்டத்தில் வழிவகைகளைச் செய்ய அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட நிலையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் சட்டம் கொண்டுவரப்பட்டது. அதனைத்தான் இன்றையதினம் சென்னை உயர்நீதிமன்றம் சரியில்லை என்று தீர்ப்பு கூறியிருக்கிறது. அதை அமல் நடத்த வேண்டும். தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில்தான் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் அரசு இன்றைக்கு உச்சநீதிமன்றத்தில் அப்பீல் செய்து இருக்கிறது.

**திரு. எஸ். என். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்தில் மூன்று, நான்கு ஆண்டுகள் அப்ரண்டிஸ் ஆகப் பணியாற்றுகிறவர்களை உடனடியாக



1985 ஜூன் 17]

நிரந்தரப் பணியாளர்களாக ஆக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சரியான தெளிவான தகவல்களைக் கொடுத்தால் அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. கு. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உயர்நீதி மன்றத்தால் தள்ளிவிடப்பட்ட பல்வேறு மிக முக்கியமான ஜீவனான சரத்துக்களை இந்த சட்டமன்ற கூட்டத் தொடரிலேயே திருத்த இருக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். அதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் இந்தச் சட்டம் வந்ததாகச் சொல்லப்படுகிற 1—1—1982-க்குப் பின்னர் பவானி அருகிலே கந்தசாமி ஸ்பின்னிங் மில்லில் ஏறத்தாழ 450 தொழிலாளர்கள் டெம்பரரியாக ஆறு ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியவர்கள் இருக்கிறார்கள். அப்படி இருந்தும் அவர்களை பர்மனென்ட் ஆக்க வேண்டும் என்று கோரிக்கை அரசுக்கு வந்தும் அவர்கள் ஏன் பர்மனென்ட் ஆக்கப்படவில்லை என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இப்படிச் சொல்கிறார்கள், நிர்வாகம் இல்லை என்று சொல்கிறார்கள். இது விவாதத்திற்கு உரிய பிரச்சினை. உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. வி. தங்கவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு போக்குவரத்துக் கழகங்கள், மின்சாரத் துறை மற்றும் இருக்கக் கூடிய தொழில் துறைகளில் ஒப்பந்தத் தொழிலாளர்கள் என்று சொல்லக்கூடிய 'Private Contract labourers' என்ற இவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழக்கூடிய தொழிலாளர்கள். வாழ்நாள் பூராவும் ஒப்பந்தத் தொழிலாளர்களாகவே இருந்து கொண்டு இருக்கிறார்கள். இவர்களை நிரந்தரம் செய்வதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆர். தியாகராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பஸ் நிறுவனங்களில் இந்த 480 நாட்களுக்குள்ளாகவே அவர்களை நிறுத்திவிடுகிறார்கள். அவர்களை பர்மனென்ட் ஆக்க வேண்டுமே என்ற காரணத்திற்காகவே அவர்களை நிறுத்திவிடுகிறார்கள். அதற்காகத் தனியாருக்கும் அரசுத் துறைக்கும் சேர்ந்து அந்த 480 நாட்களுக்குள் காரணம் இல்லாமல் நிறுத்திவிடுபவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற நல்ல முறையைப் பின்பற்றி அவர்களை நிரந்தரம் ஆக்க அரசு எப்போது நடவடிக்கை எடுக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் உணர்வுகள் பரிசீலிக்கப்படும்.

## கரும்புச் சக்கையிலிருந்து காகிதம் தயாரித்தல்.

295—(* வினா எண். 449)—**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கரும்புச் சக்கையிலிருந்து காகிதம் தயாரிக்கும் தொழிலைத் தனியார் துறையில் நிறுவ மத்திய அரசு அனுமதி அளித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு சார்பில் அமைக்கப்படவிருந்த திட்டத்தின் நிலை என்ன?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) தனியார் நிறுவனமான திருவாளர்கள் சக்தி சுகர்ஸ் லிமிடெட் கரும்புச் சக்கையிலிருந்து ஆண்டொன்றுக்கு 16,500 டன் காகிதம் தயாரிக்கும் தொழிலைச் செய்ய மத்திய அரசிடமிருந்து அனுமதி பெற்றுள்ளார்கள். இத்திட்டத்திற்கு ஆண்டொன்றுக்கு 60,000 டன் கரும்புச் சக்கை தேவைப்படும். இந்த மூலப் பொருளை, சர்க்கரை ஆலை மேற்கொள்ளவிருக்கும் விரிவாக்கத் திட்டத்தின் மூலம் பெற்றுக் கொள்ளும். இதனால





அரசின் சார்பில் ஆரம்பிக்கப்பட்ட தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் திட்டம் பாதிக்கப்படாது. ஏனெனில் இந்த அரசு நிறுவனத்திற்குத் தேவையான மூலப் பொருளை அதாவது கரும்புச் சக்கையை, சுற்றியுள்ள பெரியார், திருச்சி, சேலம், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள சர்க்கரை ஆலைகளிடமிருந்து பெற ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

(முற்பகல் 9-10)

**திரு. தி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் அரசுத் துறையைச் சேர்ந்த சர்க்கரை ஆலைகள் அதிகம் இருப்பதால் காகிதம் செய்வதற்கான மூலப் பொருளான கரும்புச் சக்கை அதிகம் கிடைக்கும் பகுதிகளில்,— குறிப்பாக வடாற்காடு மாவட்டத்தில் சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன அருகிலேயே தருமபுரியிலும் உள்ளது—அப்படிப்பட்ட மையமான இடத்தில் மேலும் அம்மாதிரி தொழிற் சாலைகளை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, இப்போதுதான் நாம் கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி, காகிதம் தயாரிக்கின்ற முதல் ஆலையைத் தொடங்கி இருக்கிறோம். அதைப் பார்த்து தனியார் துறையிலே உள்ளவர்களும் தொடங்க முன்வந்திருக்கிறார்கள். அவை இரண்டும் வெற்றி பெறுமானால், சர்க்கரை ஆலைகள் அதிகமாக இருக்கும் பகுதிகளில் அப்படிப்பட்ட ஆலைகளைத் துவங்க அரசு தயங்காது.

**திரு. உ. சுப்பிரமணியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அரசுத் துறையில் புகளூரில் ஆரம்பித்திருப்பது பெரிய தொழிற் சாலை. சக்தி சுகர்ஸூம் அந்த அளவுக்கு இருக்கும் என்று நினைக்கிறேன். ஆங்காங்கு சிறு, சிறு யூனிட்டுகளாக, கரும்புச் சக்கையிலிருந்து காகித உற்பத்தி செய்வதாக இருந்தால், அதைத் தொடர்ந்து செய்வதற்கு அரசு அங்கீகாரம் அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** பேரவைத் தலைவர் அவர்களே, புகளூரில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிற தமிழ்நாடு மில்ஸ், 50,000 டன் செய்தித் தாள் காகிதமும், 40,000 டன் அச்சிடும்

காகிதமும் தயாரிப்பதற்காக உருவாக்கப்பட்டிருக்கிற மிகப் பெரிய தொழிற்சாலை ஆகும். சக்தி சுகர்ஸ் 16,500 டன் காகிதம் தயாரிக்கக்கூடிய வகையில் சிறிய அளவிலே தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. அவை இரண்டும் வெற்றி பெற்ற பிறகு, மற்றவைகளைப்பற்றிக் கவலைப்படுவது நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஆத்தூர் பகுதியில் உடைக்கப்படும் கறுப்புக் கற்கள்.**

***296—(* வினா எண் 1405)—திரு. சி. பழனிமுத்து :*** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், பைத்தூர் மலையில் உடைக்கும் கறுப்புக் கற்கள் (Black Granite) மூலம் அரசுக்கு நடப்பாண்டில் எவ்வளவு இலாபம் கிடைத்துள்ளது?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டம் பைத்தூர் கரும்பாறை குவாரியில் 1984-85-ம் ஆண்டு கரும்பாறையை வெட்டியெடுத்து ஏற்றுமதி செய்ததின்மூலம் சுமார் ரூ. 25 லட்சம் ஆதாயம் கிடைத்துள்ளது.

**திரு. சி. பழனிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் கறுப்புக்கற்கள் எத்தனை இடங்களில் வெட்டி எடுத்து வெளிநாடுகளுக்கு அனுப்பப் படுகின்றன? தமிழகத்திலேயே முதல் தரமான கல் பைத்தூர் குவாரியிலே தான் கிடைக்கிறது. வெளிநாட்டில் அது ஒரு க்யூபிக் மீட்டர் என்ன விலைக்கு விற்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தமிழகத்தில் பல இடங்களில் கரும்பாறைகள் வெட்டி எடுக்கப்படுகின்றன. அதைப் பற்றித் தனிக் கேள்வி கோட்டால் விவரமாகப் பதில் அளிப்பதற்குத் தயாராக இருக்கிறேன். பைத்தூரிலே இருக்கிற கல் நல்ல கல். ஆகவே, அதற்கு சிறந்த விலை கிடைக்கிறது. ஒரு கன மீட்டர் 1,032 அமெரிக்க டாலருக்கு, இந்திய கணக்குப்படி 13 ஆயிரம் ரூபாய்க்கு விற்கிறது.



**திரு. சி. பழனிமுத்து :** தமிழகத்தில் இதுபோன்ற கறுப்புக் கற்களை எல்லாம் அரசே வெட்டி எடுக்க முடியாத அளவுக்கு இருக்கிற காரணத்தால், தனியார்களுக்கு, ஒரு க்யூபிக் மீட்டருக்கு இவ்வளவு என்று கூலியாகக் கொடுத்து, தமிழக அரசு அதை எடுத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, எல்லா இடங்களிலேயும் தமிழக கனிம வள நிறுவனமே எல்லாக் கற்களையும் வெட்டி எடுப்பதில்லை. சில இடங்களிலே, சிறிய சிறிய பாறைகள் இருக்கின்ற இடங்களில், தனியார்களுக்கு கூலி அடிப்படையில் கொடுப்பதற்குக் கூட அனுமதி அளிக்கப் படுகிறது.

**திரு. கோ. இரகுபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கனிம வளத்தின் மூலமாகக் கிடைக்கின்ற கற்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு நமது அரசு தடை செய்திருப்பதாகத் தெரிகிறது. அப்படி இருக்கின்ற அந்தத் தடையை நீக்கி, அந்தத் துறையின் மூலமாக வருகின்ற வருமானத்தைப் பெருக்குவதற்கு உண்டான யோசனை அரசுக்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்கு எந்தத் தடையையும் அரசு விதிக்கவில்லை. தமிழ்நாடு கனிம வளத்தின் மூலமாக ஏற்றுமதி செய்யப்படுகிறது ; தனியார் துறைக்கு இது விடப்படவில்லை.

**திரு. ச. கோவிந்தசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், பூளாம்பட்டிக் கிராமத்தில் சிறிய கறுப்புக் கற்களைச் சாணை பிடித்து குடிசைத் தொழிலாகச் செய்து திருச்சி, ஜெய்ப்பூர் போன்ற இடங்களில் விலைக்கு வாங்கி வெளிநாட்டுக்கு அனுப்பப் படுகிறது. இதனால் அவர்களுக்குச் சரியான விலை கிடைப்ப தில்லை. அந்தக் கவனத்திற் கொண்டு அவர்களுக்குச் சரியான விலை கிடைக்க அரசு நடவடிக்கை யெடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** பேரவைத் தலைவரவர்களே, அதுபற்றி அரசு ஆலோசிக்கும்.

திரு. மு. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டில் கிடைக்கும் இந்தக் கறுப்புக் கற்கள் பொதுத் துறை நிறுவனமான கனிம வள நிறுவனத்தின் மூலமாக ஆண்டுக்கு எவ்வளவு வெட்டியெடுக்கப்படுகிறது ? அதேநேரத்தில் தனியார் எத்தனை பேருக்கு இதற்கு அனுமதி வழங்கப் பட்டிருக்கிறது ? லாபகரமாக இயங்கும் இந்தத் தொழிலை முழுவதுமே எதிர்காலத்தில் அரசே ஏற்று நடத்துவதற்கு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தனிக் கேள்வி போடவும்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கிரானைட் ஸ்டோன் என்று சொல்லப்படும் கறுப்புக் கற்கள் வெளிநாடுகளில் மிகுந்த வரவேற்பைப் பெற்றிருப்பதோடு மட்டும் அல்லாமல், ஜப்பான் போன்ற நாடுகளில் உள்ள தனி நபர்கள் தங்களுடைய உயிலில் கூட, நான் இறந்துவிட்டால் எனக்கு எழுப்பப்படும் நினைவுச் சின்னம் இந்தியாவிலிருந்து வருகின்ற கறுப்புக் கற்களால் எழுப்பப்பட வேண்டும் என்று சொல்லுகின்ற அளவிற்கு இந்தக் கறுப்புக் கல் உலகப் பிரசித்தி பெற்றிருக்கிறது. ஒரு தொழிற்சாலையின் மூலமாகவே ஆண்டுக்கு 25 இலட்சம் ரூபாய்க்கு மேல் சம்பாதிக்கப்படுகிறது என்று இங்கே தெரிவிக்கப்பட்ட அந்தத் தகவலின் அடிப்படையில், அரசுக்கு இருக்கின்ற நிதி நிலைமையை உத்தேசித்து அரசே இந்தத் தொழில் முழுவதையும் எடுத்துக் கொண்டு சீர்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அரசுதான் அதை மேற்கொண்டு இருக்கிறது ; இதைச் சீர்படுத்திக் கொண்டு வருகிறது.

**திரு. உ. சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கறுப்புக் கற்களுக்கான கட்டிங் அண்ட் பாலிஷிங் யூனிட்டை ஹாரபருக்குப் பக்கத்தில் அமைத்து அது வேலை செய்யத் தொடங்கிவிட்டதா ? அப்படியென்றால் சேலம் போன்ற இடங்களில் இருந்து கொண்டுவர வேண்டுமென்றால் செலவு அதிகமாக இருப்பதால், ஆங்காங்கு பெரிய கற்களை வெட்டுகின்ற



குவாரிகள் இருப்பதால், அங்கே கட்டிங் அண்ட் பாலிஷிங் யூனிட்டை அமைப்பதற்கான உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டிங் அண்ட் பாலிஷிங் யூனிட்டிற்கு இங்கே நமது துறைமுகத்திற்குப் பக்கத்தில், இ.ஸி.சி. என்ற நிறுவனம் மிக அழகாகக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். திட்டமிட்டு கட்டப்பட்டுக் கொண்டு வருகிறது. அது ஏன் துறைமுகத்திற்குப் பக்கத்தில் அமைக்கப்படுகிறது என்றால், அந்தக் கல் பாலிஷ் செய்யப்பட்ட பிறகு மெல்லிதாகப் போகிறது, அப்படிப்பட்ட கல் வெளியூர்களிலிருந்து லாரிகளின் மூலமாகவோ அல்லது மற்ற வகைகளிலோ வரும் நேரத்தில் அதன்மீது கோடு விழுந்துவிட்டால்கூட வெளிநாட்டினர் வாங்க மாட்டார்கள் ; தவறிக் கொஞ்சம் உடைந்துவிட்டால் வாங்க மாட்டார்கள். இங்கே இருந்து கப்பலில் அனுப்புகின்ற நேரத்தில் வெளிநாட்டுத் துறைமுகத்தில் இறங்குகின்ற நேரத்தில்கூட ரிஜெக்ட் செய்கின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். ஆகவேதான், அது துறைமுகத்திற்குப் பக்கத்தில் இருக்க வேண்டியதாக இருக்கிறது. எட்டு அடி பத்து அடி கனம் உள்ள கற்களை ஆறு இஞ்ச் அல்லது ஆறு சென்டி மீட்டர் கனம் உள்ள அளவிற்கு மெல்லியதாக அறுக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் விசிட்டிங் கார்டுகூட செய்கின்ற அளவிற்கு அவ்வளவு மெல்லிதாக அறுக்க முடிகிறது. அந்த இயந்திரம் ஜெர்மானிய நாட்டிலிருந்து வந்திருக்கிறது. அது வைக்கப்பட்ட பிறகு நீங்களெல்லாம் பார்க்கலாம். எண்ணூரிலேதான் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த வகையில் ஆங்காங்கு இவ்வாறு வைப்பது கடினம். அப்படி வைத்தாலும் அது போய்ச் சேருகின்ற பொழுது நமக்கு உரிய விலை கிடைக்காது. ஆகவே, துறைமுகத்திற்குப் பக்கத்திலே அது போடப்பட்டிருக்கிறது.

## சின்னசேலம் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி

297—(*வினா எண் 965)—**திரு. எஸ். சிவராமன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம் சின்ன சேலம் அரசு (ஆண்கள்) மேல் நிலைப்பள்ளி மாணவர்கட்கு போதிய இடவசதி இல்லை என்பது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, (அ) தெரியாது.

(ஆ) எழாது.

**காட்டுமன்னார் கோயில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி.**

298—(*வினா எண் 1369)—**திரு. சா. ஜெயச்சந்திரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார்கோயில் அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக உயர்த்த அரசு உத்தேசித்து உள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, இல்லை.

**கோத்தகிரியில் கலைக் கல்லூரி.**

299—(*வினா எண் 1035)—**திரு. எம். சிவக்குமார்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோத்தகிரியில் கலைக்கல்லூரி அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, இல்லை.

(முற்பகல் 9-20.)

**திரு. கே. உச்சி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, கோத்தகிரி போன்ற பகுதிகள் இன்னும் மிகவும் பிற்போக்கான நிலையில் இருக்கின்றன; கல்வியில் அதிக அளவில் முன்னுக்கு வரவில்லை. கோத்தகிரியிலும்சரி, அதே மாதிரி கூடலூரிலும்சரி, ஒவ்வொரு கலைக் கல்லூரியை ஏற்படுத்த அரசு மறுபரிசிலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசின் சார்பில் அப்படி ஒரு கலைக் கல்லூரி ஆரம்பிக்கின்ற உத்தேசம் இல்லை. கடந்த 9 ஆண்டுகளாகவே





நாம் கலைக் கல்லூரிகளை ஆரம்பிப்பதில்லையென்கிற ஒரு முடிவு எடுத்து, அரசின் சார்பிலே எந்தக் கலைக் கல்லூரியையும் ஆரம்பிக்கவில்லை. சிதம்பரத்திலே மட்டும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலேயிருந்து பட்ட வகுப்புகளை நாம் எடுத்ததன் காரணமாக, அங்கே ஒரு கலைக் கல்லூரியை அரசின் சார்பிலே ஆரம்பித்திருக்கிறோம்.

**திரு. எம். சிவக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கோத்தகிரியில் கலைக் கல்லூரியை அமைப்பதற்கு இயலாது என்று சொல்லி விட்டார்கள். ஏறத்தாழ 7 உயர்நிலைப் பள்ளிகளும் 3 மேல்நிலைப் பள்ளிகளும் இருக்கின்றன. அங்கே சுற்று வட்டாரத்தில் கல்லூரிக் கல்விக்கு வாய்ப்பு இல்லாத காரணத்தால் அங்கு ஒரு பாலிடெக்னிக் அமைக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, கோத்தகிரியில் நாம் அரசின் சார்பிலே ஆரம்பிக்க இயலாது என்றுதான் கூறினேனே தவிர, தனிப்பட்டவர்கள் ஆரம்பிக்க முன்வந்தால் அதுகுறித்து அரசு பரிசீலிக்கும். பாலிடெக்னிக் பொறுத்தமட்டில், நீலகிரியைச் சேர்ந்த படகர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு பாலிடெக்னிக் தொடங்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். கோத்தகிரியில் ஆரம்பிக்க அவர்களுக்கு உத்தேசம் இருக்கிறது. ஒருவேளை அந்த முயற்சி வெற்றி பெறுமேயானால் கோத்தகிரியில் ஒரு பாலிடெக்னிக் வரும்.

**திரு. மு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் அங்கீகாரம் பெறாத ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் பல தோன்றியிருப்பது இந்த அரசுக்குத் தெரியுமா? அவ்வாறு இருந்தால் இனிமேல் அவ்வாறு தொடங்காமல் இருக்க அரசு வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அங்கீகாரம் பெறாமல் பல பேர்கள் ஆரம்பித்து பரீட்சை எழுதுவதற்கும் அதற்கு ஒரு தற்காலிக அங்கீகாரம் பெறுவதற்குமான வகையிலே பயன்படுத்திக் கொள்கிறார்கள். அரசு அதை எதிர்க்கிறது. மேற்கொண்டு

சட்டப்பூர்வமாகவும் நிர்வாகப் பூர்வமாகவும் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை எடுத்துத் தடுக்க நாங்கள் உத்தேசித்திருக்கிறோம்.

**திரு. எம். சிவக்குமார்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் துறையின் மூலம் கோத்தகிரியில் பாலிடெக்னிக் அமைக்க முயற்சி இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனது தொகுதி மக்களின் சார்பாக நான் அமைச்சர் அவர்களுக்கு நன்றியைச் சொல்லிக் கொள்கிறேன்.

(பதில் இல்லை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வினா எண்கள் 300 மற்றும் 301 கடைசியில் எடுத்துக்கொள்ளப்பெறும்.

### மோட்டார் சைக்கிள் ஓட்டுபவர்களுக்கு தலைக்காப்பு.

302—(* வினா எண் 745)—**திரு. எஸ். இராசாராமன்** : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மோட்டார் சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர் ஓட்டுபவர் கட்டாயம் தலைக்காப்பு **(Helmet)** அணிய வேண்டும் என அரசு ஆணை ஏதும் பிறப்பித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது முதல் செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி**: தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) மோட்டார் சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர் ஆகியவற்றை ஓட்டுபவர்களும் அவற்றின் பின்னால் அமர்ந்து செல்பவர்களும் இந்தியத் தர நிர்ணயக் கழகத்தினால் அறுதியிடப்பட்டுள்ள தரங்களின்படி செய்யப்பட்டுள்ள தலைக் கவசங்களைக் கட்டாயம் அணிய வேண்டுமென்பதற்கு வகை செய்வதற்காக 8—3—1985 ஆம் நாளும் 567 (நிலை) எண்ணும் கொண்ட உள்துறை அரசாணையின் மூலம் 1940 ஆம் ஆண்டையத் தமிழ் நாட்டு இயக்கூர்திகள் விதிகளில் 449-ஏ என்ற புதிய விதி சேர்க்கப்பட்டுள்ளது.

**திரு. சா. துரைசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹெல்மெட் அணியாதவர்களுக்குத் தண்டனை வழங்குவதாக அறிவித்து இருக்கிறார்கள். அந்தத் தண்டனைக்குப் பதிலாக ஹெல்மெட் அணியாமல் பயணம் செய்பவர்களிடம் கட்டாயமாக ஹெல்மெட் வாங்குவதற்குண்டான தொகையை வசூலித்து அந்த ஹெல்மெட்டை வாங்கி அவர்களுக்கே வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா? அதே போல சாதாரணமான லைட் வெஹிகில்சுக் கெல்லாம் ஹெல்மெட் போட வேண்டுமென்று சொல்கிறார்கள். அதை பெங்களூர் மாநகராட்சிலேகூட கடைபிடிப்பதில்லை. எனவே, லூனா போன்ற சாதாரண வண்டிகளுக்கு ஹெல்மெட் அணிய வேண்டுமென்று சட்டத்தின் மூலம் கட்டாயப்படுத்தித் தண்டிக்கப்படுவது தடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி**: தலைவர் அவர்களே, அரசாங்கமே ஹெல்மெட்டைக் கொடுத்து மாட்ட வேண்டுமென்று சொல்வது கொஞ்சம் கடினமான காரியம் என்று கருதுகிறேன். நாம் எதையும் கட்டாயப்படுத்த முடியாது. அவர்களுக்காகவே அவ்வாறு அணிந்தால்தான் நல்லது, ஆபத்து இல்லாமல் இருக்கும் என்று தெரியவேண்டும். இதற்கெல்லாம் அரசாங்கம் கட்டாயப்படுத்த வேண்டிய நிலை இங்குதான் இருக்கிறது. எனவே, அவர்களிடம் பணத்தை வசூலித்து ஹெல்மெட் வாங்கிக் கொடுக்க வேண்டுமென்பதைவிட, தண்டனை கொடுப்பதன் மூலம் அவர்களுக்கு வாங்க வேண்டுமென்ற உணர்வு வரவேண்டும். அது மட்டுமல்ல. சிறிய வாகனங்கள் அதாவது ஒரு ஹார்ஸ் பவருக்கு கீழே உள்ள வாகனங்களுக்கு இந்த ஹெல்மெட் அவசியமில்லை என்ற கருத்து ஏற்கனவே சொல்லப்பட்டது. அது ஆய்வு செய்யப்பட்டு, அதைப்பற்றி மருத்துவர்களின் கருத்தைக் கேட்டபோது, அவர்களுக்கும் விபத்து ஏற்பட்டு, தலையிலே அடிபட்டு, இறந்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, அதுவும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆனால் எதிர்காலத்திலே இதிலே சிரமம் வருமானால், அப்போது அதைப்பற்றி ஆய்வு செய்யலாம் என்று கருதுகிறேன்.

**திருமதி பா. வளர்மதி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மோட்டார் சைக்கிள்களில் பின்னால் உட்கார்ந்து செல்லும் பெண்களும் ஹெல்மெட் அணிய வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று பெண்கள் கருதுகிறார்கள். ஆக, பெண்களுக்கு விதிவிலக்கு அளிக்கும் திட்டம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, கீழே விழுந்தால் பெண்களுக்கும் அடிபடும் என்று நான் கருதுகிறேன். ஆனால், இருக்கின்ற உணர்வுகளை நாம் மதிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. பல இடங்களிலே பெண்கள் என்னிடம் பேசுகின்றபோது, சில இடங்களில் பெண்கள் ஹெல்மெட் அணிவதிலே சிரமம் இருக்கிறது, அவர்கள் அதை விரும்பவில்லை என்று சொன்னார்கள். சில திட்டங்களை விரும்பவில்லை என்று சொன்னாலும், அதைக் கொண்டு வரவேண்டிய அவசியம் இருப்பதை நீங்கள் நிச்சயமாக ஒப்புக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன். ஆனால், இதிலே மட்டும் பெண்கள் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்து, அவர்கள் சம்பந்தப்பட்ட, அவர்கள் சார்பாகப் பேசும் நிறுவனங்கள் இருக்கின்றன. அவர்கள் யாரையாவது அழைத்துப் பேசியவுடன் முடிவெடுக்கலாம் என்று ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம். ஒரு மாத காலம் அவகாசம் கொடுத்து, கட்டாயம் அணிய வேண்டுமென்ற நிலை இப்போது வந்திருக்கிறது. அதற்குள் அவர்களை அழைத்துப் பேசி, அதிலே ஒரு முடிவெடுத்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, ஹெல்மெட் அணிய வேண்டுமென்ற சட்டம் பிறப்பித்து மூன்று மாதங்களுக்குமேல் ஆகியும்கூட இன்னும் பல பேர்கள் அணியாமல் பயணம் செய்வதைப் பார்க்கிறோம். இந்தச்சட்டத்தைக் கடுமையாக்கி அரசு என்னென்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது? ஹெல்மெட் விநியோகத்தில் பல கம்பெனிகள் இன்றைக்கு முளைத்து, தரமில்லாத ஹெல்மெட்டுகளை விற்பனை செய்வதன் காரணமாக அதை வாங்கி அணிந்தவர்களும் விபத்துக்குள்ளாகும் நேரத்தில் தலையிலே காயம் ஏற்பட்டு இறந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. எனவே, இதன் தரத்தை நிர்ணயிப்பதற்கு, தரமான ஹெல்மெட்டுகளை வழங்குவதற்கு அரசாங்கம் என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறது?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, இந்த விதி கொண்டு வரப்பட்டு, அதற்குப் பின்னால் ஒரு மாத காலம் அவகாசம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த ஒரு மாத காலம் இன்னும் முடிவடையவில்லை. அதற்குக் காரணம், அவர்களுக்கு நல்ல ஹெல்மெட்டுகள் கிடைக்க வேண்டுமென்பதற்காக, உடனே இந்தத் திட்டத்தை அமுல் நடத்தினால், அதனுடைய விலை ரூ. 50 லிருந்து ரூ. 100, ரூ. 150 என்று உயர்ந்துவிடும். எனவே கால அவகாசம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதிலே தரத்தைப் பற்றி, மத்திய அரசு தர நிர்ணயக் கழகம் சொல்லியிருக்கிறது. அவர்கள் எதையெல்லாம் அப்ரூவ் செய்திருக்கிறார்களோ, அதை வாங்கி உபயோகப்படுத்த வேண்டும். மற்றவற்றை வாங்கினால், அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.



**திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஹெல்மெட்டை உடனே அணிய வேண்டுமென்பதற்காக அரசு உத்தரவு போட்டிருக்கிறது. இந்த ஹெல்மெட்டின் விலை டெல்லியிலும், அதற்கு அருகாமையிலுள்ள அரியானாவிலும் கிட்டத்திட்ட ரூ. 40 லிருந்து ரூ. 50 வரை இருக்கிறது. ஆனால், அரசு உடனடியாக அணிய வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்திருப்பதினால், அதைப் பெரிய அளவில் அங்கிருந்து கொண்டு வந்து வியாபாரிகள் ரூ. 170, ரூ. 200 வரை விற்று கொள்ளை இலாபம் அடிக்கின்றார்கள். ஆகவே, ஹெல்மெட்டுகளை அரசே நியாய விலையில் விநியோகிக்கின்ற திட்டத்தை அரசு பரிசீலிக்குமா என்று கேட்பதோடு, கொண்டை போட்டுக் கொண்டிருக்கும் பெண்களுக்கு, அவர்களின் வசதிக்கேற்ப ஒரு தனியான ஹெல்மெட்டை, ஒரு மாடலை ஏற்படுத்துவதற்கு இந்த அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, நியாய விலையில் அரசே கொடுப்பது என்பது கடினம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதிலே கொஞ்சம் அக்கறை காட்டி, ஒருசில குறிப்பிட்ட பகுதிகளிலாவது பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டுமே தவிர, அரசாங்கமே பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டுமென்பது இயலாத காரியம். அரசாங்கம் விலையைக் குறைக்க வேண்டுமென்பதற்காகத்தான் ஒரு மாத காலம் அவகாசம் கொடுத்திருக்கிறோம். இந்த கால அவகாசத்தைப் பயன்படுத்தி, பக்கத்திலே பெங்களூரிலே விலை மலிவாக இருக்கின்றது என்று சொல்லுகிறார்கள், அப்படியெல்லாம் வாங்கிக் கொள்வதற்கு அவகாசம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு பழமொழி சொல்வார்கள், 'காலுக்குத் தகுந்தாற்போல் செருப்பு இருக்க வேண்டும்; செருப்புக்குத் தகுந்தாற்போல் கால் இருக்க முடியாது' என்று.

அதைப்போல ஹெல்மெட்டுக்கு ஏற்ப கொண்டையை மாற்றிக் கொள்ள வேண்டுமே ஒழிய, கொண்டைக்கு ஏற்ப ஹெல்மெட் செய்வது என்பது கடினமான காரியம். அது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். எனவே, அதுபற்றிய யோசனை அரசாங்கத்திடம் இல்லை.

**தென்னாற்காடு—தஞ்சை இணைப்புப் பாலம்.**

303—(*வினா எண் 837)—**திரு. சா. ஜெயச்சந்திரன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு, தஞ்சை மாவட்டங்களை இணைக்கும் வகையில் காட்டுமன்னார்கோயில் வட்டம், முட்டம் கிராமத்துக்கு நேராக கொள்ளிடத்தின் குறுக்கே பாலம் ஒன்று கட்டுவது சம்பந்தமாக அரசு பரிசீலித்து வருகிறதா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, இல்லை.

(முற்பகல் 9-30)

**திரு. சா. ஜெயச்சந்திரன் :** தலைவர் அவர்களே, காட்டுமன்னார் கோயிலிலிருந்து தஞ்சாவூருக்குச் செல்லவேண்டுமென்றால் கொள்ளிடம் கரையைக் கடந்துதான் செல்ல வேண்டியுள்ளது. காட்டுமன்னார்கோயில் தென் ஆற்காடு மாவட்டத்திலே கடை கோடியிலே ஒரு பகுதியாக இருக்கிறது. அங்கே 3 லட்சம் மக்கள் வசித்து வருகிறார்கள். தஞ்சாவூர் மாவட்டத்திலே பேப்பர் மில் இருக்கிறது, அதற்குப் பக்கத்திலே சர்க்கரை ஆலை இருக்கிறது. ஆகவே இங்கிருந்து 3 லட்சம் மக்களில் அதிகபட்சமான மக்கள் தஞ்சாவூர் மாவட்டத்திலேதான் பழக்கவழக்கங்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே முட்டம் கிராமத்திற்கு நேராக கொள்ளிடத்தின் குறுக்கே பாலம் அமைக்கும் திட்டம் 1965 ஆம் ஆண்டிலிருந்து கட்டுவதற்கு முயற்சிக்கப்பட்டு கைவிடப்பட்டது. எனவே மீண்டும் அதை அமல்படுத்த அரசு முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, அதனுடைய முக்கியத்துவத்தை அரசாங்கம் உணர்ந்திருக்கிறது. அதற்காக 6 கோடி ரூபாய் செலவாகும் என கணக்கு கொடுத்திருக்கிறார்கள். அதன் காரணத்தினால் காலதாமதம் ஆகிக் கொண்டிருக்கிறது. எதிர்காலத்திலே நிதிநிலையைப் பொறுத்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.



**குளச்சல்—சைமன்காலனி இணைப்புப் பாலம்.**

304—(*வினா எண் 849)—**திரு. எப். எம். இராசரத்தினம் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில், குளச்சல்-சைமன்காலனி இணைப்புப் பாலம் கட்டும் பணி அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதுபற்றிய விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடும், குளச்சல் சைமன்காலனி இணைப்புப்பாலத்தை திரும்பக்கட்டும் பணிக்கு அரசின் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, விரிவான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. விரிவான மதிப்பீட்டிற்கு அங்கீகாரம் அளித்தவுடன், ஒப்பந்தப் புள்ளிகள் வரவழைக்கப்பட்டு, முடிவுசெய்தபின் பணியினைத் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. எப். எம். இராசரத்தினம்:** தலைவர் அவர்களே, நீண்ட நெடுங்காலமாக அந்தப் பகுதி மக்கள் வேண்டிவிரும்பிக் கேட்டுக் கொண்டிருக்கக்கூடிய மிக முக்கியமான பிரச்சினை இது. எனவே இதை விரைவிலே முடித்துத் தருவதற்கு உத்தரவிட்டதற்காக நான் முதற்கண் அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பாலம் இரண்டு கிராமங்களை இணைக்கின்ற பாலமாக மட்டுமல்ல. கன்னியாகுமரி—திருவனந்தபுரம் கடற்கரைச் சாலையிலே மிக முக்கியமான பாலமாக இருப்பதால் இதைச் சிறப்புப் பணியாகக் கருதி விரைவிலே முடிப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பிப்பார்களா ? இந்த இணைப்புப் பாலம் கட்டுகிற பணியை அரசு எப்போது ஆரம்பிக்கும் ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, விரைவாக நடவடிக்கை எடுக்கலாம். ஏற்கெனவே நான் சொல்லியபடி ஆய்வுகள் முடிந்த பின்பு அந்தப் பணிகள் தொடங்கப்படும்.

**திரு. எப். எம். இராசரத்தினம்:** தலைவர் அவர்களே, அந்தப் பாலத்தின் திட்டமதிப்பீடு எவ்வளவு என்பதையும் அதோடு அந்தப் பகுதியிலே வாழ்கிற மீனவப் பெருங்குடி மக்கள் குளிப்பதற்கும் குடிப்பதற்கும் வசதியாகப் பயன்படுத்திக் கொள்கிற

முறையிலே அந்தப் பாலத்திற்குக் கீழே ஒரு தடுப்புச் சுவர் கட்டி அதில் நீர் நிரம்பி கீழே வழிகின்றபோது அதிலே அந்த மக்கள் குளிப்பதற்கும் குடிப்பதற்கும் நீரைப் பயன்படுத்திக் கொள்கின்ற ஒரு சிறந்த முன்மாதிரியான திட்டத்தை ஏற்படுத்தினால் அது அந்த மக்களுக்கு வசதியாக இருக்கும். அந்தத் தடுப்புச் சுவரைக் கட்டுகின்ற பணியையும் மேற்கொள்ளுமாறு இலாகாவிற்கு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்குவார்களா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, அதற்காக 15 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிலே பாலம் கட்டுவதற்காகத்தான் திட்டம் இருக்கிறதே தவிர அணை கட்டுவதற்காக திட்டமிடப்படவில்லை. எனவே அதைப் பார்த்துத் தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். அது முடியுமா, அது அவசியந்தானா என்பதைப் பார்த்து நிதிநிலைமைக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, பாலங்கள் கட்டுகின்ற பணிகள் பல மாதங்களாக மட்டுமல்ல, பல ஆண்டு களாக காலதாமதம் ஏற்படக்கூடிய நிலைமை இருக்கிறது. குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்திலே கோதையாறு குறுக்கே மாரப்பாடி என்ற இடத்திலே பாலம் கட்டுகின்ற பணி 1980 ஆம் ஆண்டு எடுத்துக்கொள்ளப்பட்டும்கூட இன்னும் முடிக்கப்பட வில்லை. எனவே இந்தப் பாலங்கள் கட்டுகிறபோது காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்த்து விரைவிலே அவைகளைக் கட்டுவதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, அவர்கள் குறிப்பிடுகிற பாலத்தைப் பொறுத்தவரையில் ஏன் காலதாமதம் ஆகிக்கொண்டு இருக்கிறது என்பதைப் பற்றி என்னிடம் குறிப்பில்லை. அது எதனால் ஏற்படுகிறது என்பதைப் பார்த்து நடவடிக்கை எடுக்கப்படும். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைவாக அந்தப் பணிகளிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அரசு அதற்கான பணத்தை ஒதுக்கியவுடனே விரைவாக வேலை தொடங்கப்பட வேண்டும் என்றும் அரசு அறிவுரை கொடுத்திருக்கிறது. தொடர்ந்து அரசாங்கம் அதிலே நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.



**டாக்டர் தே. குமாரதாஸ்:** தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் தேங்காய்ப்பட்டினம், இறைவன்துறை ஆகிய இரண்டு பகுதிகளையும் இணைக்கும் பாலம் தேவைப்படுகிறது. அந்தப் பாலம் இல்லாத காரணத்தால் 20 கிலோ மீட்டர், 25 கிலோ மீட்டர் சுற்றிக் கொண்டு மக்கள் வரவேண்டி யிருக்கிறது. அந்தப் பாலத்தை அங்கே கட்டினால் அது கடற்கரைச் சாலைக்கு முக்கியமான ஒரு பாலமாக அமைகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு உரிய நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவரவர்களே, தற்போது அதுபற்றிய குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரமாகப் பதில் அளிக்கப்படும்.

### மதுரை மாநகரில் குடிசை மாற்றுப் பணிகள்.

305—(*வினா எண் 783)—**திரு. பொன் முத்துராமலிங்கம் :** மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகரில் குடிசை மாற்று வாரியத் திட்டத்தின் மூலம் வீடுகள் கட்டித் தருகின்ற திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. பொன்முத்துராமலிங்கம் :** தலைவரவர்களே, மதுரை மாநகரில் மிகத் தாழ்ந்த பகுதிகளான கரும்பாலை, வைகை வடகரை, குண்டல்காடு, தத்தனேரி, புட்டித்தோப்பு ஆகிய பகுதிகளில் தாழ்த்தப்பட்ட மக்களும் பிற்பட்ட மக்களும் வாழ்கின்ற காரணத்தால் இந்தத் திட்டம் அங்கே விஸ்தரிக்கப் படுமா ?

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தாழ்ந்த பகுதி என்று சொல்லி யிருக்கிறார்கள். அப்படி பள்ளமாக இருக்கிற பகுதிகளை வீடு

கட்டுவதற்கு குடிசைமாற்று வாரியம் பயன்படுத்துவதில்லை. இந்தத் திட்டத்தை அந்தப் பகுதிக்கு நிறைவேற்ற வேண்டிய அவசியம் இருந்தால், நிதிநிலைமையை அனுசரித்து, வேறு இடங்களில் நிறைவேற்ற முயற்சி செய்யலாம்.

**திரு. பொன் முத்துராமலிங்கம்:** தலைவரவர்களே, தாழ்ந்த பகுதி என்பதால் அது சுகாதாரக் கேடான பகுதி என்ற பொருளில் அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்டு, அந்தப் பகுதிக்கு இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** தலைவரவர்களே, ஏற்கெனவே சொன்ன பதிலிலே நிதிநிலையை அனுசரித்து, தேவைப்பட்டால் நிறைவேற்றுவதாகச் சொல்லியிருக்கிறேன் இருந்தாலும் எஸ். எம். பிள்ளை, ஆழ்வார்புரம், மஞ்சள்மேடு பகுதிகளில் குடியிருப்பு கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. திடீர் நகர், வைகை வடகரைப் பகுதி, சூலமங்கலம் சாலைப் பகுதி, நத்தம் சாலைப் பகுதி ஆகிய பகுதிகளிலும் இத்திட்டத்தை விரிவுபடுத்தி நிறைவேற்ற முடிவு செய்யப் பட்டுள்ளது.

**திரு. க. பாரமலை:** தலைவரவர்களே, அண்ணா நகர், சுப்பிரமணியபுரம், கீரைத்துறை, அனுப்பானடி, வண்டியூர் போன்ற இடங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள மக்கள் வாழ்கிறார்கள். அந்தப் பகுதிகளிலே அரசுக்குச் சொந்தமான நிலம் இருக்கிறது. ஆகையால் ஏற்கெனவே அறிவித்திருக்கிற இந்தத் திட்டத்தை அங்கும் நிறைவேற்ற நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறதா? இல்லையா என்றால் அந்தப் பகுதிகளில் இருக்கிற அரசுக்குச் சொந்தமான நிலத்தைக் கையகப்படுத்தி, இந்த நோக்கத்திற்காக அதைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** தலைவரவர்களே, இப்படிப்பட்ட விஷயங்களுக்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

**திரு. கி. வெங்கடாசலம்:** தலைவரவர்களே, திருச்சி மாநகரில் குடிசைமாற்று வாரியத்தின் மூலம் வீடு கட்டித்தரக்கூடிய திட்டம் நிறைவேற்றப்படுமா?



**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** தலைவரவர்களே, திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் திருச்சி நகரிலும் திருவரங்கம் நகரிலும் குடிசைமாற்று வாரியத்தின் மூலம் இத்திட்டத்தை நிறைவேற்ற அரசு முடிவு எடுத்திருக்கிறது.

**திரு. எ. தெய்வநாயகம்:** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வீடு கட்டுவதைப்பற்றி மட்டும் சொன்னார்கள். மேலவாசல் பகுதியில் வீடு கட்டியாகிவிட்டது. ஆனால் கழிவறை வசதி, சுற்றுப்புற சுகாதாரம், லைட் வசதி போன்ற வசதிகள் கிட்டத்தட்ட ஓராண்டுக் காலமாகியும் செய்யப்படவில்லை. அதைப் பரிசீலனை செய்து, உடனடியாக அந்த வசதிகளைச் செய்து கொடுக்க அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** தலைவரவர்களே, ஏற்கெனவே வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டதால் இப்படிப் பட்ட வசதிகள் செய்து கொடுப்பது பற்றி நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும்.

**திருமதி பா. வளர்மதி:** தலைவரவர்களே, சென்னை மாநகரில் கடலோரப் பகுதியில் கட்டப்பட்ட குடிசைமாற்று வாரியக் குடியிருப்புகள் கடல் அரிப்பினால் பாதிக்கப்பட்டு, அந்த வீடுகள் பழுதடைந்திருக்கின்றன என்ற விவரம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அப்படித் தெரிந்திருந்தால் அந்த வீடுகளை உடனடியாகச் சீர் செய்யும் திட்டம் அரசிடம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடற்கரைப் பகுதி என்று சொல்லியிருக்கிறார்கள். எந்தப் பகுதி என்று எழுதிக் கொடுத்தால் நிச்சயமாக சீர் செய்ய அரசு நடவடிக்கை எடுக்கும்.

(முற்பகல் 9-40)

**திரு. ஆதிமூலம் என்கிற தில்லை காந்தி:** தலைவரவர்களே, திருச்சி மாவட்டத்தில் எந்த எந்தப் பகுதிகளில் குடிசைமாற்று வாரியத் திட்டம் செயல்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

[1985 ஜூன் 17

(முற்பகல் 9-40)

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே பதிலளித்தபடி திருச்சி, திருவரங்கம் போன்றவற்றைப் பொறுத்தவரையில் 2-வது திட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மூன்றாவது திட்டத்தின் அடிப்படையில் திருவரம்பூர் பகுதி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றது.

**எடப்பாடி நகராட்சியில் வீடுகள் கட்டும் திட்டம்.**

306—(*வினா எண் 958)—**திரு. ச. கோவிந்தசாமி:** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் எடப்பாடி நகராட்சிப் பகுதியில், வீட்டுவசதி வாரியம் மூலமாக வீடு கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** தலைவரவர்களே, (அ) மற்றும் (ஆ) : சேலம் மாவட்டம் எடப்பாடி நகராட்சிப் பகுதியில் வீட்டு வசதி வாரியம் மூலமாக, 116.31 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட உள்ளது. மேற்படி நிலம் வாரியத்திடம் கிடைக்கப்பெற்றவுடன், பல்வேறு வீட்டு வசதித் திட்டங்களைச் செயல்படுத்த வாரியம் திட்டமிடும்.

**திரு. ச. கோவிந்தசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணி எப்போது துவங்கும், எத்தனை வீடுகள் கட்டப் படும் என்பனவற்றை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, எடப்பாடி, சங்கரியைப் பொறுத்தவரையில் பட்டா நிலம் 42.92, 48.87 என்ற அடிப்படையில் தனியார் நிலமாக இருக் கின்றது. அரசு நிலத்தைப் பொறுத்தவரையில் 2.15 ஏக்கர் அரசு நிலமாக இருக்கின்றது. மேற்படி நிலங்கள் வாரியத்திற்குக் கிடைத்தவுடன் பொதுமக்கள் தேவைக்கேற்ப பல்வேறு வீட்டு வசதித் திட்டங்களை விரைவில் ஏற்படுத்திக் கொடுக்க வாரியத்தால் திட்டமிடப்படும். ஏற்கெனவே எடப்பாடி நகராட்சியைப் பொறுத்தவரையில் வருவாய் அலுவலர்களுக்கு ஒரு குடியிருப்பு கட்டப்பட்டுள்ளது.



1985 ஜூன் 17]

**திரு. ச. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை நகரப் பஞ்சாயத்துக்களுக்கும் விஸ்தரிக்க அரசுக்கு உத்தேசம் இருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரப் பஞ்சாயத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு வீட்டுவசதித் திட்டங்கள் இருக்கின்றன. நிதி நிலையை அனுசரித்து அப்படிப்பட்ட ஊர்களும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. செ. இரத்தினவேலு:** பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக திருச்சி மாவட்டத்தில் முசிறி, மண்ணச்சநல்லூர் நகராட்சிகளில் வீடு கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, முசிறி நகராட்சியைப் பொறுத்தவரையில் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக 50 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. மண்ணச்சநல்லூரைப் பொறுத்தவரையில் நிதிநிலையை அனுசரித்து முடிவுகள் எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்:** பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் அரூர் நகரத்தில் வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டவேண்டும் என்று ஒரு திட்டம் அனுமதிக் கப்பட்டிருக்கின்றது என்று அறிகிறேன். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களிடத்தில் அத்துறை இருந்து அவர்கள் வீட்டுவசதி வாரியத்தை நிர்வகித்துக்கொண்டு இருந்தபோது அவர்கள் காலத்தில் அந்தத் திட்டம் அனுமதிக்கப்பட்டு இருப்பதாக அறிகிறேன். எனவே மூலக் கேள்விக்குத் தொடர்புடைய கேள்வியாக இது இல்லை என்றாலும் தர்மபுரி மாவட்டத்தில் அரூர், தாலூகாத் தலைநகரமாக இருந்து கொண்டிருப்பதால் பல்வேறு அரசாங்க அலுவலகங்கள் புதிதாக ஏற்படுகின்ற காரணத்தால் வீட்டு வசதி நெருக்கடி மிக அதிகமாக இருந்து வருகின்றது. இப்படிப்பட்ட நிலையில் விரைவாக இந்த நிதியாண்டிலே அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

[1985 ஜூன் 17

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது உண்மையாக இருந்தால் நிச்சயமாக அரசு விரைவாக அதைச் செயல்படுத்த முடிவு எடுக்கும்.

### வீட்டுவசதித் திட்டத்திற்கு மைய அரசு உதவி.

307—(* வினா எண் 1702)—திரு. க. சோலைராசு : மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீட்டுவசதிக்கென மத்திய அரசு தமிழகத்திற்கு எவ்வளவு உதவித் தொகை வழங்கியுள்ளது ?

(ஆ) அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** தலைவர் அவர்களே (அ) மற்றும் (ஆ) : மத்திய அரசு வீட்டு வசதிக்கென தமிழகத்திற்கு வழங்கிய கடன் மற்றும் மானியத் தொகைகள் பற்றிய விவரங்கள் :

| | கடன். (ரூபாய் இலட்சத்தில்) | மானியம். (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. மலைத் தோட்டத் தொழிலாளர் மலிவு வீட்டு வசதித் திட்டம் | 25.38 | 18.06 |
| 2. குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் | -- | 574.68 |
| 3. இந்திய ஆட்சிப்பணி அரசு அதிகாரிகள் வீடு கட்ட கடன் | 40.97 | — |
| 4. சிரிமாவோ—சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோர் வீட்டு வசதித் திட்டம் | 158.79 | — |

**திரு. க. சோலைராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு உலக வங்கி, எல்.ஐ.சி. போன்றவற்றிலிருந்து உதவி கோரப்பட்டிருக்கின்றதா ?

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹட்கோ நிறுவனத்தைப் பொறுத்தவரையில் 1971 ஆம் ஆண்டிலிருந்து 1985 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு



1985 ஜூன் 17]

வீட்டு வசதி வாரியத்திற்கு மட்டும் 79 கோடியே 74 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாய் கிடைத்திருக்கின்றது. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தைப் பொறுத்தவரையில் 1974-லிருந்து 1985 ஆம் ஆண்டு வரை 5,81,47,000 ரூபாய் கிடைத்திருக்கின்றது. தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்தைப் பொறுத்தவரையில் 1981-லிருந்து 1985 ஆம் ஆண்டு வரை 13,06,18,000 ரூபாய் கிடைத்திருக்கின்றது. எல்.ஐ.சி. நிறுவனம் 53,87,00,000 ரூபாய் கொடுத்திருக்கின்றது.

**திரு. க. சோலைராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக கட்டிக் கொடுக்கப்படுகின்ற வீடுகள் சீக்கிரம் பழுதடைகின்றன. குறிப்பாக புதுக்கோட்டை மாவட்டத்தில் கட்டப்பட்ட வீடுகள் அடித்தளங்கள் பெயர்ந்தும், மேல் தளங்கள் ஒழுகுவதும் போன்ற நிலைமையிலேதான் இருக்கின்றன. ஆகவே, அவைகளை வாரியமே செப்பனிட்டுத் தருவது போன்ற பணிகளைச் செய்து தருவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிக் குறை இருந்தால், வாரியம் அதைப் போக்குவதற்கான நடவடிக்கையை எடுக்கும்.

### ஆதி திராவிடர்களுக்கு வீடுகள்.

308—(* வினா எண் 209)—திரு. மா. சின்னராசு : மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1982-83, 1983-84, 1984-85 ஆம் ஆண்டுகளில் ஆதி திராவிடர்களுக்காக தாட்கோ மூலம் கட்டப்பட்ட வீடுகள் எவ்வளவு ?

(ஆ) மற்ற திட்டங்களுக்கான N.R.E.P. — R.L.E.G.P. திட்டங்களின்கீழ் கட்டப்பட்ட வீடுகள் எத்தனை ?

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : 1982-லிருந்து 1985 வரை தாட்கோ நிறுவனத்தின் மூலமாக 8,381 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. அதைப் போலவே 1982-லிருந்து 1985 மார்ச் திங்கள் வரை என்.ஆர்.இ.பி. திட்டத்தின் மூலமாக

9,558 வீடுகளும், ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்தின் மூலமாக 19,042 வீடுகளும் இதுவரை கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு 36,781 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மா. சின்னராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாட்கோ மூலமும், என்.ஆர்.இ.பி. மற்றும் ஆர்.எல்.இ.ஜி.பி. ஆகிய திட்டங்களின் மூலமும் ஆதி திராவிட மக்களுக்கு முன் உரிமை கொடுக்கப்பட்டு கட்டப்பட்டு வருகின்ற வீடுகள், ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஆண்டுக்கு இவ்வளவு என்ற எண்ணிக்கையின் அடிப்படையில் கட்டப்படுகின்றனவா? ஆகவே அப்படிக் கட்டப்படாத அளவில் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் இன்னும் அதிகம் தேவைப்படுகின்ற ஆதி திராவிடர்களுக்கு—வீடு இல்லாதவர்கள் இவ்வளவு அல்லது வீட்டு மனைகள் இல்லாதவர்கள் இவ்வளவு என்று ஏதாவது கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறதா? இல்லை என்றால், குறிப்பிட்ட கால கட்டத்தில் 3 ஆண்டுகளிலோ அல்லது 5 ஆண்டுக் காலத்திலோ எல்லா ஆதி திராவிட மக்களுக்கும் வீடு கிடைக்கின்ற வகையில் அதைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, அதற்குத் தேவையான கூடுதலான நிதியைப் பெற்றுத் தருவதற்கு அமைச்சர் அவர்களும், துறையும் முயற்சி எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களுக்கு மேம்பாடு திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டிக் கொடுக்கின்ற திட்டத்தைச் செயல்படுத்திக்கொண்டு வருகிறார்கள். இந்த நிறுவனம் கிட்டத்தட்ட 1974 ஆம் ஆண்டிலே நிறுவப்பட்டு தன்னுடைய பணிகளைச் செவ்வனே செய்து கொண்டு வருகிறது. ஆனாலும் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவதுபோல ஆண்டுக்கு இவ்வளவு வீடுகள் கட்ட வேண்டும் என்ற திட்டத்தில், குறிப்பாக தட்கோ மூலமாக குறிப்பிட்ட அளவுக்கே வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. அதேபோல மற்ற மத்திய நிதியிலிருந்து — அதாவது என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி. நிதியிலிருந்து வீடுகள் கட்டிக் கொடுக்கின்ற திட்டம் இருக்கிறது. அதைப்போலவே தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்புத் திட்டத்தின்



கீழும் கிட்டத்தட்ட ஒரு ஆண்டுக்கு 10 ஆயிரம் வீடுகள் கட்டப்படுகின்ற ஒரு அமைப்பு சென்ற ஆண்டெல்லாம்கூட செயலாற்றிக் கொண்டு வந்திருக்கிறது. ஆகவே, ஆதி திராவிட மேம்பாடு திட்டத்தின் கீழ், ஆதி திராவிடர்கள் எல்லோருக்கும் வீடுகள் கட்டப்பட வேண்டும் என்ற அடிப்படையில் அந்தக் கணக்குகள் சேகரிக்கப்பட்டு, மேலும் வீடுகளைக் கட்டுவதற்கான ஒரு திட்டத்தை துரிதப்படுத்துவதன் மூலமாக இந்த வாரியம் செயலாற்றிக் கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மா. சின்னராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மேம்பாடு திட்டத்தின்கீழ் கட்டப்படுகின்ற வீடுகள், ஆதி வாசிகளுக்கு என்று ஒதுக்கப்படுவதில்லை. அப்படி ஆதி திராவிடர்களுக்காகக் கட்டப்படுகின்ற வீடுகளை இந்த ஆதி வாசிகளுக்கும் பழங்குடியினருக்கும் அதிகாரிகள் ஒதுக்காமல் இருப்பதுபற்றி அரசின் கவனத்திற்கு இதுவரை வந்திருக்கிறதா? அப்படி என்றால் அந்த ஆதிவாசிகளுக்கும் பழங்குடியினருக்கும் தனியாக இந்த நிறுவனத்தின் மூலம் வீடுகளைக் கட்டுவதற்கான உத்தரவினை அரசு பிறப்பிக்குமா?

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களுக்காக 6 ஆயிரம் ரூபாயிலே வீடுகள் கட்டிக் கொடுக்கின்ற திட்டம் ஒன்று இருக்கிறது. அதைப்போலவே ஆதி திராவிட பழங்குடி மக்களுக்காக, மலைவாழ் பகுதியிலே இருப்பவர்களுக்காக 9 ஆயிரம் ரூபாயிலே வீடுகளைக் கட்டிக் கொடுக்க திட்டங்கள் செயலாக்கப்பெற்று கட்டிக் கொண்டு வருகின்றனர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### மாவட்ட ஆதி திராவிடர் நல ஆலோசனைக் குழுக்கள்.

*309—(*வினா எண் 971)—திரு. க. பாரமலை:* மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட ஆதி திராவிடர் நல ஆலோசனைக் குழுக்கள் **(District Adi-Dravidar Welfare Advisory Committee)** அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், அந்தக் குழுக்கள் எப்பொழுது அமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): மாவட்ட ஆதி திராவிடர் நலக் குழுக்களில், மாவட்ட வாரியாக உறுப்பினர்களை நியமனம் செய்வதற்காக தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(முற்பகல் 9-50)

**திரு. க. பாரமலை:** தலைவர் அவர்களே, மாநில ஆதி திராவிடர் ஆலோசனைக் குழுக்கள் சம்பந்தமாகக் கேட்டபொழுதும் அமைச்சர் அவர்கள் இதே கருத்தைத் தெரிவித்தார்கள். மாவட்ட ஆதி திராவிடர் ஆலோசனைக் குழுக்கள் ஐந்து ஆண்டுகளாகச் செயல்படவில்லை. இந்த ஆண்டிலாவது அது செயல்படுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவான முயற்சிகளை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** தலைவர் அவர்களே, இதே கேள்வியை உறுப்பினர் அவர்கள் கேட்டதால் இதே பதிலைச் சொல்கிற நிலைமை ஏற்பட்டது. முதலில் மாநில அளவில் இதே கேள்வியைக் கேட்டார்கள். அப்போதே மாவட்ட அளவில் உள்ள விவரத்தையும் இணைத்து பதில் சொல்லி இருக்கிறேன். இப்போது அதே கேள்வியைத் திரும்பவும் கேட்டு இருக்கிறார்கள். அதில் துரிதமான நடவடிக்கை எடுத்திருக்கிறேன். உறுப்பினர் அவர்கள் மாவட்ட அளவில் யாரைக் கொடுக்கிறார்களோ அவர்களைப் போடலாம் என்று அவர்களிடத்தில் கேட்டிருக்கிறேன். ஆகவே இதில் துரிதமான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** தலைவர் அவர்களே, இது போன்ற மாவட்ட அளவிலே குழுக்கள் அமைக்கப்படுகிறபொழுது அந்தப் பகுதிகளில் இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களும் அக் குழுக்களில் சேர்க்கப்பெற்று அவர்களுடைய ஆலோசனையும் பெறப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் கேட்காமலேயே இடம்பெறுகிற நிலை இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் யாரையாவது குறித்துக் கொடுத்தால் அவரையும் இணைத்துக் கொள்கிற திட்டமும் இருக்கிறது. அதிலே ஆதிதிராவிட சமூகத்தைச் சேர்ந்தவர்களை குறிப்பாகக் கொடுப்பார்களானால், அந்தப் பகுதியில் இருக்கிறவர்களை, உழைத்தவர்களை, மக்களுக்குச் சேவை செய்கிற மனப்பக்குவம் உள்ளவர்களைப் போடுகிற வாய்ப்பு இருக்கிறது. ஆகவே சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் கேட்காமலேயே அதில் இடம் பெறுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## கோத்தகிரியில் பிற்பட்ட மாணவர் விடுதி.

310—(* வினா எண் 1041)—**திரு. எம். சிவக்குமார்:** மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோத்தகிரியில் பின்தங்கிய மாணவர்களுக்கான தங்கும் விடுதி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்:** தலைவர் அவர்களே, இல்லை.

**திரு. எம். சிவக்குமார்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே பின்தங்கிய மாணவர்களுக்கு விடுதிகள் இல்லையென்று தெரிவித்தார்கள். ஏறத்தாழ எழெட்டு மேல்நிலைப் பள்ளிகளும், மூன்று உயர்நிலைப் பள்ளிகளும், 75-க்கு மேற்பட்ட எலிமெண்டரி பள்ளிகளும் உள்ளன. அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறபோது அங்கே பிற்பட்ட மாணவர்களுக்குத் தங்கும் விடுதி கட்டித் தருவார்களானால் மிகவும் வசதியாக இருக்கும். ஆகவே இந்த ஆண்டிலாவது அதனை கட்டித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்:** தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 11 மாணவர் இல்லங்கள் இருக்கின்றன. அந்த 11-ல் ஒரே ஒரு கல்லூரி, அதாவது உதகமண்டலத்தில் இருக்கிற கல்லூரி மாணவர் விடுதியைத் தவிர மற்ற எல்லா விடுதிகளிலும் இடம் அதிகமாக இருந்து

மாணவர்கள் சேராத நிலை இருக்கிறது. கிட்டத்தட்ட 100 மாணவர்களைச் சேர்ப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. இப்போது அவசியமாக வேண்டுமென்றாலும்கூட கோத்தகிரிப் பகுதியில் இருக்கிற மாணவர்களில் 100 பேரை அங்கே இடமிருக்கிற விடுதிகளுக்கு அனுப்பினால் அவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பிருக்கிறது. கிட்டத்தட்ட 10 விடுதிகளில் அதிகமாக இடமிருந்தும்கூட மாணவர்கள் சேர்க்கப்படவில்லை. இடத்தை இன்னும் கொஞ்சம், அதிகரித்துக் கொடுக்க வேண்டுமென்ற அப்படிப்பட்ட கோரிக்கையும் வரவில்லை. கொடுக்கப்பட்டிருக்கிற இடங்களில் 50 மாணவர்கள் என்றால் 30, 29, 22 என்ற அளவில்தான் இருக்கிறார்கள். ஆகவே கோத்தகிரியைப் பொறுத்தவரையில் இந்த ஆண்டு தொடங்கப்போகிற மாணவர் இல்லங்கள் வரிசையில்கூட நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து வந்திருக்கிற முன்னுரிமைப் பட்டியலில் இடம் பெறவில்லை. பிற்பட்ட நல இயக்குநர் புதிய விடுதிகள் திறப்பதற்குப் பரிந்துரை செய்துள்ள அந்தச் செயல்குறிப்பிலும்கூட கோத்தகிரி இடம் பெறவில்லை. ஆகவே, அடுத்த ஆண்டில் இதனை எடுத்துக் கொள்ளலாமா என்று அரசு ஆலோசிக்கும்.

**வழக்கறிஞர் மற்றும் குமாஸ்தாக்களுக்கு நலச் சட்டங்கள்.**

**300 மற்றும் (*வினா எண். 542)—திரு. ஆ. பிரேம்குமார் திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு சட்டத்துறை **அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—**

(அ) வழக்கறிஞர்கள் மற்றும் குமாஸ்தாக்களுக்கென நலச் சட்டங்கள் இயற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இச்செயற்குறிப்புகள் அரசின் ஆய்வில் உள்ளன.

**திரு. ஆ. பிரேம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படிப்பட்ட முறையில், அடிப்படையில் இந்த நலச் சட்டம் இயற்றப்பட உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்குரைஞர்களுக்காக நல் நிதிச் சட்டம் ஒன்றைக் கேரள மாநில அரசு நடைமுறைக்குக் கொண்டு வந்திருப்பதை ஒட்டி, தமிழக அரசு ஒரு சட்டத்தைக் கொண்டு வர கொள்கை அளவிலே முடிவு எடுத்து இருக்கிறது. அதற்காக ஒரு சட்ட முன்வடிவு வர இருக்கிறது. குறிப்பாக, ஒரு குறிப்பிட்ட தொகையை வழக்கறிஞர்கள் மாதாமாதம் செலுத்துகிறார்கள், அரசு அதற்கு ஈடான தொகையைச் செலுத்தும். இறுதியிலே, அவர்கள் பணியிலிருந்து ஓய்வு பெறுகின்ற நேரத்திலே, குறைந்த பட்சம் 30 ஆயிரம் ரூபாய் அவர்களுக்குக் கிட்டக்கூடிய அளவிலே இது அமைய இருக்கிறது.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வழக்குரைஞர்களுக்காக ஒரு நல நிதிச் சட்டம் ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்தை முதலிலே மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள்தான் 1981 ஆம் ஆண்டு தெரிவித்தார்கள். அதற்குப் பிறகு மற்ற மாநிலங்களில் தொடங்கி விட்டார்கள். இப்போது இந்தச் சட்டத்தைக் கொண்டு வர அரசு கொள்கை அளவிலே ஒத்துக்கொண்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். விவசாயிகள் திடீரென்று இறந்துவிட்டால், 10 ஆயிரம் ரூபாய் பணம் கொடுக்கிறோம். பனைமரம் ஏறுகின்ற தொழிலாளர்கள் இறந்துவிட்டால் பணம் கொடுக்கிறோம். ஆனால், இந்த வழக்கறிஞர்கள் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தொழில் நடத்திக் கொண்டிருக்கிறபோது, இடையிலே இறந்து விட்டால், இப்படிப்பட்ட சலுகைகளை அளிப்பதில்லை. எனவே, கொள்கை அளவிலே அரசு ஏற்றுக்கொண்டு இருக்கிற இந்தச் சட்டத்தில், அவர்களிடமிருந்து நிதி பெற்றாவது, இப்படி வழக்கறிஞர்கள் தொழிலில் இருக்கின்றவர்கள் திடீரென்று இறந்து விட்டால், மற்றப் பிரிவிலே இருப்பவர்களுக்கு அளிப்பதைப் போல, அரசு உதவித் தொகை அளிக்க இந்தச் சட்டத்திலே வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாமதத்திற்குக் காரணம் அரசே எடுத்த முடிவு, முதலிலே இந்தத் திட்டத்தை நடைமுறைக்குக்

கொண்டுவரவேண்டும் என்பதுதான். மாநில வழக்குரைஞர்கள் சங்கத்திடமிருந்து சில கோரிக்கைகள் வந்தது. மத்தியப் பிரதேச மாநிலத்திலே நடைமுறையில் இருக்கிற ஒரு திட்டத்தைக் கொண்டு வரலாம் என்று சொன்னார்கள். அதை அரசு ஆய்ந்தது. ஆனால் அந்தத் திட்டம் கேரள மாநில அரசு வைத்திருக்கிற திட்ட அளவிற்கு நலன் பயக்கக்கூடியதாக வழக்குரைஞர்களுக்கு அமையாது என்ற பிறகு தெரியவந்த காரணத்தால், அது விடப்பட்டது. மேலும் வழக்குரைஞர்கள் எந்த அளவிற்கு சந்தா செலுத்த வேண்டும் என்பதும், அரசு எந்த அளவிற்கு ஈட்டுத் தொகையாகக் கொடுக்க வேண்டும் என்பதும், நல நிதி, முத்திரைத் தாள் அடித்து, அதன் மூலம் வருவாயை எப்படி அவர்களுக்கு அந்த நிதியை அதிகமாக்க முடியும் என்பது குறித்தும், மாநில வழக்குரைஞர்கள் சங்கத்திலே நாம் ஆலோசனையைக் கேட்டு இருக்கிறோம். அவர்களிடமிருந்து பதில் எதிர்பார்க்கிறோம். விரைவிலே இது குறித்து ஒரு முடிவு எடுத்து, இந்தத் திட்டத்தை நடைமுறைக்கு அரசு கொண்டு வரும்.

**திரு. ஆ. பிரேம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய தொழிற்சாலைகளிலும், பெரிய தொழில் கூடங்களிலும் டாக்டர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அது போன்று தொழிற்சாலைகளிலும், வழக்கறிஞர்களை லீகல் அட்வைசர்களாக நிச்சயமாக நியமிக்க வேண்டும் என்று ஒரு விதி இந்த நலச் சட்டத்திலே உள்ளடங்கியதாக இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட ரீதியாக அப்படித் தொழிற்சாலைகளில் அரசு கட்டுப்படுத்த முடியாது; அது உகந்ததாகவும் இராது.

**திரு. கி. கிருஷ்ணமூர்த்தி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதியின் சார்பாக கடந்த 1983 ஆம் ஆண்டு வழக்கறிஞர்களிடமிருந்து ரூபாய் 40 வாங்கப்பட்டது. இப்போது இந்த நிதிக்காக புதிதாக சட்டம் இயற்றப்பட இருக்கிறது என்று சொல்லி வாங்கப்பட்டது. இந்தப் பணம் மாநில் பார்கவுன்சிலிடம் இருக்கிறது. இதைத் தொடர்ந்து, கடந்த இரண்டு ஆண்டுகளாக வழக்கறிஞர்கள் எந்தப் பாதுகாப்பும் இல்லாமல் இருக்கிறார்கள். இந்த 1983-க்கும் புதிதாக இப்போது கொண்டுவர இருக்



கின்ற சட்டத்திற்கும் இடைப்பட்ட காலத்தில், பாதிக்கப்பட்ட வழக்கறிஞர்களுக்கும் உதவி அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே, அப்படி உதவி அளிக்க அரசு முன் வந்தால், சுதந்திரம் அடைந்த 36. ஆண்டுக்காலமாக பாதிக்கப்பட்ட வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள், அவர்களுக்கும் ரெட்ரோஸ்பெக்டிவ்-லே உதவி அளிக்க வேண்டும் என்ற கோரிக்கை வந்துவிடும். அப்படிச் செய்வதற்கு இடமில்லை. இந்தத் திட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்று முடிவு எடுத்தது அரசுதான். எனவே, இந்தத் திட்டம் விரைவிலே பிராஸ்பெக்டிவில் நடைமுறைக்கு வரும்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** தலைவரவர்களே, வழக்கறிஞர்களுக்கு என்று விரைவிலே ஒரு நலச் சட்டம் வர இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நன்றி. இதே கேள்வியிலே இன்னொரு பகுதியாக, இன்றைக்கு வழக்கறிஞர்களைவிட, மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கக்கூடிய வழக்கறிஞர்களுடைய குமாஸ்தாக்களுடைய நிலையைப் பற்றி அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். அதைப்பற்றிய விளக்கம் அளிக்கப்படவில்லை என்ற காரணத்தால் தயவு செய்து அதுகுறித்து அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவர் அவர்களே, வக்கீல் குமாஸ்தாக்களுடைய நலன் குறித்தும் ஒரு திட்டத்தைக் கொண்டு வர கொள்கை அளவிலே அரசு முடிவு எடுத்திருக்கிறது. எந்த முறையிலே அதை நடைமுறைப்படுத்தலாம் என்பதற்கு உயர்நீதிமன்றத்திடமும், அந்த அமைப்பினுடைய பொறுப்பாளர்களிடமும் அரசு ஆலோசனை கேட்டு இருக்கிறது. அது கிட்டியவுடன் அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கும்.

(முற்பகல் 10-00)

**திரு. மா. சின்னராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல வழக்கறிஞர்கள் மன்றங்கள் கோளாவில் கொண்டு வரப்பட்டு இருக்கிற சட்டம் மிக பழைய நிலையில் இருக்கிறது

என்ற கருத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். அதே சட்டத்தில் தேவையான சிறிய மாற்றங்களைச் செய்து நம்முடைய அரசு விரைவில் செயற்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரள அரசு நடைமுறையில் கொண்டு வந்து இருக்கிற சட்டத்தைவிட வழக்கறிஞர்களுக்கு இறுதியில் அவர்கள் ஓய்வு பெறும்போது இன்னும் சற்று அதிகமாக உதவித் தொகை கிடைக்கக்கூடிய அளவுக்கு இந்தச் சட்டத்தை கொண்டு வர வேண்டும் என்று அரசு கருதுகிறது. Taking into account the erosion in money value பணவீக்கத்தைக் கருத்தில் கொண்டு எந்தத் தொகை என்பதை மாற்றி அமைக்க அரசு முடிவு செய்ய இருக்கிறது. அந்த அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரளாவில் வழக்கறிஞர்களுக்குக் கொண்டு வரப்பட்டு இருக்கக்கூடிய சட்டத்தில் அவர்கள் வயதானவர்களுக்குத் தான் கிராஜுவட்டி என்ற முறையில் ஏற்பாடுகள் அதிகமாக இருக்கிறது. ஆனால் வழக்கறிஞர்களில் ஜூனியர் லாயர்ஸ் என்ற ஒரு பிரிவு அதாவது முதலில் பிராக்டிஸ் ஆரம்பிக்கக் கூடியவர்கள் முதலில் வருவாயை ஏற்படுத்திக்கொள்ள கஷ்டமான நிலையில் இருப்பவர்கள், அவர்களுக்கு ஏதேனும் உதவி அளிக்கக்கூடிய முறையில் இன்றைக்கு வழக்குகள் பதிவு செய்யப்படவேண்டுமானால் ஸ்டாம்பு பதிக்க வேண்டும் என்ற நிபந்தனை இருக்கிறது. அதிலிருந்து ஏதேனும் ஒரு விகிதத்தை இந்த ஜூனியர் லாயர்களுக்கு உதவியாக செஸ் என்ற முறையில் ஏற்படுத்துவதற்கு ஏதேனும் நடவடிக்கையை அரசு எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜூனியர், சீனியர் என்ற முறையில் இதைப் பாகுபடுத்தி நடவடிக்கை எடுக்க அரசிடம் செயற்குறிப்பில் எதுவும் உத்தேசம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல வக்காலத்து நாமா, மெமோரார் நாமா மற்றும்



முத்திரைத் தாட்கள் மூலமாக ஒரு குறிப்பிட்ட அளவுக்கு, கணிசமான அளவுக்கு நிதியைப் பெருக்க அதனுடைய பலன் வழக்கறிஞர்களுக்கு ஓய்வு காலத்தில் கிட்ட மட்டுமே நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறது.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகாராஷ்டிரா மாநிலத்தில் இதுபோன்ற வழக்கறிஞர் நல நிதி சட்டத்தினுடன் இணைந்து அவர்கள் இடையில் இறந்து விட்டால் பாதுகாப்பு அளிக்கின்ற வகையில் அந்த வழக்கறிஞர்களுக்கு குரூப் இன்சூரன்ஸ் செய்வதற்கான ஒருவழி வகையைச் செய்து மகாராஷ்டிரா மாநிலம் மிகச் சிறப்பாக அந்தச் சட்டத்தைச் செயல்படுத்துகிறது என்று சொல்கிறார்கள். அதைப் பின்பற்றி, இடையில் இறந்து விட்டால் கூட வழக்கறிஞர்களுக்கு உதவுகின்ற வகையில் இந்தச் சட்டத்திலேயே அந்தப் பிரிவுகளைச் சேர்க்க அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து அரசு ஏற்கனவே ஆய்ந்தது. மாநில வழக்கறிஞர்கள் சங்கத்தினிடமும் வாதித்தது. ஆனால் இதை ஈடேற்ற வேண்டுமானால் 'Matching contribution from the Bar' வழக்கறிஞர்கள் இடமிருந்து சற்று அதிகமான அளவில் தேவைப்படுகிறது. அதற்கு ஒத்துக்கொள்ளக்கூடிய அளவுக்கு ஒரு உடன்பாட்டுக்கு இன்னும் வழக்கறிஞர்களுடைய சங்கத்திடமிருந்து கருத்து வரவில்லை. எனவேதான் அது குறித்து ஒன்றும் முடிவு எடுக்க முடியாத நிலையில் இருக்கிறது.

**திரு. வி. தங்கவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கறிஞர்களுக்கும், குமாஸ்தாக்களுக்கும் நல சட்டங்களை இயற்றி ஏற்பாடு செய்து இருப்பதை போல இன்றைக்குத் தமிழ்நாட்டில் உள்ள நீதிமன்றங்களில் நீதிபதிகளாக இருக்கக் கூடிய தாழ்த்தப்பட்ட, மலைவாழ் நீதிபதிகளுக்கு மிகவும் கஷ்டங்கள் உண்டாகிக் கொண்டு இருக்கின்றன. எனவே நீதிபதிகள் நலனுக்காகவும் நல சட்டங்கள் உருவாக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத்தின் கீழ் நீதிபதிகளுக்குள் இந்த இனம், இந்த பிரிவு என்ற பாகுபாடு இல்லாமல் சமமாக அனைவரும் பாவிக்கப்படுகிறார்கள். அந்த நிலையில்தான் என்றைக்கும் அவர்களுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு தனிப் பட்ட முறையில் குறை எதுவும் இல்லாத அளவுக்குத்தான் நடை முறையில் இருந்து வருகிறது.

**திரு. மா. சுந்தரதாஸ்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1983 ஆம் ஆண்டு வழக்கறிஞர்கள் கான்டிரிபுஷன் கொடுத்தும் அதற்கு பின்னர் யாரும் பணம் வாங்கவில்லை. அந்த பணம் என்ன ஆனது என்று தெரியவில்லை . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அதை எல்லாம் பார் கவுன்சிலில் போய்க் கேட்க வேண்டும்.

**திரு. மா. சுந்தரதாஸ்** : அதன் அடிப்படையில் உடனடியாக ஏதாவது திட்டம் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் சுட்டிக்காட்டியதைப் போல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாநில வழக்கறிஞர்கள் சங்கத் திடம் அது பற்றி கேட்க வேண்டும். அரசைப் பொறுத் வரைக்கும், வழக்கறிஞர்களுக்கு ஒட்டு மொத்தமாக நல்ல ஒரு பலன் உள்ள திட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்ற அடிப்படையில் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு இருக்கிறது.

### சிறைக் கைதிகள் பணிக்கான ஊதியம்.

301—(*வினா எண் 909)—**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்)** : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறைக்கைதிகள் செய்யும் வேலைகளுக்கு கூலி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : தலைவர் அவர்களே, (அ) ஆம். சிறையில் வேலை செய்யும் சிறைவாசிகளுக்கு ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

(ஆ) சிறையில் வேலை செய்யும் சிறைவாசிகளுக்கு கீழ்க் கண்டவாறு ஊதிய நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது :

| | (ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு.) |
| --- | --- |
| தேர்ச்சி பெற்றவர் (Skilled) | ரூ. 1.00 |
| பாதி தேர்ச்சி பெற்றவர் (Semi-skilled) | ரூ. 0.50 |
| தேர்ச்சியடையாதவர் (Un-skilled) | ரூ. 0.25 |

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்)** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன அந்த ஊதிய நிர்ணயம் எந்த ஆண்டு செய்யப்பட்டது? அதை மாற்றி அமைக்க அரசு பரிசீலிக்குமா? அதேபோல், அங்கே ஊதியத்தைப் பெற்றுக்கொண்டு சிறையிலிருந்து விடுபட்டு வந்தால் கூட, சிறப்பான வாழ்வு வாழ முடியாமல், சமுதாயத்தில் அவர்களைக் குற்றவாளிகளாகவே பார்க்கும் உணர்வு இருக்கிறது. எனவே, அந்த ஊதியத்தைப் பெற்றுக் கொண்டு வருகிறவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, அரசாங்கமே கடன் கொடுத்து தொழில் தொடங்குவதற்கு முன்னுரிமை வழங்க அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 17—7—1982 இல், இந்தப் புதிய ஊதிய முறை நடைமுறைக்கு வந்தது. அதற்கு முன்னால், தேர்ச்சி பெற்றவருக்கு 40 பைசா என்று இருந்தது, தற்போது 1 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. பாதி தேர்ச்சி பெற்றவருக்கு 20 பைசாவாக இருந்தது, 50 பைசாவாகவும், தேர்ச்சி அடையாதவருக்கு 1982-க்கு முன்னால் 10 பைசாவாக இருந்தது, 25 பைசாவாக உயர்த்தப்பட்டிருக்கிறது. பல்வேறு தொழில் களுக்குப் பயிற்சி தரப்படுகிறது. அந்தப் பயிற்சிக் காலம் முடிந்த பிறகு, அவர்கள் விடுதலையாகி வந்த பிறகு 'செல்ஃப் எம்ப்ளாய்மென்ட்' என்ற முறையில், சுய வேலை வாய்ப்பில்

ஈடுபட முன்வருகிறபோது, அவர்களுக்கு நாட்டுடைமையாக்கப் பட்ட வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், நிதி நிறுவனங்கள் மூலம் உதவித் தொகை, நிதி உதவி தருவதற்கும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணியாற்றுகின்ற சிறைக் கைதிகளுக்கு நிர்ணயிக்கப்பட்டு இருக்கிற ஊதிய விவரங்களை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சில கைதிகள் சட்டப் படிப்பு, பி. எல். படித்து முடித்து இருக்கிறார்கள். கிடைத்து இருக்கின்ற தகவலின்படி, ஒரு சிலர் மருத்துவப் பட்டத்தைக் கூட பெற்று இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அவர்கள் எப்படிப் பயன்படுத்தப்படுகிறார்கள்? அவர்கள் வெளியே வந்து தொழில் நடத்துவதற்கு சிறையிலே இருக்கிறபோதே அனுமதிக்கப் படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவப் படிப்பைப் பொறுத்தவரைக்கும், அண்மையில் ஒருவர் முடித்திருக்கிறார். அதேபோல் பி. எல். போன்ற பல பட்டப் படிப்புக்களை பலர் முடித்திருக்கிறார்கள். அவர்கள் விடுதலையாகி வெளியில் வந்த பிறகு தொழிலில் ஈடுபட முன்வருவார்களானால், அப்போது அவர்களுக்கு நிதி உதவி குறைந்த வட்டியில் அளிப்பதற்குக் கூட ஒரு திட்டத்தை அரசு நடைமுறையில் கொண்டு வர பரிசீலித்து வருகிறது.

**கள்ளர் மேல்நிலைப் பள்ளிக்கு ஆய்வுக் கூடம்.**

811—(*வினா எண் 598)—திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

**நான்கு உயர்நிலைப் பள்ளிகள் அடங்கிய நாட்டாமங்கலம் (மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தாலுகா), கள்ளர் மேல்நிலைப் பள்ளிக்கு "ஆய்வுக்கூட வசதி" ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?**





**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் நாட்டா மங்கலம் செக்காணூரணி ஆகிய இரு மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ. 5.00 இலட்சங்கள் செலவில் 'ஆய்வுக் கூடங்கள்' கட்டும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

**திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்:** தலைவர் அவர்களே, அனுமதி வழங்கப்பட்டிருப்பது என்பது ஏற்கனவே அறிந்த ஒரு விஷயம். ஆனால் நான் அறிய விரும்புவது, அந்த ஆய்வுக் கூடம் விரைவிலே கட்டிக் கொடுக்க வேண்டும் என்பதைத்தான்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டாமங்கலம், செக்காணூரணி ஆகிய இரு அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளிகளில் தலா ஒரு வகுப்பறையும், விஞ்ஞானக் கூடமும் கட்ட அரசு அங்கீகரித்து, ஒவ்வொன்றுக்கும் ரூபாய் 2½ லட்சம் செலவில் அனுமதி அளிக்கப்பட்டது. இதில் செக்காணூரணி விஞ்ஞானக் கூடம் கட்ட ரூ. 1,18,638-ம், நாட்டாமங்கலத்தில் ரூ. 1,41,468-ம் செலவிடப்பட்டிருக்கிறது. இது தொடர்பான திருந்திய நிர்வாக ஒப்புதல் ஒரு பள்ளிக்கு 3.30 இலட்சம் தேவை என்று இரண்டு பள்ளிகளுக்கு 6.60 இலட்சம் கோரி அனுப்பியுள்ள பிற்பட்ட நல இயக்குநரின் செயல்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது. கட்டிடம் கட்டி பொதுப் பணித் துறை ஒப்படைத்தவுடன், உபகரணங்கள் வாங்கப்படும்.

**திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின் அவை வரும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதற்காக நன்றி சொல்லிக்கொள்கிறேன். அதே நேரத்தில், அந்தக் கட்டிடங்கள் விரைவில் கட்ட வேண்டும் என்று மீண்டும் கேட்டுக் கொண்டு, அதேபோல் உசிலம்பட்டியிலேயும், மற்றும் இருக்கிற கள்ளர் பள்ளிகள் அனைத்திலேயும், அதிகமான கள்ளர் இனத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்லாமல், தாழ்த்தப்பட்டோர், ஆதி திராவிடர் வகுப்பாரும் அங்கே கல்வி பயின்று கொண்டு இருக்கிறார்கள். பொதுவாக, கள்ளர் ரெக்ளமேஷன் பள்ளிகள் என்ற காரணத்தால், அவைகள் அதிகமாக புறக்கணிக்கப்படுகின்ற சூழ்நிலை இருப்பதாக, மதுரை மாவட்டத்திலே இருக்கக் கூடியவர்களும், மற்றும் அங்கே இருக்கக் கூடிய மக்களும் வேதனைப்படுவதாக உணர்கிறோம். எனவே, இது விஷயத்தில்,

அந்த கள்ளர் ரெக்ளமேஷன் முழுமையாக எந்தவிதத்திலேயும் புறக்கணிக்கப்படவில்லை, நிச்சயம் அவர்களும் அனைத்து சமூக அந்தஸ்தையும் பெறுகிறார்கள், என்ற எண்ணத்தை நல்ல முறையில் ஏற்படுத்திட பரிசீலித்து, அதனை நடைமுறைப் படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த அரசு, கள்ளர் ரெக்ளமேஷன், இருக்கின்ற அந்தச் சட்டத்திட்டப்படி, ஆண்டுதோறும் எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்து இருக்கிறதோ அதை முறையாகச் செயல்படுத்தி வருகிறது. புதிதாக என்னென்ன திட்டங்களை நிறைவேற்றலாம் என்று பரிசீலிக்கிறது. இதிலே அவர்களுக்குத் தேவையான எல்லா வசதிகளும், உதவிகளும் கூடிய வரையில் கிடைக்கும் வகையில் திட்டம் நிறைவேற்றப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிறமலைக் கள்ளர் சமுதாயம் என்பது மதுரை மாவட்டத்தில்தான் அதிகமாக வாழ்கின்ற சமுதாயமாக இருக்கிறது. வெள்ளைக்காரன் நாட்டை ஆண்ட காலத்தில், குற்ற பரம்பரை சட்டத்தை அவர்கள் மீது தொடுத்து, வயது வந்த ஆண்கள் காவல் நிலையங்களிலே வந்து படுக்க வேண்டுமென்று வைத்திருந்தார்கள். நாடு சுதந்திரம் பெற்ற பிறகுதான் அந்த நிலைமை நீக்கப்பட்டது. ஆனால் இன்றைக்கும் அந்தச் சமுதாய மக்கள் மிகவும் பிற்படுத்தப்பட்ட பின்தங்கிய நிலையில் வாழ்கிறார்கள். அந்தக் குழந்தைகள் படிக்கின்ற பள்ளிகள் வெள்ளைக்காரன் ஆண்டபொழுது கட்டப்பட்ட பள்ளிகளாகும். அவைகள் இப்பொழுது பழுதடைந்து பாழாகக் கிடக்கின்றன. உங்கள் மூலமாக அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இந்தப் பிரச்னையின் தன்மையை நன்றாக உணர்ந்து, நம்முடைய நிதியமைச்சரவர்கள் தாராள உள்ளம் கொண்டவர்கள், நிச்சயமாக அந்தப் பள்ளிக்கூடங்களைப் புதுப்பிப்பதற்காக நிதி ஒதுக்கித் தருவார்கள், அந்த நிதியைப் பெற்று, அந்தப் பள்ளிக்கூடங்களின் நிலைகளை அறிந்து, புதுப்பிக்கவும், கட்டிடம் கட்டவும் இந்த ஆண்டே அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நிதி நிலைமையை மனத்திற் கொண்டு, எவ்வளவு சீக்கிரம் திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்பதை இந்த அரசு பரிசீலித்து நிறைவேற்றும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மக்கள் ஏராளமாக வரி தருவார்களேயானால் தாராளமாக செலவு செய்யலாம்.

**திரு. வே. இரா. ஜெயராமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் கள்ளர் ரெக்ளமேஷனின் பணி சிறப்பாக அமைந்துள்ளது. அதே நேரத்தில், 1979-80 ஆம் ஆண்டு மாண்புமிகு கல்வியமைச்சரவர்களால் கல் நாட்டப்பட்ட வெள்ளை அம்மாள் கள்ளர் உயர்நிலைப் பள்ளி என்ற அந்தப் பள்ளிக்கூடம் பற்றிய பிரேரணை அனுப்பப்பட்டும், இத்தனை நாளும் அதற்குத் தேவையான நிதியை ஒதுக்காததன் காரணத்தால் அந்த வேலை நடக்கவில்லை. எனவே. உடனடியாக நமது மாண்புமிகு நிதியமைச்சரவர்களிடம் நிதியைப் பெற்றுச் செய்வது பற்றி மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சரவர்கள் இங்கே உறுதி தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது குறித்த விவரம் என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி போட்டாலோ அல்லது நேரில் சொன்னாலோ அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண்கள் 312 மற்றும் 313 மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப் பெறுகின்றன.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### (அ) சென்னைப் பெருநகர் மேம்பாட்டுக் குழுவின் முடிவுகள்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு முன் நம்முடைய முதலமைச்சர் தலைமையில் கூடிய குழு ஒன்று சென்னை நகர மேம்பாட்டைக் கருத்திற்கொண்டு சில சீர்திருத்தங்களைச் செய்வதற்குச் சில முடிவுகளை எடுத்து இருப்பதாகச் செய்தித்தாளின் மூலம் அறிந்தேன். பத்தாண்டுகளுக்கு மேலாக நடைபாதையில் உள்ள கொடிக் கம்பங்களை அகற்றுவது என்று அந்தக் குழு. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உள்ளாட்சித் துறை அமைச்சர் இதுபற்றி அறிக்கை படிப்பதாகக் கடிதம் வந்திருக்கிறது.

### (ஆ) தமிழ்நாடு தேர்வாணைக் குழு 1978-79 ஆம் ஆண்டுக்கான அறிக்கையை 1985-ல் பேரவையில் வைத்திருப்பது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து ஒரு விஷயத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நம்முடைய அவையிலே,

**Public Service Commission Annual report for the year 1978-79.**

என்று வைத்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு, தமிழ்நாடு அரசு தேர்வாணைக் குழுவின் சார்பிலே ஆண்டறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது என்றால், இப்படி எழெட்டு ஆண்டுக்காலம் கழித்து வைக்கப்படுவது என்றால், இது ஏதோ ஒரு சம்பிரதாயத்திற்காக, சட்டத்திற்காக வைக்கப் படுவதாகத்தான் தெரிகிறதே தவிர, மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, தமிழ்நாட்டு மக்களுக்கு விரைவாக அறிவிக்க வேண்டுமென்ற கருத்தைப் புரிந்து கொண்டு செய்வதாகத் தெரியவில்லை. ஆனால், ஒரு விளக்கம் தரப்பட்டிருக்கிறது . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கமிட்டியைப் நாம் போட்டிருக்கிறோம். ஆனால் இன்னும் கான்ஸ்டிடியூட் செய்யவில்லை. **That is, the Committee on Papers Laid on the Table.**





**திரு. என். எஸ். வி. சித்தன் :** இந்த விளக்கத்திலே, ஏதோ 2, 3, 4 தேர்வுகளிலே மேல் முறையீட்டிற்குப் போனதாகவும் சொல்லி, பிறகு விவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். இவ்வளவு காலதாமதத்திற்கு நியாயமான காரணங்கள் எதுவும் இல்லை. ஏன் இப்படிக் காலதாமதம் ஆகிறது? இப்படி ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு வைத்தும் கூட, சாதாரணமாகப் பார்த்ததில் 21 பிழைகள் தெரிகின்றன, இன்னும் உற்றுப் பார்த்தால் எவ்வளவு இருக்குமோ தெரியவில்லை. இவ்வளவு கவனக் குறைவாக, உதாசீனமாக நிர்வாகம் இருந்தால், இது என்ன பயனுக்காகக் கொடுக்கப்பட்டதோ அந்தப் பயனே நிறைவேறாது. இந்த அறிக்கையை இவ்வளவு தாமதமாக வைத்ததற்கான விளக்கம் வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நடவடிக்கை எடுக்கலாம்.

## 3. கவன ஈர்ப்புகள்.

### (அ) கர்நாடக மாநிலத்தில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் டி. ஆர். வேங்கடரமணன், வி. தங்கவேலு ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு கல்வித் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கர்நாடக மாநிலத்தில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ளக் கூடாது என அரசு ஆணை பிறப்பித்ததின் விளைவாக, ஆசிரியர் பயிற்சி பெற்ற பல்லாயிரக்கணக்கானவர்கள் நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

அரசாணை (நிலை) எண் 1667, கல்வி, நாள் 5—8—1981-ல் தமிழ்நாட்டில் இடைநிலை ஆசிரியர் பயிற்சி முடித்து காத்திருக்கும் வேலை அற்றோருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வரை கர்நாடக மாநிலத்தில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களை தமிழ் நாட்டுப் பள்ளிகளில் பணியமர்த்துவதை ஒத்திவைக்க பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுமதி வழங்கப்பட்டது. இதனை பின்பற்றி பள்ளிக் கல்வி இயக்குநர் ஆய்வு அலுவலர்களுக்கு உரிய செயல் முறைகளை வெளியிட்டார். இச்செயல்முறைகளை எதிர்த்து அநேக உரிமை பேராணைகள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. ஆகவே பள்ளிக் கல்வி இயக்குநரின் பரிந்துரைகளின்படி சில நிபந்தனைக்கு உட்பட்டிருந்தால் கர்நாடக மாநில ஆசிரியர் பயிற்சி சான்றிதழ்களை மதிப்பீடு செய்யலாம் என அரசாணை நிலை எண். 1236, கல்வி, தேதி 17—9—1984-ல் பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுமதி வழங்கப்பட்டது. இந்த திருத்திய ஆணையை கருத்தில் கொண்டு, உயர் நீதிமன்றத்தின் பகுதி நடுவர் ஆயம் (Division Bench) 28—11—1984 அன்று எல்லா உரிமை பேராணைகளையும் அனுமதித்து தீர்ப்பு வழங்கியது. அரசாணை நிலை எண் 1667, கல்வி, தேதி 5—8—1981-ல் வழங்கிய ஆணைகளையும் அதனை ஒட்டி பள்ளிக் கல்வி இயக்குநரால் வெளியிடப்பட்ட செயல்முறைகளையும் ரத்து செய்த தோடல்லாமல், உயர் நீதிமன்றம் 17—9—1984-க்கு முன்பு கர்நாடக மாநில ஆசிரியர் பயிற்சி சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப் பட்டிருந்தால் அந்த சான்றிதழ்களை தமிழக ஆசிரியர் பயிற்சி சான்றிதழ்களுக்கு இணையாக மதிப்பீடு செய்ய கோருவதற்கு சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு உரிமை உண்டு என்றும் தீர்ப்பளித்தது. இந்த தீர்ப்பினை ஒட்டி உரிய நடவடிக்கைகள் எடுக்க பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அரசாணை நிலை எண் 442, கல்வி, தேதி 27—4—1985-ல் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கர்நாடக மாநிலத்திலே ஆசிரியர் பயிற்சி பெற்ற மாணவர்களுடைய பிரச்னை இப்பொழுது திருநெல்வேலி மாவட்டத்திலும் அதைத் தொடர்ந்து கன்னியாகுமரி மாவட்டத்திலும் பூதாகாரமாகக் கிளம்பியிருக்கிறது. அது தொடர்பாக இரண்டு அரசாணைகள் வெளியாகியிருக்கின்றன.



அதிலே ஒன்று, அதாவது, அரசாணை எண் 1667, நாள் 15—8—1981 செல்லாது என்று உயர்நீதி மன்றத்தால் தீர்ப் பளிக்கப்பட்டு, அரசாணை எண் 1239, நாள் 17—9—1984 ரெட்ராஸ்பெக்டிவ்வாகச் செல்லும் என்று போட்ட உத்தரவு செல்லாது, ப்ராஸ்பெக்டிவ்வாகத்தான் செல்லும் என்று அரசு ஆணையின்மீது நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது என்று விளக்க அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த விளக்கத்திற்கு விரோதமாக இப்பொழுது கூட, பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்திலே இருந்து இந்தக் குறிப்பிட்ட தேதியான 17—9—1984-க்கு முன்னால், அந்தப் பள்ளிகளிலே சேர்ந்து கர்நாடகத்திலே பயிற்சி பெற்றவர்களுக்கு எவாலுவேஷன்— பணியீட்டு அறிக்கை தருவதற்குக் காலதாமதம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதன் தொடர்பாக 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலே ஒரு அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது. அதாவது, அரசாணை எண் 442, நாள் 27—4—1985-லே சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால், அதன் விவரம் தரப்படவில்லை. அதனுடைய விவரம் தரவேண்டுமென்று அமைச்சரை முதலிலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத் தீர்ப்பினை ஒட்டித்தான் அந்த அரசாணை வழங்கப்பட்டிருக்கிறது. 17—9—1984-க்கு முன்பு என்று இருந்தாலும் சரி, கர்நாடக மாநில ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் வாங்கியிருப்பவர்களை நம்முடைய தமிழ்நாடு ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் வாங்கியிருப்பவர்களோடு இணையாக வைத்து மதிப்பீடு செய்து அவர்களுக்குரிய வாய்ப்பு அளிக்கப்படும்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்ப்பினை ஒட்டி அரசாணை எண் 1239, நாள் 17—9—1984-ஐ ஒட்டி, அதற்கு முன்னாலே பயிற்சி பெற்ற அனைவருக்கும், இந்த எவாலுவேஷன் சர்டிபிகேட் வழங்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, வயதுதான் நாம் பார்க்கிறோமே தவிர, எப்பொழுது அவர்கள் சான்றிதழ் வாங்கினார்கள் என்று பார்ப்பதில்லை.

[திரு. செ. அரங்கநாயகம்] [1985 ஜூன் 17

கர்நாடக மாநிலத்திலே பயிற்சி பெற்றவர்களுக்கு, சான்றிதழ் வாங்கி வந்தவர்களுக்கு நாம் ஆசிரியர் வேலை கொடுப்பதில்லை யென்ற தடை வைத்திருந்தோம். ஆண்டுக் கணக்கை வைத்து நாம் எதையும் செய்யவில்லை. இப்பொழுது கர்நாடக மாநிலப் பயிற்சிப் பள்ளியிலே பயிற்சி பெற்றவர்களுக்கும் தரலாம் என்று முடிவெடுத்திருக்கிறோம். ஆனால் அவர்கள் தமிழ்நாடு ஆசிரியர் பயிற்சி பள்ளியிலே சேர்ந்து பயிற்சி பெற்றவர்களுக்கு இணையாக இருக்க வேண்டும். 35 மார்க்கு வாங்கி சேர்ந்தவர்களையும், 35 மார்க் வாங்கி பாஸ் செய்தவர்களையும், தமிழ்நாடு பள்ளிகளிலே நாம் ஆசிரியர்களாகச் சேர்க்க முடியாது. காரணம், தமிழ்நாடு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் 50 மார்க் வாங்கியவர்களைத்தான் சேர்க்கிறோம். 50 மார்க் வாங்கினால்தான் பாஸ் என்று வைக்கின்றோம். ஆகவே, ஆசிரியர்களுடைய தரம் உயர்ந்திருக்க வேண்டுமென்பதற்காக இந்த நிலைமை இருக்கிறது. ஆகவே, கர்நாடக மாநிலத்திலே பயிற்சி பெற்றவர்களை முழுவதுமாக நாம் தடை செய்திருந்ததை விலக்கி, நம்முடைய ஆசிரியர்களுக்கு ஒப்ப இருக்கின்றவர்களை எடுக்கலாம் என்கின்ற ஒரு முயற்சியிலே முடிவை நாம் எடுத்திருக்கிறோம்.

(முற்பகல் 10-20)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்த கவன ஈர்ப்பு. திரு. இரா. தாமரைக்கனி அவர்களுக்குப் பதிலாக திரு. தி. அன்பழகன் அவர்கள் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

**திரு. அ. ரகுமான்கான் :**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் எழுப்பிய பிரச்சனை பாயின்ட் ஆஃப் ஆர்டரில் வராது. அதனால் அவர்கள் குறிப்பிட்ட அனைத்தையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது.



1985 ஜூன் 17]

**(ஆ) சென்னையில் உள்ள ஓட்டல்களில் விற்கப்படும் உணவுப் பொருட்களின் விலையேற்றத்தால் ஏற்பட்டுள்ள நிலை.**

**திரு. தி. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை நகரில் ஏ, பி, சி என்று மூன்று தரங்களில் இயங்குகின்ற ஓட்டல்களில் விற்கப்படும் உணவுப் பொருள்களின் விலையை அதிக அளவில் உயர்த்தியுள்ளதால் பொதுமக்கள் இடையே ஏற்பட்டுள்ள நிலை" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** பேரவைத் தலைவரவர்களே, உணவுப் பொருள்களின் விலைகள் ஓட்டல்களில் உயர்த்தப்பட்டு வரும் நிலையில் அரசு ஓட்டல் உரிமையாளர்கள் சங்கத்துடன் விவாதித்து விலைக் குறைப்பைச் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். அதன் பலனாக ஓட்டல் உரிமையாளர்கள் சங்கமும் முடிந்த அளவு விலைக் குறைப்பை அறிவித்தும் வருகின்றன. இவ்வாறு ஓட்டல் உரிமையாளர்கள் சங்கத்துடன் கடந்த 19—11—1984 அன்று நடத்திய விவாதத்தின் பேரில் 7—12—1985 முதல் இட்லி மற்றும் உப்புமா ஆகியவைகளின் கட்டணங்களின் விலையை 0.05 பைசா வீதம் குறைத்து வழங்குமாறு சங்கத்தின் அங்கத்தினர்கள் கேட்டுக்கொள்ளப் பட்டனர். சென்னை நகரில் ஏ, பி, சி ஓட்டல்களில் ஏப்ரல் 85 வரை உணவுப் பொருள்களின் விலைகள் ஒரே சீராக காணப் பட்டன. பின்னர் மே 85 முதல் அனைத்துப் பொருள்களிலும் விலைகள் 0.05 பைசா, 0.10 பைசா என்ற அளவுக்கு சற்று உயர்வாகக் காணப்படுகின்றன.

ஓட்டல்களில் உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரித்துக் காணப்படும் சமயங்களில் ஓட்டல் உரிமையாளர்கள் சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம் விலைகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மேலும், நேற்று கூட சென்னை மாநகரில் பல ஓட்டல்களைச் சுற்றிப்பார்த்தோம். நானும் உணவுத் துறைச் செயலாளரும் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் ஜே.எம்.டி. அவர்களும், ஃபுட்செல் டி.ஐ.ஜி. எஸ்.பி. போன்ற அதிகாரிகளும் சுற்றிப்

பார்த்து, எந்த அளவுக்கு விலை வேறுபட்டிருக்கிறது, உயர்ந்திருக்கிறது என்று கணக்கிட்டு வந்திருக்கிறோம். ஓட்டல்களில் விற்கப்படும் உணவுப் பொருள்களின் விலையைக் குறைக்க அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

**4. வரவு-செலவுத் திட்டம் 1985-86 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.**

**கோரிக்கை எண் 35—நுகர்பொருள் வழங்கல்.**

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 35—நுகர்பொருள் வழங்கல் என்ற தலைப்பின்கீழ் ரூ. 98,30,18,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

**திரு. எஸ். பி. மணவாளன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நுகர்பொருள் வழங்கும் திட்டத்தில் நியாய விலைக் கடைகளில் வழங்கப்படுகின்ற பொருட்கள் வழங்கலில் உள்ள முறைகேடுகளைப் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை என் 35—நுகர் பொருள் வழங்கல் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 98,30,18,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. கோ. வீரய்யன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நுகர் பொருள் வாணிபக் கழகத்தால் நடத்தப்படும் கிராமப்புறக் கடைகள் முழுநேரக் கடைகளாக இல்லாமல் பகுதி நேரக் கடைகளாக இருப்பதால், கிராம மக்களுக்கு ஏற்படும் இன்னல்கள் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை என் 35—நுகர் பொருள் வழங்கல் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 98,30,18,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."





**திரு. எஸ். என். இராமசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளம் தொகுதி மகிழ்ச்சிபுரத்தில் ஓர் நியாய விலைக் கடை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 35—நுகர்பொருள் வழங்கல் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 98,30,18,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் கொள்கை விளக்கக் குறிப்புகள்* சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்கெனவே உங்கள் மூலமாக வழங்கப்பட்டிருக்கின்றன. அவற்றை எல்லாம் நான் படித்ததாக ஏற்றுக் கொண்டு சபைக்குறிப்பில் ஏற்றிக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொன்ன பிறகு நான் ஏதாவது கூற வேண்டியிருந்தால் பின்னர் அதுபற்றிச் சொல்கிறேன் என்று கூறி மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துக்களைக் கேட்க ஆவலாக இருக்கிறேன்.

**திரு. எ. தெய்வநாயகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவு நிலைமை குறித்துப் பேசுவதற்கு வாய்ப்பளித்த தமைக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். உணவு நிலைமையைப் பொறுத்தவரையில் ஏழை எளிய மக்களின் வாழ்க்கைப் பிரச்சினையிலேயே முதல் கட்டமாக இருக்கின்றது. அரிசி, கோதுமை, மண்ணெண்ணெய், ஜீனி போன்ற பொருட்களைப் பொறுத்தவரையில் அன்றாடம் அவர்களுடைய வாழ்க்கையில் ஒரு நெருக்கடியான சூழ்நிலை இருப்பதை நாம் அறிவோம். மேலும் அவர்கள் வாங்குகின்ற பொருள் தரமானதாக இல்லை. நுகர்பொருள் வாணிபக் கழகத்தைச் சார்ந்த கடைகளின் மூலமாக அவற்றை வழங்கும்பொழுதும் அவற்றைப் பொறுத்த

*737-771 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.

வரையில் போதிய உத்தரவாதம் இல்லாத நிலைமைதான் இருந்து கொண்டிருக்கின்றது. இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களை சமூக விரோதிகள் பயன்படுத்திக் கொண்டு இலாபம் சம்பாதித்துக் கொண்டு இருக்கிறார்கள். எனவே இதிலே உரிய நடவடிக்கை எடுக்க அரசு முன்வர வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

விவசாயப் பெருங்குடி மக்களிடத்திலிருந்து வியாபாரப் பெருங்குடி மக்கள் விளைபொருட்களை வாங்கும்போது 50 பெர்சன்ட் லெவி என்ற முறையில் சர்க்காருக்கு அளித்து அதன்படி நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு சப்ளை செய்வதற்கு அவர்கள் ஆயத்தமாகிக்கொண்டிருக்கிறார்கள். அதில் பெரும் இழப்பு ஏற்படுகின்ற காரணத்தால் வியாபாரிகள் மத்தியிலும் சலசலப்பு ஏற்படுகின்றது. விவசாயிகளுக்கும் நல்ல விலை கிடைக்கவில்லை. எனவே அதுபற்றி ஆவன செய்ய இந்த அரசு முன்வரவில்லை என்றுதான் நான் கருதுகிறேன். ஒவ்வொரு ஜில்லாவாக எடுத்துக்கொண்டால் அதாவது, உதாரணமாக தஞ்சாவூரில் லெவி கொடுத்து மதுரைக்கு வரும்போது அதனுடைய அடக்கவிலை மதுரையிலே உற்பத்தியாகும் நெல்லிற்கு எவ்வளவு லெவி கொடுக்கப்பட்டு விலை நிர்ணயிக்கப் பட்டிருக்கின்றதோ அந்த விலையை அனுசரித்து இருக்கிறது. எனவே இதைக் கருத்தில் கொண்டு பார்த்தால் விவசாயப் பெருங்குடி மக்கள், அந்த மதுரை வியாபாரிகள் போன்றோர் லெவி கொடுப்பதால் பெரும் இழப்புக்கு ஆளாகிறார்கள். அந்த இழப்பைச் சரிக்கட்ட பல ஊழல்களைச் செய்ய வியாபாரிகள் முற்படுகிறார்கள். அதைச் சாக்காக வைத்துக்கொண்டு அதிகாரி களும் லஞ்சலாவண்யங்களில் ஈடுபடுகின்ற நிலைமை ஏற்படு கின்றது. இதைப்போக்க நல்ல நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கம் முன்வரவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

வியாபாரிகளின் ஆட்சி அங்கே நடைபெறுகின்றது. அதை நாம் கவனிக்கவேண்டும். நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் இருக்கின்ற சிப்பந்திகள் சரிவர நடத்திக்கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். இது மக்களின் எண்ணமாக இருக்கின்றது. அதனை நிவர்த்தி செய்யவேண்டும். இதைப் பொறுத்தவரையில்





மூன்று பிரிவுகளாகச் செயல்படுகிறார்கள். அதாவது சிவில் சப்ளை துறையினர் எனக்கென்ன என்று எண்ணிக்கொண்டு கொள்முதல் செய்துகொண்டிருக்கிறார்கள். நுகர்பொருள் வாணிபக்கழகம் அந்த அரிசி மற்றும் பொருட்களை குடோனில் கொண்டு வந்து வைத்து அதைக் கடைகளுக்கு வழங்கும்போது குறைபாடு உடையதாகக் கொடுக்கிறார்கள், சரியாகக் கொடுக்கப் படவில்லை என்று கடைக்காரர்களும் கூட்டுறவுச் சங்கத்தினரும் கூறுகிறார்கள். இப்படி தப்பை அவர்கள் மீது இவர்கள் போட்டு அதன் காரணத்தால் இவர்கள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க முடியாது என்ற அளவில் இவர்கள் தப்பித்துக்கொள்கிறார்கள். இப்படி ஒருவர் மேல் ஒருவர் பழிகளை சுமத்திக் கொண்டு அங்கு செய்ய வேண்டிய அத்தியாவசியப் பணிகளைச் செய்வதற்கு எந்தவித சந்தர்ப்பமும் அளிக்காமல் அதிகாரிகள், அவர்களுக்கு வருகின்ற சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டு, அவர்கள் போக்கிலேயே அவர்கள் போகிறார்கள். மக்களுக்குத் தேவையான பொருள்கள் அந்த நுகர் பொருள் கழகத்திடம் இருந்து அவர்களுக்கு கிடைக்கிறதா என்றால் அவர்களுக்கு எதுவும் கிடைப்பதில்லை. மக்கள் அதனால் கஷ்டப்படுகிறார்கள். அதனால் அவர்களுடைய பிரச்னைகளை மக்களின் பிரதிநிதிகள் என்ற முறையில் எங்களைப் போல உள்ள சட்டமன்ற உறுப்பினர்களைக் கண்டு சொல்கிறார்கள். அந்தக் குறையைப் போக்கலாம் என்று நாங்கள் சென்று கேட்டால், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் அதிகாரிகள், ஆர்.எம்.-ஐப் போய்ப் பார்க்கச் சொல்லுகிறார்கள். அவரைப் போய்ப் பார்த்தால் அந்தப் பணிகள் கூட்டுறவுத் துறையைச் சார்ந்தது என்று அவர் சொல்லிவிடுகிறார். இப்படி ஒருவர் மேல் ஒருவர் பழியைப் போட்டுக் கொண்டு அங்கே உள்ள குறைகளை நிவர்த்திக்க எந்தவிதமான வழிமுறைகளையும் காண இடம் இல்லாமல் செய்திருக்கிறார்கள். ஆகவே இந்த மூன்று துறைகளும் ஒன்று சேர்ந்து, ஒரு முடிவுக்கு வந்து, இந்தப் பிரச்னைகளை தீர்த்துவைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-30)

அடுத்தபடியாக கொள்முதலைப் பொறுத்தவரையில் அரிசியை நேரிடையாக நாம் கொள்முதல் செய்வோமே யானால், நல்ல தரமான அரிசியை கொள்முதல் செய்ய முடியும்.

[திரு. எ. தெய்வநாயகம்] [1985 ஜூன் 17

ஆனால் நெல்லைக் கொள்முதல் செய்து அரவை ஆலைகளுக்குக் கொடுக்கிறபோது பலவிதமான சிக்கல்கள் ஏற்படுகின்றன. நல்ல நெல்லை கொள்முதல் செய்யவில்லை. நெல் பதராக இருக்கிறது என்று உட்பூசல் கிளப்பப்பட்டு வியாபாரிகள் மத்தியிலே அது பரப்பப்படுகிறது. இதையெல்லாம் தவிர்ப்பதற்கு நமது அரசாங்கம் அரிசியாகவே நேரிடையாக கொள்முதல் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நமது அண்டை மாநிலமாகிய ஆந்திராவில் அவர்கள் அப்படித்தான் நேரிடையாக அரிசியைப் பார்த்து நல்ல தரமான அரிசியாக கொள்முதல் செய்கிறார்கள். அதனால் அரிசி கண்ணுக்கு அழகாக இருப்பதோடு மட்டுமல்லாமல் சாப்பிடுவதற்கும் ருசியாக இருக்கிறது. அப்படி அவர்கள் நேரிடையாக தரத்தைப் பார்த்து அரிசியாகவே கொள்முதல் செய்வதனால் அதை நல்ல லாபத்திற்கு வெளிமாநிலங்களுக்கும் அனுப்புகிறார்கள். நமது அரசாங்கமும் அதே முறையைக் கையாண்டு கொள்முதல் செய்தால் நிச்சயமாக நல்ல தரமான அரிசியை நமது மக்களுக்கு வினியோகம் செய்ய இயலும்.

அடுத்து அதேபோல கொள்முதல் வினியோகத்தில் இருக்கும் முறைகேடுகளை அல்லது குறைபாடுகளை மக்கள் வந்து தெரிவிப்பார்களேயானால் தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அந்தத் துறையைச் சார்ந்த பெரிய அதிகாரிகள் முன் வரவேண்டும் என்றும் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நமது மாநில அரசுக்கு மைய அரசு 24 ஆயிரம் டன் அரிசிக்கு மானியமாக உதவி செய்கிறது என்று கூறினார்கள். ஆனால் மத்திய அரசு மாநில அரசுக்கு எவ்வளவு மானியப் கொடுக்கிறது, மண்ணெண்ணெயில் எவ்வளவு கொடுக்கிறது அத்தோடு மண்ணெண்ணெயில் ஏற்படும் இழப்பு சதவீதட எவ்வளவு, மற்ற பொருள்களுக்கு எவ்வளவு உதவி மத்திய அரச தருகிறது என்பது போன்ற விவரங்கள் இந்த அறிக்கையிலே காணப்படவில்லை. அப்படி ஒட்டு மொத்தமாக பார்க்கி வகையிலும் மத்திய அரசின் மூலமாக உணவுப் பொருள்களுக்கு என்று நமக்கு மொத்தமாக எவ்வளவு மானியம் வருகிறது என் கணக்கை நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தரவேண்டு மக்களுக்காக இந்த உணவுத் துறையில் மாநில அரசு என்னென்



1985 ஜூன் 17] [திரு. எ. தெய்வநாயகம்]

செய்கிறது, மத்திய அரசு என்னென்ன உதவிகளைச் செய்கிறது என்று, மக்கள் புரிந்து கொள்வதற்கு வாய்ப்பாக இருக்கும் வகையில் விவரங்களைத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக வியாபாரப் பொருள்கள். மக்களுக்கு உணவுப் பொருள்களை வியாபாரம் செய்வதற்கு லைசன்ஸ் வாங்கிக் கொண்டு செய்கிறார்கள். அந்த வியாபாரப் பெருங்குடி மக்கள் நல்ல முறையில், நியாயத்தின் அடிப்படையில் வியாபாரம் செய்கிறவர்கள். ஆனால் இடைப்பட்ட சில சமூக விரோதிகள் நடுவிலே இந்த வியாபாரத்தில் புகுந்து பல அக்கிரமங்களைச் செய்கிறார்கள். ஆனால் அவர்கள் செய்கிற வியாபாரம் தான் சரியானது என்று அதிகாரிகளும் நம்பிவிடுகிறார்கள். உண்மையாக லைசன்ஸ் பெற்றுக்கொண்டு எந்தவித அதிக ஆதாயத்தையும் எதிர்பார்க்காமல் செயல்படுகிற அந்த நியாயமான வியாபாரிகளை இதன் காரணமாக, அதிகாரிகள் கசக்கிப் பிழிகிறார்கள். இதுபோன்ற தன்மைகள் தவிர்க்கப்பட வேண்டும்.

குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால் என்னுடைய மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அரிசி ஆலைகள் தான் அங்கே பெருகிக் கொண்டே போகின்றனவே தவிர, தொழில்களை ஒழுங்காகச் செய்யும் வகையில் எந்தவிதமான வாய்ப்பு வசதியும் அந்த ஆலைகளுக்கு இல்லை. அங்கே இருக்கிற அரிசி ஆலைகள் எல்லாம் சும்மா தூங்கிக் கொண்டிருக்கின்றன. அங்கேயிருக்கிற ஊழியர்கள் வேலை வாய்ப்பு இல்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். வேலை இல்லாத நாட்களில் எங்களுக்கு சம்பளம் தரப்பட வேண்டும் என்று கூட கோரிக்கையை அவர்கள் சமீபத்தில் விடுத்திருக்கிறார்கள். ஆகவே, அங்கே வேலை இல்லாத அந்த ஆலை ஊழியர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கின்ற வகையில், அந்த ஆலைகளை இயங்கச் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு, சந்தர்ப்பம் அளித்தமைக்காக உங்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. சா. ஞானசுந்தரம்: மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நம்முடைய அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த

மானியக் கோரிக்கையை வரவேற்று நான் சில கருத்துக்களை இந்த அவையிலே கூற விரும்புகிறேன். இன்றைக்கு தமிழ்நாட்டில் நுகர் பொருள் வாணிபக் கழகமும், அதனுடைய துறையும் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது என்று கூறத்தான் வேண்டும். கொள்முதலிலே தனியார்கள் வியாபாரத்தை தவிர்த்து, எல்லாக் கொள்முதலையும் இந்த நுகர் பொருள் வாணிபக் கழகம், துறையின் சார்பிலே, அரசின் சார்பிலே மிகச் செம்மையாகச் செய்துகொண்டு வருகிறார்கள். அதிலும் குறிப்பாக தஞ்சாவூர், திருச்சி, தென்னாற்காடு மாவட்டங்களில் மிக அதிகமான அளவுக்கு தனி வியாபாரிகள் நெல்லை கொள்முதல் செய்து, எல்லா மக்களுக்கும் நியாயவிலையில் அரிசி கிடைக்காத சூழ்நிலையினை ஏற்படுத்திக் கொண்டிருந்த நேரத்தில், உணவுத் துறையில் தமிழகம் தன்னிறைவு பெறுகிற வகையில், நெல் கொள்முதலை அரசே மேற்கொள்ள வேண்டும் என்ற திட்டத்தை அரசு கொண்டு வந்து, அந்தப் பணியை இந்நிறுவனம் செவ்வனே நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது என்பதை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். தஞ்சை. தென்னாற்காடு, திருச்சி மாவட்டங் களைப் பொறுத்தவரையில் விவசாயிகள் உற்பத்தி செய்கிற நெல்லை அவர்கள் நேரடி கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்கிற வேளையில் அவர்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டும். மத்திய அரசானது மற்ற மாநிலங்களில் விளைகிற பொருள்களுக்கு அதிக விலை நிர்ணயிக்கிறபோது தமிழகத்திற்கு சற்று பாரபட்சம் காட்டுகிற நிலை இருக்கிறது. அதை உயர்த்தித் தர வேண்டும். இப்போது நேரடிக் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்கிற நெல்லுக்கு குவிண்டாலுக்கு 15 ரூபாய் மானியமாக, அதுவும் உரமாக தருகிற திட்டத்தை இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலமாக விவசாயப் பெருங்குடி மக்கள் அனைவரும் நன்மை அடைந்து வருகிறார்கள். அவர்கள் இந்தத் திட்டத்தை வெகுவாக பாராட்டிக் கொண்டிருக் கிறார்கள் என்பதைக் கூற விரும்புகிறேன்.

இன்றைக்கு நம்முடைய அரசு மாநிலத்தில் பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறது. ஐந்து நேரடிக் கொள்முதல் நிலையங்களை தஞ்சாவூர் மாவட்டத்தில் கட்ட உத்தேசிக்கப் பட்டுள்ளது என்றும், இதற்காக நடப்பு நிதியாண்டில் ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்திருக் கிறார்கள். அதேபோல சீர்காழியில் ஒரு இராட்சத மில்லை





அதாவது நவீன அரிசி ஆலையை கட்டுகிற திட்டத்தை இன்றைக்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவற்றை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல தவிட்டிலிருந்து எண்ணெய் எடுக்கிற ஆலையை இந்த அரசு கொண்டு வந்திருப்பதைப் பாராட்டுகிறேன். அதேபோல 50 இடங்களில் நேரடிக் கொள்முதல் நிலையங்களை அமைக்க இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக் கிறார்கள். அதையும் பாராட்டுகிறேன். இதைப் பாராட்டுகிற வேளையில் இந்த 50 நிலையங்கள் போதுமா என்று கேட்க விரும்புகிறேன். தமிழகத்தின் நெற்களஞ்சியமாக இருக்கிற தஞ்சை மாவட்டத்தில் போதுமான கிடங்கு வசதிகள் இல்லை. அதனால் கொள்முதல் செய்யப்படுகிற பொருள்கள் மழையில் நனைந்து வீணாகிற சூழ்நிலை இருக்கிறது. லாரியில் எடுத்துச் செல்ல முடியாத காரணத்தாலும், அந்த மாவட்டத்தினுடைய நன்மையைக் கருதி ஒவ்வொரு ரெவினியூ கிராமங்களிலும் அமைக்கப்படுகிற கொள்முதல் நிலையங்களுக்கும் போதுமான கிடங்கு வசதிகள் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏழை எளிய மக்களுக்கு அத்யாவசிய பொருள்களை வழங்குகிற திட்டத்தை தமிழகத்தில் நிறைவேற்றிக் கொண்டிருக் கிறார்கள். அப்படி நிறைவேற்றுகிறபோது 600 குடும்பங்களுக்கு ஒரு கடை என்ற அளவில் அறிவித்திருக்கிறார்கள். அதை மாற்றி 500 குடும்பங்களுக்கு ஒரு கடை என்ற அறிவிப்பை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்தக் கடைகளில் டயர், டியூப் மற்ற பொருள்களை விற்கிறார்கள் என்கிறபோது சில குறைபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. அவைகளை களைய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்தக் கடைகளில் இருக்கிற பெயர் பலகையை மாற்றியமைக்க வேண்டும். பல நுகர்பொருள் கடைகளில் அந்தக் கடைகளின் பெயரே இல்லாமல் இருக்கிறது. அந்தக் கடைகளின் பெயரையும் போட்டு, இன்னென்ன பொருள்கள் இன்னென்ன விலையில் கிடைக்கும் என்ற அளவில் போட வேண்டும். அதே போல இந்த மணியிலிருந்து இந்த மணி வரையில் விற்பனை செய்வார்கள் என்கிற நிலையையும் ஏற்படுத்தித் தர வேண்டும். அப்படி ஏற்படுத்தித் தருகிறபோது விவசாயிகள் வந்து வாங்குகிற நல்ல சூழ்நிலை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. சா. ஞானசுந்தரம்] [1985 ஜூன் 17

அதேபோல இப்போது மண்ணெண்ணெய் வழங்குகிறார்கள். மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு தருகிற மண்ணெண்ணெயின் அளவு குறைவாக இருக்கிறது என்பதைக் கோடிட்டு காட்டியிருக்கிறார்கள். ஆகவே மத்திய அரசு அதிக அளவில் மண்ணெண்ணெய் தருவதற்கான ஏற்பாட்டை அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல தமிழகத்தில் பல்வேறு திட்டங்களை நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். கிடங்கு கார்ப்பரேஷனை ஏற்படுத்தி இருக்கிறார்கள். அந்தக் கார்ப்பரேஷன் மூலம் கிடங்குகளை கட்டியிருக்கிறார்கள் என்று கொள்கைக் குறிப்பிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மத்திய அரசு 50 : 50 சதவீதத்தில் பணத்தை தரவில்லை என்பதைக் கோடிட்டு காட்டியிருக்கிறார்கள். அதனைப் பெற்று, விவசாயப் பொருள்களை உற்பத்தி செய்கிற மாவட்டங்களில் கிடங்குகளை கட்டித் தர வேண்டும். அரசாங்கம் தனியார்களுக்கு செலுத்துகிற வாடகையை தவிர்ப்பதன் மூலம் திறமையான நிர்வாகத்தை ஏற்படுத்த முடியுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் விவசாயம் செய்வதற்கு காவிரி நீர் வருகிற வேளையில், திருச்சி மாவட்டத்தில் புகளூர் என்ற இடத்தில் நீர் ஏற்றும் பைப்புகள் வைத்து தண்ணீரை எடுக்கிறார்கள். இதனால் தஞ்சை மாவட்டத்தில் விவசாயம் பாதிக்கப்படுகிற சூழ்நிலை இருக்கிறது என்பதை ஆய்வுக் குழு உறுப்பினர்கள் கருத்தாக தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே தஞ்சை மாவட்டத்தில் விவசாயம் செய்வதற்கு வருகிற தண்ணீர் மேல் இடங்களில் தடுக்கப்படாமல் இருக்கிற நிலையை இந்த அரசு கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உணவுப் பொருள்கள் உற்பத்தியை நோக்கமாக கொண்டிருக்கிற இந்தத் துறை நம்முடைய அரசுக்கு இதனைச் சிபார்சாக செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். சில நாட்களுக்கு முன்னால் கேள்வி ஒன்றுக்கு பதில் அளித்தபோது மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். தஞ்சை மாவட்டத்திலிருந்து தண்ணீர் புதுக்கோட்டை மாவட்டத்திற்கும், இராமநாதபுரம் மாவட்டத்திற்கும் திருப்பி விடப்படுமென்ற நிலைமையைச் சொன்னார்கள். அந்த நிலையில் தஞ்சை மாவட்ட விவசாயிகள் பாதிக்கப்படாத நிலையில்



1985 ஜூன் 17] [திரு. சா. ஞானசுந்தரம்]

திட்டத்தை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் இப்போது இருக்கிற நிலையில் காவிரியில் இன்னும் தண்ணீர் வரவில்லை. கர்நாடகா மாநிலத்திலிருந்து தண்ணீரை வாங்கி நாம் விவசாயத்தைச் செய்தாக வேண்டும். ஜூன் மாதம் 12-ம் தேதி திறக்கப்பட வேண்டிய மேட்டூர் அணை இன்னும் திறக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே விவசாயம் செழிப்பதற்கு, விவசாயம் தழைப்பதற்கு உணவு உற்பத்தி பெருகுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

அதேபோன்று, இந்த வசதிகளைச் செய்கிற நோக்கில் மன்னார்குடியிலே சுந்தரக்கோட்டை என்ற இடத்திலே நவீன நெல் அரைக்கும் ஆலை இருக்கின்றது. மேலும் மாவட்டத்தில் 5 ஆலைகள் இருக்கின்றன. ஆலைகளில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் நிரந்தரம் ஆக்கப்படாமல் சுமை தூக்குபவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் ஒப்பந்தக் கூலியாக இருக்கிறார்கள். எனவே அவர்களை சிவில் சப்ளைஸ் கார்ப்பரேசன் எடுத்துக்கொண்டு, அவர்கள் வேலையை பாதுகாக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று எப்.சி.ஐ. மூலமாக பல நெல் உலர்த்தும் ஆலைகள் தஞ்சை மாவட்டத்தில் கட்டப்பட்டு, அவைகள் வெய்யிலிலே காய்ந்து அந்த இயந்திரங்கள் எல்லாம் பாழ்பட்டுக் கொண்டு இருக்கின்றன. எனவே எப்.சி.ஐ-க்கு சொந்தமான அந்த இயந்திரங்கள் பாழ்பட்டு போவதால், பொருளாதாரம் வீணாகிக்கொண்டிருக்கிறது. எனவே அதை அரசு எடுத்து, நம்முடைய சிவில் சப்ளைஸ் கார்ப்பரேசனுக்குக் கொண்டுவந்து பராமரிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இப்படி நல்ல திட்டங்களைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோன்று பாமாலின் தருகிறார்கள். அதை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்கிற நிலையில் மத்திய அரசாங்கம் அதற்கான அந்நியச் செலாவணியை தர முடியாத நிலை இருக்கிறது. எனவே அதற்கு மத்திய அரசாங்கத்திற்குப் பரிந்துரை செய்து அதிகமான அளவில் பாமாலின் எண்ணெய் மக்களுக்கு பெற்று தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று இன்றைக்கு முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்திற்காக தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேசன் உணவுப் பொருள்களை வாங்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். சென்னை, தர்மபுரி, தென் ஆற்காடு போன்ற மாவட்டங்களில் அதைச் செய்கிறார்கள். எனவே இதைத் தமிழகம் முழுவதும் விரிவாக்கம் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதிலே கூட்டுறவுத் துறையிலும் பல செயல்பட்டு வருகின்றன. எனவே கூட்டுறவுத் துறையிலிருந்து, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேசனுக்கு மாற்றி. இந்தத் துறையை செம்மையான துறையாக மாற்றவேண்டும். காரணம் இதிலே இருக்கிற சில குறைபாடுகள்தான். அதற்கு என்று விஜிலன்ஸ் கமிட்டி அமைத்து செம்மையாகச் செயல்படச் செய்யவேண்டும். மேலும் தரக் கட்டுப்பாடு செய்யவேண்டும்.

அதுபோன்று ஹோட்டல்களில் இருக்கக்கூடிய விலைகளைப் பற்றி இங்கே பேசினார்கள். ஹோட்டல்களிலே கொடுக்கப்படுகிற அந்தப் பொருள்களினுடைய தரம் கலப்படமில்லாமல், தரமானதாக இருக்கவேண்டும். இன்றைக்குக் கூட அமைச்சர் அவர்கள் ஒருசில கடைகளிலே சென்று ஆய்வு நடத்தியிருப்பதாக செய்தித்தாள்களிலே பார்த்தேன். அங்கே ஒருசில ஊழியர்களை சஸ்பென்ட் செய்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலை தமிழகம் முழுவதும் நீடிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படி நீடிப்பதன் மூலமாக நாட்டிலே கலப்படமற்ற, கள்ள வாணிபமற்ற கடைகளை உருவாக்க வேண்டும். அப்படி உருவாக்குவதற்காக கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தத் திட்டத்தைப் பாராட்டி, மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை தமிழகத்திலே இருக்கக்கூடிய இந்த சிவில் சப்ளைஸ் கார்ப்பரேசன் மீண்டும் தொடர்ந்து அளிக்க நல்ல பல காரியங்களைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பு அளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன், வணக்கம்.

*திரு. ச. குமரகுருபர ராமநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் இருக்கக்கூடிய விளாத்திகுளம் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாக தாழ்ந்த நிலையில் இருக்கிறது. அங்கே மானாவாரி விவசாயம் தான் மிக அதிக அளவிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மிக





வறட்சியான பகுதியாக கிட்டத்தட்ட ஐந்து, ஆறு ஆண்டுகளாக மழை பெய்யாத காரணத்தால், மிகவும் மோசமான நிலையில் குடிநீருக்கு ஆங்காங்கு அலையக்கூடிய நிலையில் மக்கள் இருக்கிறார்கள். இதற்கு இடையிலே உணவுப் பொருள்கள், மற்றும் உள்ள அத்தியாவசியப் பொருள்களைப் பெறுவதிலே மிகவும் சிரமமான நிலை அங்கேயிருக்கிறது. தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேசன் என்னுடைய தொகுதி முழுவதிலும் சரியான முறையில் செயல்படவில்லை. விளாத்திகுளம் கீழ்ப் பகுதியின் அருகாமையில் கடற்கரை இருக்கிறது. அங்கே வேம்பா முதல் திருவைக்குளம் வரையில் 40-க்கு மேற்பட்ட கிராமங்கள் இருக்கின்றன. மேலும் அந்தப் பகுதி மக்கள் மீன் பிடித்தல், வலை பின்னுதல் ஆகிய தொழில்களிலும், மலைப் பிரதேசங்களில் பனைவெல்லம் காய்ச்சுதல் போன்ற தொழில்களிலும் ஈடுபடுகிறார்கள். ஆனால் அந்தப் பகுதி மக்களுக்கு அத்தியாவசியமான பொருட்களை வழங்கக்கூடிய விளாத்திகுளம் கீழ்ப் பகுதியில் உள்ள அந்த உணவு வழங்குதுறை கிட்டத்தட்ட இரண்டு மாத காலமாக சரியான முறையில் சப்ளை செய்யவில்லை. மேலும் சப்ளை செய்யக்கூடிய அந்த அரிசியினுடைய தரம் தாழ்ந்த நிலையில் இருக்கிற காரணத்தால், அந்தப் பகுதி மக்கள் கடின உழைப்பை மேற்கொள்கின்ற காரணத்தால், அந்தப் பகுதி மக்களுக்கு மஞ்சள் காமாலை நோய் தாக்கி, அதனால் அவர்கள் தங்களுடைய தொழிலை நடத்துவதற்கு மிகவும் இடையூறாக இருக்கிறது.

அடுத்து மண்ணெண்ணெயை எடுத்துக் கொண்டால், அந்தப் பகுதியில் உள்ள மக்கள் குடிசைகளில் வாழ்கின்ற காரணத்தால், —ஆங்காங்கு கட்டிடங்களும் இருக்கின்றன—மின்சாரத்தினுடைய உபயோகம் அவர்களுக்கு அதிகமாகக் கிடையாது. எனவே மண்ணெண்ணெயின் சப்ளையை அதிகமாக்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே அவர்களின் உபயோகத்திற்கு மட்டுமல்லாமல், பல்வேறு பகுதிகளிலேயும், குறிப்பாக விளாத்திகுளம் மக்கள் அனைவருக்கும் இந்த எண்ணெயினுடைய அளவை அதிகரித்துக் கொடுக்கவேண்டும் என்று நான் உங்களை மரியாதையோடு கேட்டுக்கொள்கிறேன். சப்ளை தட்டுப்பாடு வராமல் காக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சிவில் சப்ளை கார்ப்பரேஷனில் ஓவர் ஸ்டாக் ஆக அரிசி இருந்தால் அது கெட்டுப் போகும் காலத்திற்குள் அந்தப் பகுதியில் விநியோகம் செய்ய ஆணையிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

விளாத்திகுளம் தொகுதி முழுவதும், அனைத்துப் பகுதியிலும் கிட்டத்தட்ட சப்ளை கிடையாது என்று நான் உங்கள் முன்னால் கூறிக்கொள்கிறேன். விளாத்திகுளம் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கிடங்கில் உள்ள அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தும் தக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மேலும் அடிக்கடி அதிகாரிகள் லீவு போடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. கிடங்கில் உணவுப் பொருட்கள் இருந்தும் அதை ஏன் அவ்வாறு சப்ளை செய்யாமல் ஸ்டாக் வைத்து இருக்கிறார்கள் என்ற விவரம் தெரியவில்லை. விளாத்திகுளம் பகுதியில் ஏ.எஸ்.ஐ. அடிக்கடி லீவு போட்டுவிடுகிறார். அவருக்கு பின்னால் பதவியில் இருக்கக்கூடிய அதிகாரியோ, அவர் பகுதிக்கு சப்ளை செய்து விட்டு அவரும் லீவு போட்டுவிட்டுச் சென்று விடுகிறார். கோவில்பட்டி ஏ.எம். மற்றும் நெல்லை மாவட்டத்தில் உள்ள தலைநகரில் இருக்கக்கூடிய ஆர்.எம்.-க்கு தகவல் கொடுத்தும், சரியான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. டி.எஸ்.ஓ.-விடமும் இதுபற்றித் தகவல் கொடுத்து இருக்கிறோம். அதன் பின்பு தொகுதியைச் சேர்ந்த மக்கள் ரேஷன் போடவில்லை என்று தகவல் கொடுத்து இருக்கிறார்கள். எனவே, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று உங்கள் மூலமாக கேட்டுக்கொள்கிறேன்.

தொகுதியினுடைய பல பகுதிகளில் இருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு அந்த ரேஷன் கடைகளைப் பிரித்து சப்ளையை துரிதப்படுத்துவதற்கு வசதியாக பல கிராமங்கள் சேர்ந்துள்ள பகுதிகளைப் பிரித்து பல பகுதிகள் அடங்கிய கடைகளைக் குறைத்து ஏற்பாடு செய்தால் சப்ளையை அதிகரிப்பதற்கு வசதியாக இருக்கும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதுவரைக்கும் எந்தவிதமான நடவடிக்கையும் டி.ஆர்.ஓ.விடமிருந்து கிடையாது. ஒட்டப்பிடாரம் ஒன்றியத்தைச் சேர்ந்த முள்ளூர், அயிரம்பட்டி, முத்துகுமாரவரம் கிராமங்களை உள்ளடக்கி முத்துகுமாரவரம் என்ற பகுதியில் ரேஷன் கடை இருக்கிறது. அதற்கு மற்ற பகுதியிலிருந்து போக்குவரத்து வசதி இல்லாத காரணத்தால் கடந்த இரண்டு ஆண்டுக் காலத்திற்கு முன்பு இருந்த முள்ளூர் கிராமத்தில் வாழக்கூடிய தாழ்த்தப்பட்ட மக்கள் அங்கே ரேஷன் வாங்க வில்லை என்ற அளவுக்கு இருக்கிறார்கள். அவர்கள் வாங்கு வதற்கு வசதியாக மீண்டும் அந்த ரேஷன் கடை இருக்கக்கூடிய பகுதியில் முத்துகுமாரவரத்திற்கு மூன்று நாட்களும், அந்த





முள்ளூருக்கு மூன்று நாட்களும், வாரத்திற்கு இரண்டு தடவை யாக அவர்களுக்குக் கொடுக்கும்படி மிகவும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அவர்கள் அந்த நடவடிக்கை எடுக்கும்படி டி.ஆர்.ஓ.-விடம் சொல்லியும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மீண்டும் அவர்கள் இதுபற்றி தகவல் தொடர்ந்து கொடுத்தும் வருகின்ற காரணத்தால் இங்கே பேச வேண்டிய நிலை ஏற்பட்டது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கீழ் உள்ள ஒவ்வொரு கடைக்கும் ஆயிரம் கார்டுகள் உள்ளன. ஆயிரத்திற்கு மேல் கார்டுகள் இருந்தால் பக்கத்தில் உள்ள கூட்டுறவு கடன் சங்கத்தில் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. கூட்டுறவு கடன் சங்கத்தின் மூலம் உணவுப் பொருட்களாக அரிசி, சீனி, மண்ணெண்ணெய், கோதுமை, மைதா போன்றவைகள் வினியோகிக்கப்படுகின்றன. கார்டு யூனிட்டு ஒன்றுக்கு நான்கு கிலோ அரிசியும், அதாவது 60 சதவீதம், 80 சதவீதம் வரை கார்டில் உள்ளபடி 'ஏ' ரிஜிஸ்டரில் உள்ளபடி கொள்முதல் செய்து விற்பனை செய்யப்படுகிறது. சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கடைகளை நடத்துவோர் மாதம் நான்கு நாட்களுக்கு மட்டும் வினியோகம் செய்கிறார்கள். மற்ற நாட்களில் கடைகளில் ஸ்டாக் இல்லை என்று கூறிவிடுகிறார்கள். ஸ்டாக் உள்ளதை சரக்கு வந்த உடன் மறைமுகமாக, மொத்தமாக என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் விற்பனை செய்துவிடுகிறார்கள். மண்ணெண்ணெய் 28, 29 ஆம் தேதிகளில், கடைசி நாட்களில் தான் வரும் என்று மக்களிடம் தவறான ஒரு செய்தியைக் கூறி, மண்ணெண்ணெய் எடுக்கும் இடத்திலேயே பேரலோடு விற்று விடுகிற நடவடிக்கை தொடர்ந்து நடைபெறுகிற ஒரு செயலாக இருக்கிறது. இது பாமர மக்களுக்குத் தெரியாது. கிலோவிற்கு 10 பைசா, 15 பைசா வரை கூடுதலாக பில் போட்டு எடுத்துக் கொள்கிறார்கள். எடையில் உள்படி வைத்து விற்பனை செய்வது மக்களுக்குப் பெரும் ஏமாற்றத்தை உண்டுபண்ணுகிறது.

மக்கள் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கடைகளில் வாங்கிய பொருட்களை வெளியில் வந்து எடை போட்டுப் பார்க்கும்போது கிலோ அரிசிக்கு 100 கிராம் வரை குறைகிறது என்று அவர்கள் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். சீனியைப் பொறுத்தவரையில் ஒரு கிலோவுக்கு 850 கிராம் தான் இருக்கிறது என்ற ஒரு குறையையும் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே

போல் கடையில் 20 ஆயிரம் வரைக்கும் இருப்பதாக ஸ்டாக் ரிஜிஸ்டரில் இருக்கும். ஆனால் கடையில் இருக்காது. மேல் அதிகாரிகள் வந்து பார்த்துவிட்டு ஸ்டாக் உள்ளது என்று தனது மாமூலைப் பெற்றுவிட்டு கையெழுத்தைப் போடுகிற சூழ்நிலை நாட்டில் தொடர்ந்து இருக்கிறது. இவ்விதம் மாதா மாதம் அந்தப் பகுதியில் தொடர்ந்து நடந்து வருகிறது. அரிசியையும், சீனியையும், மண்ணெண்ணெயையும் கொள்முதல் செய்யும் இடத்திலேயே விற்றுவிட்டு கடைக்கு அந்த மாதம் சரக்கு வினியோகம் செய்யவில்லை என்று கூறி மக்களைத் திணற அடிக்கும் ஒரு சூழ்நிலை தொடர்கிறது. அதாவது கடையில் வேலை செய்யும் கிளார்க், வீடு, லாரி ஆகியவை சொந்தமாக வாங்கும் அளவுக்கு வருமானம் தேடிவிட்டார்கள். இது மிகவும் அவல நிலையாக உள்ளது.

(முற்பகல் 10-50)

மக்களுக்குத் தேவையான நல்ல தரமான அரிசி, சீனி, மண்ணெண்ணெய் ஆகியவற்றை வெளியிலே கூடுதல் விலைக்கு விற்றுவிட்டு, தரம் குறைந்த, தேவையற்ற பச்சரிசி. பாமாலின் ஆகியவற்றை வைத்துக்கொண்டு, விற்பனை செய்வது மக்களுக்கு சங்கடத்தையும், வேதனையையும் ஏற்படுத்துகிறது. மக்களுக்குத் தேவையான பொருட்களைத் தேவையான நேரத்தில் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கடைகள் விற்காமல் உள்ளன. சில சாமான்கள் இல்லாமலும் உள்ளன. கடை குமாஸ்தாக்கள் தங்களுக்கு வசதிப்பட்ட நேரத்தில் திறந்து, விற்பனை செய்யக் கூடிய நிலையும் உள்ளது. மொத்தத்தில் அதிகாரிகளுடைய போக்கு அவ்வளவு நல்ல சூழ்நிலையில் இல்லை. அவர்கள் மாமூலைப் பெற்றுக் கொண்டு கண்ணை மூடிக்கொள்கின்ற நிலையும் உள்ளது. விற்பனையான சாமான்களை மொத்தத்திலே விற்று, விற்பனையினுடைய லாபத்தைப் பங்கு எடுத்துக் கொள்கிறார்கள். மொத்தமாக பில்களைப் போட்டு விற்று விடுகின்ற சூழ்நிலையும் ரேஷன் கடைகளிலே இருக்கிறது.

விற்பனை செய்யும் நேரத்தில் இருக்கும் ஸ்டாக்குக்கும், வைத்திருக்கும் கணக்குக்கும் அதிக வித்தியாசமாக இருக்கிறது. பில் போடாமலே சரக்குகளை எடுத்துக்கொண்டு விடுவதுதான் அதற்குக் காரணமாக உள்ளது. அதற்கு, அதிகாரிகள், தாலுகா அதிகாரிகள் உடந்தையாக இருக்கிறார்கள், அதுவும் ஒரு காரணமாக உள்ளது. வேலியே பயிரை மேயும் சூழ்நிலையில், பொது





மக்களுக்கு எவ்வளவு நல்லமுறையில் தரமான பொருட்கள் குறைந்த விலையில் கிடைக்கும் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படி இருந்தால் சிவில் சப்ளைஸ் காப்பரேஷன் மூலம் எவ்விதம் உணவுப் பொருட்களை நியாயமாகப் பெறமுடியும் என்பதையும் கேட்க ஆசைப்படுகிறேன். சரக்கு விற்ற பணத்தை உடனுக்குடன் கட்டாமல், காலம் தாழ்த்தி, ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவில் இன்ஸ்டால்மெண்டில் கட்டுகிற சூழ்நிலை தொடர்கிறது. சர்க்காரில், ஊனமுற்றோருக்கு 'ஃப்ரீ ரைஸ்' கொடுத்துதவ, கார்டு கொடுக்க ஏற்பாடு செய்திருந்தார்கள். அரிசியை ஒழுங்காக விநியோகம் செய்யாமல், விலைக்கு விற்று விடுகிறார்கள். தேர்தல் வாக்குறுதியாக 5 கிலோவுக்கு 1 கிலோ அரிசி இனாமாக வழங்குவதாகக் கூறினார்கள். எங்கள் பகுதியில் மட்டும் வழங்காமல், மற்ற பகுதிகளுக்கு வழங்குகிறார்கள்? அப்படியானால் ஏன் அந்த ஓர வஞ்சனை? குறைந்தபட்சம் மாதத்திற்கு 20 கிலோ அரிசி வழங்குவதாகச் சொன்னார்களே, இப்போது வழங்கப்படவில்லையே, அதையும் எங்கள் பகுதி மாதிரி, வறட்சிப் பகுதிகளுக்கு வழங்கிடுமாறு கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு நியாய விலைக் கடையிலேயும் புகார் புத்தகங்கள் வைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதே போல் சட்டமன்ற உறுப்பினர்கள், நியாய விலைக் கடைகளுக்குச் சென்று, பார்வையிட்டு, அதன் தொடர்பான குறிப்புக்களை புகார் புத்தகத்திலே எழுதுவதற்கு புகார் புத்தகங்கள் வைத்திடுவது மிகவும் அவசியம் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

தாமதத்திற்குக் காரணம் என்னவென்று கேட்டால், ரேஷன் பொருட்களைக் கொண்டு செல்வதற்குப் போதுமான அளவுக்கு சாலை வசதிகள் இல்லை என்று அதிகாரிகள் குறைசொல்கிறார்கள். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் அவர்கள் சொல்வது சரி என்று நான் சொல்கின்ற அளவுக்கு, சாலைகளில் கிட்டத்தட்ட 7½ ஆண்டுக் காலமாக எந்தவிதமான பராமரிப்புப் பணிகளோ, புதுச் சாலைகள் போட்டு முடிக்கக் கூடிய அளவில் முழுமை பெற்ற சாலைகளோ இல்லை என் தொகுதியில் என்ற விவரத்தைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனைப் பொறுத்தவரையில், நகர்ப்புறத்திற்கும், கிராமப்புறங்களுக்கும் எந்த எந்தப் பொருட்கள் தேவையோ, அதற்குத் தகுந்த அளவில் சப்ளை செய்யக் கேட்டுக் கொள்ளுகிறேன். கிட்டத்தட்ட

கிராமப்புறங்களிலே, அரிசி, மண்ணெண்ணெய், சீனி ஆகியவற்றை ஒழுங்காக விநியோகம் செய்து, தேவை இல்லாத கோதுமை, மைதா, ரவை போன்ற பொருட்களை நகர்ப்புறங்களுக்கு சப்ளை செய்யவேண்டும். கிராமப்புறத்திற்குத் தேவையான மண்ணெண்ணெய் அளவை, கூடுதலாக சப்ளை செய்தால் அவர்களுக்குப் பயன் உள்ளதாக இருக்கும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**டாக்டர் கே. சமரசம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களால் இந்த மன்றத்திலே கொண்டு வரப்பட்டிருக்கும் நுகர்பொருள் வழங்கல் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின் மீது ஆட்சிக் கட்சியின் சார்பாக நான் சில உணர்வுகளை இந்த மன்றத்திலே வைக்க முன் வருகிறேன். இந்தியாவிலேயே தமிழ்நாட்டிலே தான் விலை குறைவு. அந்த அளவுக்கு முனைப்பான பல்வேறு நடவடிக்கைகளை இந்த ஆட்சி எடுத்திருக்கின்ற காரணத்தால்தான், இன்றையதினம் ஓரளவுக்கு இந்தியத் துணைக் கண்டத்தில் நல்ல நிலையிலே உணவுப் பொருட்களைப் பொறுத்தவரையில் தமிழக அரசு நிர்வகித்து வருகிறது என்று சொன்னால் அது மிகையாகாது. தமிழகத்திலே பள்ளிக்கூடங்களிலே சத்துணவு போடுகின்றோம். குழந்தைகளுக்கு இலவச உணவு வழங்குகிறோம். முதியோர்களுக்கு இலவச உணவு வழங்குகின்றோம். உடல் ஊனமுற்றோருக்கு உணவு வழங்குகிறோம். அதுபோல், பல்வேறு வகையில் உணவு இலவசமாகக் கொடுத்துள்ளோம். இந்த நாட்டில் 20 ஆயிரத்திற்கு மேற்பட்ட நியாய விலைக் கடைகள் திறந்து, அதன் மூலமாக பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட மக்கள் என்று சொல்லக்கூடிய, கிராமத்திலே, நகர்ப்புறத்திலே இருக்கக்கூடியவர்கள் எல்லாம் கூட— இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட கடைகளைத் திறந்து, அவர்களுக்கு சராசரி மார்க்கெட்டை விட, ஏறக்குறைய பாதி விலைக்கு உணவுப் பொருட்களை வழங்குகின்ற நிலைக்கு இந்த அரசாங்கம் மிகவும் முனைப்பாக நடவடிக்கை எடுத்திருப்பதை நாம் மறந்து விட முடியாது.

ஒழுகாத வீடு, வயிறார உணவு, கிழியாத துணி ஆகியவைதான் அடிப்படைத் தேவைகளாகும். இந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற நிலை அரசில் இருக்கவேண்டும் என்ற எண்ணத்தைப் பதிய வைத்து, அதற்கான நடைமுறைகளை இந்த அரசு மேற்



கொண்டிருக்கிறது. அதுவும், இந்த அரசாங்கம் வந்தபிறகு பல்வேறு வகைகளிலே ஆண்டுக்காண்டு சம்பள உயர்வு கொடுத்தும், பே கமிஷன் அமைத்து எவ்வளவோ கூடுதலாக்கியும்கூட, உணவுப் பொருட்களைப் பொறுத்தவரையில் மிகக் குறைந்த அளவிற்குத்தான் அதன் விலை இருக்கும் என்பது அந்தக் கணக்குகளைப் பார்த்தால் தெரியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த அளவிற்கு அதனை வகைப்படுத்தி, முறைப்படுத்தி அமலாக்கி வருகிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

கிராமங்களில் உள்ள மக்களின் நிலைமைகளைப் பற்றிக் கேட்டால், பாமாலினைப் பட்டிக்காட்டிலே முன்பெல்லாம் பார்த்துக் கூட இருக்க மாட்டார்கள். அவர்கள் பாமாலினைப் பார்த்தது கூட புரட்சித் தலைவர் ஆட்சியில்தான் என்று சொல்லுகின்ற அளவிற்கு, அப்படி ஒரு ஆயில் இருக்கிறது, அதைப் பயன்படுத்த வேண்டும் என்று கூடத் தெரியாத அளவிற்குக் கிராமங்களில் இருந்த நிலையை மாற்றி, இப்படிப்பட்ட ஒரு ஆயிலைப் பயன் படுத்துகின்ற நிலையை உருவாக்கியது இந்தத் துறை என்று சொன்னால் அது மிகையாகாது.

ஆனால், இந்தத் துறையைப் பற்றிப் பலரும் குறை சொல்லலாம். குறை சொல்வதற்கு ஜனநாயகத்தில் எப்பொழுதும் வழி இருக்கும். ஆனால் அவர்கள் யார்? அவர்களுடைய காலத்திலே இருந்த நிலைமை என்ன என்பதைப் பற்றி எண்ணிப் பார்க்கின்ற பொழுது அவர்கள் ஆட்சிக் கட்டிலில் இருந்தபொழுது என்ன நிலைமை இருந்தது என்பதை ஒப்பிட்டுப் பார்த்தால் தெரிய வரும். ஒரு பருவ மழை, இரண்டு பருவ மழை தவறி விட்டது என்று, நாட்டிலே பஞ்சம் வந்துவிட்டது என்று, நாட்டுமக்கள் அமைச்சரிடத்திலே முறையிட்டபொழுது, இந்தியத் துணைக் கண்டத்தில் அரசில் இருந்த சிலர் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், எலிக் கறி சாப்பிடு என்று சொல்லியிருக்கிறார்கள். இன்னொருவர் சொல்லியிருக்கிறார், பருத்திக்கொட்டை சாப்பிடலாம் என்று. இன்னொருவர் சொல்லியிருக்கிறார், ஒருவேளை சாப்பிடாதே என்று. இன்னொருவர்கூடச் சொல்லியிருக்கிறார், உணவுக் கடைகளை—ஹோட்டல்களை மூட வேண்டுமென்று. ஒரு நேரத்தில், நிர்வாகத்திலே இருந்த அரசு சொல்லியிருக்கிறது, திருமணக் காலங்களில் இத்தனை இலைகளில்தான் பரிமாற வேண்டும், இதற்கு மேற்பட்ட இலைகளில் சாப்பிடக் கூடாது என்று.

அப்படிப்பட்ட நிலைமைகளை யெல்லாம் மாற்றி, நல்ல முறையில் நல்லதொரு நிலையை உருவாக்கியது, இரட்டை இலைச் சின்னத்தைத் தன்னுடைய தேர்தல் சின்னமாகக் கொண்ட, இந்தத் தமிழ்நாட்டை ஆளவந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

ஒருவர் ஆட்சி பீடத்திற்கு வருவதற்கு முன்னால் இருந்த உற்பத்தி 35 இலட்சம் டன்கள். அவர்கள் ஆட்சி பீடத்தில் ஏறிய பிறகு, சர்வ வல்லமை படைத்தவர் என்று கருதப்படுகின்ற அவருடைய ஆட்சியில் உணவு உற்பத்தி 65 இலட்சம் டன்கள் என்று பெருகிய பிறகும்கூட அரிசியின் விலை என்ன ஆயிற்று என்று பார்க்க வேண்டும். அவர் பதவியேற்றபொழுது அரிசியின் விலை 2 ரூபாய்; இப்படி இரண்டு ரூபாய்க்கு விற்ற அரிசி 10 ரூபாய் ஆனது. இப்படி ஒரு காலம் அந்த நேரத்தில் இருந்தது. உணவு உற்பத்தி பெருகியும்கூட நிர்வாகம் சரியில்லாத காரணத்தால் 2 ரூபாய்க்கு விற்ற அரிசி 10 ரூபாய்க்கு விற்கப்படும் நிலை இருந்தது. அப்பொழுது சத்துணவு கிடையாது; குழந்தைகளுக்கு உணவு கிடையாது; முதியோர்களுக்கு உணவு வழங்கும் திட்டம் கிடையாது; பாதி விலைக்கு அரசு கொடுக்கின்ற நிலைமை இல்லை.

இப்படிப் பாதி விலைக்குக் கொடுக்கின்றோம் என்று சொல்லுகின்ற நியாய விலைக் கடைகள் இந்த அளவிற்கு இல்லை. உணவு உற்பத்தியும் பெருகியிருந்தது; ஆனால் அப்படிப்பட்ட நேரத்தில் ஒருவர் ஆண்டபொழுது, இந்த நாட்டின் ஜீவநாடி என்று தங்களைப்பற்றித் தாங்களே தம்பட்டம் அடித்துக் கொண்டிருந்தவர்கள் ஆண்ட நேரத்தில், இரண்டு ரூபாய்க்கு விற்ற அரிசி 10 ரூபாய்க்கு விற்கின்ற பரிதாபகரமான நிலைமை இந்த நாட்டில் ஏற்பட்டது. ஆனால் எங்களுடைய வணக்கத்திற்குரிய புரட்சித் தலைவரவர்கள் ஆட்சிமன்றத்திற்கு வந்த நேரத்தில், எந்தெந்த வகைகளில் இதற்கு எப்படியெப்படிச் செய்ய வேண்டுமென்பதையெல்லாம் எண்ணிப் பார்த்து, அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டதால் இன்றைக்கு இந்த இந்தியத் துணைக் கண்டத்திலே, தமிழ் மாநிலத்திலே, நல்ல நிர்வாகத்தைச் செய்து வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் துறையைப் பொறுத்தவரையில் நல்ல பெயரை எடுத்து வருகிறது என்பதை யாரும் மறந்துவிட முடியாது.





ஒரு காலத்தில் மிகப் பெரிய சிக்கல் ஏற்பட்டது. சத்துணவுத் திட்டத்தை நாம் அறிமுகப்படுத்திவிட்டோம். தொடர்ந்து அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற ஒரு நிலை. ஒரு வறட்சிக் காலத்தில், அரிசி இல்லை, அரிசி வேண்டும் என்று மத்திய அரசுக்கு நாம் கோரிக்கை வைத்தோம். அப்படி மத்திய அரசுக்குக் கோரிக்கை வைத்த நேரத்தில், கொஞ்சம் அது வாளா இருந்த நேரத்தில், வணக்கத்திற்குரிய எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் உண்ணாவிரதம் இருப்பதற்கு முயற்சி செய்தார்; உண்ணாவிரதமும் இருந்தார். அப்படி உண்ணாவிரதம் இருந்த நேரத்தில், மத்திய அரசிலிருந்து அதற்கு வேண்டிய பரிசீலனை நடவடிக்கையை எடுக்கிறோம் என்ற தகவல் வந்து கொண்டிருந்தது. அப்பொழுதுகூட, சிண்டு முடித்து வேலை பார்க்கின்ற சிலர் இங்கே சொன்னார்கள், நாங்கள் ஆட்சி பீடத்தில் இருந்தபொழுது இன்னின்ன அளவிற்கு மத்தியத் தொகுப்புக்கு வழங்கியிருக்கிறோம் என்று சொன்னார்கள், அது சரிதானா என்பதைப் பார்க்க வேண்டும்.

(முற்பகல் 11-00)

ஆனால், வழங்கியிருக்கிறபொழுது இப்பொழுது வழங்கவில்லை என்று சொல்வது உண்மையிலே ஏமாற்றத்தைத் தருகிறது. ஆனாலும் நீங்கள் சத்துணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்திவிட்ட காரணத்தால் அரிசி கொடுக்கலாம் என்று சொன்னார்கள். இது எப்படி இருக்கிறது என்றால், சிறுவர்கள் சிலர் ஒரு ஆமைமீது கல்லைப் போட்டுக் கொண்டிருந்தார்களாம். அப்பொழுது அந்தப் பகுதியிலே ஒரு ஆசாடபூதி சாமியார் போனார். அவருக்கு அந்த ஆமை சாக வேண்டுமென்ற எண்ணம். அவர் மிகப் பெரிய ஆசாடபூதி சாமியார். அவர் போய் அந்த ஆமையை சாகடித்தால் உலகம் ஒத்துக் கொள்ளாது. காரணம் அவர் சாமியார். அவருக்கு அந்த ஆமையும் செத்தாகணும். அதே நேரத்திலே தான் சாகடித்ததாகவும் இருக்கக்கூடாது. அதற்கு என்ன செய்யலாம் என்று பார்த்தார். அந்தச் சிறுவர்களுக்குத் தெரியாது, அவர்கள் சும்மா கல்லைப் போட்டுக் கொண்டிருந்தார்கள். ஆமை ஓடு மேலே பாறை விழுந்தால்கூட அதன் உயிர் சீக்கிரம் போகாது. ஆனால் ஆசாட பூதி சொன்னார், ஏய், சின்னப் ப்சங்களா, என்னடா அதன் மேலே போய் கல்லைப் போட்டுக் கொண்டிருக்கிறீர்கள்; தப்பித் தவறி

அந்த ஆமையைத் திருப்பிப் போட்டு அடித்தால், அது செத்துப் போய்விடப் போகிறது என்று. உடனே பசங்கள் பார்த்தார்கள். ஆமையைத் திருப்பிப் போட்டு கல்லை விட்டார்கள், அது காலியாகிவிட்டது. அது போல இங்கிருந்து சிலர் ஸ்லோகங்களை மத்திய சர்க்காருக்கு எடுத்துச் சொல்லி, எப்படியாவது மத்திய மாநில அரசுகளின் உறவுக்கு வேட்டு வைப்பதற்குரிய வழிவகைகளை, ஏற்கனவே இந்த நாட்டை ஆண்டு கொண்டிருந்தவர்கள், அவர்களுக்குரிய பல்வேறு விதமான மூளைகளை எல்லாம் பயன்படுத்தி எடுத்துச் சொன்னார்கள். ஆனாலுங்கூட, அதில் விரிசல் விழாத அளவுக்கு, மத்திய மாநில அரசு உறவு கெடாத அளவுக்கு, இந்த உணவு பொருள் துறையிலே நாட்டு மக்களுக்குப் பாதகம் ஏற்பட்டால், நிச்சயமாக அது இரண்டு அரசுகளுக்குமே கேவலம் என்பதனை மத்திய அரசு உணர்ந்து, மாநில அரசின் எண்ணங்களை, கொள்கைகளை, உணர்வுகளை, தேவைகளை எண்ணிப் பார்த்து, மாற்றுக் கருத்துக்குச் செவி சாய்க்காமல் தானே முன் வந்து, அரசின் பல்வேறு சந்தர்ப்பச் சூழ்நிலையை எடுத்து, அந்த நிலையை நாம் அங்கிருந்து தவிர்க்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டு, மக்களுக்குச் சேவை செய்வதிலே இன்னொரு வகையிலே நாம் முயற்சி செய்தோம் என்பதை நாம் மறந்துவிட முடியாது. அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் பல்வேறு வகையிலே இப்படியெல்லாம் நடந்து கொண்டவர்கள், இருந்தும் கெடுத்தான் முனிசீப், செத்தும் கெடுத்தான் முனிசீப் என்று சொல்வார்களே, அது போல ஆட்சி பீடத்தில் இருக்கிறபொழுதும் இந்த நாட்டை எங்கே கொண்டு போய் சேர்க்கக் கூடாதோ அங்கே கொண்டு போய் சேர்க்கின்ற அளவிற்குச் செய்து காட்டினார்கள். ஆட்சி பீடத்திலே இருந்து இறங்கிய பிறகு இந்த நாட்டு மக்களுக்கு என்ன, என்ன துன்பங்களைக் கொடுக்க முடியுமோ அதைச் செய்து கொண்டிருக்கும் வகையிலே சொன்னார்கள்.

அண்மையிலேகூட நான் நேற்றையதினம் ஒரு செய்தித் தாளிலே பார்த்தேன். நீங்கள் ஓட்டு போட்டதற்கு அனுபவியுங்கள் என்று எங்கோ போய், ஏதோ போய் வசூல் செய்வதற்காக, கடனை வசூல் செய்த இடத்திலே யாரோ ஒரு அதிகாரி கேட்டதாக ஒரு கருத்தினை, இந்த நாட்டிலே இல்லாத ஒன்றினை, உருவாக்கி, ஈறைப் பேனாக, பேனை பெருமாளாக,





பெருமாளை, பெத்த பெருமாளாக ஆக்கக்கூடிய கெஜக் கோல் பாண்டியர்கள் எல்லாம் சில வேட்டுகளை விட்டுக் கொண்டிருப்பார்கள். காரணம், ஆட்சிமன்றத்திலே இருந்தபொழுது என்ன, என்ன செய்தோம் என்பதை மறந்து, இல்லாதபொழுது எந்த, எந்த நேரத்திலே எப்படிச் சண்டையை மூட்டி விட முடியும், எப்படி மக்களைத் தூண்டிவிட முடியும், எப்படி மத்திய அரசைத் தூண்டி விட முடியும், அதன்மூலமாக, இந்த நாட்டிலே குழப்பத்தை உருவாக்க முடியும் என்று திட்டமிட்டு செய்து கொண்டிருக்கிற சூழ்நிலையே இருக்கிறது என்பதை மறந்துவிட முடியாது. அது எப்படி இருந்தாலும்கூட அதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல், மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதை உணர்ந்து, வணக்கத்திற்குரிய இதய தெய்வம் புரட்சித் தலைவர் எந்த, எந்தப் பணிகளை, எப்படி, எப்படி நிறைவேற்ற முடியுமோ, அதை நிறைவேற்றுவதற்குரிய எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மறந்து விட முடியாது. ஆகவே, இன்று இருக்கிற இந்தச் சூழ்நிலையில், உணவுப் பொருள் வழங்கு துறை சிறப்பாக இயங்குகிறது.

ஊராட்சிகள்தோறும் ஏறக்குறைய 500 குடும்பக் கார்டுகளுக்கு ஒரு கடை என்று சொல்லக்கூடிய அளவுக்கு மிகச் சிறப்பாக நடந்து வருகிறது. அரசுக் கட்டிலிலேயிருந்து நாம் ஆணைகளைப் பிறப்பிக்கிறபொழுது, நிர்வாகத்திலே, கீழே சிலபல குறைகள் ஏற்படுகின்றன என்பதை நான் மறந்து விடவும் இல்லை, மறைத்து விடவும் இல்லை. அவற்றை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று அமைச்சரிடத்தில் நான் கோரிக்கை வைக்கவும் தவற மாட்டேன்.

பல இடங்களில் நியாய விலைக் கடைகளை, சென்ட்டர் பிளேஸ் என்பதை மறுத்து, ஏதாவது ஒரு மூலையிலே வைத்து விடுகிறார்கள். ஒரு ஹாம்லெட், ஒரு வில்லேஜ் என்று சொன்னால், ஒரு காலத்தில் அது ஓஹோ என்று இருந்திருக்கலாம். இன்றைய தினம் வளர்ந்த பகுதிகள் அதிகமாக இருக்கும். 10 வீடுகள் இருக்கிற ஒரு கிராமத்திலே, கடையை வைத்திருப்பார்கள். 100 வீடுகள் இருக்கக்கூடிய கிராமத்தைச் சேர்ந்தவர்கள் 3 கிலோ மீட்டர் தூரத்திற்குச் சென்று வாங்க வேண்டுமென்ற நிலையிருக்கும். இதையெல்லாம் பரிசீலித்து மாவட்டந்தோறும் மத்திய அமைப்புகளைத் தேர்ந்தெடுத்து, ஆங்காங்கு சென்ட்ரல்

[டாக்டர் கே. சமரசம்] [1985 ஜூன் 17

பிளேஸில் நியாய விலைக் கடைகளை அமைக்கும் வகையில்
ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

அடுத்து, குடும்பக் கார்டு என்று பார்க்கும்போது, இங்கே
இருக்கக்கூடியவர்கள் 5 கோடி என்று சொன்னால் 1 கோடிக்கு
மேலாக நியாய விலைக் கடைகளில் குடும்பக் கார்டுகள் வைத்
திருப்பவர்களாக இருக்கிறார்கள். இதிலே குற்றங்கள், குறைகள்
இருந்து கொண்டிருக்கின்றன. சிலர் திட்டமிட்டு, ஒரு குடும்பத்
திற்கு 4 கார்டுகள் வாங்கி இருக்கலாம். அதே நேரத்தில் பல
குடும்பங்கள் கார்டுகள் வாங்காமல் இருக்கின்றன என்பதையும்
அரசாங்கம் எண்ணிப் பார்க்க வேண்டும். சில ஒதுக்குப்
புறங்களில் சில கிராமங்களையே விட்டுவிட்டிருக்கிறார்கள்.
ரெவினியூ வில்லேஜ் என்கின்ற வகையில் பதிவு செய்யப்பட்ட
கிராமமாக இருக்காது.

அதைப்போன்று புதிய புதிய பகுதிகள் உருவாகியிருக்கின்ற
பல இடங்களில் குடும்பக் கார்டு வழங்காமல் இருக்கிறார்கள்.
அப்படிக் குடும்பக் கார்டுகள் வழங்காமல் விடுபட்ட இடங்களுக்கு
உடனடியாக வழங்க தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டு
மென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்
கிறேன்.

அது மட்டுமல்ல. இப்போது நாம் நிறைய பொருள்களை
வாங்குகிறோம். அவற்றை முறையாகச் சேமித்து வைக்க பல்
வேறு இடங்களில் கிடங்குகளை வாடகைக்கு எடுத்திருக்
கிறோம். இப்படி வாடகை கொடுக்கின்ற நிலைமையை மாற்றி
--இது ஒரு தற்காலிகமான ஏற்பாடு அல்ல, நிரந்தரமாகத்
தேவைப்படுகின்ற காரணத்தால்—மாவட்டத்தோறும் நமக்கு
எவ்வளவு கிடங்குகள் தேவையோ அவற்றைக் கட்டுவதற்கு
முனைப்பான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று அரசை
நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் ஆங்காங்கே இருக்கிற குடும்பக் கார்டுகளுக்கு
விநியோகம் செய்யும் ரேஷன் கடை சூப்பர்வைசர்கள் மிகுந்த
எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அப்படியானால்தான்
அவ்வப்போது ஏற்படுகின்ற குற்றங்கள், தவறுகள் தடுக்கப்படும்.
குறிப்பாக நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில்
இன்னொரு மாநிலத்தின் எல்லையோரமாக இருக்கிற பகுதிகளில்



1985 ஜூன் 17] [டாக்டர் கே. சமரசம்]

மிகுந்த கண்காணிப்பாக இருக்க வேண்டும். எல்லையோரப்
பகுதிகளிலிருந்து சர்க்கரை, மண்ணெண்ணெய் போன்ற
பொருள்கள் சரியாக விநியோகம் செய்யப்படாமல் பக்கத்து
மாநிலங்களுக்குப் போகின்ற வாய்ப்பு இருக்கிறது. அதைத்
தடுக்க முனைப்பான நடவடிக்கை எடுக்க வேண்டும். எங்களு
டைய மாவட்டத்தில் இந்த நிலை அடியோடு ஒழிக்கப்பட்டு
விட்டது என்பதைத் தெரிவித்து, இந்த நடவடிக்கை எடுத்ததற்
காக நான் நம்முடைய அரசை மனமாரப் பாராட்டுகிறேன்.

அதே நேரத்தில் இங்கே இருக்கிற பெருந்தனக்காரர்களில்கூட
வியாபாரிகளுக்கு கைமாற்றம் செய்கிறவர்கள் இருக்கத்தான்
செய்கிறார்கள் என்பதையும் நாம் மறுக்க முடியாது. அவர்கள்
மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். ஊழியர்கள் தவறு
செய்கிறார்கள் என்றால் உடனடியாக அவர்களை சஸ்பெண்ட்
செய்து, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். தவறு செய்பவர்
கள்மீது நடவடிக்கை எடுக்க காலத்தை நீட்டிக்கக்கூடாது.
அப்போதுதான் மேலும் எந்த நோக்கத்தோடு இந்தத் திட்டங்
களைக் கொண்டுவந்தோமோ அந்த நோக்கம் ஈடேறும். நியாய
விலைக் கடைகள் மூலம் கிராம மக்களுக்கு உரிய பலன் அப்போது
தான் ஏற்படும். மக்களுக்கும் ஒரு நம்பிக்கை ஏற்பட நல்ல
வாய்ப்பாக இருக்கும். இப்படிப்பட்ட பல்வேறு நல்ல திட்டங்
களைக் கொண்டுவந்து இந்த மானியக் கோரிக்கையில் அறிவித்
திருப்பதால் இந்த மானியத்தை வரவேற்று அமர்கிறேன்.
வணக்கம்.

## 5. அறிக்கை அளித்தல்.

### சென்னைப் பெருநகர் மேம்பாட்டுக் குழுவின் முடிவுகள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவரவர்
களே, 14—6—1985 அன்று நடந்த சென்னைப் பெருநகர்
மேம்பாட்டுக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட சில முடிவுகளை
அறிக்கையாக அவையில் வைக்கிறேன்.

1. **குப்பை அகற்றல்.**—சென்னை நகரத்தில் அகற்றப்படும்
குப்பை கூளங்களை அளப்பதற்கென வேளச்சேரி, கொடுங்கையூர்
ஆகிய குப்பை மையங்களில் சுமார் ரூ. 8 லட்சம் செலவில் இரு
எடை மேடைகள் (வே பிரிட்ஜ்) விரைவில் அமைக்கப்படும்.

குப்பைகளை ஏற்றிச் செல்வதற்காக கூடுதலாக 30 லாரிகள் வாங்கப்படும்.

இவ்வாறு புதிதாக வாங்கப்படும் லாரிகளுக்கு தேவையான ஓட்டுநர்களும் நியமிக்கப்படுவார்கள்.

நகரின் சரியான பகுதிகளில் குப்பை கொட்டும் சிறு மையங்கள் நிறுவப்படும். இச்சிறு மையங்களிலிருந்துதான் பெரிய குப்பை மையங்களுக்கு பிறகு எடுத்துச் செல்லப்படும்.

தெருக்களில் போதுமான குப்பைத் தொட்டிகள் வைக்க ஏற்பாடு செய்யப்படும்.

குப்பைகளை வீடுகளில் வந்து லாரிகள்/வண்டிகள் மூலமாக சேகரிக்கும் முறை இப்போது சில காலனிகளில் அமுலில் இருக்கிறது. இம்முறையைப் படிப்படியாக பிற இடங்களுக்கு விஸ்தரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

குப்பைகளை சேகரிக்க, அள்ள, ஹைட்ரோசான் வாகனம் அதிகமாகப் பயன்படுத்தப்படும்.

**2. பொதுக் கழிப்பிடம் பழுது பார்த்தலும், புதிதாகக் கட்டலும்.**—நகரின் பல இடங்களில் தண்ணீர் வசதியின்றி, பழுதடைந்த பல பொதுக்கழிப்பிடங்கள் பழுது பார்க்கும் வேலை விரைந்து செய்யப்படும். குறிப்பாக குடிசைவாழ் பகுதி மக்களுக்கான பொதுக் கழிப்பிடங்கள் ரூ. 81 லட்சம் செலவில் முன்னுரிமை கொடுத்து பழுது பார்க்கப்படும்.

ரயில் நிலையங்கள், பேருந்து நிலையங்கள், மக்கள் அதிகம் கூடுமிடங்கள், வணிக மையங்கள் போன்ற இடங்களிலும் வேறு பொருத்தமான இடங்களிலும் உள்ள பொதுக் கழிப்பிடங்கள் சுத்தமாகப் பேணப்பட வேண்டியதின் அவசியம் கருதி, அவற்றைக் கட்டணக் கழிப்பிடமாக (பே அன்ட் யூஸ் லெட்ரின்) மாற்றப்படும்.

நகரின் பல்வேறு இடங்களில் புதிதாக 184 பொதுக் கழிப்பிடங்கள் ரூ. 3.2 கோடி செலவில் கட்டவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.





இந்த வகையில் பழைய கழிப்பிடங்களை பழுது பார்க்க சுமார் ரூ. 87 லட்சமும், புதிய கழிப்பிடங்கள் கட்ட சுமார் ரூ. 3.2 கோடியும் தேவைப்படும். முதல் கட்டமாக ரூ. 1 கோடி இப்பணிகளுக்கு அளிக்குமாறு அரசைக் கேட்டுக் கொள்வதென்று முடிவு செய்யப்பட்டது.

**3. ஆக்கிரமிப்புகளை அகற்றல்.**—சாலைகள், சாலை ஓரங்கள், நடைபாதைகள், முக்கிய பொது இடங்கள், ஆகியவற்றில் ஆக்கிரமிப்புகள் ஏதும் ஏற்படாமல் உறுதியாகத் தடுத்து நிறுத்தப்படும்.

மேற்படி இடங்களில் காணப்படும் அரசியல் கட்சிக்கான கொடிக் கம்பங்கள், மன்றங்கள், திண்டுகள், கட்டுமானங்கள் கடைகள், கோவில்கள் ஏனைய ஆக்கிரமிப்புகள் அனைத்தையும் அகற்ற உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்.

(முற்பகல் 11-10)

இந்த முடிவுக்கு அனைத்து அரசியல் கட்சிகளும் ஒத்துக் கொண்டுள்ளன. பாரபட்சமின்றி இந்த ஆக்கிரமிப்புகள் அனைத்தும் அகற்றப்படும். இடைஞ்சலாக உள்ள அரசியல் கட்சிகள் தத்தம் கொடிக் கம்பங்களையும், மன்றங்களையும் அகற்றிக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இதே போல் கோவில் சம்பந்தப்பட்டவர்களும், நடைபாதைக் கோவில் களை அவர்களாகவே அகற்றிக் கொள்ளும்படி வெகுவாகக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அவ்வாறு எடுக்கப்படாத வற்றை, காவல் துறையினர் துணையோடு மாநகராட்சி அகற்ற நடவடிக்கை எடுக்கும்.

மேற்படி இடங்களில் ஏற்கெனவே அனுமதி பெற்று நடந்து வரும் கடைகள் குத்தகைக் காலம் முடிந்த பிறகு புதுப்பிக்கப் படாது அகற்றப்படும்.

**5. கால்நடைத் தொல்லை அகற்றல்.**—சென்னை நகரில் அலைந்து திரியும் கால்நடைகளையும், சென்னை நகரின் தெருக்களில் அசுத்தப்படுத்தும் கால்நடைகளையும், முதற்கட்டமாகக் காவல் துறையினர் உதவியோடு மாநகராட்சியினர் அப்புறப்படுத்துவார்கள். அவற்றை உரிமை கோருபவர்கள் தக்க அபராதத் தொகை செலுத்தியபின்பே பெற முடியும்.

6. **அழகு நிலையங்களில் அட்டூழியம், சூதாட்டம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துதல்**—நகரின் பல பகுதிகளில் அழகு நிலையங்கள் என்ற பெயரால் நடத்தப்படும் மசாஜ் கிளப்புகளின் தவறான நடவடிக்கைகள் காவல் துறையினரால் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு ஒடுக்கப்படும். இதேபோல் சூதாடும் மையங்களும் கண்காணிக்கப்பட்டுத் தடுக்கப்படும். இதற்காகத் தேவையானால் சட்டத் திருத்தங்கள் கொண்டு வரவும் முடிவு செய்திருக்கின்றது இந்த அரசு என்பதை நான் அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 4. வரவு-செலவுத் திட்டம், 1985-86—வாக்கெடுப்பு.

### கோரிக்கை எண் 35—நுகர்பொருள் வழங்கல்—தொடர்ச்சி.

* **திரு. கோ. வீரய்யன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையின்முன் வைக்கப்பட்டுள்ள உணவு மற்றும் நுகர் பொருள் வழங்கு துறை மானியக் கோரிக்கையின்மீது நான் சார்ந்திருக்கின்ற மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கின்ற ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கொள்முதலைப் பொறுத்த வரையில் எந்த அளவுக்கு சீராகக் கவனம் செலுத்தித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஏற்ப கொள்முதல் செய்யப் படுகின்றது என்றெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் இதிலே குறிப்பாக ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். 1983-84 ஆம் ஆண்டில் மிகப்பெரிய ஒரு வறட்சி ஏற்பட்ட காலத்தில் தமிழகத்தில் இருந்து அண்டை மாநிலங்களுக்குச் சென்று அதிக விலை கொடுத்து வாங்கவேண்டும் என்ற சூழ்நிலை இருந்தது.

ஆனால் அதே நேரத்தில் விவசாயிகள் மட்டும் அதிக விலைக்கு விற்க முடியாமல் தடுக்கப்பட்டு மத்திய அரசு நிர்ணயித்த விலையைவிடக் கூடுதலாக 35 ரூபாய் மானியம் கொடுக்கப்படும் என்ற வகையில் விலை நிர்ணயிக்கப்பட்டது. ஓரளவுக்கு விவசாயிகளின் ஒத்துழைப்போடு நெருக்கடியைச் சமாளிக்கின்ற வகையில் அரசாங்கத்தால் அவ்வாறு அளிக்க முடிந்தது. ஆனால் அதே நேரத்தில் 1984-85 ஆம் ஆண்டுக்கு வரும்போது, மத்திய அரசு நிர்ணயித்த விலையைவிடக் கூடுதலாக மாநில அரசு கொடுக்க முன்வந்தது 15 ரூபாய் என்ற அளவுக்குக் குறைக்கப் பட்டது. அவ்வாறு குறைத்தது நியாயம் இல்லை என்று சொல்





கின்ற நிலையில், அதைக்கூட ரொக்கமாகக் கொடுக்க முன்வராமல் உரமாகவும், பூச்சி மருந்தாகவும் கொடுப்பது என்று முடிவு செய்தார்கள். 1984 ஆம் ஆண்டு குறுவைப் பருவத்தில் கொடுக் கிறோம் என்றால் அதனை சம்பாப் பருவத்தின்போது பயன் படுத்திக்கொள்ள வாய்ப்பு இருந்தது. ஆனால் 1985 ஆம் ஆண்டு சம்பாப் பருவத்தில் அவ்வாறு உரமாகவும், பூச்சி மருந்தாகவும் கொடுக்கப்பட்டபோது அதனை எந்த வகையிலும் பயன்படுத்திக் கொள்ள முடியாத நிலைமையில் வசதி படைத்த பணக்காரர் களுக்குப் பாதி விலைக்கு விற்றுவிட்டு அந்த ஏழை விவசாயிகள் சங்கடப்படக்கூடிய அளவுக்குத்தான் நிலைமை ஏற்பட்டது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அதனை ரொக்கமாகக் கொடுக்க அரசு முன்வந்திருந்தால் அது உதவிகரமாக இருந்திருக்கும். அது குறித்துப் பலமுறை அரசிடம் வற்புறுத்தியும்கூட அரசு அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவுமில்லை, கவனிக்கவுமில்லை. மேலும் அந்த உதவித்தொகையையும் 35 ரூபாயிலிருந்து 15 ஆகக் குறைத்துவிட்டார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலை எதிர்காலத் திலும் நடந்தால் நிச்சயமாக விவசாயிகளுக்குத் திருப்தி அளிக்கக் கூடியதாக அது இருக்காது.

குறிப்பாகச் சொல்லவேண்டும் என்றால் கடந்த காலத்தில், அதாவது 1985 ஆம் ஆண்டு சம்பாப் பருவத்தில் அரசு கொள் முதலைப் பொறுத்தவரையில் உடனடியாகப் பணம் பட்டுவாடா செய்யப்படாமல் அந்த நெல்லை எல்லாம் ரோட்டிலே போட்டு வைத்துக்கொண்டு காவல் காக்க வேண்டிய சங்கடமான சூழ்நிலை ஏற்பட்டது. அதன் பின்னர் எடைபோட்டு எடுக்கும்போது அந்த எடையிலே பல்வேறு விதமான மோசடிகள் செய்யப் பட்டன. அதன் காரணத்தால் அவர்கள் பெரிதும் பாதிக்கப் பட்டார்கள். மேலும் ஒரு மூடைக்கு 2 ரூபாய், 3 ரூபாய் என்று கமிஷன் வாங்கப்பட்டது. அப்படிக் கமிஷன் கொடுப்பவர் களுக்கு மட்டும் முன் உரிமை கொடுத்து எடை போடப் படுவதால் இதையெல்லாம் பார்த்த அந்த விவசாயிகள் மத்தியிலே ஏற்பட்டிருக்கக்கூடிய உணர்வு என்னவென்றால், அரசு கொள் முதல் நிலையத்தை விட தனிப்பட்ட வியாபாரிகளே தேவலை என்று உணரப்படக்கூடிய அளவுக்கு நிலைமைகள் ஏற்பட்டிருக் கின்றன. தனிப்பட்ட வியாபாரிகள், வீட்டிற்கே வந்து மிகவும் மரியாதையோடு நெல்லை அளந்து எடுத்துச் செல்லுகிறார்கள். ஆனால் அந்த நெல்லை அரசு கொள்முதல் நிலையத்திற்கு

[திரு. கோ. வீரய்யன்] [1985 ஜூன் 17

எடுத்துச் சென்றால் காத்துக் கிடக்க வேண்டும், அதிகமாக எடை போட்டுத் தரவேண்டும், விலையும் குறைத்துக் கிடைக்கின்ற நிலைமை, அத்தோடு கமிஷன் கொடுக்க வேண்டிய அவல நிலைமை என்று இப்படிப்பட்ட சங்கடங்களும் வேதனைகளும் விவசாயிகளுக்கு ஏற்படுகின்றன. அதனால் அரசு கொள் முதல் நிலையங்களைவிட, தனிப்பட்ட வியாபாரிகளே தேவலை என்ற எண்ணம் விவசாயிகள் மத்தியிலே உருவாகி வருகிறது. இதைப்பற்றி அவ்வப்போது அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தபோதிலும்கூட, அது கவனிக்கப்படாத நிலைமையே இருந்து வருகிறது. எதிர்காலத்தில் இப்படிப்பட்ட நிலைமைகள் தொடராமல் அரசு இதிலே நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டும் அல்லாமல் வருகிற 1985-86 ஆம் ஆண்டுக் காலத்தில் வழங்க இருக்கும் மானியத் தொகை 35 ரூபாயை, கடந்த 1984-85 ஆண்டு காலத்திற்கும் வழங்குகின்ற அளவுக்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

அத்தோடு கொள்முதல் செய்வதிலே அவைகளை இருப்பு வைக்கக்கூடிய சங்கடங்கள் மிக அதிகமான அளவிலே இருக்கின்றன. அரசு கொள்கைக் குறிப்பிலே 5 ஆண்டுக் காலத்திற்குள், அதாவது 7-வது ஐந்தாண்டுத் திட்டம் முடிவடைவதற்குள் 50 கிடங்குகள் கட்டப்படும் என்று இருக்கிறது. அதிலே இந்த ஆண்டு 5 கிடங்குகள் கட்டப்படும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 680 கொள்முதல் நிலையங்கள் உள்ளன. காவிரிப் பாசனப் பகுதியில் 5 ஆண்டுகளில் கட்டப்பட வேண்டியவை 50 கிடங்குகள் என்று கணக்கு காட்டி, அதில் 5 கிடங்குகள் மட்டும் இந்த ஆண்டு கட்டப்படும் என்று அறிவித்திருப்பது யானைப் பசிக்கு சோளப்பொரி போடுவது என்று சொல்வார்களே அதுபோலத்தான் இருக்கிறதேதவிர, அது கொஞ்சம்கூட பொருத்தமானதாக இல்லை.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இன்னும் சொல்லப் போனால் கடந்த கால குறுவைப் பட்டத்திலே அறுவடை செய்யப்பட்ட நெல், கட்டிட வசதி இல்லாத காரணத்தால், திறந்த வெளியில் போடப்பட்டதன் விளைவாக, எனக்குத் தெரிந்த வரையிலேயே, ஒரு லட்சம் டன் வரையில் பாழ்பட்டு நாசமாகியிருக்கிறது. அப்படித் திறந்த



1985 ஜூன் 17] [திரு. கோ. வீரய்யன்]

வெளியிலே போடப்பட்டதனால் அந்த நெல்லுக்கு நாசம் ஏற்பட்டாலும், அந்த நெல் மக்கி மோசமாக நாற்றம் எடுத்தாலும், அரசுக்கு அதனால் நஷ்டம் எதுவும் இல்லை. ஏனென்றால் அவை எல்லாம் பொது மக்கள் தலையிலே தானே சுமத்தப்படுகிறது. அப்படி மக்கி மடிந்து நாற்றம் எடுத்த நெல்லின் அரிசியை மக்கள் தலையிலேதானே கட்டுகிறீர்கள். இதைச் சாப்பிடுகின்ற மக்களுக்கு ஏன் நோய் வராது. நான் ஒரு கோவாப்பரேட்டிவ் கடையிலே வழங்கப்பட்ட இப்படிப்பட்ட அரிசியை இங்கே மாதிரிக்குக் கொண்டு வந்திருக்கிறேன். அதை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உங்களின் அனுமதியோடு அமைச்சரிடம் காட்ட விரும்புகிறேன். (ஒரு பொட்டலத்தை கொடுத்தார்) இதை கால்நடைகளுக்கு போட்டால்கூட நோய் வரக்கூடிய அளவுக்கு நாற்றம் எடுத்து, கெட்டுப்போயிருக்கிறது. இதுதான் மக்களுக்கு வழங்கப்படுகிறது. ஏன் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டது. நெல்லைப் பாதுகாத்து வைப்பதற்கு இடம் இல்லாமல் திறந்த வெளியில் கொட்டி வைத்திருப்பதால் நெல் பாழ்பட்டு நாசமாகக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மா. சின்னராசு):** அரிசி கொடுத்திருக்கிறீர்கள். ஆனால் எந்தக் கடையிலே இருந்து அதை எடுத்தீர்கள் என்று சொல்லவில்லையே.

**திரு. கோ. வீரய்யன்:** நான் தயார் பண்ணிய அரிசி இல்லை அது. கடையிலே இருந்து எடுத்ததுதான். மாண்புமிகு அமைச்சரிடம் குறிப்பிட்டுச் சொல்லிக் கொடுத்திருக்கிறேன்.

அடுத்து, பெரிய அளவுக்கு இந்தக் கிடங்குகளைக் கட்டுகிற நேரத்தில் கொள்முதல் செய்யும் நிலையத்தோடு—விவசாயிகள் தாங்கள் அறுவடை செய்த நெல்லைப் பாதுகாத்து வைக்கக் கூடிய அளவுக்கு அதனுடனே சேர்ந்து—சிறு சிறு கிடங்குகளை வசதியோடு கட்ட ஏற்பாடு செய்தால், இப்படி விவசாயிகள் திறந்த வெளிகளிலே நெல்லைப் போட்டு வைக்கக் கூடிய நிலைமை வராமல் இருக்கும். அந்த நெல்லும் கெட்டுப் போய், மோசமான நிலைமையில் அரிசி ஆகாமல் இருப்பதற்கு, அது உதவி செய்யும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. கோ. வீரய்யன்] [1985 ஜூன் 17

அடுத்து, கொள்முதல் வினியோகத்தை எடுத்துக் கொள்வோமேயானால் ஏறத்தாழ 20 ஆயிரத்து 723 கடைகள் இருப்பதாகக் குறிப்பில் இருக்கிறது. அவைகளிலே, அரிசி, கோதுமை, கோதுமைப் பொருள்கள், சர்க்கரை, மண்ணெண்ணெய், சமையல் எண்ணெய், கட்டுப்பாட்டுத் துணி, புளி, உப்பு, துணி, சோப்பு; பல்புகள், வலி நிவாரணிகள், சைக்கிள் டியூப்புகள், டயர்கள், புஞ்சை தானியங்கள் போன்றவைகளும் விற்கப்படுவதாக அந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் எனக்குத் தெரிந்தவரையில், உண்மையில், அத்தனை பொருள்களும் இந்த அறிக்கையிலேதான் இருக்கின்றனவே தவிர, கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய விற்பனைக் கடைகளில் இல்லை. ஏதோ ஒரு சில கடைகளில் இருக்கலாம். ஆனால் பெரும்பாலான கடைகளில் அப்படிப்பட்ட நிலைமை இல்லை. அதில் குறிப்பாக மண்ணெண்ணையை எடுத்துக்கொண்டால், கிராமப்புறங்களில் உள்ள அத்தனை மக்களும் உபயோகப்படுத்தக்கூடிய பொருளாக அது இருக்கிறது. மண்ணெண்ணை நமது மாநிலத்திற்கு ஒரு மாதத்திற்கு 66 ஆயிரம் கிலோ லிட்டர் தேவைப்படுகிறது. ஆனால் மத்திய அரசு 47 ஆயிரம் கிலோ லிட்டர்தான் ஒதுக்கீடு செய்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏறத்தாழ 20 ஆயிரம் கிலோ லிட்டர் அளவில் ஒரு மாதத்திற்கு பற்றாக்குறை இருக்கிறது. இந்த நிலையில் வியாபாரிகள் எந்த அளவிற்கு விலையை உயர்த்தி விற்பதற்கு முயற்சிகளைச் செய்வார்கள் என்பது நம்முடைய அமைச்சர் அவர்களுக்குத் தெரியும்.

(முற்பகல் 11-20)

இன்றையதினம் இந்த மானியக் கோரிக்கை விவாதத்தில் இருக்கிற நேரத்தில் அமைச்சர் அவர்கள் இந்த நிலைமையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு இருப்பார்கள் என்று கருதுகிறேன். அவர்கள் நேற்றைய தினம் ஒரு பட்டினப்பிரவேசம் சென்று நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். சென்னை மாநகரத்தின் கடைகளிலேயே இப்படிப்பட்ட குறைபாடுகள் இருக்குமானால் கிராமப்புறங்களில் இருக்கிற கடைகளின் நிலை எந்தளவிற்கு இருக்குமென்பதை அமைச்சர் அவர்களும் அரசும் உணரமுடியுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.



1985 ஜூன் 17] [திரு. கோ. வீரய்யன்]

அடுத்தது கார்டுகள் வழங்கியிருப்பது ஒரு கோடியே சொச்சம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆயிரம் ரூபாய்க்கு மேலே வருமானம் உள்ளவர்களுக்கு சில பொருள்கள் கிடைக்காது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் குறிப்பிட விரும்புவது இந்த ஆயிரம் ரூபாய் என்பது சில ஆண்டுகளுக்கு முன்பு நிச்சயிக்கப் பட்ட தொகையாகும். அந்தத் தொகையை உயர்த்தி 1500 ரூபாய் என்று நிர்ணயிக்கலாம். ஏனென்றால் இன்றையதினத்தில் சாதாரண கைத்தறி நெசவாளிக்குக்கூட ஆயிரம் ரூபாய் வருமானம் வருகிற நிலைமை இருக்கிறது. ஆகவே இதனை 1,500 ரூபாய் அளவிற்கு உயர்த்தி அறிவிப்பதற்கு அரசு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது, கூட்டுறவுக் கடைகளில் நடக்கக்கூடிய ஊழல்கள். இதில் கீழே இருக்கக்கூடிய அப்பாவி ஊழியர்கள்தான் பழி வாங்கப்படுகிறார்கள். அவர்களை ஊழல் செய்வதற்கு, மோசடி செய்வதற்கு அதிகாரிகளே தூண்டுகிறார்கள். கிராமப்புறக் கடைகளைப் பார்ப்போமானால் அங்கே சமையல் எண்ணெய், பாமாயில் எண்ணெய் வந்து சேருவதே இல்லை. பல கிராமங்களில் கடைகளுக்கு சர்க்கரை சாக்குகள்தான் வருகின்றனவே தவிர சர்க்கரை வருவதே இல்லை. சாக்குகளை மட்டும் கடைகளில் கொண்டுவந்து கணக்குகள் காட்டப்படுகிறதேதவிர சர்க்கரை வருவதில்லை. அப்படிப் பல பொருள்கள் மறைக்கப்படுகின்றன. மேலே இருக்கிற அதிகாரிகள் இப்படிச் செய்யத் தூண்டி அதிலேயிருந்து அவர்கள் பணம் பெற்றுக் கொள்கிறார்கள். இதனால் பாதிக்கப்படுவது கீழே இருக்கக்கூடிய சாதாரண ஊழியர்கள் தான்.

இன்னும் சொல்லப்போனால் இந்த அரசின் அரவை ஆலையில் நடந்ததைக் குறிப்பிட விரும்புகிறேன். திருவாரூரில் இருக்கிற நவீன அரிசி ஆலையில் கரி ஏற்றிச் செல்கிறோம் என்ற பெயரிலே இந்த ஆண்டு ஆரம்பத்திலே நெல்லை லாரியிலே ஏற்றி, கரியை மேலே தூவி கடத்திச் சென்று, பல மைல்களுக்கு அப்பால் போய், கிராமத்து மக்கள் அதைக் கண்டுபிடித்து அதிகாரிகளிடம் கூறியதற்குப் பிறகும் இதுவரையில் என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது என்று தெரியவில்லை. தவறு செய்தவர்கள்மீது

நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? அமைச்சர் அவர்கள் முடியுமானால் அதனைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தத் தவறுகளினால் அரசுக்கு ஏற்படுகிற இழப்புகள் முழுவதும் மக்கள் தலையில் சுமத்தப்படுகிறது. ஊழல்கள், மோசடிகள், ஏமாற்றுதல், எடைக்குறைப்புகள் போன்றவைகளால் ஏற்படும் இழப்புகள் வாங்கிச் சாப்பிடுகிற மக்களின் தலையில் சுமத்தப்படுகின்றன. கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டிருப்பதாக அறிக்கையில் சொல்லப் பட்டிருக்கிறது. கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டனவா? அந்தக் குழுக்கள் என்ன செய்கின்றன? அந்தக் குழுக்கள் கூடுகின்றனவா? கண்காணிக்கின்றனவா என்பதே தெரியவில்லை. அந்தக் குழுக்கள் இருக்கின்றனவா என்று கண்டுபிடிப்பதற்கு வேறு ஒரு குழு போடவேண்டிய நிலை இருக்கிறதா என்பதைப் பார்ப்போமேயானால் இந்தக் கண்காணிப்புக் குழுக்கள் எந்த முறையிலும் செயல்பட்டதாகச் சொல்ல முடியாது. இதில் அரசு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து 20 கிலோ அரிசி மாதத்திற்கு கார்டுதாரர்களுக்கு வழங்கப்படுகிறது என்று சொல்லி, மாதம் 20 கிலோ வாங்குபவர் களுக்கு ஒரு கிலோ இனாமாக வழங்கப்படுகிறது என்று அறிக்கையில் சொல்லி இருக்கிறது. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால் 20 கிலோ வாங்கினால் ஒரு கிலோ இனாமாகக் கொடுக்கப்படுகிறது; 10, 10 கிலோவாக இரண்டு முறைகளில் வாங்கினால் அவர்களுக்கு ஒரு கிலோ இனாமாகக் கிடைக்கிறதே தவிர, 10, 10 கிலோ என்று வாங்குவதற்கு வசதி இல்லாமல், 4 கிலோ, 2 கிலோ, 3 கிலோ என்று 20 கிலோவை நான்கு முறைகளில் வாங்கினால் 20 கிலோவிற்கு அவர்களுக்கு ஒரு கிலோ வழங்கப்படுவது கிடையாது. 10, 10 கிலோ என்று 20 கிலோ வாங்குபவர்களுக்கு மட்டும் ஒரு கிலோ கொடுக்க வேண்டுமென்று அரசு அல்லது சம்பந்தப்பட்ட துறை உத்தரவு போட்டிருக்கிறது. இதனால் சாதாரண ஏழை எளிய மக்கள், 4 கிலோ, 5 கிலோவிற்கு மேலே வாங்க வசதியற்றவர்கள், 3, 4 முறைகளில் வாங்குபவர் களுக்குக் கிடைக்காத நிலை இருக்கிறது. எனவே இதை மாற்றி, அவர்கள் ஒரு மாதத்தில் 4 முறையோ, 3 முறையோ வாங்கினால் கூட அதை வாங்கிக் கொள்வதற்கான ஒரு முறையை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.





அதோடு மட்டுமல்லாமல், இந்த அத்தியாவசியப் பொருள்கள் கிராமப்புற சாதாரண மக்களுக்குக் கிடைக்கச் செய்யவேண்டும். அந்தக் கிராமக் கடைகள் என்பது பகுதி நேரக் கடைகள் என்பதை மாற்றி, அதை முழு நேரக் கடைகளாக மாற்ற வேண்டும். அப்படி முழு நேரக் கடைகளாக மாற்றப்பட்டு, அதிலே அத்தியாவசியப் பொருள்கள் முழுவதும் அவர்களுக்கு நியாய மான விலையில் கிடைப்பதற்கான ஒரு உத்தரவாதத்தினை ஏற்படுத்த வேண்டும். அப்படி முழு நேரக்கடைகளாக ஆக்கும் போது, இன்றைக்கு அதிலே பலர்—சில கடைகளில் அவர்கள் முழுநேர ஊழியர்களாக இருக்கிறார்கள்—20 ஆயிரம் கடைகளிலே பெரும்பகுதிக் கடைகளில் ஒரு தொகுப்பு ஊதியத்திலே பணியாற்றுகிற ஊழியர்களாகத்தான் இன்றைக்கு வைக்கப் பட்டு இருக்கிறார்கள். இப்படிப் பல துறைகளில் நம்முடைய அரசால் குறிப்பிட்ட ஊழியர்கள் தொகுப்பு ஊதியம் என்ற பெயரால் வைக்கப்பட்டு இருக்கிறார்கள். உணவுப் பொருள் வழங்கு துறையில், இப்படி கிராமக் கடைகளில் தொகுப்பு ஊதியம் பெறக்கூடியவர்களாக இருக்கிறார்கள். அதைப் பார்க்கும்போது, நம்முடைய அரசினுடைய சார்பிலே சொன்னாலும், அல்லது மற்றவர்கள் எப்படிச் சொன்னாலும், நாம் அதைப் பார்க்கும்போது, மன்னர் காலத்திலிருந்த கொத்தடிமைகளை எல்லாம் இன்று விடுவித்து; வெளியேற்றிக் கொண்டிருக்கிற சூழ்நிலையில் அரசு தங்களுடைய துறையில் பல்வேறு புதிய கொத்தடிமைகளை இன்றைய கால நிலைக்கு ஏற்ப உண்டாக்கிக் கொண்டு இருக்கிறதோ என்று கூறக்கூடிய அளவிற்கு பழைய கொத்தடிமைகளை விடுவித்து, இந்த தொகுப்பு ஊதியம் என்ற பெயரால், புதிய கொத்தடிமைகளை ஒரு பக்கத்தில் உருவாக்கிக் கொண்டிருக்கிறது இந்த அரசு என்பதை நான் குற்றமாகச் சொல்லவிரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் சொல்வார்கள், நாங்கள் யாருக்கும் விரோதியில்லை, மக்கள் எங்களுக்கு ஆதரவு அளித்திருக்கிறார்கள், வாக்களித் திருக்கிறார்கள், என்று. வரலாற்றைப் பார்த்தால், ஹிட்லரைக் கூட மக்கள்தான் தேர்ந்தெடுத்தார்கள். நம்முடைய நாட்டில் கூட 'கரிபி ஹடட்டோ' என்று, வறுமையை ஒழிப்போம் என்று கூறியதை நம்பி, 1971-ஆம் ஆண்டிலே காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தது. 'கரிபி ஹடட்டோ' என்று கூறி ஆட்சிக்கு வந்தார்கள். அவசர கால நிலையை அறிவித்து. இந்த நாட்டை 20 மாத காலம்

இருண்ட நிலைக்கு ஆளாக்கினார்கள். எனவே மக்கள் உங்களை ஆட்சியில் அமர்த்தியிருக்கலாம். ஆனால் நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதைப் பார்க்கும்போதுதான், இப்படிச் சரியில்லை என்பதை நாங்கள் சொல்ல வேண்டியிருக்கிறது. எனவே இந்த உணவுத் துறையில் உள்ள ஊழியர்களை முழு நேர ஊழியர்களாக மாற்றி, பகுதி நேரக் கடைகளை, முழு நேரக் கடைகளாக மாற்றி, அதிலே அரசாங்கம் கொடுக்கக்கூடிய பொருட்கள் சகலருக்கும் கிடைக்கக்கூடிய முறையில் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

* திரு. எப். எம் இராசரத்தினம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1985-86-ஆம் ஆண்டுக்கான நுகர் பொருள் வழங்கல் மானியக் கோரிக்கையின்மீது விவாதிக்கின்ற வாய்ப்பையும், இதை வரவேற்று உரையாற்றுகின்ற வாய்ப்பையும் எனக்கு வழங்கிய தங்களுக்கு என்னுடைய முதற்கண் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கைப் பஞ்சம், மழை இல்லாத வறட்சி, இவைகளைக்கூட போர்க்கால நடவடிக்கைபோன்று தீவிரமான நடவடிக்கையால், உணவுக் கொள்கையில் தன்னிறைவு ஏற்படுத்திய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களது அரசை நன்றியுடன் நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இயற்கையால் உருவாக்கப்பட்ட பஞ்சத்தைக்கூட ஏழை எளியவர்களுக்காக, திட்டங்களின் மூலமாகவும், நல்ல சட்டங்களின் மூலமாகவும் மாற்றி ஒரு அடிப்படைப் புரட்சியை உருவாக்கிய தலைவன்தான் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆனால் இயற்கையில் மழை பெய்து, தாராளமாக நெல்லைச் சேமித்துவைத்து இருந்த காலத்தில், திடீரென்று போட்ட உத்தரவாலே, செயற்கைப் பஞ்சத்தை உருவாக்கியவர்கள் ஒரு காலத்தில் இந்த நாட்டை ஆண்டு வந்தார்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுவதும், கோடிட்டுக் காட்டுவதும் என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

அதேநேரத்தில் உணவுதானிய கொள்முதல் கொள்கையை எடுத்துக்கொண்டால், மத்திய அரசாங்கத்தினுடைய இந்தக் கொள்கையை நாம் பார்த்தால், கோதுமை சாப்பிடுகிறவர்களுக்கு





ஒரு நியாயமும், அரிசி சாப்பிடுகிறவர்களுக்கு இன்னொரு நியாயமும் இன்றைக்கு கற்பிக்கப்பட்டு இருக்கிறது. இந்த நியாயத்திற்குப் புறம்பான காரியத்தை உடைத்தெறியவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் சுட்டிக்காட்டி, இந்த மன்றத்தினுடைய வாயிலாக அதனை மத்திய அரசுக்கு நாம் சமர்ப்பிக்கவேண்டும் என்று சொல்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

(முற்பகல் 11-30)

அதே நேரத்தில், அரசாங்கத்தினுடைய கொள்கைக் குறிப்பேட்டிலே 118.88 இலட்சம் குடும்பக் கார்டுகள் இருப்பதாகவும், அதிலே 113.40 இலட்சம் குடும்பக் கார்டுகள் ஏறத்தாழ 1,000 ரூபாய்க்குக் கீழே வருமானம் இருக்கிறவர்களுக்குக் கொடுக்கப்பட்டு இருப்பதாகவும் புள்ளிவிவரங்கள் தரப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையை நாம் பார்ப்போமேயானால், ஏறத்தாழ 5.48 இலட்சம் குடும்பக் கார்டுகள் வைத்திருக்கிறவர்கள் 1,000 ரூபாய்க்கு மேலே வருமானம் உள்ளவர்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதிலே நான் சொல்வது எல்லாம், இன்றைக்கு 1,000 ரூபாய்க்கு மேலே வருமானம் என்கிற அந்தப் பட்டியலை எடுக்கிற நேரத்தில் சில தவறுகள் நடக்கின்றன. அந்தப் புள்ளி விவரக் கணக்கை எடுக்க வருகிற அதிகாரிகள், கழனிக்குச் செல்கின்ற குடும்பத்திலே இருப்பவர்கள் வீட்டிலே இல்லாத காரணத்தால், வீட்டிலே அவர்கள் இல்லாதபோது கணக்கெடுக்க வருகின்ற காரணத்தால் பல்வேறு குடும்பக் கார்டுகளுக்கு அவர்களுக்கு அரிசி கிடைக்காத நிலை இன்றைக்கு இருந்து வருகிறது என்பதைச் சொல்லி, என்னுடைய குளச்சல் தொகுதியில் கொட்டில்பாடி என்று சொல்கிற கடலோரப் பகுதியில் ஏறத்தாழ 37 குடும்பங்களுக்கு அந்த அடிப்படையில் ரேஷன் கார்டுக்கு அரிசி விநியோகிக்க முடியாத ஒரு சூழ்நிலை இன்றைக்கு இருந்து வருகிறது.

அதே நேரத்தில், புரட்சிகரமான திட்டங்களால் ஒரு பொற்காலத்தை உருவாக்கி வருகிற எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் 20 கிலோ அரிசியினைப் பெறுகிறவர்களுக்கு ஒரு கிலோ அரிசி இலவசமாகக் கொடுக்கின்ற ஒரு திட்டத்தின் மூலமாக ஏழை எளியவர்களுடைய குடும்பத்திலே சேமிக்கின்ற

[திரு. எப். எம். இராசரத்தினம்] [1985 ஜூன் 17

ஒரு ஆற்றலை உருவாக்கியிருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்திலே நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். அந்த அடிப்படையில்தான் 20 கிலோ அரிசியினை ஏழை எளியவர்கள் வாங்குகிற நேரத்தில் ஒரு கிலோ அரிசி இலவசமாகக் கொடுக்கிற திட்டத்தை புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். அதற்காக இந்த அரசுக்கும், அதனுடைய தளநாயகராக விளங்குகிற புரட்சித் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய மனப்பூர்வமான பாராட்டுதலையும், நன்றிகலந்த வணக்கத்தையும் நான் சொல்லிக் கொள்ளுகிறேன்.

மண்ணெண்ணையைப் பொறுத்தவரையில் மத்திய அரசாங்கம் நமக்கு 47 ஆயிரம் கிலோ லிட்டர்தான் தருகிறது என்ற குறிப்பு தரப்பட்டிருக்கிறது. ஆனால், நமக்குத் தேவை 66 ஆயிரம் கிலோ லிட்டர். ஏறத்தாழ 18 ஆயிரம் கிலோ லிட்டர் இன்றைக்குக் குறைவாக நமக்குத் தரப்படுகிறது. மண்ணெண்ணை, ஏழை எளியவர்கள் அதிகமாக உபயோகித்து வருகின்ற அத்தியாவசியப் பண்டங்களில் ஒன்று. ஏழைகளினுடைய குடும்பங்களில் எல்லாம் இன்றைக்கு மண்ணெண்ணையில்தான் விளக்குகளை எரிக்கின்ற சூழ்நிலையும், கிராமப்புறங்களிலேயும், மண்ணெண்ணையில்தான் விளக்குகளை எரிக்கின்ற சூழ்நிலையும், அடுப்பு எரிக்கின்ற சூழ்நிலையும் இன்றைக்கு இருந்து வருகிறது. எனவே, நமக்குத் தேவையான அளவு மண்ணெண்ணையைப் பெற்றுக் கொடுக்கின்ற ஒரு சூழ்நிலையை நாம் உருவாக்கித் தர வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். கை வண்டிகளிலே வைத்து இன்றைக்கு நகர்ப்புறங்களிலே இருக்கிறவர்களுக்கு மண்ணெண்ணை கொடுக்கின்ற சூழ்நிலை இருந்து வருகிறது. அந்தத் திட்டத்தை கிராமப்புறங்களிலே இருக்கிறவர்களுக்கும் விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கிராமப்புறத்திலே இருக்கிறவர்களுக்கு 3 லிட்டர்தான் மாதம்தோறும் கொடுக்கப்படுகிறது. நகர்ப்புறங்களிலே இருக்கிறவர்களுக்குக் கொடுப்பதைப்போல் மண்ணெண்ணை 6 லிட்டராக அதிகப்படுத்தித் தரவேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். காரணம், கிராமப்புறங்களிலே இருக்கிற மக்கள்தான், நகர்ப்புறங்களிலே இருக்கிற மக்களைவிட மண்ணெண்ணை அதிகமாக உபயோகிக்கிறவர்களாக இன்றைக்கு இருந்து வருகிறவர்கள் என்பதைச் சொல்லி, நகர்ப்புறங்களிலே இருக்கிறவர்களுக்கு கொடுப்பதைப்



1985 ஜூன் 17] [திரு. எப். எம். இராசரத்தினம்]

போல், 6 லிட்டர் மண்ணெண்ணை மாதம்தோறும், கிராமப்புறங்களிலே இருப்பவர்களுக்கும் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலமாக, பல்வேறுபட்ட நிறுவனங்கள் மூலமாக கொடுத்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே போல் இன்றைக்கு கன்னியாகுமரி மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், திருநெல்வேலி மாவட்டம் தாண்டி, எல்லையில் காவல் கிணறில் ஒரு சோதனைச் சாவடி இருக்கிறது. அந்தச் சோதனைச் சாவடியைத் தொடர்ந்து, களியக்காவிளை வரையில் அதிகமான சோதனைச்சாவடிகள் இன்றைக்குப் பல்வேறுபட்ட பகுதிகளில் இருக்கின்றன. மாவட்டத்திற்கு மாவட்டம் இருக்கின்ற சோதனைச் சாவடிகளை அகற்றிவிட்டு மாநிலத்தின் எல்லைப் பகுதிகளில் சோதனைச் சாவடிகளை அதிகப்படுத்தி அந்தப் பகுதி வழியாக வெளி மாநிலங்களுக்கு அரிசியைக் கடத்திக்கொண்டு போகின்ற சூழ்நிலை வந்தால் அதைத் தவிர்க்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு ஏழை எளிய மக்கள் தங்கள் குடும்பத்தில் நடக்கின்ற திருமணத்திற்கோ அல்லது வேறு பல்வேறு சடங்குகளுக்கோ ஒரு மூடை அல்லது இரண்டு மூடை அரிசியைக் கொண்டுபோகின்ற நிலைமை ஏற்பட்டால்கூட, இந்தச் சோதனைச் சாவடிகளின்மூலம் தடுக்கப்பட்டு வருகிறது. எனவே, மாவட்டத்திற்கு மாவட்டம் இருக்கின்ற சோதனைச் சாவடிகளை மாற்றிவிட்டு மாநிலத்திற்கு மாநிலம் இருக்கின்ற சோதனைச் சாவடிகளைப் பலப்படுத்தி வெளிமாநிலத்திற்குச் செல்லுகின்ற நிலைமையை தடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

குளச்சல் பகுதியில் உள்ள பாதுகாப்புக் கிட்டங்கி வாடகைக் கட்டிடத்தில் இயங்கிக் கொண்டு வருகிறது. வாடகைக் கட்டிடத்தில் இருப்பதை மாற்றி ஒரு புதிய பாதுகாப்புக் கிட்டங்கியை ஏற்படுத்துகின்ற சூழ்நிலையை உருவாக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உணவுப் பண்டங்களின் விலைப் பட்டியலைச் சில கடைகளில்தான் போட்டு இருக்கிறார்களேதவிர, பல்வேறு கடைகளிலேயும், ஓட்டல்களிலேயும் போடாத நிலைமை இருக்கிறது. கண்டிப்பாக விலைப்பட்டியலை எல்லா உணவுப் பொருட்களை விற்கின்ற

மளிகைக் கடைகளிலேயும், ஓட்டல்களிலேயும் போடும் சூழ்நிலையை உருவாக்கித் தர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஏழை எளியவர்களின் நல்வாழ்வுக்கு என்று புரட்சிகரமான திட்டங்களால் தமிழகத்தின் நல்வாழ்வை உருவாக்கித் தந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களுக்கு என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தைச் சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

* திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்: பேரவைத் தற்காலிக சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய உணவு மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். உணவுப் பங்கீட்டு முறை என்பது மத்திய, மாநில சர்க்கார்களின் கூட்டுப் பொறுப்பு என்பதை நாம் உணர்கிறோம். எனக்கு முன் பேசிய நண்பர்கள் ஏதோ உணவுப் பங்கீட்டு முறை என்பது மாநில சர்க்காரின் தனித் தன்மை, பொறுப்பு என்ற கருத்தில் பேசினார்கள். உணவுப் பங்கீட்டு முறை என்பது மத்திய, மாநில சர்க்காரின் கூட்டுப் பொறுப்பு உள்ள அதிகாரம் என்பதை நாம் கருத்திற்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கும் தமிழகத்திலே உணவு நிலைமை திருப்திகரமாக இருக்கிறது என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை; எல்லோருக்கும் திருப்திகரமான சந்தோஷமான விஷயமாகத் தான் இருக்கிறது. ஆனால் சில நண்பர்கள் குறிப்பிட்டார்கள். மத்திய சர்க்காரிலே இருந்தவர்கள் தமிழகத்திலே உணவுப் பஞ்சம் ஏற்பட்ட நேரத்தில் எலிக்கறி சாப்பிடுங்கள், பருத்திக் கொட்டையை உணவாகச் சாப்பிட வேண்டும் என்று சொன்னதாகக் குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு நான் ஒன்றை இந்த அவையிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழகத்திலே எலி மாமிசத்தை விரும்பிச் சாப்பிடக் கூடியவர்கள், பிரியமாகச் சாப்பிடக் கூடியவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், பல நிபுணர்களெல்லாம், தலைமுடியிலிருந்து உணவுப் பொருளை விஞ்ஞான ரீதியில் செய்யலாம் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.





இந்த நாடு சுதந்திரம் பெற்ற நாள் நமக்கெல்லாம் தெரியும்; 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் தேதி நாம் சுதந்திரம் பெற்றோம். 1948 அல்லது 1949 ஆம் ஆண்டு என்று நான் நினைக்கிறேன், மத்திய சர்க்கார் கொடுத்திருக்கின்ற புள்ளி விவரத்தின்படி, இந்திய நாட்டிலே உள்ள 37 கோடி ஜனங்களுக்கு, எட்டு அவுன்ஸ் வீதம் கொடுக்க வேண்டுமென்றால், 47 இலட்சம் டன் தானியம் பற்றாக்குறையாக இருக்கிறது என்று சொல்லி இருக்கிறார்கள். இப்படி, அதுவும் விவசாயத்தையே பெரிய தொழிலாகச் செய்து கொண்டிருக்கின்ற இந்திய நாட்டில் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டது. அதற்குப் பிறகு உங்களுக் கெல்லாம் தெரியும், அமெரிக்க நாட்டிலேயிருந்து ஏராளமான உணவுப் பண்டங்களை இறக்குமதிசெய்து, கெட்டுப் போன கோதுமையையும், உளுத்துப்போன அரிசியையும், நாற்றம் பிடித்த அரிசியையும் தருவித்து தமிழ்நாட்டிலே ஏராளமாகப் பங்கிட்டுக் கொடுத்து அன்றைக்கு மனித வர்க்கத்தைக் காப்பாற்றினார்கள்; ஏழை எளிய மக்களைக் காப்பாற்றினார்கள்; பசியால் இந்தத் திருநாட்டிலே மரணம் இல்லை என்ற நிலையை உருவாக்கினார்கள் என்பதெல்லாம் உங்களுக்குத் தெரியும். பி. எல். 480 என்பதன்கீழ் அமெரிக்க நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் பற்றிய பிரச்னை இன்றைக்கும் அரசியல் கட்சிகளுக்கு ஒரு வரப் பிரசாதமாக இருந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது வேறு விஷயம். அது தேவையில்லை.

(முற்பகல் 11-40)

அதற்குப் பிறகு, குறிப்பாக, தமிழ்நாட்டிலே, அன்றைக்கு ஆட்சியாளர்கள் விவசாயத்தைப் பெருக்க வேண்டுமென்று பல திட்டங்களைப் போட்டு, நீர்ப்பாசன வசதி, மின்சார வசதி போன்ற விவசாயத்திற்குத் தேவையானவற்றிற்கு முன்னுரிமை கொடுத்தார்கள். 30-க்கு மேற்பட்ட கேந்திர அணைகளைக் கட்டினார்கள். எங்களுடைய தர்மபுரி மாவட்டத்தில் கிருஷ்ண கிரி அணை, தென் பெண்ணை ஆற்றிலே சாத்தனூர் அணை, லோயர் பவானி அணை, வீடூர் அணை, பரம்பிக்குளம்-ஆளியாறு அணை, தாம்பிரபரணித் திட்டம் என்று இப்படிப் பல பெரிய திட்டங்களை எல்லாம் நிறைவேற்றி 30-க்கு மேற்பட்ட பெரிய அணைக்கட்டுகளைக் கட்டி, நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கி,

மின்சாரத் திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். நெய்வேலியில் பழுப்பு நிலக்கரித் திட்டம், நீலகிரியில் குந்தா நீர்மின்திட்டம் என்று இப்படி கேந்திர திட்டங்களைப் போட்டு, அந்தத் திட்டங்களின் மூலமாக, விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுத்து, கிராம விவசாயிகளுக்குப் பாசன வசதி செய்துகொடுத்து, விவசாயத்திலே பல நவீன முறைகளைப் புகுத்தி, புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தி, நவீன வித்துக்களைக் கண்டுபிடித்து, விவசாயத்திலே மிகப் பெரிய மறுமலர்ச்சியை மத்திய சர்க்கார் அன்றைக்கு உண்டாக்கியது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். அந்தத் திட்டங்களை எல்லாம் மாநில சர்க்கார் நல்ல முறையிலே நிறைவேற்றி, இன்றைக்கு அந்தத் திட்டங்களின் பயனாக உணவுப் பொருள் தேவைக்கு உபரியாக இருக்கிறது. நாம் இதை மனப்பூர்வமாக, திருப்திகரமாக வரவேற்கிறோம். அதிலே யாருக்கும் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை.

இன்றைக்குத் தமிழகத்திலே உணவு நிலைமை திருப்திகரமாக இருக்கிறது. ஆனால் விநியோகிக்கின்ற முறையிலே சில கோளாறுகள் இருக்கின்றன. தமிழகத்திலே குறிப்பாக, கிராமப் பகுதிகளிலே, விநியோக முறைக்கு, அமுத நிலையம் ஏற்படுத்தியிருக்கிறது அரசாங்கம். ஏதோ சில இடங்களைத் தேர்ந்தெடுத்து ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஒரு பஞ்சாயத்துக்கு ஒன்று என்று வைத்தாலும், 3, 4 கிராமங்களைச் சேர்ந்த ஒரு பஞ்சாயத்துக்கு மையமான இடம் என்று இல்லாமல், குறிப்பிட்ட இடத்தில் வைத்து விடுகிறார்கள். அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் இரண்டு, மூன்று, நான்கு கிலோ மீட்டர் தூரத்திற்குச் சென்று, அந்தப் பண்டங்களை வாங்க வேண்டிய சூழ்நிலையிருக்கிறது. இது கூலி வேலை செய்யக்கூடிய மக்களுக்கு ரொம்பவும் தொல்லை கொடுக்கக் கூடியதாக இருக்கிறது. எனவே, மத்திய இடத்தைத் தேர்ந்தெடுத்து, அமுதம் அங்காடியை வைப்பது நல்லது என்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமங்களிலே குடும்பக் கார்டுகள் வழங்கப்பட்டதிலே, நிறைய கார்டுகள் விடுபட்டுப் போய்விட்டன. குடும்பக் கார்டுகள் 1982-லே வழங்கப்பட்டிருக்கின்றன. அதற்குப் பிறகு 3 ஆண்டு காலமாக குடும்பக் கார்டு வழங்கப்படவில்லை. தர்மபுரி மாவட்டத்திலே கூட பல கிராமங்களில் குடும்பக் கார்டுகள்





கொடுக்கப்படவில்லை. அது சம்பந்தமாக சிவில் சப்ளைஸ் அதிகாரிகளையும், விநியோக அதிகாரிகளையும் பார்த்துக் கேட்ட பொழுது, ரெவின்யூ அதிகாரிகள் மூலமாக வழங்கப்படுகிறது என்று சொன்னார்கள். அந்த அதிகாரிகளை அணுகிக் கேட்டால், மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதியின் பேரில்தான் குடும்பக் கார்டுகள் வழங்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டால், அரசாங்கம் அனுமதிக்க வேண்டும்; அரசாங்கத்தின் அனுமதியின் பேரில்தான் கொடுக்க வேண்டும்; கலெக்டருக்குப் பொறுப்பில்லை என்று சொன்னார்கள். குடும்பக் கார்டுகள் கணக்கெடுக்கும்போது பல இடங்களில் விடுபட்டுப் போய்விட்டன. பெரும்பாலான ஏழைகள் குடும்பக் கார்டுகள் இல்லாமல் என்னுடைய பகுதியில் இருக்கிறார்கள். என்னுடைய பகுதி மலைவாழ் மக்கள் இருக்கிற பகுதி. உதாரணமாக, பட்டுகோணாம்பாடி, மஞ்சவாடி, நல்லூர் போன்ற பகுதிகள் பூராவும் மலைவாழ் மக்கள் வாழ்கிற பகுதி. அந்தப் பகுதியிலே குடும்பக் கார்டுகள் இல்லையென்று குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அரசாங்கத்திலேயிருந்து தாக்கீது பிறப்பித்து அப்படி விடுபட்டுப் போனவர்களுக்கு விரைவிலே குடும்பக் கார்டுகள் வழங்கப்பட வேண்டுமென்று ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று இந்தச் சமயத்திலே அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

விவசாயம் என்பது இந்த நாட்டிலே முதுகெலும்பு போன்றது என்பதை அனைவரும் ஒப்புக்கொள்கிறார்கள். அது உண்மை. எல்லோருக்கும் உணவு வழங்கும் தொழில் விவசாயம். தமிழ் நாட்டு மக்களின் பிரதான உணவு அரிசி. தமிழ்நாட்டில் நெல்தான் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால் அவர்களுக்கு இன்றைக்குக் கிடைக்கக் கூடிய விலை கட்டுப்படியாக வில்லை. சென்ற ஆண்டு அதாவது 1983-84-ல் ஒரு குவிண்டாலுக்கு 132 ரூபாயாக இருந்தது. 1984-85 ஆம் ஆண்டில் 5 ரூபாய் கூட்டி, 137 ரூபாய் என்று அறிவித்திருக்கிறார்கள்.

என்னுடைய ஞாபகம் சரியாக இருக்குமானால் விவசாய உயர் மட்டக் குழு என்று அரசால் நியமிக்கப்பட்ட குழுவே ஒரு குவிண்டாலுக்கு—உற்பத்தியாகிற செலவைக் கணக்கிட்டுப் பார்த்து—சன்ன ரகத்திற்கு 175 ரூபாயும் மோட்டா ரகத்திற்கு 165 ரூபாயும் நடுத்தர ரகத்திற்கு 170 ரூபாயும் கொடுக்க வேண்டுமென்று

அரசாங்கத்திற்குத் தன்னுடைய கருத்தைத் தெரிவித்திருப்பதாக நான் அறிகிறேன். அரசாங்கம் இன்றைக்குக் கொடுக்கக்கூடிய விலை போதுமானதாக இல்லை. கூலி உயர்ந்திருக்கிறது. உரம் விலை உயர்ந்திருக்கிறது. மற்ற இடுபொருள்களின் விலைகள் எல்லாம் உயர்ந்திருக்கின்றன. அதையெல்லாம் பரிசீலனை செய்து பார்த்து, விவசாய உயர்மட்டக் குழு பரிந்துரை செய்திருக்கின்ற அளவுக்காவது விலை கொடுக்க வேண்டும்.

அது மட்டுமல்லாமல் உரம் போன்றவைகளை விவசாயிகளுக்கு மானியமாகக் கொடுத்து, அவர்களை ஊக்குவிக்க வேண்டும். நல்ல தரமான விதைகளை, பொறுக்கு விதைகளை வழங்கி விவசாயிகளை ஊக்கப்படுத்த வேண்டும். மேலும் அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய அல்லது பயிர் செய்யக்கூடிய தென்னை, மா, காய்கறி போன்றவைகளுக்கு, இதர பிளான்டேஷன்களுக்கு ஏற்கெனவே அரசாங்கம் மானியம் கொடுத்து வந்தது. இன்றைக்கு அப்படிப்பட்ட மானியங்கள் எல்லாம் நிறுத்தப்பட்டிருக்கின்றன. மீண்டும் அவைகளுக்கு மானியம் கொடுத்து, விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு நல்முறையில் ஊக்கமளித்தால்தான் அவர்கள் தங்களுடைய கவனத்தைச் செலுத்தி நல்லமுறையில் உற்பத்தி செய்வதற்கு ஊக்கம் ஏற்படும்.

அதைப்போன்று உணவுப் பங்கீட்டு முறையில் கிராமப்புறங்களில் அமுதம் விற்பனை நிலையம் நல்லமுறையில் நடப்பதில்லை என்று நிறைய புகார்கள் வருகின்றன. அந்த அமுதம் நிலையத்தில் வாரத்தில் வெள்ளிக்கிழமை தவிர மற்ற வாரநாட்களில் எல்லாம் விற்பனை நடைபெற வேண்டும், கடைகள் திறந்திருக்க வேண்டும் என்று அரசாங்கம் கட்டளை பிறப்பித்திருக்கிறது. ஆனால் விற்பனையாளர்கள் வாரம் பூராவும் எங்கோ சுற்றிவிட்டு வாரத்தில் ஒருநாள் வந்து திறக்கிறார்கள். அவர்கள் திறக்கிற நாள் எந்த நாள் என்று கிராம மக்களுக்குத் தெரியாது. மற்ற நாட்களில் கடையை மூடிவிட்டுப் போய்விடுகிறார்கள். கிராம மக்கள் தேவையான பொருள்களை வாங்க அமுதம் நிலையத்திற்குச் சென்றால் பெருத்த ஏமாற்றத்துடன் திரும்பி வருகிறார்கள், கடை பூட்டியிருக்கிறது. ஆகவே அரசாங்கம் அந்த விற்பனையாளர்களுக்குக் கட்டாயத் தாக்கீது அனுப்ப வேண்டும். கடைகள் குறிப்பிட்ட நாட்களில் திறந்திருக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.



அது மட்டுமல்லாமல் அமுதம் நிலையத்தில் பல தவறுகளும் நடைபெறுகின்றன. விற்பனையாளர்கள் ஏராளமாகக் கையாடல் செய்து, ரொம்பப் பேர் நீக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களிடமிருந்து நிறைய பணம் ரெக்கவரி ஆகவேண்டியிருக்கிறது. வரவேண்டிய பணத்தை ரெக்கவர் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்தால், அந்தப் பணத்தைப் பெறுவதற்கான ஆதாரம் அவர்களிடம் இல்லை. அதனால் அரசாங்கத்திற்கு விரையம் ஏற்படுகிறது. ஆகவே, இந்த நியமன முறையை மாற்றி, தகுதி உள்ளவர்களை, வியாபாரத்தில் தவறு செய்யாதவர்களைப் பார்த்து நியமனம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. அந்த அமுதம் நிலையத்தில் கார்டுதாரர்களுக்கு கண்ட்ரோல் விலையில் துணிகள், சர்க்கரை, எண்ணெய் போன்றவைகளை விநியோகிக்கும் திட்டம் இருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் துணிகளைப் பொறுத்தவரையில் 8 முழம் வேட்டி குறைந்த விலைக்குக் கொடுக்கப்படுகிறது. ஏழை எளிய மக்களுக்கு இந்தத் துணிகளைக் கொடுக்க வேண்டுமென்று மத்திய சர்க்கார் மாநில சர்க்காருக்குக் கருத்து தெரிவித்திருப்பதாக அமைச்சர் அவர்கள் இந்தக் அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள்.

(முற்பகல் 11-50)

அவ்வாறு விநியோகிக்கக் கூடிய முறையில் சரியாக கிடைக்கவில்லை என்ற நிலைமைதான் இருக்கின்றது என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆனால் வசதி படைத்தவர்கள் இவ்வாறு குறைந்த விலைக்குக் கிடைக்கக்கூடிய நல்ல ரகங்களைப் பெற்றுக்கொள்கிறார்கள். ஆனால் ஏழை எளிய மக்களைப் போய்ச் சேரவேண்டிய ரகங்கள் போய்ச் சேராத நிலைமைதான் இருந்து கொண்டிருக்கின்றது. இப்படி ஏழைகள் ஏமாற்றப்படுகின்ற நிலைமை இருக்கின்றது. எனவே வசதி படைத்தவர்களும், ஏமாற்றத் தெரிந்தவர்களும் மட்டுமே பலனை அடைகிறார்கள் என்பதை மாநில அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

ஆனால் விவசாயிக்கு மட்டும் அவனுடைய உற்பத்திப் பொருளுக்கு நல்ல விலை கிடைக்காத நிலைமைதான் இருந்து கொண்டிருக்கின்றது. அரசாங்கம் கூட்டுறவு முறையில் கட்டிக் கொடுத்திருக்கின்ற குடோன்களில் கொண்டுபோய் வைத்து அந்த

00675



விவசாயிகள் நல்ல பருவ காலத்தில் விற்று உயர்ந்த விலை பெற வேண்டும் என்று விரும்பினால் அதிலே சில சேதாரங்கள் ஏற்படுவதாகப் புகார் வருகின்றது. எனவே அப்படிப்பட்ட சேதாரங்கள் இல்லாமல் நல்ல முறையில் கண்காணித்து விவசாயிகளுக்கு என்று அமைக்கப்பட்டிருக்கின்ற மார்க்கெட்டிங் சொசைட்டி நிர்வாகம் பற்றியும் நன்கு கவனித்து இப்படிப்பட்ட விரயங்கள் ஏற்படாமல் விவசாயிகளுக்குப் பாதுகாப்பான விலை கிடைத்து அவர்கள் வருவாயைப் பெருக்கிக்கொள்கின்ற வகையில் அரசாங்கம் தக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முதலமைச்சர் அவர்களுடைய குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கக்கூடிய திட்டம் ஒரு நல்ல திட்டம். நல்ல சத்துள்ள காய்கறிகளை உற்பத்தி செய்து வட்டாரத் தலைநகரங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் வைத்து அந்தச் சங்கங்களின் மூலமாகப் பெற்று அங்கிருந்து சத்துணவுக் கூடத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும் என்ற வகையில் திட்டம் அமலில் இருக்கின்றது. ஆனால் அன்றாடம் கொடுக்கப்படுகின்ற காய்கறிகளைப் பொறுத்தவரையில் இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்பு வாங்கப்பட்ட காய்கறிகள் கொடுக்கப்படுகின்றன என்று புகார் வந்திருக்கின்றது. எனவே அரசாங்கம் பாலுக்காக எப்படி குளிர் பதனச்சாலை ஏற்படுத்தியிருக்கிறார்களோ அதேபோல் ஜில்லா தலைநகரில் இருக்கின்ற இடங்களிலும் குளிர் சாதனத்தை ஏற்படுத்தி அதில் காய்கறிகளைப் போட்டு வைத்தால் ஒரு வாரம், 10 நாட்கள் கூட கெடாமல் அந்தக் காய்கறிகள் இருக்கும். அவ்வாறு பாதுகாப்பாக வைத்திருந்து பாதுகாப்பான முறையில் அந்தக் குழந்தைகளுக்குச் சத்துணவு கொடுக்க ஏற்பாடு செய்தால் முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்திற்கு உகந்ததாக அமைந்து அந்த வகையில் ஒரு நல்ல திட்டமாக அது அமையும் என்று அரசின் கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன்.

அதேபோன்று நியாயவிலைக் கடைகளிலும், மற்றும் பல கடைகளிலும்—அவசரகால நிலைமை நாட்டிலே நடைமுறையில் இருந்தபோது ஒவ்வொரு கடைகளிலும் எவ்வளவு ஸ்டாக், என்ன விலைக்கு விற்கப்படுகிறது என்றெல்லாம் குறித்து வைத்திருந்தார்கள். ஆனால் இன்றைக்கு அப்படி எல்லாம் எழுதி வைப்பதில்லை. இன்னும் சொல்லப் போனால் அரசாங்கத்தால் விலை





நிர்ணயம் செய்யப்பட்ட சரக்குகளுக்குக் கூட கூடுதல் விலை வாங்குகிறார்கள். அவற்றைக்கூட பொதுமக்களுக்குச் சரியாக வழங்குவதில்லை. கடைக்காரர்கள் ஏமாற்றுகிறார்கள். அமுதம் கடையில் கூட அது சரியாகக் கடைப்பிடிக்கப்படவில்லை. எனவே ஒவ்வொரு கடையின் முன்பும் விலை விவரங்கள் எழுதி வைக்கப்பட்டிருக்கவேண்டும். அது அவசியம் என்று கருதுகிறேன். மேலும் பொருட்களை எடைபோடுகின்றபோது கூட சில தவறுகள் நடப்பதாகப் புகார்கள் வருகின்றன. எனவே அப்படிப்பட்ட புகார்களை அரசாங்கம் கவனித்து ஒழுங்குபடுத்த வேண்டும். பொதுமக்களே அவற்றைக் கண்காணிக்கின்ற வகையில் அதற்கென்று குழுக்கள் அமைக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அந்தக் குழுக்கள் எல்லாம் இந்தத் தவறுகளைக் கண்காணிக்கின்ற குழுக்களாக அமைக்கப்படுகின்றனவா அல்லது திருட்டுத்தனம் பண்ணக்கூடியவர்களுக்கு ஒத்துழைக்கக்கூடியதாக இருக்கின்றதா என்று பார்த்தால் அது கூட வியக்கத்தக்க முறையில் இருக்கின்றது என்பதை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எனவே அமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட திட்டங்களைச் சிறந்த முறையில் அமலாக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். அவர்களே சென்னையில் பல பகுதிகளில் சுற்றிப் பார்த்து இப்படிப்பட்ட ஒழுங்கீனங்கள் களையப்படவேண்டும் என்ற வகையில் நேரடியாக அவர்களே அதிகாரிகள் செய்யக்கூடிய பணிகளைச் செய்திருக்கிறார்கள். இதைப் பாராட்டுகிறோம், வரவேற்கிறோம். ஆகவே அவர்கள் அதற்கு மேல் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். என்னுடைய பகுதியிலே புகார்கள் நிறைய வருகின்றன. அவைகளைக் கண்காணிப்பாளர் குழுக்கள் பார்க்கும், பார்க்க வேண்டும் என்று குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் கண்காணிப்புக் குழுவிற்கு ஒன்றும் பொறுப்பு இல்லை. அவர்களிடம் கேட்டால், இவைகளை அதிகாரிகளுடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்றுதான் சொல்லுகிறார்கள். சட்ட மன்ற உறுப்பினர்கள் அவைகளைப் பார்வையிடலாமா, பார்வையிட்டு அங்கே வைத்திருக்கும் புகார் புத்தகங்களில், குறிப்புப் புத்தகங்களில் எழுதலாமா என்ற விவரம் எனக்குத் தெரியவில்லை. அதற்கெல்லாம் அரசாங்கம், அந்தக் குழுவிற்காவது பொறுப்புக் கொடுத்திருக்கிறதா என்றும் தெரியவில்லை. இப்படிப்

[திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்] [1985 ஜூன் 17

பட்ட தவறுகளைக் கண்காணித்து அவைகளைக் குறிப்பேட்டில் குறிப்பதற்கு அவர்களுக்கு பொறுப்பு இருப்பதாகவே தெரியவில்லை.

என்னுடைய தொகுதி பக்கத்திலே இப்படி ஒரு முறை ஒரு நியாயவிலைக் கடையிலே திருடு போனபோது, அதைக் கண்டுபிடித்து, இனிமேல் அதைத் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை ஆவன செய்ததோடு, பொது மக்களுக்கும் எச்சரிக்கை செய்து, விற்பனையாளர்களுக்கும் எச்சரிக்கை செய்து, எல்லோரும் ஓரளவு கண்காணிப்புடன் நடந்து வருவதால், அங்கே ஓரளவிற்கு எல்லாம் முறையாக நடந்து வருகிறது இப்போது. இதுபோன்று எவ்வளவோ இடங்களில் பிரச்னைகள் இருக்கின்றன. ஆகவே, அவைகளுக்கெல்லாம் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து உணவுப் பொருள்களை விற்பனை செய்யும் ஓட்டல் போன்ற இடங்களில் எல்லாம் பொருள்களின் விலை நாளுக்கு ஒரு விலையாக இருக்கிறது. நம்முடைய மத்திய அரசு அவசர காலத்திலே இட்டிலி இவ்வளவு விலை இருக்க வேண்டும் என்று நிர்ணயித்தது. இவ்வளவு எடை உள்ள இட்டிலியை இன்ன விலைக்குக் கண்டிப்பாக விற்க வேண்டும் என்றும் நிர்ணயம் செய்திருந்தார்கள். இப்போது அந்த நிலைமையெல்லாம் மாறி ஓட்டலில் கொடுக்கின்ற உணவுப் பொருள்களின் விலை நாளுக்கு நாள் கூடிக் கொண்டே போகிறது. அத்தோடு அவைகளிலே கலப்படம் வேறு செய்கிறார்கள். அப்படிக் கலப்படம் செய்த அந்த உணவுப் பொருள்களை எப்படிச் சாப்பிடுவது என்று தெரியவில்லை. சென்னை நகரத்திலே உள்ள ஓட்டல் ஒன்றுக்கு என்னுடைய கிராமத்திலிருந்து வந்திருந்த இரண்டு கிராமத்தார்கள் போய்ச் சாப்பிட்டிருக்கிறார்கள். காப்பி 50 பைசா இருக்கும் என்று நினைத்து, போய்ச் சாப்பிட்டுவிட்டு, ஒரு காபி மூன்று ரூபாய் என்று சொன்னவுடன், அவர்கள் வியந்துகொண்டே வந்து அதை என்னிடம் சொல்லிச் சொல்லி வருத்தப்பட்டார்கள்.

அதைப்போல மூன்று, நான்கு தோலா எடையுள்ள இட்டிலி ஒரு ரூபாய்க்கு விற்கிறார்கள். இப்படி விலையெல்லாம் ஏகப்பட்ட அளவுக்கு ஏறிப்போய். பெரிய ஆட்களும், பணக்காரர்களும் மட்டுமே சாப்பிடக்கூடிய அளவுக்கு அந்த இடங்கள், ஓட்டல்கள் மாறிவருகின்றன. சாதாரண ஏழை எளிய மக்களுக்கும், நடுத்தர மக்களுக்கும் உபயோகப்படக்கூடிய அளவுக்கு இந்த ஓட்டல்களில் விற்கப்படும் பண்டங்களின் விலை ஏற்றத்தை தடுத்து, விலை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த ஓட்டல் நடத்துபவர்களையும், வியாபாரிகள் சங்கத்தினரையும் அழைத்து வைத்துப் பேசி, தக்க முடிவு எடுத்து, இப்படிப்பட்ட நிலைமைகள் எதிர்காலத்தில் ஏற்படாத அளவுக்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.



1985 ஜூன் 17] [திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்]

நம்முடைய சட்டமன்ற விடுதியிலே கூட நல்ல காப்பி கிடைக்கமாட்டேன் என்கிறது. நாங்கள் எல்லாம் காலையிலே நல்ல காப்பி சாப்பிட்டு பழக்கப்பட்டவர்கள். மேலே 25 பைசா கொடுத்தால் நல்ல காப்பி கிடைக்கும் என்று சொன்னால் கூட கொடுக்கலாம். ஆனாலும் கூட நல்ல காப்பி கிடைக்கவில்லை. இதற்கு எல்லாம் அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கையை எடுப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

அடுத்தபடி இந்த விலை நிர்ணயம் செய்வதிலும், உணவுப் பங்கீடு முறையிலும் இருக்கக்கூடிய குறைகளையெல்லாம் களைந்து இந்தத் துறையைச் செம்மைப்படுத்த வேண்டும். பொதுமக்களுக்கு அத்தியாவசியத் தேவைகளில் ஒன்று இந்த உணவுப் பொருள்கள். ஆகவே அத்தியாவசியத் தேவையான அந்த உணவுப் பொருள்கள் அவர்களுக்கு சீராக நல்ல முறையில் கிடைப்பதற்குத் தேவையான பாதுகாப்புகளை அமைச்சர் அவர்கள் கொடுப்பார்கள் என்று நினைக்கிறேன்.

இன்னொரு கருத்தை இறுதியாகச் சொல்லிக் கொண்டு, என்னுடைய உரையை முடிக்கலாம் என்று கருதுகிறேன். கொள்முதல் செய்யக்கூடிய நெல்லை ஹல் செய்வார்கள். அரிசியாக அரவை செய்வதற்கு ரைஸ்மில்காரர்களுக்குக் கொடுப்பார்கள். அப்படிக் கொடுக்கிறபோது சம்பந்தப்பட்ட சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் அதிகாரிகள், இவ்வளவு பெர்சென்டேஜ் எங்களுக்கு தவிடு நீக்கிய அரிசியாகக் கொடுத்து விட வேண்டும் என்றும், அதற்கு இன்னவிதமாகக் கூலி என்றும் முதலிலேயே ஒரு ஒப்பந்தம் செய்து கொள்வார்கள் மில்காரர்களோடு. ஆனால் கடைசியில் அரைத்துக் கொடுக்கும்போது, எங்களால் குறிப்பிட்ட அளவு முடியவில்லை, உமி நிறைய இருந்தது, அதனால் ஒன்றிரண்டு பெர்சென்ட் குறைந்துவிட்டது

[திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்] [1985 ஜூன் 17

என்று சொல்லி. ஒப்பந்தத்திற்கும் குறைவாகவே அரிசியைக் கொடுக்கின்ற நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட தவறுகள் அல்லது குறைபாடுகள் நெல் அரவை செய்வதிலே இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இதைப்போக்க வேண்டும் என்றால், அதற்கு என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம் என்னவென்றால், ஆங்காங்கே அப்படியே அரவை செய்து, பாதுகாத்து வைக்க வேண்டும்.

குறிப்பாக, தஞ்சை ஜில்லா தமிழகம் முழுமைக்கும் பெருவாரியாக உணவு வழங்கக்கூடிய ஒரு ஜில்லா. நெற்களஞ்சியம் என்று நம் அனைவராலும் ஒப்புக் கொள்ளக் கூடிய அந்த தஞ்சை மாவட்டத்திலே அரசாங்கம் சில நவீன அரவை ஆலைகளை ஏற்படுத்தி இருக்கிறது. அவை போதாது. இன்னும் சில நவீன அரவை ஆலைகளை ஏற்படுத்தி அங்கே உற்பத்தியாகக் கூடிய நெல்லை அங்கேயே கொள்முதல் செய்வதுபோல், அங்கேயே அரவை செய்து, அதிலே தவறுகள் ஏற்பட வாய்ப்பை ஏற்படுத்தாமல் கண்காணிப்புடன் இருந்து, அரசாங்கப் பொறுப்பிலேயே அதைப் பாதுகாத்து வைத்தால் நல்லது என்று கருதுகிறேன்.

(நண்பகல் 12-00)

அதுமாத்திரமல்ல. சேமிப்புக் கிடங்குகளில் கொண்டு போய் வைக்கக்கூடிய இருப்புகளில்கூட பல சேதாரங்கள் ஏற்படுவதாகப் புகார்கள் வருகின்றன. அப்படிப்பட்ட சேதாரங்களைத் தடுத்து, அரசாங்கத்திற்கு நஷ்டம் வராத வகையில் அவற்றைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு உணவு நிலைமை திருப்திகரமாக இருக்கிறதென்று சொல்லி இருக்கிறார்கள். அதனை நான் வரவேற்கிறேன். அரசாங்கம் உணவுப் பொருள் வழங்கு துறையை இலாபகரமாக நடத்தி, உணவுப் பொருள்களை மக்களுக்கு எந்தவிதமான இடையூறும் இல்லாமல் பங்கீட்டு முறையை சரியாகச் செய்து விநியோகித்தால் ஏழை எளிய மக்களுக்கு உணவுப் பொருள்கள் நல்லமுறையில் கிடைப்பதற்கு வாய்ப்பு ஏற்படும். அப்படிப்பட்ட நல்ல வாய்ப்பினை நம்முடைய அரசாங்கம் உருவாக்க வேண்டும். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியில் இன்றைக்கு மத்திய, மாநில அரசுகளின் உறவு நல்ல நிலைமையில் இருப்பதை நாங்கள் எல்லாம் பாராட்டுகிறோம். இப்படிப்பட்ட நிலைமை அரசின் எல்லா துறைகளிலும் இருக்க வேண்டும். ஏதோ உணவுத்



1985 ஜூன் 17] [திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்]

துறையில் மட்டுமில்லாது மற்ற எல்லாத் துறைகளிலும் திட்டங்கள் மத்திய அரசின் உடன்பாட்டோடு நடைபெற வேண்டும். அந்த வகையில் நம்முடைய அரசாங்கம் வழிகாட்டி நடக்கும் என்கிற கருத்தைச் சொல்லி, இந்த மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன்.

**திரு. எஸ். என். இராமசாமி :** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள நுகர்பொருள் வழங்கல் மானியக் கோரிக்கையின் மீது நான் சார்ந்துள்ள காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நியாயவிலைக் கடைகள் மூலம், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் இன்றைக்குக் கிராமப்புறங்களில் உணவுப் பொருள்கள் வழங்கப்படுகின்றன. அப்படி வழங்கப்படுகிற உணவுப்பொருள்கள் அந்த மக்களுக்குச் சரியான அளவுகளில் கிடைப்பதில்லை. அளவுகளைச் சரியானமுறையில் ஏற்பாடு செய்து கிராம மக்களுக்கு உணவுப்பொருள்கள் வழங்கப்பட வேண்டும். கிராமப் புறங்களில் வசிப்பவர்களுக்குக் கடைகள் அமைப்பது என்பது— ஒரு பஞ்சாயத்துக்கு ஒரு கடை என்ற அடிப்படையில் இப்போது அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் ஒரு கிராமத்தைப் பொறுத்தவரையில் எட்டு சிற்றூர்களோ, 10 சிற்றூர்களோ இருக்கின்றன. அந்தச் சிற்றூர்களிலிருந்து அந்தக் கடைகளுக்கு வரவேண்டிய தூரத்தை எடுத்துக்கொண்டால் ஆறு கிலோமீட்டர், ஏழு கிலோமீட்டர் வரையில் சில கிராமங்களில் வருகிற நிலைமை இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறது. அந்த நியாய விலைக் கடைகளில் வழங்கப்படுகிற பொருள்கள் ஆறு, ஏழு கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிற ஊர்களில் உள்ள மக்களுக்குக் கிடைக்காமல் இருக்கிறது. அந்தக் கடைகள் திறக்கக்கூடிய நேரம் மக்களுக்குத் தெரியாமல் இருக்கிறது. கிராமப்புறங்களில் இருப்பவர்கள் அதிகமாகக் கூலி வேலை செய்பவர்கள்தான். காலையில் வேலைக்குச் சென்று, மாலையில் வீடு திரும்புகிறவர்கள் அவர்கள். நியாயவிலைக் கடைகள் திறந்திருக்கிற நேரத்தில் அவர்களால் வந்து பொருள்களை வாங்குவதற்கு நேரம் கிடைப்பதில்லை. எனவேதான் நாங்கள் சொல்கிறோம். கிராமப்புறங்களில் அதிக கிலோமீட்டர் தூரத்தில் இருக்கக்கூடிய சிற்றூர்களுக்கு இரண்டு

நாள் தனியாக ஒதுக்கி பொருள்கள் கிடைப்பதற்கு ஏற்பாட்டைச் செய்யவேண்டும். இப்போது இங்கே தெரிவிப்பதைப் போல நாங்கள் டி.டி.சி. மீட்டிங்குகளிலும், கலெக்டர் மீட்டிங்குகளிலும் சொல்லி இருக்கிறோம். ஆகவே, இதில் அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதேபோல, கிராம மக்களுக்கு மண்ணெண்ணெய், பாமாலின் போன்றவைகள் சரியாக கிடைப்பதில்லை. முந்தியவர்கள் வாங்கிக்கொண்டு பிந்தியவர்களுக்கு மண்ணெண்ணெயும், பாமாலினும் கிடைக்காமல் போய் விடுகிற நிலைமை இருக்கிறது. எனவே, கிராம மக்களுக்கு மண்ணெண்ணெய் கிடைப்பதற்கு வண்டிகள் மூலமாக அல்லது ட்ரக்குகள் மூலமாக மண்ணெண்ணெய் கொண்டு வந்து கொடுத்தால் அந்த மக்கள் எல்லோருக்கும் சமமான அளவில் கிடைக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன். இன்றைக்கு விவசாயம் செய்வதில் விவசாயிகள் மிகவும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். சில பகுதிகளிலே விவசாயம் செய்யக்கூடிய வகையில் ஒரு ஏக்கருடைய அளவு 100 சென்ட் என்று வைத்துக்கொண்டால் அதை விவசாயம் செய்வதற்கு வேண்டிய பொருளாதாரம் அதிகமாகச் செலவாகக் கூடியதாக இருக்கிறது. ஆகவே விவசாயி உற்பத்தி செய்ய வேண்டும் என்ற நிலையில் இன்று நெல் ஒன்றுதான் தமிழகத்திலே முக்கியமான ஒரு பொருளாக அமைந்திருக்கிறது. ஆகவே, விவசாயி உற்பத்தி செய்யக்கூடிய நெல்லுக்கு அரசாங்கம் கொடுக்கக்கூடிய ரேட் காணாது என்று அடிப்படையிருந்து வருகிறது. ஆகவே, விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய நெல்லுக்கு அரசாங்கம் குவிண்டால் ஒன்றுக்குக் கிட்டத்தட்ட 30 ரூபாய் அதிகரித்துக்கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதோடு அவர்களுக்கு வேண்டிய பூச்சி மருந்து போன்றவைகள் நியாயமான விலையில் கொடுக்கவேண்டும் என்றும் நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

அதேநேரத்தில் கிராமங்களில் இருக்கக்கூடிய பஞ்சாயத்துக் களிலே எல்லாம் நடைபெறக்கூடிய நியாயவிலைக் கடைகள், கிட்டத்தட்ட ஒரு பஞ்சாயத்தை எடுத்துக் கொண்டால், இரண்டாயிரம் கார்டுகள் வரை இருக்கக்கூடிய பஞ்சாயத்துக்கள்





எல்லாம் என் தொகுதியில் இருக்கின்றன. அரசூர்பூச்சிக்காடு என்ற பஞ்சாயத்தைச் சேர்ந்த இடத்தில் இரண்டாயிரம் கார்டுகள் இருந்து, அதைச் சுற்றியிருக்கக்கூடிய கிராம மக்களுக்கு இன்று நியாய விலைக் கடைகள் மூலம் போடக்கூடிய பொருட்கள் கிடைக்காமல் இருக்கின்றன என்ற புகார்களை என்னிடம் தந்தார்கள். அதை வைத்து, அந்தப் பகுதியில் கடைகுளம் என்று ஓரத்திலே இருக்கக்கூடிய ஊரிலே ஒரு நியாயவிலைக் கடையும், அரசூர்பூச்சிக்காடு என்ற இடத்தில் ஒரு நியாயவிலைக் கடையும் அமைத்துத் தரவேண்டும் என்ற கோரிக்கையை நான் வைக்கிறேன். அங்கே இதுவரையிலும் நியாயவிலைக் கடைகள் ஆரம்பிக்கப்படவில்லை. அப்படி நியாயவிலைக் கடைகள் ஆரம்பிக்கப்படவில்லை என்றாலும், அந்த ஊருக்கு, இரண்டு நாளைக்கு ஒரு தடவை குறிப்பிட்ட நேரத்திலே அந்தப் பொருட்களை அங்கே நீங்கள் கொடுக்க ஏற்பாடு செய்தால், அந்தப் பகுதி மக்கள் இந்தப் பொருட்களை நியாயவிலைக் கடைகள் மூலம் பெறுவதற்கு வாய்ப்பாக அமையும்.

அதுபோல் என்னுடைய தொகுதியில் பல பஞ்சாயத்துக்கள் இதே நிலையில்தான் இருந்து வருகின்றன. குறிப்பாக நான்கு, ஐந்து பஞ்சாயத்துக்களை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். அந்தப் பஞ்சாயத்துக்களில் இந்த நியாயவிலைக் கடைகளைத் திறக்க உடனடியாக ஏற்பாடு செய்து தரவேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஸ்ரீவள்ளூர் பஞ்சாயத்தைச் சேர்ந்த மகிழ்ச்சிவாம் என்ற ஊரிலே ஒரு நியாயவிலைக் கடையை ஆரம்பித்துத் தர வேண்டும் என்றும், முதலூர் பஞ்சாயத்தைச் சேர்ந்த அடைக்கலபுரம் என்ற ஊருக்கு ஒரு நியாய விலைக்கடையை ஆரம்பித்துத் தரவேண்டும் என்றும், செட்டிக்குளம் பஞ்சாயத்தில் நொச்சிக்குளம் என்ற ஊருக்கு நியாயவிலைக் கடை ஒன்றை ஆரம்பித்துத் தரவேண்டும் என்றும், வல்லகுளம் பஞ்சாயத்தைச் சேர்ந்த மணல்விளை என்ற கிராமத்திற்கு ஒரு நியாயவிலைக் கடையை ஆரம்பித்துத் தர வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன். இப்போது கேட்டு இருக்கக்கூடிய இந்த ஊர்களிலே உள்ளவர்கள் எல்லாம் கிட்டத்தட்ட ஐந்து கிலோமீட்டர், ஆறு கிலோமீட்டர் தொலைவிலே சென்று அந்தப் பெரிய கடைகளிலே—அந்தப் பஞ்சாயத்துக்குப் போய்—இதுபோன்ற அத்தியாவசியமான பொருட்களை வாங்க முடியாத நிலை ஏற்பட்டு இருப்பதன்

காரணமாக இந்தச் சிற்றூர்களில் எல்லாம் கடைகளை அமைத்து, 500 கார்டுகள் என்ற அடிப்படையிலே அங்கே கடைகளை அமைத்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அங்கே கிடைக்க வேண்டிய பொருட்கள் அனைத்தும் கிடைக்கக்கூடிய வகையில் வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் தமிழகத்திலே அரிசி ஆலைகளிலே இன்று லெவி 50 சதவீதம் தரவேண்டும் என்று கேட்டு, அவர்கள் இந்த நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சரியான முறையிலே சப்ளை செய்ய முடியாத நிலை இருந்து வருகிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் இதிலே மாற்றம் செய்து, இந்த லெவி முறையைக் குறைத்து வாங்கவேண்டும் என்பதோடு, உணவுக்குத் தரக்கூடிய அரிசி நல்லமுறையில் தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டு, இந்த நியாயவிலைக் கடைகளில் வழங்கப்படுகின்ற அனைத்துப் பொருட்களின் அளவும் சரியான முறையில் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி சொல்லி, அமைகிறேன், வணக்கம்.

(பிற்பகல் 12-10)

**திரு. மா. சின்னராசு :** மாண்புமிகு மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டு இருக்கிற நுகர்பொருள் வழங்கல் பற்றிய இந்த மானியத்தை வரவேற்று ஒருசில கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன். தமிழகத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பு ஏற்றுக் கொண்டதற்கு பின்னால் உணவு விநியோக முறையும், உணவுக் கிடங்குகள் பாரமரிப்புத் தன்மையும் சீராக நடைபெற்று வருகின்றன என்பதை இன்று மாமன்றத்திற்கு உணர்த்துகிற வகையில் தமிழக அரசின் உணவுக் கொள்கையும் உணவு விநியோக முறையும் அமைந்து இருக்கின்றன என்பதை நான் முதலில் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். உணவுத் தட்டுப்பாடும் உணவுப் பஞ்சமும், உணவுப் பிரச்சினையும் இல்லை என்பதற்கு இன்று மாமன்ற நிகழ்ச்சிகளே ஒரு உதாரணமாக அமைந்து இருக்கின்றன. உணவுத் தட்டுப்பாடும் உணவுப் பிரச்சினையும்தான் சாதாரணமாக அரசியல் கட்சிகளுக்கு மிக முக்கிய பிரச்சினையாக இருந்து வருவதையும் தேர்தல் நேரங்களில் கூட விலைப்பட்டியல் எல்லாம்





போட்டு வோட்டுகளைச் சேகரிக்க மிக முக்கிய இயந்திரமாக இருக்கும் என்பதையும் நாம் பார்த்து இருக்கிறோம். ஆனால் இன்று காலை முதல் வழக்கமாகக் காணப்படுகிற வகையில் எதிர்க்கட்சி வரிசையில் காணவில்லை. இன்று இந்தப் பிரச்சினை விவாதத்திற்கு அல்லது விமர்சனத்திற்கு அப்பாற்பட்டு விளங்குகிறது அல்லது விமர்சனத்திற்கு அப்பாற்பட்டு விளங்குகிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டாக அமைந்து இருக்கிறது என்பதை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். சாராய விநியோக முறையில் மாற்றத்தைச் செய்யவேண்டும் என்று சொன்ன போதுகூட பல மணி நேரங்களை நாம் எடுத்துக் கொண்டோம். ஆனால் உணவு விநியோக முறையில் நம்முடைய அரசு தொடர்ந்து எடுத்துக்கொண்டு வந்து இருக்கிற நல்ல மாற்றங்களின் விளைவாக ஏற்பட்டு இருக்கிற சீரான நிலைமைகளை நாம் இந்த நேரத்தில் எண்ணிப் பார்க்கவேண்டும். 1982-83-ல் 18,009 நியாய விலைக் கடைகள் இருந்த இடத்தில் நாம் இன்று 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கடைகளைத் திறந்ததன்மூலம் உணவு விநியோகத்தில் மக்களுக்கு இருக்கிற சிரமத்தை பொருட்செலவு எவ்வளவு ஏற்பட்டாலும் நாம் அரசின் பொறுப்பாக அதை ஏற்றுக்கொண்டு செயற்படுத்தவேண்டும் என்ற சீரிய நோக்கத்தோடு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு நிறைவேற்றி இருப்பதையும் நாம் வரவேற்கக் கடமைப்பட்டு இருக்கிறோம். ஆக 20 ஆயிரம் கடைகள் என்றாலும் கிட்டத்தட்ட நமது மக்கள் தொகையில் இரண்டு ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகைக்கு ஒரு கடை என்கிற விதத்தில் இது அமைந்து இருக்கிறது. ஆக நாம் ஏற்றுக்கொண்ட கொள்கையின் அடிப்படையில் இன்னும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட உணவுப் பங்கீட்டு அட்டைகளுக்கு ஒரு கடை என்ற விதத்தில் இருந்து வருகிற அந்தப் பகுதிகளில் அவைகளைப் பிரித்து புதிய நியாய விலைக் கடைகளை இன்னும் கூடுதல் ஆக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். காரணம் கோவை மாவட்டத்தில் அதுவும் குறிப்பாக மலைப் பகுதியில் ஆயிரம் அல்லது 1,500 கார்டுகள் என்றால் அந்த ஒரு மையத்திற்கு வருவதற்கு கிட்டத்தட்ட 7, 10 கிலோ மீட்டருக்கு ஆதிவாசி மக்கள், தாழ்த்தப்பட்டவர்கள் நடந்து வர வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. குறிப்பாக ஆதிவாசிகளும் சாதாரண ஏழைகளும்

வாழ்ந்து வருகிற ஆனைக்கட்டி, கோத்தனாறு, வால்பாறை போன்ற மலைப் பகுதிகள் இன்றைக்கு இருக்கின்றன. இவைகளுக்கு விதிவிலக்கு அளித்து ஆயிரம் கார்டு என்பதை 500 அல்லது 250 அட்டைகளுக்கு ஒரு நியாய விலைக் கடை என்ற விதத்தில் அந்தப் பகுதி மக்களுடைய நலனைக் கருதி கொண்டு வந்தால்தான் அவர்கள் பயனடைவார்கள். வேறு வகையில் உணவுப் பொருட்கள் பெற முடியாது. அங்கே ஓப்பன் மார்க்கெட் கிடையாது. ஆகவே, அத்தியாவசிய தேவைக்காக நடந்து வருகிற 5 கிலோ மீட்டர், 6 கிலோ மீட்டர் போகிற அந்த நிர்ப்பந்தத்தைத் தவிர்க்கிற வகையில் ஒரு பிரத்தியேகமான சலுகையை மலைப் பகுதிக்கு வழங்கவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆக இவ்வளவு சீரான உணவு விநியோகத்திற்காக உணவு பராமரிப்பை தமிழக அரசு கிடங்கு நிறுவனத்தின் மூலம் ஏற்படுத்தி அப்படி பொது நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்ட கிடங்கு நிறுவனம் லாபகரமாக செயல்படுகிற அளவுக்கு அதிலே நிர்வாகத் திறமையை மாண்புமிகு அமைச்சர் அவர்களும், துறையினரும் ஏற்படுத்திக் காட்டி இருப்பதையும் நான் இந்த நேரத்தில் பாராட்டவும், வரவேற்கவும் கடமைப்பட்டிருக்கிறேன். அத்தனைக்கும் காரணம் உணவுத் தட்டுப்பாடு இல்லாமல் உணவுப் பொருட்கள் கிடைக்கிற வகையில் உணவு உற்பத்தியை சீராக நாம் ஒரு முன்னேற்றப் பாதையில் கொண்டு வந்து இருக்கிறோம் என்பதையும் நான் சுட்டிக்காட்ட இந்த நேரத்தை பயன்படுத்திக் கொள்கிறேன். கிட்டத்தட்ட இன்று 56 லட்சம் டன் அரிசியும், 18 லட்சம் டன் பயிறு வகைகளும் சிறு தானியங்களும் உற்பத்தி செய்கிற அளவுக்கு நம்முடைய உணவு உற்பத்தித் திறன் கூடியிருப்பதுதான் இன்று தட்டுப்பாடு இல்லாமல் வெளிச் சந்தையில் உணவுப் பொருட்கள் கிடைப்பதற்கான காரணங்கள் ஆகும். ஆக, அரிசியின் விலையை நாம் ஒரு நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறோம். ரூ. 1.75 லிருந்து ரூ. 2.15 என்கிற அளவில் நியாய விலைக் கடைகள் மூலம் விநியோகித்து வருகிறோம். வெளிச் சந்தையிலும் வெகுவாக அத்தியாவசிய உணவுப் பொருளான அரிசியின் விலையைக் கட்டுப்படுத்தி இருக்கிறோம். அதைப் போல இன்னும் இருக்கிற மற்ற உணவுப் பண்டங்கள், அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்கிற அளவுக்கு நம் தமிழகத்தில் உற்பத்தி நிலை இல்லை. அவைகளுக்கு நாம் வெளி மாநிலச் சந்தையை



நம்பி இருக்கிறோம். அதன் காரணமாக, கூடுதலான விலைக்கு வாங்கி, குறைவான விலைக்குக் கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தத்தைத் தவிர்க்கிற வகையில், மத்திய அரசாங்கம், அதனுடைய கொள்முதல் கொள்கையில், கொள்முதல் செய்யப்படுகிற பொருட்களில் அந்தப் பருப்பு வகைகளையும் சேர்த்துக்கொண்டு, பற்றாக்குறையான தமிழகம் போன்ற மாநிலங்களுக்கு அவைகளை விநியோகம் செய்தால், நிச்சயம், அது உணவுப் பிரச்சினையைத் தீர்க்கிற, மக்களுக்கு தேவையான மற்ற உணவுப் பொருட்கள் கிடைக்க வகை செய்கிற ஒரு வழியாக அமையும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர் தீர்த்தகிரி கவுண்டர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல, உணவுப் பிரச்சினையைத் தீர்ப்பதில் மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கத்திற்கும் இணையான பங்கு உண்டு என்பதையும் நானும் ஒப்புக்கொள்ளுகிறேன். இன்னும் சொல்லப்போனால். மத்திய அரசாங்கத்திற்கு இன்னும் நிறைந்த பங்கு உண்டு. குறிப்பாக தென் பகுதியில் இருக்கிற நான்கு மாநிலங்களில், நமது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சுட்டிக் காட்டியதைப் போல, நம்முடைய மாநிலம் ஓரளவு நம் தேவைக்கு மிஞ்சிய உணவு உற்பத்தியைப் பெற்று இருக்கிறது. கேரளா எப்போதும் பற்றாக்குறை மாநிலமாக இருக்கிறது. ஆந்திரா உபரி மாநிலமாக இருக்கிறது. கர்நாடக மாநிலம் தன்னுடைய தேவையை நிறைவேற்றிக் கொள்கிற அளவுக்கு உணவு உற்பத்தியைக் கொண்டிருக்கிறது. நமது இந்த 4 மாநிலங்களுக்குள்ளாக உணவுப்பண்டங்களைப் பரிமாறிக் கொள்வதற்கான அனுமதியை, 'சதர்ன் சோன்' என்று ஏற்படுத்தி, அதற்கு வழங்கிவிட்டால் நிச்சயம் அரிசியை மிக முக்கியமான உணவுப் பண்டமாக பழக்கத்தில் கொண்டிருக்கிற மாநில மக்களின் பிரச்சினைகளை நாமாகவே சமாளித்துக்கொள்ளமுடியும் என்று வற்புறுத்தி, மத்திய அரசாங்கத்தின் அங்கீகாரத்தைப் பெறவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன், நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக அரிசி கொள்முதல் செய்கிறபோது, தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்—கோதுமைக்கு மத்திய அரசாங்கம் கொடுத்து வருகிற அந்த சப்சிடி காஸ்ட் அதாவது ஊக்கத் தொகை, நம் நெல்லுக்கு மறுக்கப்பட்டு வருகிறது. மத்திய அரசாங்கத்திற்குக் கூடுதலான பொறுப்பு இருக்கிறது

என்று சொல்வதற்குக் காரணமே, அந்தக் கூடுதலான பொறுப்பை ஏற்றுக்கொண்டு, கோதுமைக்குக் கொடுக்கப்படுகிற ஊக்கத் தொகை நம்முடைய விவசாயிகளுக்கு நெல்லுக்கும் கொடுக்கப் படவேண்டும். அதன் மூலம் அவர்கள் உணவு உற்பத்தியைப் பெருக்கச் செய்வதிலும், நியாயமான விலை அவர்களுக்குக் கிடைக்கச் செய்வதிலும், நாம் நம்முடைய கடமையைச் செய்ய முடியும். அந்த வகையில். பொது விநியோகத்தில் பெரும்பாலும் வாங்கப்படுகிற நெல்லுக்கு உரிய விலை கிடைப்பதற்கு மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி, மத்திய அரசாங்கம் ஒரு யதார்த்தமான, நியாயமான அணுகுமுறையை, தேசிய அடிப்படையிலான நல்ல கொள்கையை வகுக்கின்ற முறையில்—ஏதோ நாம் கேட்கிறோம், வற்புறுத்துகிறோம் என்ற காரணத்தாலேயே அது மறுப்பதற்குரிய ஒன்று என்று கருதாமல்—அதிலே ஆழ்ந்த கவனத்தைச் செலுத்தி, தென் மாநிலங்களில் மிக முக்கியமான உணவுப் பொருளான நெல்லுக்கு, உரிய விலையைப் பெற்றுத் தருவதற்கு உதவவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்த 1984-85-ல் மட்டும், கிட்டத்தட்ட எல்லா உணவுப் பொருள்களும், அத்தியாவசியப் பொருட்கள், கடலெண்ணெயானாலும், தேங்காய் எண்ணெய் ஆனாலும், மற்ற பொருள்கள் ஆனாலும், கணிசமான அளவு விலை குறைந்து இருப்பதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக, அந்த அளவுக்கு, ஒரு பக்கம் உணவு உற்பத்தியும், ஒரு பக்கம் சீரான விநியோக முறையும் தமிழகத்தில் நடைபெற்று வருகின்றது என்பதை இந்த நேரத்தில் கவனிக்காமல் இருக்கவோ, அதிலே ஏற்பட்டிருக்கிற சிறப்பை சாதாரணமாக உதாசீனப்படுத்தவோ முடியாது. ஆக இத்தனைக்கும், நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் அரசாங்கத்தின் நல்ல கொள்கை காரணமாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எண்ணெய் வித்து, எண்ணெய்ப் பொருட்களைப் பொறுத்தவரையில், பல நேரங்களில் உற்பத்திக்கும், விலைக்கும் சம்பந்தம் இல்லாமல் இருக்கிற நிலையை மறந்துவிடக்கூடாது. எண்ணெய் உற்பத்தி அதிகம் ஆகிறபோது விலை குறைவது, எண்ணெய் உற்பத்தி குறைகிறபோது, விலை அதிகரிப்பது என்கிற நிலை மாறி, எண்ணெய் உற்பத்தி அதிகமாக இருந்தாலும், அதற்கு இணையான அளவு 'ப்ரப்போர்ஷனேட் ரேட்' என்று சொல்வார்களே,





அது இல்லாமல், விலை குறையாமல் இருந்து வந்திருக்கிறது. இதைக் கருத்திலே கொண்டு, உணவுப் பொருட்களில் அரிசியின் விலையை நாம் நிர்ணயித்து இருப்பதைப்போல, சாதாரண மக்கள் பயன்படுத்துகிற எண்ணெய் போன்ற உணவுப் பண்டங்களினுடைய விலையை நாம் நிர்ணயித்து அதனுடைய நிர்ணய விலைக்குத்தான் விற்கவேண்டும் என்கிற கட்டாயமான சட்டத்தைக் கொண்டு வந்தால் நிச்சயமாக சாதாரண மக்களுக்கு அது பயன் உடையதாக அமையும். இதிலே, விவசாயிகளுக்கு லாபம் இல்லை. எண்ணெய் விலை அதிகரிக்கும்போது, விவசாயிகளுக்கு தேங்காய்க்கோ, கடலைக்கோ கூடுதலான விலை கிடைக்கிற நிலைமை இல்லை. ஆகவே, அப்படி விவசாயிகளுக்கும்

(பிற்பகல் 12-20)

பயன் இல்லாமல், உற்பத்தி செய்கின்றவர்களுக்கும் பயன் இல்லாமல், வாங்கி உண்ணுகின்ற நுகர்வோர்களுக்கும் பயன் இல்லாமல், இடையிலே இருப்பவர்கள் எண்ணெயைப் பொறுத்தவரையில் அதிக இலாபத்தைத் தொடர்ந்து பெறுவதைத் தடுப்பதற்கு இந்தத் துறை முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பொருட்களைப் பொறுத்தவரையில் விலை நிர்ணயம் என்பது நமக்கு மிகவும் அவசியமான ஒன்று.

1974 ஆம் ஆண்டிலே மத்திய அரசு மோகன் தாரியா குழு அறிக்கையை உணவுக் கொள்கையைப் பொறுத்தவரையில் வகுத்துத் தந்திருக்கிறார்கள். அவற்றில் பெரும்பாலானவற்றை நாம் கடைப்பிடித்துக்கொண்டு வருகிறோம். மிக அத்தியாவசியமான பத்து நுகர்பொருட்களை இந்த வாணிபக் கழகத்தின் மூலம்—சிவில் சப்ளைஸ் காப்பரேஷன் கடைகள் மூலம் வழங்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். உணவு தானியம், கெரோசின், பருப்பு, பயறு, நோட்டுப் புத்தகங்கள், சாதாரண மக்கள் பயன்படுத்தக்கூடிய சோப், சாதாரண மக்கள் பயன்படுத்தக்கூடிய சாதாரண துணி, சமையல் எண்ணெய் என்று இப்படிப் பட்டியல் போட்டுக் காட்டியிருக்கிறார்கள். நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் 20,000 கடைகளை நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம். அரிசி, கெரோசின் தவிர மக்களுக்குத் தேவைப்படுகின்ற மற்ற அவசியப் பொருட்களையும் குறைந்த விலைக்குக் கொடுக்கும் வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும். சில காலங்களில் கோயர்ஸ் கிளாத் விநியோகம்

[திரு. மா. சின்னராசு] [1985 ஜூன் 17

செய்து வந்தோம். இன்னும்கூட எல்லாயிடங்களிலேயும், எல்லாக் காலங்களிலேயும் கிடைக்கின்ற அளவில் ஏற்பாடு செய்தால் அது மக்களுக்குப் பயனுடையதாக அமையும். மானியமாகக்கூட கொடுக்க வேண்டியதில்லை. எந்தயிடத்திலே, எந்தப் பகுதியிலே நியாயமான விலைக்குக் கிடைக்கிறதோ அங்கே சென்று அதை வாங்கி அந்த மக்களுக்கு விநியோகம் செய்தால் மிகமிகப் பயனுடையதாக இருக்கும் என்ற கருத்தை மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்கு வைக்க முன்வருகிறேன்.

அதைப்போல, விநியோகம் செய்கின்ற உணவுப் பொருட்களில் எல்லாயிடங்களிலேயும், எல்லாப் பொருட்களும் தேவைப்படுவதில்லை. மலைப் பகுதிகளில் உள்ளவர்கள் சாதாரண மக்கள். அந்த மக்களுக்கேற்ற பொருட்களை விநியோகம் செய்கின்ற முறைகளைக் கைக்கொள்ள வேண்டும். பாமாயிலை இரண்டு கிலோ டின்னில் கொடுக்கிறோம். அதை எல்லோரும் வாங்க முடிவதில்லை. கிராமப் பகுதிகளில் உள்ள மக்களும், இன்னும் சொல்லப் போனால் நகர்ப்பகுதிகளில் வசிக்கின்ற அன்றாடக் கூலி வாங்குபவர்களும் அப்படி வாங்குகின்ற நிலைமையைப் பெற்றிருக்கவில்லை. எனவே, இரண்டு கிலோ டின்னிற்குப் பதிலாக, பதனீர் பாட்டில் போன்ற 200 மில்லி அளவு கொண்ட பாட்டிலில் அடைத்துக்கொடுத்தால் தேவைப்படுகின்ற சாதாரண மக்கள் வாங்க முடியும். மேலும் கூலி வேலை செய்பவர்கள் வாங்குகின்ற விதத்தில், மாதத்திற்கு 4 நாட்கள் என்ற விதத்தில், வாராவாரம் அவர்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை வாங்கிக் கொள்வதற்கு அனுமதி வழங்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அரிசி விநியோகத்தைப் பொறுத்தவரையில், இன்றைக்கு நாம் செய்து இருக்கின்ற கட்டுப்பாட்டில் அரிசி ஆலைகள் பற்றிய கொள்கையும் வருகிறது. அரிசி ஆலைகளுக்குப் புதிதாக அனுமதி இல்லை என்று மத்திய அரசு திட்டவட்டமாக அறிவித்திருக்கிறது என்று நான் அறிகிறேன். ஆனால் ஏற்கனவே சாதாரண மக்கள் கூடுதல் தொழில் வேண்டுமென்று கருதி, விவசாயம் செய்கின்ற விவசாயிகள்கூட கூடுதல் தொழில் வேண்டுமென்று கருதி, கூலிக்கு அறைக்கின்ற அரிசி அறவை ஆலைகளைக் கட்டியிருக்கிறார்கள். அந்த ஆலைகள் கட்டி முடிக்கப்பட்ட பிறகு, தேவையான மெஷின்களை வாங்கி வைத்துவிட்ட பிறகு, வங்கிக் கடனோ மற்றக் கடனோ வாங்கி அவைகளை நிறுவிய பிறகு



1985 ஜூன் 17] [திரு. மா. சின்னராசு]

அனுமதி மறுக்கப்பட்டது. குறிப்பாக கோவை மாவட்டத்தில் இப்படிப்பட்ட கூலி அறவை ஆலைகள் கணிசமான எண்ணிக்கையில் நிறுவப்பட்டு, லைசென்ஸ் இல்லாமல் இருந்து வருவதைக் கணக்கில் கொண்டு, இப்படி ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்ட ஆலைகளுக்கு உரிமம் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதன்மூலமாக, நம்முடைய உணவுக் கொள்கைக்குப் பாதிப்பு ஏற்படுகிறது என்ற அச்சத்திற்கு வழியில்லை என்பதையும் தெரிவித்து, எனவே, கூலி அறவை ஆலைகள் பற்றி மறுபரிசீலனை செய்ய மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி, அவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

புரட்சித் தலைவர் அரசு ஏற்றுக் கொண்டிருக்கின்ற சத்துணவுத் திட்டத்திற்கு இந்தத் துறை மிகவும் பக்க பலமாக இருந்து செயல்படும் விதத்திற்காக இந்த நேரத்தில் நான் இதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். பல்லாயிரக் கணக்கான சத்துணவுக் கூடங்களுக்கும், ஆரம்பப் பள்ளி சத்துணவு மையங்களுக்கும் சீரான முறையில் உணவு தானியங்களையும் மற்ற அத்தியாவசியமான பொருட்களையும விநியோகித்து வருகின்ற இந்தத் துறை எடுத்துக் கொண்டிருக்கின்ற நல்ல முறையில், அளவுக் குறைவு ஏற்பட்டு அதனால் அங்கே பல பிரச்னைகள் ஏற்படுகின்றன. அவைகளைத் தீர்க்கின்ற விதத்தில் ஒவ்வொரு ஒன்றியத்திலும் இந்தக் கடைகளை வைத்து, அங்கேயுள்ள சத்துணவுக் கூடங்களுக்கும், ஆரம்பப் பள்ளி சத்துணவு மையங்களுக்கும் உணவுப் பொருட்களை வழங்குகின்ற முறையை ஏற்படுத்த வேண்டும் என்று பணிவோடு தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு துணைத் தலைவரவர்கள் வாய்ப்பளித்தமைக்காக அவர்களுக்கு நன்றியைக் கூறி, விடைபெறுகிறேன், வணக்கம்.

* திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் 1985-86 ஆம் ஆண்டிற்கான நுகர்பொருள் வழங்கல் மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்து என்னுடைய கருத்துக்களை எடுத்துக் கூறலாம் என்று நினைக்கிறேன். இன்றையதினம் நாட்டிலே மிகமிக முக்கியமான ஒன்று, ஏழை, எளிய மக்களுக்காக இருக்கக்கூடிய ஒரு திட்டம் இதுதான். இந்தத் திட்டத்தினை மேற்கொள்கின்றபொழுது, மிகவும் எச்சரிக்கையாக மக்களிடத்திலே அணுக வேண்டும். காரணம்,

ஒவ்வொரு மனிதனும் கோடானுகோடி ரூபாய் சம்பாதித்து வைத்துக் கொண்டிருந்தாலும் ஒரு சாண் வயிற்றுக்குத்தான் உணவு வேண்டுமென்று வாழ்ந்து கொண்டிருக்கும் நிலைமையில் இந்தத் துறை மிக முக்கியமான துறை. எனவே, இதிலே இருக்கக் கூடிய கோளாறுகளை அகற்றி, நாட்டு மக்களுக்கு நல்ல முறையில் ஆகாரங்களைக் கொடுப்பதற்கு, உணவு கொடுப்பதற்கு நாம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

இன்றைய தினம் தமிழ் நாட்டில் மட்டுமல்ல, இந்தியா முழுவதும் நாளுக்கு நாள் நுகர்பொருள் கழகத்தின் மூலமாக, அமுதம் அங்காடிகள் திறக்க வேண்டுமென்ற மத்திய அரசின் தாக்கீது காரணமாக, ஒவ்வொரு கிராமத்திலும் நாம் அமுதம் அங்காடியைத் திறக்கின்றோம். அமுதம் அங்காடிகள் இருக்கக் கூடிய நேரத்தில், ஆங்காங்கு இருக்கக்கூடிய கடைகளிலே கொடுக்கப்படும் பொருள்கள் தரம் உள்ளவைதானா என்று பார்த்தால், பல தரம் உள்ளவையாக இருந்தாலும், சில தரமில்லாதவையாக இருக்கின்றன. இங்கே எனக்கு முன்பு பேசிய ஆளுங்கட்சி உறுப்பினர்களும் சரி, வேறு கட்சி உறுப்பினர்களும் சரி, அங்கே கொடுக்கக்கூடிய அரிசி தரம் குறைந்த அரிசியாக, பழுப்பு நிறம் உள்ள அரிசியாக, நாற்றம் எடுத்த அரிசியாக இருக்கிறது என்று அத்தனை பேரும் சொன்னார்கள். நான் கூட கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே அரிசியைக் கொண்டு வந்து இங்கே காண்பித்தேன். அதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, பிறகு தரமுள்ள அரிசியாக, பழுப்பு நீக்கப்பட்ட அரிசியாகக் கொடுக்கப்பட்டதைப் பார்த்தேன்.

இன்றைய தினம் பொறுப்பேற்றிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் மிகவும் இளையவர், சுறுசுறுப்பானவர். மக்களிடையே சென்று குறைகளைப் போக்குகிறோம் என்று சொல்லி, நேற்றைய தினம்கூட சில கடைகளிலே சென்று பார்த்ததாகவும் செய்தித்தாள்களிலே பார்த்தோம். எனவே, அதை மனதிலே வைத்து, அதிகாரிகளைச் சற்று முடுக்கி விடவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். தவறு செய்கின்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக நெல் கொள்முதல் செய்கிறார்கள். கொள்முதல் செய்கின்றபொழுது, அந்த நெல்லை சேமிப்புக் கிடங்கிலே கொண்டு வைக்கின்றார்கள்.





சேமிப்புக் கிடங்கிலே வைத்து ஒவ்வொரு அறைவை ஆலைக்கும் கொடுக்கின்றார்கள். ஆனால், அங்கேயும் பல ஊழல்கள் நடந்துள்ளன. கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே நான் குறிப்பிட்டுச் சொன்னேன். கள்ளக்குறிச்சியிலே உள்ள கிடங்கிலிருந்து அங்கேயிருக்கக்கூடிய உபரி நெல்லை எடுத்து, தனியார் வியாபாரிகளிடத்திலே வாங்குவதாக வாங்கி, அதற்கு வேண்டிய பில்கள் எல்லாம் தயாரிக்கப்பட்டு, அங்கேயிருந்து இரண்டு மூடை நெல்லை எடுத்து, அறைவைக்குக் கொடுத்து, அரிசியாக விற்கப் பட்டதைக் குறிப்பிட்டேன். அதன்மீது நடவடிக்கை எடுக்கப் பட்டு இன்றையதினம் அவர்கள் சஸ்பென்ட் செய்யப்பட்டிருக் கிறார்கள். அது போன்றவற்றின்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்றையதினம் உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், விருத்தாசலம் கிடங்கிலே இருக்கக்கூடிய நிலைமையை நேற்றைய தினம் ஒரு நண்பர் பார்த்துவிட்டு வந்து என்னிடத்திலே சொன்னார். கிடங்கிலே கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஒரு வியாபாரி, தரம் குறைந்த நெல்லைக் கொண்டு வந்து, அந்த நெல்லை அங்கே இறக்கி வைத்து விட்டு, அங்கே இருக்கக்கூடிய தரமான நெல்லை எடுத்துக் கொண்டு சென்று விடுகிறார். அதற்கு அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகள் உடந்தையாக இருந்திருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல, அங்கே நெல் சிந்திவிட்டது என்று சொல்லி, எடை குறைந்து விட்டது என்று சொல்லி, உபரி நெல்லை எடுத்து விற்று விட்டிருக்கிறார்கள். இதுபோன்ற நிலைமையை நேற்றைய தினம் விருத்தாசலம் கிடங்குக்குச் சென்று பார்த்துவிட்டு வந்த ஒரு நண்பர் சொன்னார். இது குறித்து, கடலூர் எஸ். ஆர். எம். அவர்களிடத்திலே குறிப்பிட்டதாகச் சொன்னார். எனவே, இதுபோன்றவற்றில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொது மக்களுக்கு விநியோகம் செய்யக்கூடிய, அமுதம் அங்காடிகளுக்கு விநியோகம் செய்யக்கூடிய பொருள்களை வைத்துக் கொண்டிருக்கிற அதிகாரிகள் இருக்கின்றார்கள். அமுதம் அங்காடிகளுக்கு பாமாயில் செல்கின்றது, மண்ணெண்ணெய் செல்கின்றது. சர்க்கரை செல்கின்றது; அப்படிச் செல்லும்போது, பாமாயில் செல்கின்றது என்றால், ஒரு பேரலை எடுத்துச் சென்றால், 10 லிட்டர் எடுத்து விடுகிறார்கள்; மண்ணெண்ணெய்

[திரு. எஸ். சிவராமன்] [1985 ஜூன் 17

கடைகளுக்கு லாரிகள் மூலமாகச் செல்கின்றது. ஒரு கடைக்கு 10 பேரல் கொடுக்க வேண்டுமென்றால், சிலவற்றை, வழியில் இறக்கி விடுகிறார்கள். அந்தக் கடைகளில், சர்க்கரை, அரிசி, பருப்பு ஆகியவை மட்டும்தான் இருக்கின்றன; மற்ற பொருள்கள் கிடைப்பதில்லை.

அமுதம் அங்காடியிலே கொடுக்க முடியவில்லை. கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக, நியாய விலைக் கடைகள் நடத்தப்படுகின் றன. அக்கடைகளுக்கு, டி.எஸ்.ஓ. என்று சொல்லக்கூடிய உணவுப்பொருள் வழங்கக்கூடிய தாசில்தார் அவர்கள் கொடுக்க வேண்டிய கோட்டாகூடக் கொடுப்பதில்லை. கேட்டால் இவ்வளவுதான் கோட்டா என்று சொல்கிறார்கள். என்னுடைய சிறுவள்ளூர் என்ற கள்ளக்குறிச்சி கிராமத்திலே ஒரு சொசைட்டி இருக்கிறது. அதற்குக் கொடுக்க வேண்டிய அரிசி, மண்ணெண்ணெய், பாமாயில் போன்றவைகளைக் கொடுப்ப தில்லை. கேட்டால் இவ்வளவுதான் கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள். இந்த நிலைமை மாற வேண்டும். கொடுக்க வேண்டிய அளவுக்கு எல்லாப் பொருள்களையும் முழுமையாகக் கொடுக்க வழிவகை செய்ய வேண்டும்.

(பிற்பகல் 12-30)

அது மட்டுமல்ல, என்னுடைய தொகுதியில் உலகம்காத்தான் என்று ஒரு கிராமம் இருக்கிறது. செல்லியம்பாளையம் என்பது மற்றொரு கிராமம். கடந்த ஐந்து ஆண்டுகளாக அங்கே நியாய விலைக் கடைகளைத் திறக்க வேண்டுமென்று சொல்லி வரு கிறோம். ஐந்து ஆண்டுகளுக்கு முன்னாலேயே கேட்கப்பட்டும், மாவட்ட ஆட்சித் தலைவர் அதற்குப் பரிந்துரை செய்திருந்தும், நடவடிக்கை எடுக்கப்படும் என்று பல்வேறு நேரங்களிலே சொல்லியிருந்தும் இன்னும் கடைகள் திறக்கப்படவில்லை. நியாய விலைக் கடைகள் திறக்கப்படும் இடங்களின் பட்டியலில் அந்த ஊர்கள் இடம் பெற்றிருந்தும் திறக்கப்படவில்லை. செய்தித் தாளிலே பெயர் வந்ததும் அந்தக் கிராம மக்கள் எல்லாம் மகிழ்ச்சி யோடு இருந்தார்கள், ஆனால் இன்று வரையும் திறக்கப்படாத தினால் பெருந்த ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள். கடை திறக் கப்படும், திறக்கப்படும் என்று நம்பிக் கொண்டிருந்தார்கள். தேர்தல் காலத்திலேகூட அவர்கள் வைத்த கோரிக்கை ஒன்றே



1985 ஜூன் 17] [திரு. எஸ். சிவராமன்]

ஒன்றுதான். உலகம்காத்தான் கிராமத்தில் நியாயவிலைக் கடை திறக்க வேண்டும் என்று சொன்னார்கள். அங்கே இருக்கிற பெண்கள் எல்லாம் புரட்சித் தலைவருக்கு வாக்களிக்கிறோம், அன்னை இந்திரா காந்திக்கு வாக்களிக்கிறோம், இங்கே ஒரு நியாயவிலைக் கடை திறந்து கொடுங்கள் என்று கேட்டார்கள்.

அந்தப் பகுதியில் குதிரைச்சந்தல் என்று ஒரு கிராமம் இருக்கிறது. பங்காரம் கிராமம், குடிக்காடு கிராமம் என்ற கிராமங்களும் இருக்கின்றன. உலகம்காத்தான் கிராமத்தோடு இந்த நான்கு கிராமங்களுக்கும் சேர்த்து ஒரு சொசைட்டி இருக் கிறது. அங்கே சென்று பொருள்கள் வாங்க வேண்டுமென்றால் 5 மைல் தூரம் செல்ல வேண்டும். ஆகவே, தனியாக வேறொரு கடை திறக்க வேண்டுமென்றால் அந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் இருக்கிறவர்கள் தீர்மானம் போடவேண்டுமென்று சொல் கிறார்கள். அவர்களைக் கேட்டால் தீர்மானம் போட முடியாது என்று சொல்கிறார்கள். அவர்கள் கொள்ளை இலாபம் அடிப்பதற்காக மற்ற மூன்று கிராமங்களிலுள்ள மக்கள் பாதிக்கப் படுகிறார்கள். இதை வலியுறுத்தி அப்போதைய மாவட்ட ஆட்சித் தலைவரும் இந்நாள் உணவுப்பொருள் வழங்கு துறை செயலாளராகவும் இருக்கிற திரு. எஸ். பத்மநாபன் அவர்கள் அந்தப் பகுதியை இரண்டாகப் பிரித்து, உலகம்காத்தான் கிராமத்தில் நியாயவிலைக் கடை வைக்க வேண்டுமென்று சொன்னார்கள்; அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று தனியார் கடைகள், நியாயவிலைக் கடை களில் விலைப்பட்டியல் வைக்க வேண்டுமென்று சென்ற வாரம் ஒரு கேள்வி போட்டிருந்தேன். விலைப்பட்டியல் 40 பொருள்களுக்கும் வைக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இன்னமும் வைக்கப்படவில்லை. விலைப்பட்டியல் இல்லாததால் கிராம மக்களுக்கு உரிய விலை தெரியவில்லை; அவர்கள் கேட்ட பணத்தைக் கொடுத்து விடுகிறார்கள். விஜிலன்ஸ் குழு விலைப்பட்டியலைப் பார்த்து, அதிக விலைக்கு விற்கப் பட்டிருந்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். அதைத் துரிதமாகச் செய்ய வேண்டும். பொருள்களின் விலைப் பட்டியல் வைக்கப்பட்டிருந்தால் மக்கள் அதைப் பார்த்து தெரிந்து

[திரு. எஸ். சிவராமன்] [1985 ஜூன் 17

கொள்வார்கள். அதிக விலை கொடுப்பதைத் தவிர்க்கலாம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் குறையைப் போக்கவும் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய தினம் விலைவாசி ஏறிக்கொண்டே இருக்கிறது. தேங்காய் விலை குறைந்திருக்கிறது. தேங்காய் விளைச்சல் அதிகமானதுதான் இதற்குக் காரணம். ஆனால் மற்ற பொருள்களின் உற்பத்தியும் பெருகி, விலை குறைந்திருந்தாலும், தேங்காய் விலை குறைந்ததைப்போல் குறையவில்லை. எண்ணெய் விலை குறைந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது, ஆனால் கடைகளில் விலை குறையவில்லை. பொருள்களின் விலை குறைந்தாலும் ஓட்டல்களில் பண்டங்களின் விலை உயர்ந்துகொண்டேதான் போகிறது. ஓட்டல் பண்டங்களின் விலையை ஏற்றிவிட்டால், உணவுப் பொருள்களின் விலை குறைந்தாலும் அவர்கள் பண்டங்களின் விலையைக் குறைப்பதில்லை. ஓட்டல்களை ஏ, பி, சி என்று பிரித்திருந்தாலும் எல்லா ஓட்டல்களிலும் பண்டங்களின் விலை ஏறிக்கொண்டிருக்கிறது. அதை ஏன் என்று யாரும் கேட்பதில்லை. அது ஒரு பரந்த கடல். ஆனால் வியாபாரிகள் என்று சில குறிப்பிட்ட நபர்கள் கூடுகிறார்கள். அரசாங்கம் உணவுப் பொருள்களின் விலையைக் குறைத்துக் கொடுத்தால் ஓட்டல் பண்டங்களின் விலையைக் குறைப்போம், இல்லை என்றால் விலையை ஏற்றுவோம் என்று சொல்கிறார்கள். இன்றைய தினம் சென்னை நகரில் ஓட்டல் முதலாளிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து அரசாங்கம் குறைந்த விலையில் சப்ளை செய்யவில்லை என்றால் பண்டங்களின் விலையை உயர்த்துவோம் என்று சொல்லி, ஒரு தீர்மானம் போட்டிருக்கிறார்கள். அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்து, ஓட்டல் பண்டங்களின் விலையைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நியாயமான முறையில் சொன்னால் அவர்கள் கேட்கமாட்டார்கள். 'மயிலே, மயிலே இறகு போடு' என்றால் போடாது. அதிகாரிகள் மூலமாக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். கடுமையான நடவடிக்கை எடுத்தால் விலையைக் குறைப்பார்கள். மயிலே, மயிலே இறகு போடு என்றால் போடாது, தடி எடுத்து அடித்தால்தான் இறகு போடும் என்பார்கள். அதைப்போல ஓட்டல் முதலாளிகளிடம் நியாயமாகச் சொன்னால் கேட்கமாட்டார்கள்; அதிகாரிகள் மூலமாக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்; சட்டத்தின் பிடியில் அவர்களைக் கொண்டுவர வேண்டும். அப்போதுதான் ஓரளவுக்குக் கேட்பார்கள்.



1985 ஜூன் 17] [திரு. எஸ். சிவராமன்]

அடுத்தபடியாக, இன்றையதினம் உணவுப் பொருள் வழங்குகிற அட்டையை வைத்துக்கொண்டு பல முறைகேடுகள் நடைபெறுகின்றன. காரணம் அட்டையில் 'என்ட்ரி' இருக்கும். ஆனால் குறிப்பிட்ட பொருள் அந்த நபருக்குக் கிடைக்காது.

அந்தக் கடையிலே உள்ள ரெஜிஸ்டரில் என்ட்ரி போட்டிருப்பார்கள். ஆனால் கார்டிலே என்ட்ரி போட்டிருக்க மாட்டார்கள். அரிசியை மட்டும் கார்டுதாரர்களுக்குக் கொடுத்துவிட்டு சர்க்கரை, மண்ணெண்ணெய் போன்றவற்றைக் கேட்டால் கொடுப்பதில்லை. ஆனால் இரண்டாண்டுகளுக்கு முன்பு அமுதம் அங்காடியில் இருப்பவர்கள் எல்லாம் மிகவும் பயந்து கொண்டிருந்தார்கள். மேலதிகாரிகள் மற்றும் சூப்பரின்டென்டன்ட் போன்றவர்கள் அடிக்கடி அந்தக் கடைகளுக்குச் சென்று பார்வையிட்டு தவறு செய்தவர்களை எல்லாம் சஸ்பென்ட் செய்தார்கள். ஆனால் தற்போது இரண்டாண்டுகாலமாக அப்படிப்பட்ட நிலைமை இல்லாமல் இருக்கின்றது. ஒவ்வொரு கடைக்காரரும் சூப்பரின்டென்டன்ட் மற்றும் துணை ஆய்வாளர்கள் போன்றோருக்கு மாதாமாதம் கிஸ்தி கட்டுகிறார்கள். அதன் காரணத்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படாத நிலைமை இருக்கின்றது. அந்த நிலைமையை மாற்றுகின்ற வகையில் சூப்பரின்டென்டென்டாக இருந்தாலும் அல்லது துணை மேலாளராக இருந்தாலும் அவர்களை எல்லாம் மாற்றி புதியவர்களைப் போட்டு கடுமையான நடவடிக்கை எடுத்து மக்கள் அனைவருக்கும் நியாயமான வகையில் உணவுப் பொருட்கள் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். சேலம் பஸ் ஸ்டாண்டுக்கு அருகே அண்ணா நகர் என்ற பகுதியில் இப்படிப்பட்ட நிலைமை இருக்கின்றது. கார்டுகள் வைத்திருப்பவர்களுக்கு உரிய பொருட்கள் கிடைக்கவில்லை. ஆனால் அந்தப் பொருட்கள் வேறு இடத்தில் கிடைக்கின்ற நிலைமை இருக்கின்றது. பாதிக்கப்பட்ட கார்டுதாரர்களைப் பொறுத்தவரையில் சில உதாரணங்களைச் சொல்ல விரும்புகிறேன். எண் 04802 சோட்டூபி 072514 மைதீன்பாட்சா. இப்படி பாதிக்கப்பட்ட பலர் இருக்கின்றனர். ஆனால் அதே நேரத்தில் தனிப்பட்ட சிலரிடம் சென்றால் அந்தப் பொருட்கள் விற்கப்படுகின்ற நிலைமை இருக்கின்றது. அவ்வாறு இருந்துகொண்டு சேலம் பொன்னி சூப்பர் மார்க்கெட்டின் துணை

நிலையமாக அவை செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அங்கே அதிகமான விலைக்கு விற்கப்படுகின்றன. இப்படிப்பட்ட நிலைமையைப் போக்கவேண்டும்.

விலைக்கட்டுப்படுத்தலும், கண்காணித்தலும் என்ற தலைப்பிலே ஒன்றைக் கொடுத்திருக்கிறோம். அவ்வாறு கட்டுப்படுத்தக்கூடிய இயக்கம் துரிதமாகச் செயல்படவேண்டும். சிலரை மாற்றியிருப்பதாகக் கேள்விப்பட்டேன். அதுமட்டும் போதாது. கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறு உரிய நடவடிக்கை எடுத்து மக்களுக்குக் கிடைக்கவேண்டிய அவசியமான பொருட்கள் உரிய வகையில் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நெல்லைப் பொறுத்தவரையில் ஆற்றுப் பாசனம் நடைபெறக்கூடிய தஞ்சைப் பகுதியில் குவிண்டால் ஒன்றுக்கு 15 ரூபாய் கூடுதலாகக் கொடுக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் மற்ற பகுதிகளில் அதாவது கிணற்றுப் பாசனம் நடைபெறக்கூடிய மற்ற பகுதிகளில் அவ்வாறு கொடுப்பதில்லை. கள்ளக்குறிச்சி போன்ற பகுதிகளில் கிணற்றுப் பாசனம் செய்பவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கும் அந்தக் கூடுதல் விலை கிடைப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும். இதுகுறித்து மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் சொன்னபோது அரசாங்கத்திற்கு ஆலோசனை சொல்லி நடவடிக்கை எடுக்கிறோம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருந்தார்கள். அந்த வகையில் எங்களுடைய பகுதிக்குக் கூடுதலாக 15 ரூபாய் நெல்லுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி என் உரையை முடிக்கிறேன் வணக்கம்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுவரை உணவுத்துறை மானியக் கோரிக்கையின் மீது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் 10 பேர் தங்களுடைய மேலான கருத்துக்களையும், அவர்களில் சிலர் பாராட்டுக்களையும், சிலர் இருக்கின்ற குறைபாடுகளைப்பற்றியும், சிலர் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் சுட்டிக்காட்டியதற்காக நான் முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.





சட்டமன்ற உறுப்பினர்கள் 24 வெட்டுத் தீர்மானங்களைத் தந்திருந்தார்கள். அவ்வாறு வெட்டுத் தீர்மானங்களைத் தந்திருந்த சட்டமன்ற உறுப்பினர்கள் விவாதத்தின்போது அவற்றையும் இங்கே சுட்டிக் காட்டினார்கள். பொதுவாகவே சட்டமன்ற உறுப்பினர் அருமைச் சகோதரர் திரு. சின்னராசு அவர்கள் சுட்டிக்காட்டியதுபோல் உணவுத்துறை பற்றிய விவாதம் என்றாலே சட்டமன்றத்திலே விவாதங்களில் சூடு காணப்படுவதும், காரசாரமான விவாதங்கள் நடைபெறுவதும் கடந்த காலங்களில்

(பிற்பகல் 12-40)

வழக்கமாக இருந்திருக்கின்றது. ஆனால் இன்றைக்கு சட்டமன்றத்திலேகூட குறிப்பிட்ட காலத்திற்கு முன்பாகவே அவையை முடித்துவிடக் கூடும் என்கிற நிலையிலே மிக அமைதியான முறையிலே சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய வாதங்களை எடுத்து வைத்திருப்பதை, உணவு நிலைமை, தமிழகத்திலே எவ்வளவு சீரான முறையிலே, சிறப்பான முறையிலே நடைபெற்று வருகிறது, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என்பதற்கு அடையாளமாகக் கூட, நாம் எடுத்துக் கொள்ள முடியும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

கடந்த சில ஆண்டுகளில் தொடர்ந்து மாறி மாறி, வெள்ளமும், புயலும், வறட்சியும் வந்திருந்த போதிலும், சமயத்திற்கு இந்த அரசு எடுத்த சில முடிவுகளின் காரணமாக, போதுமான அளவுக்கு விவசாய உற்பத்தி செய்யப்பட்டு, விவசாய பொருள்களுடைய உற்பத்தி அளவு நாட்டில் திருப்திகரமாகவே இருந்திருக்கிறது. மைய அரசு அளித்திருக்கின்ற நெல்லின் விலைக்கு அதிகமாக, ஒரு குவிண்டாலுக்கு 15 ரூபாய் என்கிற வீதத்திலே மாநில அரசு அளிக்கும் என்று, விவசாயப் பெருமக்களை உற்சாகப்படுத்த வேண்டும், ஊக்குவிக்க வேண்டும் என்ற அடிப்படையில், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்தார்கள். அப்படி அவர்கள் அறிவித்ததன்படி, ஏறக்குறைய 12.17 கோடி ரூபாய்க்கு விவசாய பெருமக்களுக்கு இதற்காக வழங்கப்பட்டிருக்கிறது. அவர்கள் சிவில் சப்ளைஸ் கார்பொரேஷன் நடத்துகிற நேரிடை கொள்முதல் நிலையங்களிலே, லெவி நெல்லைக் கொடுக்கிறபோது, அவர்களுக்கு இந்த 15 ரூபாய் அதிகம் அளிக்கப்படும் என்கிற அடிப்படையிலே சுமார் 12.17 கோடி ரூபாய்க்கு இடு பொருள்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இதன்

கீழ் சுமார் 8.74 லட்சம் விவசாயப் பெருமக்கள் நேரிடையாகப் பலனைப் பெற்றிருக்கிறார்கள். எனவே இந்த ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழே 1984 ஆம் ஆண்டு, இதற்கு முன்பு எந்த ஆண்டிலும் இல்லாத அளவுக்கு, ஒரு சாதனை என்று குறிப்பிடக் கூடிய அளவுக்கு சுமார் 10.46 இலட்சம் டன் அரிசி, மொத்தம் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது.

அப்படிக் கொள்முதல் செய்யப்படுகிற அரிசியை தமிழகத்திலே இருக்கிற சுமார் 20,723 நியாய விலைக் கடைகளின் மூலமாக குறைந்த விலையிலே, நியாயமான விலையிலே பொதுமக்களுக்கு, அரிசி விநியோகம் செய்யப்படுகிறது. நான் பெருமையோடு இந்த மாமன்றத்திலே எடுத்துச் சொல்ல விரும்புவது, இந்தியா விலேயே தமிழகத்திலேதான் அரிசி விலை ஒரே சீரான அளவிலே இருக்கிறது என்று சொல்லத் தக்க அளவிலே, மிகக் குறைந்த விலையிலே இருக்கிறது என்று சொல்லத் தக்க அளவிலே ஏறக்குறைய அரிசி விலை கிலோ 1¾ ரூபாய், 2 ரூபாய், 2.15 ரூபாய் என்கிற அளவிலே 3 விதரகங்களாகப் பிரித்து பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய சத்துணவுத் திட்டத்திற்கு சுமார் 25 ஆயிரம் டன் மாதாமாதம் வழங்கப்படுவதோடு சேர்த்து, ஒரு கோடியே 18 லட்சம் குடும்ப அட்டைகளுக்கும் சேர்த்து, சுமார் மாதா மாதம் 1 லட்சம் டன் அரிசி பொதுமக்களுடைய விநியோகத்திற்கும், முதலமைச்சர் அவர்களுடைய மதிய சத்துணவுத் திட்டத்திற்கும் வழங்கப்படுகிறது. மத்திய அரசு, மத்திய தொகுப்பிலிருந்து 1984 ஆம் ஆண்டிலிருந்து மாதம் 25 ஆயிரம் டன் அரிசி தமிழக அரசிற்கு தருகிறது. அவர்கள் தருகிற நிலை இதே மூன்று ரகங்களின் அடிப்படையில் ரூ. 2.08, ரூ. 2.20, ரூ. 2.35 என்ற அடிப்படையில் மாநில அரசுக்குத் தருகிறார்கள். இங்கே மாண்புமிகு காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் பேசுகிறபோது கூட, இந்த மானியக் கோரிக்கையில் மத்திய அரசு எந்தளவிற்கு சலுகைகளைத் தருகிறது என்பதையெல்லாம் நீங்கள் மறைத்திருக்கிறீர்கள்; விவரங்களை வெளிப்படையாகச் சொல்லவில்லை என்று சுட்டிக்காட்டினார்கள். சொன்னால் இப்படித்தான் சொல்ல வேண்டும் என்ற காரணத்தால் தான், அங்கே அதிக விலைக்கு வாங்கி நாம் அதிலேயிருந்து குறைத்து ரூ. 2-08, ரூ. 2-20, ரூ. 2-35 என்ற விலையில், அதிலேயிருந்து நாம் சப்சிடி ரேட்டில் மானியம் தந்து ரூ. 1-75, ரூ 2-00, ரூ. 2-15 என்ற அளவில் இதன் மூலமாக நாம் விநியோகம் செய்து கொண்டிருக்கிறோம். நான்





ஏற்கனவே சொன்னதைப் போல கூட்டுறவுத் துறையிலே நடத்தப் படுகிற கடைகள், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக நடத்தப்படுகிற கடைகள், ஆக மொத்தம் 20,723 கடைகளிலும் இப்படி மானிய விலையில் கொடுக்கிறதாலே, ஆண்டு ஒன்றுக்கு சுமார் 100 கோடி ரூபாய் அளவிற்கு இழப்பு மாநில அரசிற்கு ஏற்பட்டாலும். அரிசி நியாயமான விலையில் கொடுக்க வேண்டும். இன்றைக்கு அத்தியாவசியத் தேவையான பொருளாக இருக்கிற அரிசி ஏழை, எளிய, நடுத்தர மக்களுக்கு கிடைக்க வேண்டுமென்ற உணர்வோடு, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே, 1981 ஆம் ஆண்டிற்குப் பின்னாலே, அரிசியின் விலையை கொஞ்சம் கூட ஏற்றாமல், அப்படியே சீரான விலையில், வெளிச்சந்தைகளில் விலையை கட்டுப்பாட்டிற்குள்ளே, வைத்துக் கொண்டு, லெவியிலும் சீராக வைத்துக் கொண்டு, இன்றைக்கு பொது மக்களுக்கு மிகச் சிறப்பான முறையிலே இந்த அரசு செயல்பட்டு வருகிறது.

குடும்ப அட்டைகள் ஆயிரத்திற்கு உட்பட்ட அளவை வைத்து சுமார் 1000 குடும்ப அட்டைகளுக்கு ஒரு நியாய விலைக் கடை என்ற அடிப்படையில், அது மீண்டும் மறு ஆய்வு செய்யப்பட்டு தேவையான இடங்களில் நியாயவிலைக்கடைகள் அதிகரிக்கப்படு மென்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அறிவிப்பைச் செய்தார்கள். அந்த அடிப்படையில் இங்கே கூட மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் பேசுகிறபோது தங்களுடைய தொகுதிகளில், இன்னும் பல இடங்களில் நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட வேண்டுமென்று சுட்டிக்காட்டினார்கள். திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர் பேசுகிறபோது, 20 கிலோ அரிசிக்கு ஒரு கிலோ அரிசி தரப்படுமென்று முதல்வர் அவர்கள் தேர்தல் கால வாக்குறுதியாக அறிவித்தார்கள். அது நிறை வேற்றப்படவில்லையே என்று கூட சங்கடப்பட்டார்கள். மாண்பு மிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களுடைய அரசு அறிவித் திருக்கிற அறிவிப்புகளை நடைமுறைப்படுத்துவது மட்டுமல்லா மல், தேர்தல் நேரத்தில் அல்லது அதற்கு முன்னாலே அறிவிக்காத பல நன்மைகளைக் கூட மக்களுக்கு பெருமளவில் செய்து கொண் டிருக்கிறது என்பதை இந்த நாட்டு மக்கள் அறிவார்கள். ஏறக் குறைய 2,714 கடைகள், மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அறிவித்ததின் அடிப்படையில் 1,000 குடும்ப அட்டை களுக்கு ஒரு கடை என்பதை மாற்றியமைக்கப்பட்டதில் 2,714 கடைகள் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன.

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1985 ஜூன் 17

அதேபோல 20 கிலோ அரிசி இரண்டு தவணையாக 10 ப்ளஸ் 10 என்று வாங்கினால் தான் அவர்களுக்கு ஒரு கிலோ இனாமாக தரப்படுகிறது என்று கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் பேசுகிற போது சுட்டிக் காட்டினார்கள். அது அவ்வளவு சரியான தகவல் என்று நான் சொல்ல முடியாது. காரணம் இரண்டு தவணைகளிலே மட்டுமல்ல அவர்கள் நான்கு தவணைகளில் வாங்கிக் கொண்டாலும், வாரத்திற்கு கொஞ்சமாக வாங்கிக் கொண்டாலும், 20 கிலோ என்ற அடிப்படையில் அந்த உச்ச அளவை எட்டுகிறவர்களுக்கு ஒரு கிலோ அரிசி மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிப்பின்படி இன்றைக்கு எல்லாக் கடைகளிலும் வழங்கப்பட்டு வருகிறது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல, நியாய விலைக் கடைகளின் மூலமாக பொதுமக்களுக்குத் தேவைப்படுகிற அரிசி மட்டுமல்லாமல் இன்னும் தேவையான சர்க்கரை, மண்ணெண்ணெய், அதேபோல சமையல் எண்ணெய், கட்டுப்பாட்டுத் துணிகள் இப்படி பொது மக்களுக்கு தேவைப்படுகிற பல்வேறு விதமான அத்தியாவசிய பொருள்கள் கட்டுப்பாட்டு விலையில் நியாய விலைக் கடைகள் மூலமாக இன்றைக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

(பிற்பகல் 12-50)

சர்க்கரையைப் பொறுத்தவரைக்கும், ஒருவருக்கு 450 கிராம் என்ற அடிப்படையிலே விலையை மத்திய அரசுதான் நிர்ணயிக்கிறது. அந்த அடிப்படையில் ரூ. 4.40 என்ற வீதத்தில் சர்க்கரை பொது விநியோகத்திற்கு வழங்கப்படுகிறது. 1984-ல் ஏறக்குறைய 2,47,494 டன் சர்க்கரை பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு இருக்கிறது என்பதை நான் தெரிவிப்பதிலே மகிழ்ச்சி அடைகிறேன்.

மண்ணெண்ணெயைப் பற்றி சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே சுட்டிக் காட்டினார்கள். மத்திய அரசு நமக்கு ஒதுக்குகிற அளவு, சுமார் 1 மாதத்திற்கு 47 ஆயிரம் கிலோ லிட்டர்கள்தான். 66 ஆயிரம் கிலோ லிட்டர் நமக்கு ஒரு மாதத்தினுடைய தேவையாக இருக்கிறது. எனவே இதை அதிகரித்துத் தரவேண்டும் என்று மத்திய அமைச்சருக்கும் மத்திய அரசுக்கும் நம்முடைய அரசின் சார்பிலே ஏற்கனவே கடிதங்கள் மூலமாக தொடர்பு



1985 ஜூன் 17] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

கொண்டு வேண்டிக்கொண்டு இருக்கிறோம். இந்த அளவை மத்திய அரசு உடனே உயர்த்த வேண்டும் என்று இந்த மன்றத்தின் வாயிலாகவும் கேட்டுக் கொள்கிறோம்.

கிராமப்பகுதிகளிலே மண்ணெண்ணெய் குறைவாகத் தரப்படுகிறது, 3 லிட்டர் தான் தரப்படுகிறது என்றும், நகரங்களிலே, நகரப் பஞ்சாயத்துக்களிலே நகராட்சிகளிலே, 5, 6 லிட்டர்கள் என்றும், மாநகராட்சிகளிலே 10 லிட்டர் என்ற அளவிலே அதிகமாக தரப்படுவதாகவும் சட்டமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டி, கிராமத்திலே கொடுக்கின்ற அந்த அளவை, நகரத்திலே கொடுப்பதைப் போல உயர்த்த வேண்டும் என்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே பேசும்போது சுட்டிக்காட்டினார்கள். கிராமங்களில் விறகு போன்ற மற்ற எரிபொருட்களை உபயோகப்படுத்தி, அவர்கள் தங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடிகிறது. ஆனால் மாநகராட்சி, நகராட்சி போன்ற பகுதிகளில் உள்ள, மக்களுக்கு இப்படிப்பட்ட வசதிகள் இல்லாத காரணத்தால், இந்த அளவு நியாயத்தின் அடிப்படையிலே நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறதே தவிர, கிராமங்களைப் புறக்கணிப்பதற்காக அல்ல என்பதை நான் இந்த மன்றத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோன்று நான் ஏற்கனவே சொன்னதைப் போல மத்திய அரசு கொடுக்கிற அந்த அளவை 47 ஆயிரம் கிலோ லிட்டரிலிருந்து 66 ஆயிரம் கிலோ லிட்டராக உயர்த்தும்போது, நாம் கிராமத்திலே கூட இன்னும் சிறிது அளவு உயர்த்திக் கொடுக்க முடியுமா என்பதைப் பற்றி, தேவையின் அடிப்படையில் பரிசீலிக்க முடியும் என்பதை நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மண்ணெண்ணெய் விநியோகம் இந்தியா முழுவதும் எப்படி நடைபெறுகிறது என்பதைப் பார்ப்பதற்காக திரு. பி. சி. மாத்தூர் என்பவருடைய தலைமையிலே ஒரு தனி நபர் குழு மத்திய அரசால் நியமிக்கப்பட்டு, அது எல்லா மாநிலங்களிலேயும் சுற்றுப் பயணம் செய்து, இந்த விநியோகம் எப்படி நடக்கிறது என்பதைப் பார்த்தார்கள். அதிலும் மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகிற போது, தமிழகத்திலே மண்ணெண்ணெய் வழங்குவது மிகச் சிறப்பான முறையிலே விநியோகம் தமிழகத்திலே இருக்கிறது என்பதை இந்தக் கமிட்டி சுட்டிக்காட்டியிருக்கிறது என்பதை

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1985 ஜூன் 17

அவர்கள் நம்முடைய அதிகாரிகளிடத்திலே பேசுகிறபோது தெரிவித்து மகிழ்ச்சி அடைந்தார்கள் என்பதைக் கேட்கும் போது, மன்ற உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள் என்ற காரணத்தாலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதைப்போலவே சமையல் எண்ணெயைப் பொறுத்த வரைக்கும், 1984-ல் மத்திய அரசு 7500 டன் மாதம் ஒன்றுக்கு ஒதுக்கியது. இப்போது இறுதியாக 1985 மே மாதம் சுமார் 3600 டன் கொடுத்து, அளவைக் குறைத்து இருக்கிறது. விலை இங்கே 10 ரூபாய் 55 பைசா என்ற அடிப்படையில் ஒரு லிட்டர் பாமாயில் எண்ணெய்க்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டு நியாய விலைக் கடைகள் மூலமாக வழங்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் சின்னராசு அவர்கள் கூட இந்த அளவை இன்னும் சின்னச் சின்ன அளவிலே அதாவது 250 கிராம் அளவிலே குறைத்துக் கொடுத்தால் வாங்குபவர்களுக்கு வசதியாக இருக்கும் என்று சுட்டிக்காட்டினார்கள். அந்த ஒரு லிட்டர் கூட உதிரியாகத் தான் வைத்து வியாபாரம் செய்கிறார்கள். அதற்குமேல் கிலோ டின்னில் அடைத்து வியாபாரம் செய்யப்படுகிறது. அப்படித் தான் அங்கேயிருந்து நமக்குத் தருகிறார்கள். அதனுடைய விலை 28 ரூபாய் 35 பைசாவாக இருக்கிறது. சமையல் எண்ணெயைச் சீராக விநியோகம் செய்யும் பொருட்டும், சமையல் எண்ணெயினுடைய விலை ஏற்றம் இல்லாமல் இருப்பதைக் கண்காணிக்கும் பொருட்டும் நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்களைத் தலைவராகக் கொண்டு ஒரு குழு நியமிக்கப்பட்டு இருக்கிறது.

இந்தக் குழு சமையல் எண்ணெய் சீராகக் கிடைக்கிறதா என்பதையும் விலை ஏற்றம் இல்லாமல் இருக்கிறதா என்பதையும் கண்காணித்து அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதையும் மன்ற உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். கட்டுப்பாடு துணி விநியோகத்தைப் பற்றி மாண்புமிகு காங்கிரஸ் கட்சி சட்டமன்ற உறுப்பினர் திரு. தீர்த்தகிரி அவர்கள் பேசும்போது சுட்டிக் காட்டினார்கள். அதுவும் நியாய விலைக் கடைகள் மூலம் மிகச் சீரான முறையில் விநியோகம் செய்யப்படுகிறது. 1000 ரூபாய்க்குக் குறைவாக வருமானம் இருப்பவர்களுக்கு மட்டும் தான் வழங்கப்படுகிறது. நலிந்த பிரிவினருக்கு மட்டும் தான் இது போய்ச்



1985 ஜூன் 17] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

சேருகிறதே தவிர மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல வசதியானவர்கள் இந்தத் திட்டத்தால் பலன் அடையவில்லை என்பதையும் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இந்தக் கட்டுப்பாடு துணிகள் விநியோகத்தைக் கூடக் கண்காணிப்பதற்கும் உண்மையிலேயே நலிந்த பிரிவினருக்கு இந்தத் துணிகள் போய்ச் சேருகிறதா என்பதைக் கண்காணிக்கும் பொருட்டும் உணவுப் பொருள் வழங்கும் ஆணையர் அவர்கள் அது குறித்து தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு, கூட்டங்களை நடத்தி அரசு அலுவலர்களோடு கலந்து உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள் என்பதையும் 1985-86 ஆம் ஆண்டு நமக்கு ஒதுக்கீடு சுமார் 18 மில்லியன் சதுர மீட்டர் என்பதையும் மன்ற உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

பொதுவாகவே சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் பேசுகிறபோது நியாய விலைக் கடைகளில் தரமான அத்தியாவசியப் பண்டங்கள் கிடைப்பது இல்லை. கலப்படம் இருக்கிறது, எடை குறைவாகத் தருகிறார்கள், உரிய நேரத்தில் தருவது இல்லை, வெளியிடங்களில் விற்றுவிடுகிறார்கள், நியாய விலைக் கடைகளுக்கு வருவதற்கு முன்னால். விற்று விடுகிறார்கள், அதிலே இன்னும் ஒரு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பேசும்போது சில மேல் அதிகாரிகள் அந்த மாதிரி செய்யச் சொல்லிவிட்டு மேலே இருந்து அவர்கள் பணத்தை பெற்றுக்கொண்டு இதுபோன்ற தவறுகள் எல்லாம் நடக்கிறது என்று எல்லாம் இங்கே பேசுகிறபோது சுட்டிக்காட்டினார்கள். அவர்கள் சொன்னது போல் மேல் அதிகாரிகள் அளவிலோ அல்லது கீழ் அதிகாரிகள் மட்டத்திலோ அதுபோன்ற தவறுகள் யாராலும் உற்சாகப்படுத்தப்படுவது இல்லை என்பதை அதிகாரிகள் சார்பில் நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். தவறுகளே இல்லையா என்றால் இது போன்ற தவறுகள் அங்கொன்றும், இங்கொன்றுமாக கீழ் மட்டத்தில் நடக்கிறது என்பதை இந்த அரசும் உணர்ந்துதான் அதற்குரிய நடவடிக்கைகளை அப்போதைக்கப்போது எடுத்து வருகிறது. நேற்றைக்குக் கூட நானும்—காலையில் கேள்வி நேரத்தில் குறிப்பிட்டுச் சொன்னதைப் போல—நம்முடைய உணவுத் துறையைச் சார்ந்த அதிகாரிகளும், காவல் துறையைச் சேர்ந்த அதிகாரிகளும். மாநகராட்சியைச் சேர்ந்த சுகாதாரத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளும் இங்கே பல்வேறு இடங்களிலேயும் நியாய விலைக்

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1985 ஜூன் 17

கடைகளையும் அதுபோல் ஓட்டல்களையும் பார்வையிட்டோம். அப்போது கூட அங்கே நான் போவதற்கு முன்னால் ஒரு சகோதரி வாங்கிச் சென்ற சீனியை வாங்கி திருப்பி எடை போட்டபோது 3 கிலோவுக்கு சுமார் 250, 300 கிராம் குறைவாக இருந்தது. உடனடியாக அதிகாரிகள், அங்கேயே அவர்களைப் பணிநீக்கம் செய்வதற்கான உத்தரவை வழங்கி தக்க நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சிவராமன் அவர்கள் பேசுகிறபோது கூட அதைச் சுட்டிக்காட்டி, பாராட்டி, அதுபோல் தமிழ்நாடு முழுவதும் நடைபெறவேண்டும் என்று கேட்டார்கள். அமைச்சர் அல்லது உயர் அதிகாரிகள் என்ற அடிப்படையிலே மாவட்டங்களிலே சுற்றுப்பயணம் செய்கிற போது, பல இடங்களிலே இதுபோன்ற நியாய விலைக் கடைகளைப் பார்வையிடுவதும், தகுந்த நடவடிக்கைகளை எடுப்பதும் நடைமுறைப்படுத்தப்பட்டுத் தான் வருகிறது. அப்போதைக்கப்போது, தவறுகள் நடக்கிறபோது, அவற்றைக் கண்காணித்து, பதவி நீக்கம் செய்து, சில நேரங்களிலே கிரிமினல் வழக்குகள் தொடர்ந்து, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை நான் உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1-00)

ஒவ்வொரு நியாய விலைக் கடையிலேயும் புகார்ப் புத்தகங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. வாங்கப் போகிற பொதுமக்கள் தங்களுடைய குறைபாடுகளை அதிலே எழுதி வைக்கலாம். அதுபோலவே ஆலோசனைக் குழுக்களும் அமைக்கப்பட்டு இருக்கின்றன. சேலம், கோயம்புத்தூர், சென்னை போன்ற மாவட்டங்களில் ஆலோசனைக் குழுக்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதுபோல், எல்லா மாவட்டங்களிலேயும், மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்டு, குழுக்கள் அமைக்கப்பட்டு, பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்களையும் அதிலே உறுப்பினர்களாகப் போட்டு, பொதுமக்கள்—கன்ஸ்யூமர்ஸ் என்ற அடிப்படையிலே அவர்களுடைய சார்பிலே சில பிரதிநிதிகளை வைத்து, மாதந்தோறும் குறைந்தது ஒரு தடவை அல்லது இரண்டு தடவை அதற்கான கூட்டங்களைக் கூட்டி, ஆங்காங்கே சொல்லப்படுகிற குறைகளை நிவர்த்தி செய்வதற்காக, எல்லா மாவட்டங்களிலேயும அந்தக் குழுக்களை அமைப்பதற்கு மாண்புமிகு



1985 ஜூன் 17] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

முதல்வர் அவர்கள் அனுமதி அளித்து இருக்கிறார்கள் என்பதையும், அவ்வாறான அந்தக் குழுக்கள் மாதந் தோறும் கூட்டப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அதுபோலவே, மாநில அளவிலே மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுடைய தலைமையில், உணவு அமைச்சர் அவர்களைத் துணைத் தலைவராகக் கொண்டு, உணவுத் துறைச் செயலரை செயலாளராகக் கொண்டு ஒரு மாவட்டத்திற்கு ஒருவர் 'நான்-அஃபிஷியல்' என்ற அடிப்படையிலேயும், மற்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் உறுப்பினர்களாகக் கொண்டு மாநில அளவிலே ஒரு குழு அமைக்கப்படும் என்பதையும், அதை அறிவிக்குமாறு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அறிவுரை வழங்கி இருக்கிறார்கள் என்பதையும், அவர்களுடைய அறிவுரைப்படி இந்தக் குழு அமைக்கப்படும் என்பதையும் இந்த மன்றத்திலே தெரிவிப்பதிலே நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

அதுபோலவே, தாலுக்கா அளவிலேயும் ஒவ்வொரு நியாய விலைக் கடைக்கும், விழிப்புப் பணிக் குழுக்கள் ஏற்கனவே செயல்பட்டு வருகின்றன. அவர்களுடைய ஆலோசனைகள் அல்லது அவர்கள் கண்டுபிடித்துச் சொல்கிற குற்றச்சாட்டுக்கள், தவறுகள் களையப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்வதிலே நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

குடிமைப் பொருள் துறை, குற்றப் புலனாய்வுத் துறை, இவற்றை எல்லாம் கண்காணித்து வருகிறது. ஃபுட் செல்—உணவுத் துறைக்காக இருக்கிற விசேஷமாக அமைக்கப்பட்டிருக்கிற காவல்துறை டி.ஐ.ஜி. அவர்களுடைய தலைமையிலே இயங்கிக் கொண்டிருக்கிறது. சென்ற ஆண்டு மட்டும்—1984 ல் போடப்பட்டிருக்கிற வழக்குகள்—சுமார் 1,653 வழக்குகள் சென்ற ஆண்டு மட்டும் அவர்களாலே கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. கடத்தல், பதுக்கல், கலப்படம், இப்படி பல்வேறு அளவிலே ரூ. 1 கோடியே 26 இலட்சத்து 98 ஆயிரத்து 492 அளவுக்கு, சென்ற ஆண்டு பிடிபட்ட பொருட்களுடைய மதிப்பு இருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்வதிலே நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

சமீபத்திலே கூட, இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னாலே, ஆலந்தூர், ஈரோடு, கோவை போன்ற பகுதிகளில் சமையல் எண்ணெயிலே கலப்படம் இருக்கிறது என்ற புகார் வந்ததன் அடிப்படையில், நடவடிக்கை எடுக்கப்பட்டு சுமார் இரண்டு இலட்சம் ரூபாய்க்குரிய கலப்படம் செய்யப்பட்ட எண்ணெய் கைப்பற்றப்பட்டு இருக்கின்றது. மேற்கொண்டு புலன் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்பதையும் அது போல் அடிக்கடி மாநிலம் முழுவதும் நடவடிக்கைகள் வேகமாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதையும் மன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். 1974-லிருந்து 1978 வரை இதுபோல் கண்டு பிடிக்கிற வழக்குகளுக்கு காவல் துறையிலே டி.எஸ்.பி. அல்லது அதற்கு உட்பட்டு இருக்கிற அலுவலர்கள், அதுபோல் ரெவின்யூ அளவிலே ஆர்.டி.ஓ. அளவிலே உட்பட்டு இருப்பவர்கள் அதைப் போல சிவில் சப்ளைஸ் அளவிலே டி.எஸ்.ஓ. அளவிற்கு உட்பட்டு இருக்கின்ற அதிகாரிகளுக்கு இதுபோன்ற குற்றங்களைக் கண்டு பிடித்து, அரசுக்கு அவற்றையெல்லாம் கொண்டு வந்து சேர்க்கின்றபொழுது ஊக்க ஊதியமாக அதிலே 10 சதவீதம் வரை வழங்கப்பட்டு வந்தது; இடையிலே அதில் சில தவறுகள் இருந்த காரணத்தினாலே அது நிறுத்தப்பட்டு விட்டது.

இப்பொழுது மீண்டும் இதுபோன்ற கலப்படம் அல்லது பதுக்கல் அல்லது சீர்கேடான விநியோகம் இவற்றையெல்லாம் தங்களுடைய உயிர், உடமைகளைப் பொருட்படுத்தாமல் இதிலே தீவிரமாகச் செயல்படுகின்ற அலுவலர்களுக்கு காவல்துறை மற்றும் சிவில் சப்ளைஸ், ரெவின்யூ அலுவலர்களுக்கு, நான் ஏற்கனவே சொன்ன வரம்புகளுக்கு உட்பட்டு இருப்பவர்களுக்கு மீண்டும் அந்த 10 சதவீத அளவிற்கு ஊக்க ஊதியத் திட்டத்தைச் சிறப்புத் திட்டமாகத் தரலாம் என்றும், அதை அறிவிக்க வேண்டு மென்றும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் உத்தர விட்டு இருக்கிறார்கள் என்ற அந்த அடிப்படையிலே—ஏற்கனவே அவர்கள் சீஸ் பண்ணினாலே அது கொடுக்கப்பட்டு வந்தது; இப்பொழுது கான்பிஸ்கேட் பண்ணினால் மட்டும்—அரசுக்கு வந்து சேர்த்தால் மட்டும் அதிலிருந்து அவர்களுக்கு 10 சதவீதம் என்ற அடிப்படையிலே அவர்களுக்கு இந்த ஊக்க ஊதியத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்பதையும் மாண்புமிகு மன்ற உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.





குடும்ப அட்டைகள் இன்னும் பலயிடங்களில் வழங்கப்பட வேண்டியிருக்கின்றன என்று சுட்டிக்காட்டினார்கள். ஏற்கனவே, 1 கோடியே 18 இலட்சம் குடும்ப அட்டைகள் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன. சாதாரணமாக, தமிழகத்திலுடைய மக்கள் தொகையைக் கணக்கிலே கொண்டு பார்த்தால், வழங்கப்பட்டிருக்கின்ற குடும்ப அட்டைகள் அதிகம் என்றுதான் சொல்ல வேண்டும். இதில் போலி அட்டைகள்கூட வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை உணர்ந்து, அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, சென்ற ஆண்டிலே மட்டும் சுமார் 25,000 குடும்ப அட்டைகள், போலி அட்டைகள் என்று கண்டுபிடிக்கப்பட்டு திரும்பப் பெறப்பட்டிருக்கின்றன. எனவே, இன்னும் எங்கேயாவது, உண்மையிலேயே சில குடும்பங்கள் விடுபட்டிருக்குமேயானால், அவர்களுக்கு அந்தந்தப் பகுதிகளிலேயே நிச்சயமாகக் குடும்ப அட்டைகள் வழங்கப்படும் என்பதையும், புதுப்பித்துக் கொள்வது அல்லது அட்டை தொலைந்து போகின்ற பொழுது, சிதைந்து போகின்றபொழுது அந்தந்தப் பகுதியிலே ஐந்து ரூபாய் கட்டணம் செலுத்தி அவர்கள் உடனடியாகக் குடும்ப அட்டைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதையும், இது ஏற்கனவே நடைமுறையிலே இருந்து வருகிற திட்டம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக் காட்டுவதைப்போன்று எந்தப் பகுதியிலேயாவது இது உண்மையிலேயே விடுபட்டிருந்தால் அந்தந்தப் பகுதியிலே அவர்கள் ரெப்ரசன்டேஷன் கொடுக்கிறபோது அவைகள் நிச்சயமாகக் கவனிக்கப்படும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வாங்குகின்ற உணவுப் பொருட்களைச் சேமித்து வைப்பதற்குச் சேமிப்புக் கிடங்குகள் போதுமான அளவு இல்லை என்பதை எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் பேசுகின்றபொழுது சுட்டிக்காட்டினார்கள். நமக்கு அநேகமாகச் சேமித்து வைப்பதற்கு, சுமார் 13 இலட்சம் மக்கள் அளவிற்கு சேமித்து வைப்பதற்கு சேமிப்புக் கிடங்குகள் தேவை. சிவில் சப்ளைஸ் மற்றும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் ஆகியவற்றின் சார்பிலே இதிலே சுமார் 6 இலட்சம் டன்கள் அளவிற்கு—சுமார் பாதி அளவிற்குத்தான் இப்பொழுது வசதி இருக்கிறது. இதிலே இதற்கு முன்னாலேயெல்லாம் போதிய கவனம் செலுத்தாததன் காரணத்தாலேதான் இந்த நிலை என்பதை நான் சுட்டிக்காட்டக்

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1985 ஜூன் 17

கடமைப் பட்டிருக்கிறேன். ஏனென்றால் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 1980 வரைக்கும் அதனுடைய சேமிப்பு வைக்கிற கிடங்குகளினுடைய அளவு சுமார் 1 இலட்சத்து 70,000 மெட்ரிக் டன் என்ற அளவுக்குத்தான் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திலே வசதி இருந்தது. அதற்குமுன்னாலே இருந்த காலங்களிலே அதாவது கடந்த 1977-க்கு முன்னாலே அதிலே அதிகமாகக் கவனம் செலுத்தப்படவில்லை.

1977-க்குப் பின்னாலே உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டதன் விளைவாக கடந்த ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே மட்டும், அதாவது 1980-85-லே மட்டும் இந்த அளவு இரண்டு மடங்காகியிருக்கிறது; இன்னொரு மடங்கு அதிகமாக்கப்பட்டிருக்கிறது. சுமார் 1 இலட்சத்து 70,000 மெட்ரிக் டன் அளவிற்கு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் தன்னுடைய சேமிப்பு அளவை வைத்துக் கொண்டிருக்கின்ற நிலையில் அதனை அதிகரிக்கத்தக்க அளவிற்கு—சுமார் 65 இடங்களிலே சேமிப்புக் கிடங்குகள் இதுவரை இயங்கிக்கொண்டிருக்கின்றன—வருகிற இந்த ஆண்டிலேயும் சுமார் 11 இடங்களிலே ஏறக்குறைய மூன்றரை கோடி ரூபாய் அளவிற்குச் சேமிப்புக் கிடங்குகள் கட்டப்பட இருக்கின்றன.

(பிற்பகல் 1-10)

அதுபோல சிவில் சப்ளைஸ் நிறுவனத்தின் சார்பிலே ஏறக்குறைய 50 இடங்களிலே வருகின்ற ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏறக்குறைய ரூ. 45½ கோடி அளவிலே பல இடங்களில் சேமிப்புக் கிடங்குகள் கட்டப்பட இருக்கின்றன. வருகின்ற ஆண்டிலே மட்டும் தஞ்சை மாவட்டத்திலே 5 இடங்களிலே சேமிப்புக் கிடங்குகள் கட்டப்பட இருக்கின்றன என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இதெல்லாம் போதுமா என்று கூட சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்டார்கள். போதாதுதான். என்றாலும், நிதிநிலைமையை மனதிலே கொண்டு, கடந்த காலத்தில் நடைபெற்ற தவறுகளை ஒரே ஆண்டிலே திருத்த முடியாது என்கிற அடிப்படையிலே உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. விரைவிலே வருகிற ஐந்தாண்டுகளில் தமிழகத்திலே நமக்கு ஏறக்குறைய 18 இலட்சம் மெட்ரிக் டன்கள் சேமித்து வைக்கும்



1985 ஜூன் 17] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

அளவுக்கு நம்முடைய தேவை இருக்கிறது என்பதை உணர்ந்து,
அந்தத் தேவை முழுவதையும் நிறைவேற்றுகிற வகையிலே
தமிழ்நாடு முழுவதும் ஐந்தாண்டுகளிலே சேமிப்புக் கிடங்குகள்
கட்டப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான்
தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதிலே, இந்த
ஆண்டு 1985-86-லே நடைபெற இருக்கிற பணிகளை, கட்ட
இருக்கிற அளவை, நான் ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர்
களுக்குத் தெரிவித்து இருக்கிறேன்.

ஏற்கனவே 13 நவீன அரிசி ஆலைகள் தமிழகத்திலே இயங்கிக்
கொண்டிருக்கின்றன. இந்த ஆண்டு சுமார் 6 நவீன அரிசி
ஆலைகள் தொடங்கப்பட்டு அதனுடைய மடங்கு இரட்டிப்பாக
விரிவாக்கம் செய்யப்படும். இது தவிர, 6 இடங்களிலே 6 நவீன
அரிசி ஆலைகள் இந்த ஆண்டு, 1985-86-லே தொடங்கப்படும்.
அதோடு, 7-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே 2 நவீன அரிசி
ஆலைகள் ஆக மொத்தம் 8 நவீன அரிசி ஆலைகள், ஒவ்வொன்றும்
சுமார், ஒன்றிலிருந்து ஒன்றேகால் கோடி ரூபாய் மதிப்பீட்டிலே
8 இடங்களிலே நிறுவப்பட இருக்கின்றன என்பதையும் மாமன்ற
உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி
அடைகிறேன்.

தமிழகத்தில், நான் ஏற்கனவே சொன்னது போல, உணவு
நிலைமைகளைப் பொறுத்தவரைக்கும் திருப்திகரமாக இருக்
கிறது என்பதையும், வருகிற ஓராண்டிற்கு எந்தவிதமான உணவுப்
பஞ்சமும் இல்லாமல், பொது மக்களுக்குத் தேவைப்படுகிற
அடிப்படை உணவுப் பொருள்களை வழங்க முடியும் என்ற
அடிப்படையிலே, நமக்கு வேண்டிய அளவிற்குச் சேமிப்பு
இருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான்
தெரிவித்துக் கொண்டு, நான் ஏற்கனவே சொன்னது போல,
வறட்சியும் வெள்ளமும் மாறி மாறி வந்தாலும், 1977-க்குப்
பின்னால், அரிசி போன்ற அத்தியாவசியமான பண்டங்களுடைய
விலைகள் நியாயமான விலையிலே விற்கப்பட, கண்காணிக்கப்
பட்டு வருகின்றன. அரிசி விலை ஏறாமல் குறைந்த விலையிலே
பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அதிலே ஏறக்குறைய
ரூ. 100 கோடி நஷ்டம் வந்தாலும் மாண்புமிகு முதல்வர், புரட்சித்
தலைவர் அதிலே உறுதியாக இருந்து பொதுமக்களுக்கு
விநியோகம் நல்லமுறையிலே போய்ச் சேர வேண்டுமென்ற

உணர்வோடு இன்றைக்கு அவர்களுடைய விருப்பப்படி இந்தத் துறை மிகச் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நெல்லுக்கு விலையை ஏற்றித் தர வேண்டுமென்று காங்கிரஸ் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களே கூட சில பேர்கள் பேசும் பொழுது சொன்னார்கள். நெல்லுக்கான விலையை மாநில அரசு நிர்ணயம் செய்வதில்லை. மத்திய அரசுதான் நிர்ணயம் செய்கிறது. நான் ஏற்கனவே சொன்னது போல, சென்ற ஆண்டு அவர்கள் நிர்ணயித்த விலையை விட ஒரு குவிண்டாலுக்கு ரூ. 15 அதிகரித்துத் தந்திருக்கிறோம். ஒவ்வொரு ஆண்டும், அக்ரிகல்ச்சுரல் பிரைஸ் பிக்சேஷன் கமிஷனுக்கு ஒவ்வொரு மாநில அரசும் தன்னுடைய ஆலோசனையை வழங்குவது வழக்கம். சென்ற ஆண்டும் நாம் நம்முடைய ஆலோசனையைச் சொல்லி இருந்தோம். இவ்வளவு கொடுக்கலாம் என்று சொல்லியிருந்தோம். அவர்கள் கொடுத்த அளவுக்கு மேலே நாம் ரூ. 15 கூடுதலாகக் கொடுத்தோம். அதுபோல இந்த ஆண்டும் அந்த விவசாய விளைபொருளை நிர்ணயம் செய்கிற குழுவுக்கு—அது மத்திய அரசு குழு—மாநில அரசின் சார்பிலே திருப்பவும் பரிந்துரை செய்திருக்கிறோம். எனவே, மத்திய அரசு இப்பொழுது இருக்கிற விலையை இன்னும் அதிகமாக நிச்சயமாக உயர்த்தும் என்றும், அதன் அடிப்படையிலே விவசாயப் பெருமக்கள் நன்மை அடைவார்கள் என்றும், மாநில அரசு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்டுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் யாராவது சொன்ன குறைபாடுகளுக்கு நான் பதில் சொல்லாமல் இருந்தால் அது வேண்டுமென்றே விடப்படவில்லையென்கிற உணர்வோடு, ஏற்கனவே சபைக் குறிப்பில் இருக்கிற காரணத்தால், அவைற்றிற்கெல்லாம் இந்தத் துறையின் வாயிலாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும் அவர்களுக்கு உறுதியாகத் தெரிவித்து, இதுவரை தங்களுடைய மேலான கருத்துக்களைச் சொன்ன சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மீண்டும் நன்றி கூறி, இந்த மானியக் கோரிக்கைக்கு ஏற்கனவே தந்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் திரும்பப் பெற்றுக் கொண்டு மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.





**திரு. உ. சுப்பிரமணியன்:** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது மத்திய அரசிலிருந்து விலை நிர்ணயம் செய்ததைவிட நெல்லுக்கு குவிண்டாலுக்கு 15 ரூபாய் அதிகமாக தமிழக அரசு கொடுத்ததாகச் சொன்னார்கள். வரவேற்கிறோம். ஆனால் தஞ்சை மாவட்டத்திற்கு மட்டுமே இந்த அதிகத் தொகை கொடுப்பது பொருந்தும், வேறு மாவட்டங்களுக்கு இந்த 15 ரூபாய் கொடுப்பதில்லை என்று சொல்கிறார்கள். அது ஏன் ? மாநிலம் முழுவதற்கும் இந்தக் கூடுதல் தொகையைக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** தலைவரவர்களே, கம்யூனிஸ்ட் கட்சி சட்டமன்ற உறுப்பினர் பேசும்போது இதற்கான பதிலை அவர்களே சொன்னார்கள். அந்த மாவட்டத்தில்தான் நாம் கட்டாயப்படுத்தி லெவி வாங்குகிறோம். வியாபாரிகள் வாங்குகிற அளவிலே பாதியை அளிக்க வேண்டும். அதைப்போன்று சுமார் 680 நேரடி கொள்முதல் கடைகள் மூலம் தஞ்சாவூர், தென்னாற்காடு, புதுக்கோட்டை இப்படி 3, 4 மாவட்டங்களிலே நேரடியாகக் கொள்முதல் செய்கிறோம். அந்த விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நாம் ஏதாவது இன்சென்டிவ் தரவேண்டுமென்ற அடிப்படையில் இதை அரசு நடைமுறைப் படுத்துகிறது. எல்லோருக்கும் இப்படிச் செய்யலாம். அதற்கு நிதி ஆதாரம் மாநில அளவில் இல்லை என்பதால் தமிழ்நாடு முழுவதும் இதை அமல்படுத்தவில்லை. மத்திய அரசு விலையை ஏற்றினால் அது தமிழ்நாடு முழுவதற்கும் பொருந்தும்; அந்த வகையில் விவசாயப் பெருங்குடி மக்கள் நன்மை அடைவார்கள்.

**திரு. ந. சிவஞானம்:** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது மத்திய அரசு விலை நிர்ணய கமிஷன்தான் விலை நிர்ணயம் செய்கிறது என்று சொன்னார்கள். அதேநேரத்தில் கர்நாடகத்தில் மாநில அரசு அத்தகைய கமிஷன் ஒன்றை நியமித்து இருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. அதைப் போல் தமிழ்நாட்டில் நெல்லுக்கு விலை நிர்ணயம் செய்கிற கமிஷன் ஒன்றை நியமிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** தலைவரவர்களே, ஒவ்வொரு கொள்கையை உடைய ஒவ்வொரு அரசும் வெவ்வேறு அடிப்படையிலே மக்கள் பணிகளை மேற்கொள்கிறது. தமிழக அரசு செய்கிற எல்லாக் காரியங்களையும் கர்நாடக அரசு செய்வதில்லை. அதைப் போல கர்நாடகத்தில் செய்வதை எல்லாம்

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1985 ஜூன் 17

தமிழ்நாட்டில் செய்வதில்லை. குறிப்பாக சத்துணவுத் திட்டத்திற்கு 26,000 டன் அரிசி மாதாமாதம் வழங்கப்படுகிறது. ஏறத்தாழ 150 கோடி, 200 கோடி ரூபாய் செலவாகிறது. ஆந்திராவில் சத்துணவுத் திட்டம் இருந்தது. இப்போது கைவிட்டிருக்கிறார்கள். தன்னிறைவுத் திட்டம் தமிழ்நாட்டில் இருக்கிறது, கர்நாடகத்தில் இல்லை. கர்நாடக மாநிலத்தில் அங்குள்ள மக்களின் தேவையின் அடிப்படையில் திட்டங்களைத் தீட்டி செயல்படுகிறார்கள். அந்த அடிப்படையில் தமிழ்நாட்டில் பல திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**திரு. எஸ். சிவராமன் :** தலைவரவர்களே, நெல் விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி, மாநில அரசு பரிந்துரை செய்திருப்பதாகச் சொல்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மத்திய அரசில் இருக்கிற மாண்புமிகு பிரதம அமைச்சர் அவர்களுக்கும் ஒரு நெருக்கமான, சுமூகமான சூழ்நிலை இருந்து வருகிறது. அதன் அடிப்படையில் 7-வது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 6,750 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். அதைப்போன்று மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பாரதப் பிரதமரைச் சந்தித்துப் பேசி, நெல்லுக்கு கூடுதல் விலை கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** ஏற்கெனவே மாநில அரசு தன்னுடைய கருத்தை கடிதம் வாயிலாக எழுதியிருக்கிறது.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்** (பேரவைத் துணைத் தலைவர்) : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்திலிருந்து கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வியாபாரிகள் அரிசி கொண்டுசெல்ல அனுமதிக்கப்படுகிறார்கள். ஆனால் திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து கன்னியாகுமரி மாவட்டத்திற்கு அரிசி கொண்டுசெல்ல அனுமதிப்பதில்லை. எந்தக் காரணத்தின் அடிப்படையில் இந்த நடைமுறை செயல் படுத்தப்படுகிறது ? திருநெல்வேலி மாவட்டத்திலிருந்தும் அரிசி கொண்டுசெல்லக்கூடிய வாய்ப்பை உருவாக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?



1985 ஜூன் 17]

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** அரிசிப் பற்றாக்குறை மாநிலமான கேரளம் கன்னியாகுமரி மாவட்டத்திற்குப் பக்கத்தில் இருப்பதால் இப்படிப்பட்ட சில நடவடிக்கைகளை அரசு மேற்கொள்கிறது.

(பிற்பகல் 1-20)

**திரு. கோ. வீரய்யன் :** பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் புறங்களில் இருக்கக்கூடிய நியாயவிலைக் கடைகள் பகுதிநேரக் கடைகளாக இருக்கின்றன. அவற்றை முழுநேரக் கடைகளாக மாற்ற அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற திட்டம் எதும் இப்போது பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது, இப்போது வாக்கெடுப்பு.

திரு. எஸ். என். இராமசாமி அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

திருவாளர்கள் எஸ். பி. மணவாளன், கோ. வீரய்யன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண் 35—நுகர்பொருள் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 98,30,18,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 18—6—1985 காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.21 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

**6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.**

**(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.**

219. ஒசூரிலிருந்து பெங்களூர் வரை தற்காலிக அனுமதியின் பேரில் நடத்தப்படும், கர்நாடக மாநில வாரிய போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான நான்கு பயணிகள் பேருந்துகளுக்கு செலுத்தப்படும் வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து உள் (போ-1) துறையின் 30—3—1985 ஆம் நாளிட்ட 804 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.)

220. தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகல் எடுப்போர் உரிம விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து 1—9—1984 ஆம் நாளிட்ட 950 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1908 ஆம் ஆண்டு மத்திய பத்திரப் பதிவுச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 16/1908) 89-ஏ (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

221. தமிழ்நாடு அரசு தேர்வாணைக் குழுவின் 1978-79 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 323 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

**(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.**

114. கோரிக்கை எண் 35—தமிழகத்தில் உணவு நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு — 1985-86 (தமிழ், ஆங்கிலம்).

115. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 25—2—1985 முதல் 11—4—1985 முடிய உள்ள நடவடிக்கைகளின் சுருக்கக் குறிப்பு.



**இணைப்பு.**

(51 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

**தமிழகத்தில் உணவு நிலைமை.**

**I. உணவு தானியங்கள் உற்பத்தி.**

அடுத்தடுத்து இரு வறட்சிமிகு பருவங்களைத் தொடர்ந்து 1984-85 ஆம் ஆண்டு வந்தபோதிலும் 1984 குறுவை மற்றும் 1985 சம்பா ஆகிய இரு பருவங்களிலும் மொத்த அரிசி உற்பத்தி 56 லட்சம் டன்னாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. உணவு உற்பத்திக்கு உகந்தவாறு பருவ காலம் அமைந்ததாலும், விவசாயிகளின் நன் முயற்சியினாலும், அரசின் சீரிய கொள்கைகளினாலும் இத்தகைய உற்பத்தி நிலையை எட்ட முடிந்தது.

**II. கொள்முதல் கொள்கை மற்றும் சாதனைகள்.**

2. 1982-83 ஆம் ஆண்டில் காவேரி பாசனப் பகுதிகளிலும், இம் மாநிலத்தில் உள்ள மற்றும் சில பகுதிகளிலும், தனியார் விற்பனையைத் தடை செய்து அரசு ஏகக் கொள்முதல் முறையை செயல் படுத்தியதால் பொது விநியோக முறையின் தேவைகளை அரசால் சமாளிக்க முடிந்தது.

3. உணவு தானியங்களின் இருப்பு திருப்தியாக இருந்ததினால் ஏகக் கொள்முதல் முறை 1—4—1984 முதல் கைவிடப்பட்டது. 1984 ஆம் ஆண்டு சம்பாப் பருவத்தில் செயல்படுத்தப்பட்ட 50 விழுக்காடு வர்த்தகர் லெவி முறை 1984 ஆம் ஆண்டு குறுவைப் பருவத்திலும், 1985 ஆம் ஆண்டு சம்பாப் பருவத்திலும் தொடரப்பட்டது.

4. விவசாய விளைபொருள் விலை நிர்ணயக் குழு கடந்த இரு ஆண்டுகளாக நெல்லிற்கு, கீழே கண்டுள்ள விலைகளை பரிந்துரைத்துள்ளது :—

| நெல் ரகம் | குவிண்டால் ஒன்றின் விலை. 1983-84 ரூபாய். | 1984-85 ரூபாய். |
|---|---|---|
| சாதாரணம் .. .. | 132 | 137 |
| சன்னம் .. .. .. | 136 | 141 |
| மிகச் சன்னம் .. .. | 140 | 145 |

[1985 ஜூன் 17

அதே விலைகளைப் பின்பற்ற இம்மாநில அரசு முடிவெடுத்தது. இந்த விலைகள் 1982 மற்றும் 1983 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட வறட்சியினால் இன்னலுற்ற காவேரி நீர்ப்பாசனப் பகுதி விவசாயிகளுக்கு பயனளிக்கக்கூடிய ஆதாயமாகாது என்று அரசு கருதியது. மேலும், விவசாயிகளுக்கு பொருத்தமான ஊக்கத் தொகை அளிக்கப்பட்டால் 1985 சம்பாப் பருவத்தில் நெல் உற்பத்தியை அதிகரிக்கலாம் என்றும் அரசு கருதியது. எனவே, புதியதொரு ஊக்கத்தொகைத் திட்டத்தை அரசு அறிமுகப் படுத்தியது. இதன்படி அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தால் நிர்வகிக்கப்படும் நேரடிக் கொள் முதல் நிலையங்களில், நெல்லை விற்பனை செய்யும் விவசாயிக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் 15 (பதினைந்து) பெறுமானமுள்ள உரங்கள் வழங்கப்படும். குறுவைப் பருவம் முடிந்த உடன் சம்பாப் பருவம் ஆரம்பிப்பதால், இடுபொருள் ஊக்கத் தொகை யாக வழங்கப்படும் உரங்களை சம்பாப் பருவத்தில் விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள ஏதுவாகும் என்பது இத்திட்டத்தின் குறிக்கோள் ஆகும். இத்திட்டத்தின் பயனாக, 680 நேரடிக் கொள்முதல் நிலையங்களில் 4.89 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு புதிய சாதனை புரிய முடிந்தது. குறுவைப் பருவத்தில் கொள்முதல் செய்யப்பட்ட மொத்த அளவு 4.15 இலட்சம் அரிசி டன்களாகும். இச்சாதனை இத்திட்டத்திற்கு விவசாயிகள் அளித்த ஆதரவின் அறிகுறியாகும். 1985 ஆம் ஆண்டு சம்பாப் பருவத்திலும் இடு பொருள் ஊக்கத் தொகைத் திட்டம் தொடரப் பட்டது. 1985 சம்பாப் பருவத்தில் 31—5—1985 வரை மொத்தக் கொள்முதல் 3.90 லட்சம் அரிசி டன்கள் ஆகும்.

5. குறுகிய காலத்தில் அதிக அளவு கொள்முதல் செய்ததால் போதிய இருப்பு வசதி மற்றும் போக்குவரத்து வசதி இல்லாமல் எழுந்த பிரச்சினைகளை அரசின் பல்வேறு துறைகள் மற்றும் இருப்பூர்தித்துறை ஆகியவற்றின் உதவியால் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் திறமையுடன் சமாளித்தது. சில பகுதிகளில் திறந்தவெளிக் கிடங்குகள் புகலிடமாயிருந்தன. கொள் முதலில் தஞ்சாவூர் பெரும் பங்கினை வகிக்கிறது. அறுவடைக் காலங்களில் கொள்முதல் செய்த நெல் மற்றும் அரிசியை சேமித்து வைக்க தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் போதுமான கிடங்கு வசதி இல்லை. தொடர்ந்து வரும் இப்பிரச்சினையை சமாளிக்க 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் 50 நேரடிக்



1985 ஜூன் 17]

கொள்முதல் நிலையங்களை ஒரு நிலையத்திற்கு ரூ. 2-50 இலட்சம் வீதம் ரூ. 1-25 கோடி செலவில் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1985-86 இல் ஒவ்வொன்றும் 400 மெட்ரிக் டன் கிடங்கு வசதியுடன் கூடிய, 5 நேரடிக் கொள்முதல் நிலையங்களை தஞ்சாவூர் மாவட்டத்தில் கட்ட உத்தேசிக்கப் பட்டுள்ளது. இதற்காக நடப்பு நிதியாண்டில் ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தேவையான மீதத்தொகையை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஏற்றுக்கொள்ளும்.

6. மைய அரசு 1984-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் திங்கள் தோறும் 25,000 டன்கள் அரிசியை இம்மாநிலத்திற்கு வழங்கி வருகிறது. மாநில அரசால் கொள்முதல் செய்து வைக்கப்பட்டுள்ள இருப்புகளுடன் மைய அரசு ஒதுக்கீடு செய்யும் அரிசியையும் சேர்த்து அரசிடம் போதுமான அளவு உணவு தானியங்கள் இருப்பு உள்ளதால், தற்போது உணவு நிலைமை திருப்தியாக உள்ளது.

7. நமது தேவைக்கு அதிகமாக அரிசி உற்பத்தியாகும்போது, மையத் தொகுப்பிற்கு அரிசி வழங்குவது இவ்வரசின் நிலையான கொள்கையாகும். தேசிய உணவுக் கொள்கையில் நாமும் கலந்து, உணவு தானியங்கள் உற்பத்தியில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களை ஒருவருக்கொருவர் பயன்தரக் கூடிய வகையில் சமாளிக்க இவ் வரசிற்கு உள்ள ஆவலை இது உணர்த்துகிறது. இக்கொள்கைக்கு ஏற்ப, ஒரு லட்சம் டன் அரிசி மற்றும் ஒரு லட்சம் டன் நெல் மையத் தொகுப்பிற்கு வழங்க தீர்மானிக்கப்பட்டது. இந்திய உணவுக் கழகம் நெல்லை எடுத்துக் கொள்வதற்கு முன் வரவில்லை. மைய அரசு நாம் வழங்கும் அரிசிக்குத் தரும் விலை போதுமானதாயில்லை என்பதால் இது குறித்து முடிவு செய்யப்படாமல் உள்ளது. இழப்பு ஏற்படாத வகையில் தகுந்த விலை தரப் பட்டால் நாம் எப்போதும் மையத் தொகுப்பிற்கு அரிசி வழங்கத் தயாரான நிலையில் உள்ளோம்.

8. பொது விநியோக முறை மற்றும் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் ஆகியவற்றிற்குத் தேவையான அரிசி இருந்ததால், இருப்பு வரம்பு மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் சொந்த உபயோகத்திற்கான நெல் மற்றும் அரிசியின் இருப்பு வரம்பு சம்பந்தமான கட்டுப்பாடுகள் தளர்த்தப் பட்டன. அரிசி அரைவை ஆலை வைத்திருக்கும் மொத்த நெல் வியாபாரி வைத்திருக்கக் கூடிய நெல்லின் அதிகபட்ச இருப்பு

அளவு 1,200 குவிண்டாலிலிருந்து 1,800 குவிண்டாலாகவும், அரிசி அரைவை ஆலை இல்லாத மொத்த நெல் வியாபாரி வைத்திருக்கும் நெல்லின் அதிகபட்ச இருப்பு அளவு 300 குவிண்டாலிலிருந்து 450 குவிண்டாலாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

## III. பொது விநியோக முறை.

9. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் நியாய விலைக் கடைகளை கூட்டுறவுச் சங்கங்களும் அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகமும்தான் நடத்தி வருகின்றன என்பதையும், தனியார் வியாபாரிகளிடம் பொது விநியோகத் திட்டம் ஒப்படைக்கப்படவில்லை என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவீர்கள். மொத்தத்தில் 64 நியாய விலைக் கடைகளைத்தான் மலைத் தோட்டங்கள், தொழிற்சாலைகள் போன்ற அமைப்புகள் நடத்தி வருகின்றன. இந்த ஆண்டின் துவக்கத்தில் தமிழ் நாட்டில் மொத்தம் 18,009 நியாய விலைக் கடைகள் இருந்தன. அவற்றில் 12,905 கடைகளை கூட்டுறவுச் சங்கங்களும் 5,036 கடைகளை தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழகமும், 68 கடைகளை மலைத் தோட்டங்களும், தொழிற்சாலைகளும் மற்ற அமைப்புகளும் நடத்தி வந்தன. மாநிலம் முழுவதும் 118.88 இலட்சம் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு இவற்றின் மூலம் அத்தியாவசியப் பண்டங்கள் நுகர்வோருக்கு வழங்கப்பட்டு வந்தன.

10. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் மொத்த வியாபாரத்தைக் கவனித்துக் கொள்வதுடன் தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருநெல்வேலி மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் சில்லறை வியாபாரத்தையும் கவனித்துக் கொள்கிறது. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் நடத்தும் மொத்த வியாபாரம் பெருகி விட்டபடியால் தனது முழுக் கவனத்தையும் இக்கழகம் மொத்த வியாபாரத்திலேயே செலுத்த வேண்டியுள்ளது. இந் நிலையில் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தை மொத்த வியாபாரத்தை மட்டுமே கவனிக்கச் செய்யலாம் என அரசு கருதியது. எனவே 1-7-1984 முதல் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் நடத்தி வந்த அனைத்து நியாய விலைக் கடைகளையும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாற்றி அரசு ஆணைகள் வெளியிட்டது. இந்த ஆணைகளை எதிர்த்து தமிழ்நாடு நுகர்



பொருள் வாணிபக் கழகப் பணியாளர் சங்கம், உயர்நீதி மன்றத்திலும், உச்ச நீதி மன்றத்திலும் வழக்குகள் பதிவு செய்துள்ளது. இவை நீதி மன்றங்களின் பரிசீலனையில் உள்ளன.

11. 1984 ஆம் ஆண்டு பொது விநியோக முறையினை விரிவுபடுத்தவும், அதன் உள்ளமைப்பினை வலுவாக்கவும், ஆயிரம் குடும்ப அட்டைகளுக்கு மேல் உள்ள நியாய விலைக் கடைகள் அனைத்தையும் இரண்டாகப் பிரிக்கலாம் என்ற மற்றொரு முக்கிய திட்டத்தினை அரசு செயல்படுத்தியது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த தினமான 15—9—1984 அன்று இக் கடைகள் பிரிக்கப்படும் என அறிவித்தார்கள். இந்த அறிவிப்பிற்கிணங்க கூட்டுறவு சங்கங்கள் 2,714 புதிய நியாய விலைக் கடைகளை திறந்தன. இதனால் அத்தியாவசியப் பண்டங்களைப் பெற நியாய விலைக் கடைகளின் முன் காத்திருந்த மக்களின் கூட்டம் பெருமளவில் குறைந்துள்ளது. தற்போது தமிழ்நாட்டில் 20,723 நியாய விலைக் கடைகள் உள்ளன.

12. நியாய விலைக் கடைகள் முன் பெருமளவில் கூட்டம் சேர்வதைத் தடுப்பதற்காகவும், நுகர்வோர் சிரமமின்றி பண்டங்களை வாங்குவதற்காகவும் சென்னை நகரத்தில் குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட குடும்ப அட்டைகளுக்கு இன்றியமையாப் பொருட்களை வழங்கும் திட்டத்தை அரசு 1983-ல் செயல்படுத்தியது. இத் திட்டத்தின்படி குடும்ப அட்டைதாரர்கள், அரிசி தவிர மற்ற அத்தியாவசியப் பண்டங்களை மாதத்தில் முதல் பதினைந்து நாட்களுக்குள் குறிப்பிட்ட நாட்களில் பெற்றுக் கொள்ளலாம். சென்னை நகரத்தில் இத்திட்டம் செயல்படுவதை மேலும் சில காலம் கண்காணித்த பின்னர் இத் திட்டத்தை மற்ற இடங்களுக்கும் நீட்டிப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

13. இந்த ஆண்டு அரசு கொணர்ந்த மற்றொரு முக்கிய திட்டம் பொது விநியோக முறையில் வழங்கப்படும் அரிசியின் அளவினை அதிகப்படுத்தியது ஆகும். சென்ற இரண்டு ஆண்டுகளாக அரிசி பற்றாக் குறை நிலை இருந்து வந்ததால் ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் 12 கிலோ அரிசி தான் உச்ச அளவாக வழங்கப்பட்டு வந்தது. ஆனால் 1984 ஆம் ஆண்டு அரிசி உற்பத்தி கூடியுள்ளதால் இந்த உச்ச அளவு 20 கிலோவாக உயர்த்தப்பட்டுள்ளது. பொது விநியோக முறையினையே நம்பியுள்ள ஏராளமான பாமர ஏழை

மக்கள் இத் திட்டத்தால் பயன் அடைந்துள்ளனர். எனினும், பொது விநியோக முறையில் அரிசி குறைந்த விலையில் விற்கப் படுவதால், மாத வருமானம் 1,000 ரூபாய்க்கு குறைவாக உள்ளவர் களே அரிசி பெறத் தகுதியானவர்கள் என்று அரசு நிர்ணயித் துள்ளது. தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 118.88 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களில் 113.40 இலட்சம் குடும்ப அட்டைதாரர்கள் மாதமொன்றுக்கு 1,000 ரூபாய்க்கு குறைவான வருமானம் பெறு பவர்களாக உள்ளனர். இந்த வருமான அடிப்படையிலான திட்டம் பொருளாதாரத்தில் பின் தங்கிய மக்கள் பெருமளவில் பயன் பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் செயல்படுத்தப் பட்டுள்ளதாகும். ஏப்ரல் 1984 முதல் மார்ச் 1985 வரையிலான காலத்தில், தமிழநாட்டில் பொது விநியோக முறையின் கீழ் 7,32,391 டன்கள் அரிசி விநியோகம் செய்யப்பட்டது.

14. மாதமொன்றுக்கு உச்ச அளவான 20 கிலோ அரிசியினைப் பெறுவோருக்கு 1 கிலோ அரிசி இலவசமாக வழங்கும் திட்ட மொன்றையும் அரசு நடைமுறைப்படுத்தியுள்ளது. இத்திட்டம் பொது விநியோகம் ஒன்றையே நம்பியுள்ள நலிந்த பிரிவினரின் பொருளாதாரப் பிரச்சினையைத் தணிப்பதற்காக நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

15. பொது விநியோக முறையின் கீழ சாதாரண ரக அரிசி கிலோ 1-75 ரூபாய் என்ற குறைந்த விலையிலும், சன்ன ரகம் கிலோ 2-00 ரூபாய் என்ற குறைந்த விலையிலும், மிகச் சன்ன ரகம் கிலோ 2-15 ரூபாய் என்ற குறைந்த விலையிலும் விற்கப்படுகிறது. இவ்வாறு குறைந்த விலையில் அரிசி விற்பதால் அரசுக்கு சாதாரண ரகத்தில் கிலோ ஒன்றுக்கு 1.35 ரூபாயும் சன்ன ரகத்தில் கிலோ ஒன்றுக்கு 1.09 ரூபாயும் மிகச் சன்ன ரகத்தில் கிலோ ஒன்றுக்கு 60 பைசாவும் நஷ்டம் ஏற்படுகிறது.

**லெவி கோதுமை :**

16. 1984-85-ல், பொது விநியோக முறையில் வழங்கப்பட்ட கோதுமையின் அளவு மிகவும் குறைவாக இருந்தது. மைய அரசு மாதம் ஒன்றுக்கு 30,000 டன்கள் கோதுமை ஒதுக்கீடு செய்கிறது.

17. மலைப் பிரதேசங்களைத் தவிர மற்றப் பகுதிகளில் குடும்ப அட்டைகளுக்கு மாதமொன்றுக்கு 20 கிலோ வரை கோதுமை வழங்கப்படுகிறது. மலை பிரதேசங்களில் குடும்ப அட்டைக்கு



மாதமொன்றுக்கு 30 கிலோ வரை வழங்கப்படுகிறது. நியாய விலைக்கடைகளில் கோதுமை கிலோ ரூ. 1.87 என்ற விலையிலேயே தொடர்ந்து வழங்கப்படுகிறது. 1983 ஆம் ஆண்டில் 2,04,811 டன்கள் கோதுமை குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்பட்டது. ஆனால் 1984 ஆம் ஆண்டில் 1,00,075 டன்கள் கோதுமைதான் குடும்ப அட்டைதாரர்களால் வாங்கப்பட்டுள்ளது.

18. நாம் அரிசியை மட்டும் நம்பி இருக்க முடியாது என்பதால், தமிழ் நாட்டு மக்கள், அதிக அளவில் கோதுமையை உட்கொள்ளு வதை மக்களிடையே பரவச் செய்வதில் அரசு இப்போது ஆர்வம் காட்டுகிறது. இந்த முடிவை கருத்தில் கொண்டு, கோதுமை உருளை மாவு ஆலைகளுடனும், ரொட்டி தயாரிப்போருடனும் சேர்ந்து, 1984 ஆகஸ்டு மாதத்தில், சென்னை இராஜாஜி மண்டபத் தில் கோதுமைப் பொருட்கள் பற்றிய கருத்தரங்கு மற்றும் கண் காட்சியை அரசு நடத்தியது.

**கோதுமைப் பொருட்கள் :**

19. 1984-85 ஆம் ஆண்டில் இந்திய அரசு இம்மாநிலத்தில், மூன்று புதிய உருளைமாவு ஆலைகள் நிறுவ உரிமம் வழங்கியது. இவை ஒவ்வொன்றும் மாதமொன்றுக்கு 750 டன்கள் அரைக்கும் திறன் கொண்டவை. தமிழ்நாட்டில் உருளை மாவு ஆலைகளின் மொத்த எண்ணிக்கை 42 ஆக உயர்ந்துள்ளது. மொத்த உரிமத்திறன் மாத மொன்றுக்கு 73,360 டன்களிலிருந்து 75,610 டன்களாக உயர்ந் துள்ளது. 1984 ஆகஸ்டு முதல் இந்திய அரசு கோதுமை உருளை மாவு ஆலைகளுக்கு அவைகளின் உரிமத் திறன் வரை கோதுமை ஒதுக்கீடு செய்கிறது. 1985 ஏப்ரல் முதல் ஆலைகளின் உரிமத் திறனில் 125 சதவீதம் வரை அரைவை செய்ய இந்திய அரசு அனுமதித்துள்ளது. ஆலைகள், அவற்றிற்குத் தேவையான கோதுமையை வெளிச் சந்தையில் வாங்கிக் கொள்ளவும் அனுமதிக் கப்பட்டுள்ளன. 1985—86-ல் அவ்வாறு வாங்கும் கோதுமையின் மொத்த அளவு ஆலையின் ஓர் ஆண்டின் மொத்த உரிமத் திறனுக்கு மேற்படக்கூடாது என்றும், கோதுமையை வாங்கும் விலை இந்திய அரசு நிர்ணயித்துள்ள ஆதரவு விலைக்குக் குறைவாக இருக்கக்கூடாது என்றும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. ஆனால் வட இந்திய மாநிலங்களிலிருந்து கோதுமையை கொண்டு

வருவதில் கூடுதலாகச் செலவு ஏற்படும் என்பதால், அரைவை ஆலைதாரர்கள் இந்தத் தாராளமான கொள்கையால் பயனடைவது சாத்தியமில்லை. எனவே, தமிழ்நாட்டில் உள்ள உருளை மாவு ஆலைகள், தொடர்ந்து இந்திய அரசு ஒதுக்கீடு செய்யும் கோதுமையையே நம்பி இருக்க வேண்டியுள்ளது.

20. 1984 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் இந்திய அரசு, உருளை மாவு ஆலைகளுக்குக் கொடுக்கும் கோதுமையின் விலையை ரூ. 208 லிருந்து ரூ. 172 ஆக குறைத்தது. இதற்கு ஒத்திசைந்து, மாநில அரசு ரவை மற்றும் மைதாவின் அதிக பட்ச சில்லறை விற்பனை விலையை கிலோ ரூ. 3-05-லிருந்து ரூ. 2-55 ஆக 1—9—1984 முதல் குறைத்துள்ளது. நியாய விலைக் கடைகளில் ரவையும் மைதாவும் கிலோ ரூ. 2.55-க்கு விற்கப்படுகிறது. நகர்ப்புறங்களுக்கு குடும்ப அட்டைக்கு மாதமொன்றுக்கு 10 கிலோ மைதாவும் 5 கிலோ ரவையும் நாம் வழங்கிக் கொண்டிருக்கிறோம். மற்ற பகுதிகளுக்கு குடும்ப அட்டைக்கு மாதத்திற்கு 5 கிலோ மைதாவும், 5 கிலோ ரவையும் வழங்கப்படுகிறது. ஆனால் மைதாவும், ரவையும் வாங்குவது குறைவாகவே உள்ளது.

21. உருளைமாவு ஆலைகள் உற்பத்தி செய்யும் மைதா மற்றும் ரவையின் தரத்தை பரிசோதிக்க உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையர் அலுவலகத்தில் ஆய்வகம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. உணவுப் பொருள் வழங்கல் உதவி ஆணையர் (ஆய்வு) இந்த ஆய்வகத்திற்கு பொறுப்பாவார். இப்போதுள்ள ஆய்வகத்திற்கு மேலும் துணைத் தளவாடங்களும், வசதிகளும் செய்து தர அரசு முடிவு செய்துள்ளது. இந்தத் திட்டத்திற்காக 1985—86 ஆம் ஆண்டு வரவு—செலவு திட்டத்தில் ஒரு இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சர்க்கரை :**

22. லெவி சர்க்கரை, குடும்ப அட்டைகளுக்கு நியாய விலைக் கடைகள் மூலம் நபர் ஒருவருக்கு, மாதமொன்றுக்கு 450 கிராம் வீதம் வழங்கப்படுகிறது. லெவி சர்க்கரை நாடு முழுவதிலும் ஒரே விலையில் விற்கப்படுகிறது. 31—3—1985 வரை லெவி சர்க்கரையின் விற்பனை விலை கிலோ ரூ. 4-00 ஆக இருந்தது. 1—4—1985 முதல் இது இந்திய அரசால் கிலோ ரூ. 4-40-க்கு உயர்த்தப்பட்டது. 1984 ஆம் ஆண்டில் 2,47,494 டன்கள் லெவி சர்க்கரை



நியாய விலைக் கடைகள் மூலமாக குடும்ப அட்டைகளுக்கும், அரசு மருத்துவ மனைகள் கல்வி நிலையங்களுடன் இணைந்த உறைவு விடுதிகள், அனாதை இல்லங்கள் போன்ற மொத்த நுகர்வோருக்கும் வழங்கப்பட்டது. தீபாவளி, கிறிஸ்துமஸ், பொங்கல் ஆகிய பண்டிகைக் காலங்களில் கூடுதலாகவும் லெவி சர்க்கரை வழங்கப்பட்டது. இந்திய அரசு, 1985 சூன் மாதத்திற்கு கூடுதலாக 3,402 டன்கள் லெவி சர்க்கரையும், 4,993 டன்கள் வெளிச் சந்தை விற்பனை சர்க்கரையும் ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த ஒதுக்கீடுகள், சர்க்கரையின் வெளிச் சந்தை விலையை பெருமளவு கட்டுபடுத்த நமக்கு உதவும்.

23. அரசு முடை இருப்பு வைத்துக் கொண்டு, வெளிச் சந்தை விலைகள் அதிகமாக உயரும் போது, சர்க்கரையை விற்பனை செய்து வெளிச்சந்தை விலையைக் கட்டுப்படுத்தியது. சர்க்கரை இருப்பை முன்மதியுடன் செயலாட்சி செய்ததால், வெளிச் சந்தையில் சர்க்கரையின் விலையை நியாயமான அளவில் வைத்துக் கொள்ள முடிந்தது.

**மண்ணெண்ணெய்.**

24. தமிழ்நாட்டில், மண்ணெண்ணெய், நியாய விலைக் கடைகள் மூலமும், கைவண்டி உரிமதாரர்கள் மூலமும், மண்ணெண்ணெய் வியாபாரத்தை மட்டுமே நம்பியிருக்கும் சில்லரை வர்த்தகர்கள் மூலமும் பொது மக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாதமும் மத்திய அரசு இம்மாநிலத்திற்கு மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்கிறது. இம்மாநிலத்திற்கு மாதம் ஒன்றுக்கு 66,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் தேவைப்படுகிறது. ஆனால் மத்திய அரசு ஏறக்குறைய 47,000 கிலோ லிட்டர் தான் வழங்குகிறது. மழை, வெள்ளம் வரும் காலங்களில் அவற்றால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு வழங்குவதற்காக மத்திய அரசு கூடுதலாக மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்கிறது. நமது மாநிலத்தில் மொத்தம் 2,776 மண்ணெண்ணெய் கைவண்டி உரிமதாரர்கள் உள்ளனர். அவர்கள் மாதம் ஒன்றுக்கு சுமார் 4,700 கிலோ லிட்டர்கள் மண்ணெண்ணெய் கையாளுகின்றனர். குடும்ப அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கியது போக மீதமிருந்தால் கைவண்டிதாரர்களின் ஒதுக்கீட்டை 50 லிட்டரிலிருந்து 100 லிட்டராக அதிகரிக்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அரசு அனுமதி

வழங்கியுள்ளது. கைவண்டிதாரர்களைத் தவிர மண்ணெண்ணெய் வியாபாரத்தை மட்டும் நம்பியிருக்கும் சில்லறை பதிவுச் சான்றிதழ் பெற்றுள்ளவர்கள் 2,547 பேர் உள்ளனர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் 500 குடும்ப அட்டைகளுக்கு மிகைப்படாமல் மண்ணெண்ணெய் வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசு மண்ணெண்ணெய் வாணிபத்தை மட்டுமே நம்பியிருப்பவர்களைத் தவிர மற்றவர்களுக்கு மண்ணெண்ணெய் சில்லறைப் பதிவுச் சான்றிதழ் வழங்கக்கூடாது என்று ஆணையிட்டது தவறு என உயர் நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியதை எதிர்த்து அரசு உச்ச நீதி மன்றத்தில் தொடுத்துள்ள மேல் முறையீடு இன்னும் நிலுவையில் உள்ளது.

25. சென்னை மாநகராட்சியிலும். மாவட்டத் தலைமையகத்தில் உள்ள நகராட்சிப் பகுதிகளிலும், மாதம் ஒன்றுக்கு ஒரு குடும்ப அட்டைக்கு 10 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. இதர நகராட்சி மற்றும் நகரிய பகுதிகளில், மாதம் ஒன்றுக்கு ஒரு குடும்ப அட்டைக்கு 6 லிட்டர் வீதமும், நகர்ப் பஞ்சாயத்துக்களில், மாதமொன்றுக்கு 5 லிட்டர் வீதமும், கிராமப்புறங்களில் மாதமொன்றுக்கு 3 லிட்டர் வீதமும் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. மாவட்டங்களுக்கு வழங்கப்படும் மண்ணெண்ணெய்யில், குடும்ப அட்டைக்கு வழங்கியது போக மீதமிருந்தால், மற்ற நகராட்சிப் பகுதிகளிலும், நகரியங்களிலும் குடும்ப அட்டைக்கு வழங்கப்படும் மண்ணெண்ணெய்யின் அளவை, 10 லிட்டர் வரையில் உயர்த்தி வழங்க, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

26. மாநிலங்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படுவதை ஆராய, மத்திய அரசு திரு. பி. சி. மாத்தூர் அவர்களைக் கொண்ட, ஒரு நபர் குழு ஒன்றினை நியமித்துள்ளது. அவர் 1985 மே மாதத்தில் தமிழ்நாட்டுக்கு வந்து இங்கு நியாயவிலைக் கடைகளில் மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்படுவதை ஆராய்ந்தார். நம் மாநிலத்தில் சீராக மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்படுவதையும், கிராமப்புறங்களிலும் மண்ணெண்ணெய் தட்டுப்பாடின்றி கிடைப்பதையும், மண்ணெண்ணெய் விநியோகத்தில் உள்ள குறைபாடுகளைக் கண்காணித்து அவற்றை நீக்க மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளையும் கண்டு அவர் பெரிதும் திருப்தி அடைந்துள்ளார்.





27. மத்திய அரசு பெட்ரோலியம் பொருள்களின் விலையை உயர்த்தியுள்ளதையடுத்து, சென்னையிலும், அதன் புறநகர்ப் பகுதிகளிலும் மண்ணெண்ணெய்யின் சில்லறை விலையை லிட்டர் ஒன்றுக்கு ரூ. 2-10 ஆக இவ்வரசு உயர்த்தியுள்ளது. மாவட்டங்களில் மண்ணெண்ணெய்யின் சில்லறை விற்பனை விலையை, எண்ணெய்க் கம்பெனிகளின் கிடங்குகளின் தூரத்தைப் பொறுத்து நிர்ணயம் செய்யுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

**சமையல் எண்ணெய்.**

28. குடும்ப அட்டைதாரர்களுக்கு பொது விநியோக முறையின் கீழ் வழங்கும் பொருட்டு, மத்திய அரசு இறக்குமதி செய்யப்பட்ட பாமோலின் எண்ணெய்யை மாநிலங்களுக்கு வழங்குகிறது. 1984 ஆம் ஆண்டு ஜனவரி மாதம், மத்திய அரசு இம்மாநிலத்திற்கு 7,000 டன்கள் பாமோலின் ஒதுக்கீடு செய்தது. பிப்ரவரி மாதம் 4,000 டன்கள் பாமோலினும், 3,500 டன்கள் சோயாபீன் எண்ணெய்யும் ஒதுக்கீடு செய்தது. மார்ச் மாதமும், ஏப்ரல் மாதமும் மாத மொன்றுக்கு 1,000 டன்கள் பாமோலினும், 6,500 டன்கள் சோயா பீன் எண்ணெய்யும் வழங்கப்பட்டது. இம்மாநிலத்தில் சோயா பீன் எண்ணெய்க்கு வரவேற்பு இல்லாததால் மத்திய அரசை இம் மாநிலத்திற்கு சோயாபீன் எண்ணெய் வழங்க வேண்டாம் என்று இந்த அரசு கேட்டுக் கொண்டது. 1984 ஆம் ஆண்டு மே மாதத்தி லிருந்து மத்திய அரசு இம்மாநிலத்திற்கு பாமோலினுடன் சூரிய காந்தி எண்ணெய்யை வழங்க ஆரம்பித்தது. 1984 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிய, மாதம் ஒன்றுக்கு 7,500 டன்கள் சமையல் எண்ணெய் இம்மாநிலத்திற்கு வழங்கப்பட்டு வந்தது. 1985 ஜனவரி முதல் இம்மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும் சமையல் எண்ணெய் வழங்குவது படிப்படியாகக் குறைக்கப்பட்டு, 1985 மே மாதத்தில் 3,600 டன்கள்தான் இம்மாநிலத்திற்கு வழங்கப்பட்டது.

29. இம்மாநிலத்தில் 118.88 இலட்சம் குடும்ப அட்டைகள் உள்ளன. ஒரு குடும்ப அட்டைக்கு மாதம் ஒன்றுக்கு ஒரு கிலோ சமையல் எண்ணெய் வழங்கினால்கூட இம்மாநிலத்திற்கு மாதம் ஒன்றுக்கு 11,888 டன்கள் சமையல் எண்ணெய் தேவைப்படும். மத்திய உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் அமைச்சருக்கு நம் மாநில உணவு அமைச்சர் எழுதிய கடிதத்தில் இந்த நிலைமை

எடுத்துக் கூறப்பட்டது. ஆனால் மத்திய அரசு அந்நியச்
செலாவணியில் ஏற்பட்டுள்ள இடர்பாடுகளின் காரணமாக
மாநிலங்களின் முழுத் தேவையையும் பூர்த்தி செய்ய இயலாது
என்று கூறியுள்ளது.

30. சென்னை நகரத்தில், குடும்ப அட்டைதாரர்களுக்கு டின்
களில் அடைக்கப்பட்ட பாமோலின் எண்ணெய்யும் நியாய விலைக்
கடைகள் மூலம் விற்கப்படுகிறது. இந்த டின்களில் அடைக்கப்
பட்ட எண்ணெய், மத்திய அரசின் நிறுவனமான இந்துஸ்தான்
தாவர எண்ணெய்க் கழகம் மூலமாக வழங்கப்படுகிறது. இம்
மாநிலத்துக்கு 1984 டிசம்பர் மாதம் முடிய, மாதமொன்றுக்கு
2,500 டன்கள் டின்களில் அடைக்கப்பட்ட சமையல் எண்ணெய்
வழங்கப்பட்டு வந்தது. இந்த ஒதுக்கீடு 1985 ஜனவரி, பிப்ரவரி
மாதங்களில் மாதமொன்றுக்கு 1,000 டன்களாகக் குறைக்கப்பட்டு
மார்ச், ஏப்ரல் மாதங்களில் முறையே 2,000 மற்றும் 2,400
டன்களாக உயர்த்தப்பட்டு, பின்னர் திரும்பவும் மே மாதத்தில்
1,200 டன்களாகக் குறைக்கப்பட்டுள்ளது.

31. 1984 ஆம் ஆண்டு மத்திய அரசு, இம்மாநிலத்திற்கு பொது
விநியோக முறையின் கீழ் விற்பனை செய்வதற்காக 1,050 டன்கள்
தேங்காய் எண்ணெய் ஒதுக்கீடு செய்தது. இந்த எண்ணெய்யை
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் பம்பாயிலுள்ள மாநில
வர்த்தகக் கழகத்திடமிருந்து எடுத்தது. இந்த எண்ணெய்யை
சென்னை நகரம் மற்றும் கோயம்புத்தூர், நீலகிரி மற்றும்
கன்னியாகுமரி மாவட்டங்களிலுள்ள குடும்ப அட்டைதாரர்
களுக்கு வழங்க ஆணையிடப்பட்டது. நிறமற்ற, மணமற்ற
சுத்திகரிக்கப்பட்டுள்ள இந்த எண்ணெய்க்கு இம்மாநிலத்தில்
வரவேற்பு இல்லை.

32. கிராமப்புறம், நகர்ப்புறம் என்ற பாகுபாடின்றி ஒரு குடும்ப
அட்டைக்கு மாதம் ஒன்றுக்கு 1 கிலோ சமையல் எண்ணெய் பொது
விநியோக முறையின் கீழ் வழங்கப்படுகிறது. போதுமான அளவு
எண்ணெய் கையிருப்பில் இருந்தால் மாதத்திற்கு 2 கிலோ
எண்ணெய் வழங்கப்படுகிறது. உதிரி பாமோலின் எண்ணெய்யின்
விலை கிலோவிற்கு 10.55 ரூபாய் என்றும், 2 கிலோ டின்னின் விலை
28.35 ரூபாய் என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவற்றைத் தவிர
இந்துஸ்தான் தாவர எண்ணெய்க் கழகம் ஒரு கிலோ பாலிதீன்
பைகளையும் அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் விலை ஒரு கிலோ
விற்கு 12-30 ரூபாய் ஆகும். இந்துஸ்தான் தாவர எண்ணெய்க்





கழகம், சமையல் எண்ணெய்யை டின் மற்றும் பைகளில் அடைப்
பதற்காக மதுரை, கோயம்புத்தூர் மற்றும் சேலத்தில் கிளை
களைத் திறக்க உள்ளது.

33. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சமையல் எண்
ணெய்யை மாநில வர்த்தகக் கழகத்திடமிருந்து எடுக்கிறது. இந்த
எண்ணெய் அது நடத்தும் நியாய விலைக் கடைகள் மூலமும்,
கூட்டுறவுச் சங்கங்களின் நியாயவிலைக் கடைகள் மூலமும் குடும்ப
அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. இந்த எண்
ணெய்யை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திலிருந்து
கூட்டுறவுத் துறையின் முதன்மைச் சங்கங்கள் பெறுகின்றனர்.
பின்னர் இந்த எண்ணெய் இணைச் சங்கங்களுக்கு வழங்கப்படு
கிறது. கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் நியாயவிலைக்
கடைகள் இந்த எண்ணெய்யை இணைச் சங்கங்களிடமிருந்து
பெற்று குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்குகின்றன. தமிழ்நாடு
நுகர்பொருள் வாணிபக் கழகத்தைப் பொறுத்த வரையில் சமை
யல் எண்ணெய்யை மாநில வர்த்தகக் கழகத்திடமிருந்து எடுப்
பதில் சிரமம் எதுவுமில்லை. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்
கழகம் சென்னை துறைமுகத்தில் உள்ள இரண்டு கொள்கலன்
களைத் தனியாரிடமிருந்து வாடகைக்கு எடுத்துள்ளது. இவற்றில்,
ஒரு கொள்கலன் 1,590 டன் கொள்திறனும், மற்றொன்று 1,662 டன்
கொள்திறனும் கொண்டவையாகும். இதைத் தவிர தமிழ்நாடு
நுகர்பொருள் வாணிபக் கழகம் மாவட்டங்களில் 13 கொள்கலன்
களைக் கட்டியுள்ளது. சென்னைத் துறைமுகத்தில் 3,000 டன்கள்
கொள்திறன் கொண்ட கொள்கலன் ஒன்று கட்டி முடியும் தரு
வாயில் உள்ளது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்,
சென்னைத் துறைமுகத்திலிருந்து மாவட்டங்களுக்கு சமையல்
எண்ணெய் எடுத்துச் செல்ல கொள்கலன்கள் கொண்ட 5 லாரி
களை அதன் சொந்தச் செலவில் வாங்கிக் கொள்ள அரசு அனுமதி
அளித்துள்ளது. ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் 3,000 டன்
கொள்திறன் கொண்ட ஒரு கொள்கலனை தூத்துக்குடித் துறை
முகத்தில் ரூபாய் 15 இலட்சம் செலவில் கட்ட அரசு உத்தேசித்
துள்ளது.

34. சமையல் எண்ணெய்யின் விலைகளைச் சீராக
வைத்திருக்கும் பொருட்டும், சமையல் எண்ணெய் விலை
ஏற்றத்தைக் கண்காணிக்கும் பொருட்டும், தலைமைச்
செயலாளரைத் தலைவராகக் கொண்ட குழு ஒன்று இவ்வரசால்
அமைக்கப்பட்டுள்ளது.

[1985 ஜூன் 17

இது போன்ற குழுக்கள் கோயம்புத்தூர் மாவட்டத்திலும், சேலம் மாவட்டத்திலும் அமைக்கப்பட்டுள்ளன. தாலுகா அளவிலும் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை தவிர ஒவ்வொரு நியாய விலைக் கடைக்கும் ஒரு விழிப்புப் பணிக்குழு அமைக்கப்பட்டுள்ளது. நகரப் பகுதிகளிலுள்ள கடைகளைப் பொறுத்தவரையில், ஒன்பது அங்கத்தினர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதில் இரண்டு அல்லது மூன்று உறுப்பினர்கள் மகளிராக இருக்க வேண்டும் என்றும், அந்தப் பகுதியில் வசிக்கும் மருத்துவர்கள், வழக்கறிஞர்கள் போன்றவர்களை அங்கத்தினர்களாக நியமிக்க வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது. கிராமப் பகுதிகளைப் பொறுத்தவரை குழுவில் ஐந்து அங்கத்தினர்கள் இருக்க வேண்டும் என்றும், அவற்றில் ஒருவர் மகளிராகவும், ஒருவர் அரசு அலுவலராகவும் மீதி மூன்று உறுப்பினர்கள் மருத்துவர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் பொது மக்களாக இருக்க வேண்டும் என்றும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. குழுவிலுள்ள அரசு அலுவலர், பண்டங்களை வழங்குமுன் இன்றியமையாப் பொருட்கள் கடைக்கு வந்து சேர்வதை கண்காணிக்க வேண்டும்.

41. நியாய விலைக் கடைகள் சரியான முறையில் இயங்குகின்றனவா, அவற்றில் குடும்ப அட்டைகளுக்கு உணவுப் பொருள்கள் வழங்கப்படுகின்றனவா அல்லது போலி பில்கள் தயாரித்து அப்பொருட்கள் குடும்ப அட்டைகளுக்கு வழங்காமல் தவறான வழியில் எடுத்துச் செல்லப்படுகிறதா என்பதைத் தீவிரமாக கண்காணிப்பதற்கு விழிப்புப் பணிக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு வட்டாட்சியர், ஒரு துணை வட்டாட்சியர் மற்றும் இதர அலுவலர்கள் கொண்ட ஒரு விழிப்புப் பணிக்குழு அமைக்கப்பட்டுள்ளது. சென்னை நகரைப் பொறுத்த வரையில், துணை ஆணையாளர் (நகரம்) அலுவலகத்தில், ஒரு கண்காணிப்பாளரும் ஐந்து தணிக்கை ஆய்வாளரும் கொண்ட நான்கு விழிப்புப் பணிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த விழிப்புப் பணிக் குழுக்கள், நியாய விலைக் கடைகளைத் தணிக்கைக்கு எடுத்துக் கொண்டு கணக்குகளைத் தீவிரமாக சோதனை செய்து, வழங்கப்பட்ட பொருட்கள் அனைத்தும் இருப்புக் கணக்கில் கொண்டு வரப்பட்டுள்ளனவா, குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்பட்டனவா என்பதைச் சோதனை செய்கின்றன. அது மட்டுமின்றி



1985 ஜூன் 17]

பொருட்கள் வழங்கப்பட்டதை குறிப்பிடும் பட்டியல், வீடு
தோறும் எடுத்துச் செல்லப்பட்டு அப்பொருட்களை உண்மையில்
குடும்ப அட்டைதாரர்கள் பெற்றனரா என்றும் விசாரணை
செய்யப்படுகிறது. இத்தகைய சோதனைகளில், உண்மையில்
பொருட்களை வழங்காமல், வழங்கியதாக போலிப் பட்டியல்கள்
தயாரித்த விபரங்கள் கண்டு பிடிக்கப்பட்டு, அதற்கு பொறுப்
பாளர்கள் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
1984-85-ஆம் ஆண்டு சென்னை நகரத்தில் 23,336 போலி
அட்டைகள் கண்டு பிடிக்கப்பட்டு நீக்கப்பட்டுள்ளன.
மாவட்டங்களில் 18,306 போலி அட்டைகள் கண்டு பிடிக்கப்பட்டு
நீக்கப்பட்டுள்ளன. போலிப் பட்டியல்கள் தயாரித்ததாகவும்;
கொடுக்க வேண்டியதற்கு அதிகமாக பொருட்கள் வழங்கிய
தாகவும், பிடிபட்ட அலுவலர்கள் மீது தகுந்த நடவடிக்கைகள்
எடுக்கப்படுகின்றன. விழிப்புப் பணிக்கு குழுக்கள்
ஆற்றுகின்ற பணியை ஒவ்வொரு மாதமும் மாவட்ட
ஆட்சித் தலைவர் ஆய்வு செய்து அந்த ஆய்வினை உணவுப்
பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை
ஆணையாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் அறிவுரை
வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு பெறப்படும் அறிக்கையை
உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்
துறை ஆணையாளர் மீது ஆய்வு செய்து மாவட்ட ஆட்சித்
தலைவர்களுக்கு அறிவுரைகளை வழங்கி வருகின்றார்.

42. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் ஆகியோர் அலுவலகங்களிலுள்ள முக்கிய அதிகாரிகளின் தொலைபேசி எண்களை அரசு பத்திரிகைகளில் விளம்பரம் செய்துள்ளது. பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பண்டங்கள் கிடைக்காவிட்டாலோ அல்லது ஒழுங்கீனங்கள் ஏதேனும் தென்பட்டாலோ, இந்த அதிகாரிகளிடம் தொலைபேசி மூலமாகத் தெரிவிக்கலாம். இவை தவிர உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் அலுவலகத்தில் இதற்காக சிறப்புத் தொலைபேசி ஒன்று (எண் 842807) வைக்கப்பட்டுள்ளது. இங்கு பெறப்படும்

இவ்வாணையின் கீழ் அடங்கும். நெல் மற்றும் அரிசி கொள்முதல் செய்வதற்கென தனிக்கட்டுப்பாடு ஆணை வெளியிடலாம் என்று மைய அரசு கருத்து தெரிவித்தது. எனவே, நெல் மற்றும் அரிசி கொள்முதல் சம்பந்தமாக 1984-ம் ஆண்டு நெல் மற்றும் அரிசி கொள்முதல் (லெவி) ஆணை என்ற தனி கட்டுப்பாடு ஆணை வெளியிடப்பட்டது. இவ்வாணை 5—6—1984 முதல் அமுலுக்கு வந்துள்ளது.

49. 1984 ஆம் ஆண்டு இன்றியமையா வியாபாரப் பொருட்கள் (வர்த்தக ஒழுங்குமுறை) ஆணையிலிருந்து மிளகாய் வற்றல், புளி, வெல்லம் மற்றும் சமையல் எண்ணெய்கள் ஆகியவற்றிற்கு விலக்களிக்க வேண்டும் என்ற வியாபாரிகளின் கோரிக்கை பெறப்பட்டுள்ளது. இவைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன. இதற்கிடையே இப்பொருட்களுக்கு உரிமங்கள் வாங்க 30-6-1985 வரை காலக்கெடு வழங்கப்பட்டிருக்கிறது.

## VII உணவுப் பொருள் வழங்கு துறையின் குற்றப் புலனாய்வுத் துறை.

50. இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தையும் அதன் கீழ் பிறப்பிக்கப்பட்ட பல்வேறு ஆணைகளையும் செயல்படுத்தும் பொறுப்பு உணவுப் பொருள் வழங்கு துறை குற்றப் புலனாய்வுப் பிரிவைச் சார்ந்ததாகும். இப்பிரிவு காவல் துறை துணைத் தலைவர் தலைமையின்கீழ் 3 காவல் துறை கண்காணிப்பாளர்களையும், 8 காவல்துறை துணைக் கண்காணிப்பாளர்களையும் கொண்டுள்ளது. தமிழ்நாட்டு சிறப்பு காவல் படைப்பிரிவு அல்லது மாவட்ட ஆயுதப் படையின் உதவியை சுற்றுக் காவல் புரிவதற்கு இப்பிரிவு அவ்வப்போது பெற்றுக் கொள்கிறது. இன்றியமையாப் பொருட்களின் பதுக்கலைத் தடுப்பதும், நெல், அரிசி, சர்க்கரை போன்ற பொருட்கள், பற்றாக்குறை மாநிலங்களுக்கு கடத்தப்படுவதை தடுப்பதும் இப்பிரிவின் முக்கியமான அமுல் பணியாகும். கலப்படம் இல்லாத, தரமான உணவுப் பொருட்களைப் பொது மக்களுக்கு வழங்குவதை உறுதிப் படுத்துவதும் இவர்களுடைய பணியாகும். இப்பிரிவு எடுத்த கடுமையான நடவடிக்கைகளின் காரணமாக பொது விநியோக முறை நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. விலைகளும் கட்டுப்பாட்டிற்குள் உள்ளன. சட்டம் மற்றும் விதிகளை மீறிய பெரிய குற்றங்கள் ஏதும் புலப்படவில்லை.



51. இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் கீழும், அச்
சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்ட கட்டுப்பாடு ஆணைகளின்
கீழும், பல்வேறு குற்றங்களுக்காக, 1984-85 ஆம் நிதியாண்டில்
மாநிலம் முழுவதும் இப்பிரிவால் 1,469 வழக்குகள் பதிவு செய்யப்
பட்டன. ரூ. 1,13,79,294 மதிப்புள்ள பொருட்கள் இவ் வழக்கு
களின் காரணமாக கைப்பற்றப்பட்டன. இன்றியமையாப்
பொருட்கள் சட்டம் விதி 6 (எ) இன் கீழ் வழங்கப்பட்டுள்ள
அதிகாரத்தைப் பயன்படுத்தி மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
ரூ. 45.32 லட்சம் மதிப்புள்ள சொத்துக்களை பறிமுதல் செய்து
உள்ளனர். 1983-84 ஆம் ஆண்டில் பறிமுதல் செய்யப்பட்ட
பொருட்களின் மதிப்பு ரூ. 35.40 லட்சம் ஆகும். 1984-85 ஆம்
ஆண்டு செய்யப்பட்ட பறிமுதல் அவ்வாண்டில் கைப்பற்றப்பட்ட
பொருட்களின் மொத்த மதிப்பில் 39 விழுக்காடு ஆகும்.

52. 1984-85 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 1,469 வழக்கு
களில் 506 வழக்குகள் இன்றியமையாப் பொருட்கள் கடத்தல்
குற்றங்களைச் சார்ந்ததாகும். 417 வழக்குகள் பதுக்கல்
குற்றங்களைச் சார்ந்ததாகும். 14 வழக்குகள் சிமெண்ட் கலப்படம்
குற்றங்களைச் சார்ந்ததாகும். எஞ்சிய வழக்குகள் பிற
குற்றங்களுக்காக பதிவு செய்யப்பட்டவை ஆகும். 1984-85 ஆம்
ஆண்டில் கடத்தலில் ஈடுபடுத்தப்பட்ட 397 வாகனங்கள், இன்றி
யமையாப் பொருட்கள் சட்டத்தின் விதிகளின்படி பிடித்து
வைக்கப்பட்டு பின்னர் நீதிமன்றங்கள் அல்லது மாவட்ட ஆட்சித்
தலைவர்களின் ஆணைகளின்படி விடுவிக்கப்பட்டன.

53. வெளிச் சந்தை இருப்புக்களை பொறுத்து, பதுக்கல்,
கடத்தல் எந்த அளவு நடைபெறுகிறது என்பதை இன்றி
யமையாப் பொருட்களின் விலைகளில் ஏற்படும் மாற்றங்கள்
தெரியப்படுத்தும். ஆதலால் 1984-85-ல் இன்றியமையாப்
பொருட்களின் விலைகளை இப்பிரிவு உன்னிப்பாக கண்காணித்து
வந்தது. அவ்வாறு விலைகளை நிலையாக கண்காணிப்பதின்
மூலம் பல்வேறு இன்றியமையாப் பொருட்களின் விலைகள்
சீராக இருந்தன என்பதை இக்காலக் கட்டத்தில் நிலவிய
விலைகள் உறுதிப்படுத்துகின்றன.

54. வழக்குகளை விரைவாக முடிவு செய்வதற்கும், அதன்
மூலம் எதிர்கால குற்றவாளிகளை அச்சமூட்டி தடுத்து நிறுத்து
வதற்கும் ஏதுவாக, 6 நகரங்களில் இன்றியமையாப் பொருட்கள்
சட்டம் 1955-ன் கீழ் பதிவு செய்த குற்றங்களை விசாரிப்பதற்
காக சிறப்பு நீதிமன்றங்கள் அரசால் அமைக்கப்பட்டுள்ளன.

[1985 ஜூன் 17

55. இவ்வழக்குகளை நடத்துவதற்கு சிறப்பு அரசு குற்ற வியல் வழக்கறிஞர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## VIII விலைவாசி நிலைமை.

**அரிசி.**

56. அரிசியின் சில்லறை விற்பனை விலையில் 1984—85-ம் ஆண்டில் குறிப்பிடத்தக்க விலையேற்றம் இல்லை. பருவத்திற் கேற்ப ஏற்றத்தாழ்வுகள் மட்டுமே காணப்பட்டன. ஏப்ரல் 1984-ல் கிலோ ரூ. 3.21 ஆக இருந்த சாதாரண ரக புழுங்கல் அரிசி அக்டோபர் 1984-ல் கிலோ ரூ. 2.96 ஆகவும், அதே நேரத்தில் கிலோ ரூ. 3.54 ஆக இருந்த பச்சரிசி கிலோ ரூ. 3.21 ஆகவும் குறைந்து விட்டன. ஆனாலும் ஏப்ரல் 1985-ல் புழுங்கல் அரிசியின் விலை கிலோ ரூ. 3.18-க்கும் பச்சரிசியின் விலை கிலோ ரூ. 3.35-க்கு மாக ஏற்றம் கண்டது. பிப்ரவரி 1985-ல் சன்ன ரக அரிசியின் விலை மிகவும் குறைந்து காணப்பட்டது. புழுங்கல் அரிசி கிலோ ஒன்றிற்கு ரூ. 3.45 ஆகவும், பச்சரிசியின் விலை கிலோ ரூ. 3.69 ஆகவும் இருந்தது. ஆனாலும் ஏப்ரல், 1985-ல் இந்த ரக அரிசிகளின் விலைகள் ஏப்ரல், 1984-ன் விலைகள் அளவிற்கு உயர்ந்துவிட்டன.

**புஞ்சை தானியங்கள்.**

57. 1984—85-ஆம் ஆண்டில், புஞ்சை தானியங்களின் விலைகளில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏதும் நிகழவில்லை.

**பருப்பு வகைகள்.**

58. தமிழ்நாட்டில் பருப்பு வகைகளின் மொத்த உற்பத்தி, மாநிலத்தின் தேவையைச் சமாளிப்பதற்குப் போதுமானதாக இல்லை. எனவே, ஆந்திரப் பிரதேசம், குஜராத், மத்தியப் பிரதேசம், இராஜஸ்தான் மற்றும் உத்திரப்பிரதேசம் ஆகிய உபரி மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது. தமிழகத்தில் பருப்பு வகைகளின் விலையில் ஏற்பட்ட ஏற்ற இறக்கங்கள், இம்மாநிலங்களிலிருந்த விலைவாசிக்கு ஒத்ததாகவே இருந்தன.

59. துவரம் பருப்பைப் பொறுத்தவரையில், ஏப்ரல் 1984-ல் கிலோ ரூ. 7.24 ஆக இருந்த விலை அக்டோபர் மாதத்தில் ரூ. 7.58 ஆக உயர்வு கண்டு, ஏப்ரல் 1985-ல் ரூ. 6.21க்கு மெதுவாக இறக்கம் கண்டது.



1985 ஜூன் 17]

60. இதே காலத்தில் உளுந்தம்பருப்பு ஓரே சீரான விலையில் இருந்தது. ஏப்ரல் 1985-ல் இதன் மிகக் குறைந்த விலை ரூ. 7.15 ஆகவும், ஜனவரி 1985-ல் இதன் மிக உயர்ந்த விலை ரூ. 7.62 ஆகவும் இருந்தது.

61. ஏப்ரல் 1984-ல் கிலோ ரூ. 6.71 ஆக இருந்த பச்சைப் பருப்பின் விலை மிகச் சீரான ஏற்றம் கண்டு, மார்ச் 1985-ல் கிலோ ரூ. 7.76 ஆக இருந்தது. ஏப்ரல் 1984-ல் கிலோ ரூ. 5-21-க்கு விற்ற கடலைப் பருப்பின் சில்லறை விலை, அக்டோபர் 1984-ல் கிலோ 7.21-க்கும் ஏற்றம் கண்டது. அதன் பின்னர், இதன் விலையில் இறக்கம் ஏற்பட்டு ஏப்ரல் 1985 வாக்கில் இதன் சில்லறை விலை கிலோ ரூ. 6.77 ஆக இறங்கி விட்டது.

**சமையல் எண்ணெய் வகைகள்.**

**கடலை எண்ணெய்.**

62. ஏப்ரல் 1984-ல், கடலை எண்ணெயின் சில்லறை விலை கிலோ ரூ. 16.76 ஆக இருந்தது. இது ஜூலை 1984-ல் கிலோ ரூ. 18.83 ஆக ஏற்றம் கண்டது. பின்னர், ஆகஸ்டு, 1984-லிருந்து கடலை எண்ணெய்யின் விலையில் இறக்கம் ஏற்படத் தொடங்கி மே, 1985-ல் இதன் சில்லறை விலை கிலோ ரூ. 14.63-க்கு இறங்கி விட்டது. கோடைகால நிலக்கடலையின் சாக்குவரத்து மிகவும் ஊக்கமூட்டுவதாக இருப்பதால், அடுத்த மூன்று மாத காலத்தில் கடலை எண்ணெய்யின் சில்லறை விலையில் குறிப்பிடத்தக்க ஏற்றமெதுவும் இருக்காது என நம்பப்படுகிறது.

**நல்லெண்ணெய்.**

63. ஏப்ரல் 1984-ல் கிலோ ரூ. 21.13 ஆக இருந்த நல்லெண்ணெய்யின் விலை சீரான இறக்கம் கண்டு, மே 1985-ல் கிலோ ரூ. 17.10-க்கு இறங்கிவிட்டது.

**தேங்காய் எண்ணெய்.**

64. பக்கத்து மாநிலமான கேரளத்தில் அபரிமித விளைச்சல் காரணமாக 1984-ல் கிலோ ரூ. 41.00க்கு விற்ற தேங்காய் எண்ணெய்யின் சில்லறை விலை மே 1985-ல் ரூ. 26.43-க்கு வீழ்ச்சி கண்டது.

**மிளகாய் வற்றல்.**

65. ஏப்ரல் 1984-ல் கிலோ ரூ. 11.41 ஆக இருந்த மிளகாய் வற்றலின் சில்லறை விலை படிப்படியாக ஏற்றம் கண்டு நவம்பர் 1984-ல் கிலோ ரூ. 23.72 ஆக இருந்தது. அதன் பின்னர், இதன் விலையில் இறக்கம் ஏற்பட்டு பிப்ரவரி 1985-ல் மிளகாய் வற்றலின் சில்லறை விலை கிலோ ரூ. 14.28 ஆகக் குறைந்து விட்டது. ஆனாலும், வட மாநிலங்களின் மிகைத் தேவை காரணமாக மிளகாய் வற்றலின் சில்லறைவிலையில் பிப்ரவரி 1985-லிருந்து ஏற்றம் காணப்பட்டு வருகிறது.

**புளி.**

66. புளியைப் பொறுத்தவரையில் ஏப்ரல் 1984-ல் கிலோ ரூ. 10-30-க்கு விற்றது. டிசம்பர் 1984-ல் கிலோ ரூ. 14.31-க்கு ஏற்றம் கண்டது. ஆனாலும் இதற்குப் பின்னர், புளியின் விலை குறையத் தொடங்கி ஏப்ரல் 1985 வாக்கில் இதன் விலை கிலோ ரூ. 7.50-க்கு இறக்கம் கண்டது.

**கொத்தமல்லி (தனியா)**

67. கொத்தமல்லியைப்பொறுத்தவரையில் ஏப்ரல் 1984-லிருந்து பிப்ரவரி 1985 வரையில் மிகச் சீராக கிலோ ரூ. 7.50க்கு விற்று வந்த கொத்தமல்லியின் சில்லறை விலையில் மார்ச் 1985 வாக்கில் ஏற்றம் தென்பட்டது. இதுவே பின்னர் ஏப்ரல் 1985-ல் கிலோ ரூ. 9.21-க்கு ஏற்றம் கண்டது.

**வெளிச்சந்தை சர்க்கரை.**

68. ஏப்ரல் 1974-ல் வெளிச் சந்தை சர்க்கரை விலை கிலோ ரூ. 5.02 ஆக நிலவி வந்தது. அதே ஆண்டு மே மாதத்தில் இதன் சில்லறை விலை ரூ. 5.84 ஆக ஏற்றம் கண்டு, பின்னர், படிப்படியாக இறக்கம் கண்டது. செப்டம்பர் 1984-ல் வெளிச் சந்தையின் சர்க்கரையின் சில்லறை விலை கிலோ ரூ. 4.88 மட்டுமே ஆனாலும், இவ்விலை நீண்ட நாள் நீடிக்கவில்லை. 1985 ஏப்ரல், மே மாதங்களில் வெளிச்சந்தை சர்க்கரை விலையில் ஏற்றம் தென்படத் தொடங்கியது. ஏப்ரல் 1985-ல் கிலோ ரூ. 5.72 ஆக இருந்த வெளிச்சந்தை சக்கரை விலை ஏற்றம் கண்டு, மே 1985-ல் கிலோ ரூ. 5.80 ஆனது. இந்திய அரசும், தமிழக அரசும், வெளிச்சந்தை சர்க்கரை விலையை ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. ஜூன் 1985-ல் கூடுதல் வெளிச் சர்க்கரை 3,402 மெட்ரிக் டன்களும், வெளிச் சந்தை சர்க்கரை 4,993 மெட்ரிக் டன்களும் வழங்கப்பட்டுள்ளன.



**கண்காணித்தலும், கட்டுப்படுத்தலும்:**

69. அனைத்து இன்றியமையாப் பண்டங்களின் விலைகளும் தினந்தோறும் அரசு மட்டத்தில் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு வாரமும், நியாய விலையில் கிடைக்கும் பொருட்களைத் தவிர, காய்கறிகள் உட்பட மற்ற அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் பரிசீலனை செய்து அறிக்கையினை அரசுக்கு அனுப்பி வைக்கின்றார். இன்றியமையாப் பொருட்களின் விலைகளில் ஏற்றம் காணப்படும் போது விலைகளை ஒரு கட்டுக்குள் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. 1984-85 ஆம் ஆண்டில் சர்க்கரையின் விலையினைக் கட்டுப்படுத்த வெளிச் சந்தையில் சர்க்கரையினை வாங்கும் நடவடிக்கையினை அரசு மேற்கொண்டது. இதன்படி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 7,000 டன் சர்க்கரையை வெளிச் சந்தையில் வாங்கியது சர்க்கரையின் விலையை ஒரு கட்டுக்குள் கொண்டுவர உதவியது. அரசால் பொது விநியோக திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட சமையல் எண்ணெய் உடனுக்குடன் எடுத்து விநியோகிக்கப்பட்டது. இது எண்ணெய் விலையினை கூடுமான வரை ஒரே சீராக வைத்துக் கொள்ள உதவியது.

70. மிளகாய் மற்றும் புளியைப் பொறுத்த வரையில் அந்தப் பொருட்களின் வர்த்தக சங்கத்தினரை டிசம்பர் 1984-ல் அரசு அழைத்து பேச்சு வார்த்தை நடத்தி விலைவாசியைக் கட்டுப் படுத்த நடவடிக்கை எடுத்தது. மேலும் விலையில் ஏற்றம் காணப்படும் பொழுதெல்லாம் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின்கீழ் இயங்கும் உணவுப் பொருள் வழங்கு துறை குற்றப் புலனாய்வுப் பிரிவின் மூலம் கவனித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. உணவுப் பொருள் வழங்கு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையில் (சி.ஐ.டி.) புலனாய்வுப் பிரிவினரால் பலவகைக் கட்டுப்பாட்டு ஆணைகளுக்கிணங்க எடுக்கப்படும் கடுமையான நடவடிக்கைகளாலும் இன்றியமையாப் பொருட்களின் விலையை ஒரே சீராக வைத்துக் கொள்ள முடிகிறது. இன்றியமையாப் பொருட்களின் விலைகளைப் பற்றிய அடிப்படை விவரங்களை பரிசீலிப்பதற்காக ஒரு மின்னணுக் கருவி (Computor) வாங்குவது பற்றிய கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

## XI நுகர்வோர் பாதுகாப்பு.

71. உற்பத்தியாளர்கள் மற்றும் வணிகர்களைப் பொறுத்த மட்டில் நுகர்வோரின் உரிமைகளை எடுத்துரைப்பதும், செயல்படுத்துவதும், நுகர்வோர் பாதுகாப்பு இயக்கத்தின் குறிக்கோளாகும். நுகர்வோர் பாதுகாப்பு இயக்கத்திற்கு ஊக்கமளிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. தலைமைச் செயலகத்தில் இயங்கி வரும் உணவுத் துறை, நுகர்வோர் பாதுகாப்புப் பணியினையும் கவனித்து வருவதால், இத்துறையின் பெயர் "உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை" என்று மாற்றம் செய்யப்பட்டது. துறைத் தலைமை அளவில், உணவுப் பொருள் வழங்கு துறையின் ஆணையாளர், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டார். ஒவ்வொரு மாவட்ட அளவிலும் நுகர்வோர் பாதுகாப்பிற்கு அந்தந்த மாவட்டத்தின் மாவட்ட விநியோக அதிகாரி பொறுப்பாக்கப்பட்டார். நுகர்வோர் பாதுகாப்பிற்கு சட்ட பூர்வமான ஆதரவு அளிக்கும் வகையில், மத்தியப் பிரதேச நுகர்வோர் பாதுகாப்பு சட்ட மூன் வடிவு, 1984 மற்றும் டெல்லி நுகர்வோர் (வாங்குதல்) பூசல் அவை சட்ட முன் வடிவு, 1984, ஆகியவைகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. தேவை ஏற்பட்டால் அதற்கான சட்டங்கள் தகுந்த நேரத்தில் இயற்றப்படும். மைய அரசின் உணவுப் பொருள் வழங்குதுறை அமைச்சகம், தன்னிச்சையாக செயல்படும் இயக்கங்களுக்கு நிதி உதவி அளிக்கும்போது, அவைகள் பின்பற்றத்தக்க வழி முறைகள் எல்லா மாவட்ட ஆட்சியாளர்களுக்கும் தெரிவிக்கப்பட்டு, இவைகளை விளம்பரப்படுத்துமாறு அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

72. கலப்படம் செய்வதை கண்டுபிடிக்கும் பொருட்டு, பல்பொருள் பண்டக சாலைகளுக்கும் சிற்றங்காடிகளுக்கும், துரித பகுப்பாய்வுப் பெட்டிகள் பெரும் அளவில் வழங்க அரசு பரிசீலித்து வருகிறது. ஒரு உணவுப் பொருள் கலப்படம் செய்யப்பட்டுள்ளதா என்பதை விளக்கும் ஒரு சிறிய விளக்கப் புத்தகமும் இந்த துரித பகுப்பாய்வுப் பெட்டிகளுடன் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பொது மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சி ஏற்படுத்த இப்புத்தகங்கள் மலிவு விலையில் விநியோகம் செய்யப்படும். நுகர்வோர் பாதுகாப்பிற்காக,



கூட்டுறவுத் துறையின்கீழ் தற்சமயம் இயங்கும் 9 தரப் பரிசோதனைச் சாலைகளில் நுகர்வோருக்காக 26 பொருட்களை, குறைந்த கட்டணத்தில் பரிசோதனை செய்ய அரசு அனுமதி அளித்துள்ளது. இதுபோன்று மேலும் 7 தரப் பரிசோதனைச் சாலைகள் கூட்டுறவுத் துறையின்கீழ் அமைக்கப்பட உள்ளன.

## X அரிசி அரைவை ஆலைகளை நவீனமயமாக்குதல்.

73. மத்திய அரசு நெல்லில் இருந்து கூடுதல் அரிசி கண்டுமுதல் மற்றும் சமையல் எண்ணெய் கிடைக்கக்கூடிய நல்ல தரமுள்ள தவிடு பெறுவதற்காக 1970 ஆம் ஆண்டு அரிசி அரைவை ஆலைகளை நவீனமயமாக்கும் திட்டத்தினை கொண்டு வந்தது. தமிழ் நாடு அரசு இத்திட்டத்தினை நிறைவேற்றி வருகிறது.

74. ஆலைச் சொந்தக்காரர்களின் முறையீடுகளின் பேரில், 12—9—1984 வரை அமைக்கப்பட்டுள்ள எல்லா ஒற்றை ஹல்லர் அரிசி ஆலைகளையும், நவீனப்படுத்துவதிலிருந்து மத்திய அரசு விலக்களித்துள்ளது. இம்மாநிலத்தில் சுமார் 15,000 ஒற்றை ஹல்லர் அரிசி ஆலைகள் இந்த விலக்களிப்பின்கீழ் வருகின்றன. 13—9—1984 ஆம் தேதி அல்லது அதற்கு பின்பு அமைக்கப்படும் அரிசி ஆலைகளுக்கு இந்த விலக்களிப்பு பொருந்தாது.

75. இந்த மாநிலத்தில் 17,581 அரிசி ஆலைகள் உள்ளன. அவற்றில் 16,952 ஒற்றை ஹல்லர் அரிசி ஆலைகள். மீதமுள்ளவை ஹல்லர், ஹல்லர் மற்றும் ஷெல்லர், ஷெல்லர் வகை அரிசி ஆலையைச் சேர்ந்தவை. விலக்கு அளிக்கப்பட்ட ஆலைகளைத் தவிர மற்ற எல்லா வகை அரிசி ஆலைகளையும் நவீனப்படுத்த 31—7—1985 வரை காலக்கெடு உள்ளது. இதுவரை, 1,916 ஒற்றை ஹல்லர் அரிசி ஆலைகளும், 503 ஹல்லர் மற்றும் ஷெல்லர், ஒன்றுக்கு மேற்பட்ட ஹல்லர் மற்றும் ஷெல்லர் வகை ஆலைகளும் நவீனப்படுத்தப்பட்டுள்ளன.

76. நவீன மயமாக்கும் ஒற்றை ஹல்லர் வகை அரிசி ஆலை திட்டத்தினை ஊக்குவிக்கும் பொருட்டு மத்திய அரசு ஒரு முன்னோடித் திட்டத்தினை அறிவித்துள்ளது. அத்திட்டத்தின்

கீழ் இம்மாநிலத்திற்கு கீழே குறிப்பிட்டுள்ள திட்டங்களை மத்திய அரசு அனுமதித்துள்ளது.

| திட்டம். (1) | வழங்கப்பட்டுள்ள தொகை. (2) (ரூபாய்) |
|---|---|
| 1. ரூ. 10,000 வீதம் 15 செய்முறைப் பிரிவுகள் அமைக்க | 1,50,000 |
| 2. ரூ. 10,000 வீதம் 10 கருத்தரங்குகள் நடத்த | 1,00,000 |
| 3. 450 அரிசி ஆலைகளுக்கு மானியம் வழங்குவது | 22,50,000 |
| மொத்தம் | 25,00,000 |

77. மானியத் தொகையை மத்திய அரசும் மாநில அரசும் சமமாக ஏற்கும். மீதமுள்ள செலவுத் தொகையை அரிசி அரவை ஆலை உரிமையாளர்கள் தங்கள் சொந்தப் பொறுப்பில் ஏற்க வேண்டும், அல்லது வங்கி அல்லது பிற நிறுவனங்கள் மூலம் நிதியுதவி பெற்றுக் கொள்ள வேண்டும்.

78. மத்திய அரசு இதுவரை 11 செய்முறைப் பிரிவுகளை அமைக்கவும், 10 கருத்தரங்குகள் நடத்தவும் ரூ. 2,10,000 வழங்கியுள்ளது. இத்திட்டத்தைச் செயலாக்க, குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அரிசி ஆலைகளை நவீனப்படுத்துவதால் ஏற்படும் பயன்கள் பற்றி கருத்தரங்குகளில் ஆலைச் சொந்தக்காரர்களுக்கு விளக்கப்படுகின்றது. 1983-84-ல் 5 கருத்தரங்குகளும், 1984-85-ல் தஞ்சாவூர், சேலம், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் மூன்று கருத்தரங்குகளும் நடத்தப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள இரண்டு கருத்தரங்குகள் திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் விரைவில் நடக்க இருக்கின்றன.

79. புதிய அரிசி ஆலைகள் அமைக்கவும், இயங்கா அரிசி ஆலையை மீண்டும் இயக்கவும், 1958 ஆம் வருட அரிசி அரவைத் தொழில் முறைப்படுத்தல் சட்டம் மற்றும் விதியின்கீழ் அரசு அளவில் அனுமதி வழங்கப்படுகிறது. காலதாமதத்தைத் தவிர்க்கவும், மனுதாரர்களுக்கு ஏற்படும் இன்னல்களைத் தீர்க்கவும் உரிமம் கோரி பெறப்படும் மனுக்களின்மீது முடிவான ஆணையிட இதுசம்பந்தப்பட்ட அனைத்து அலுவலர்களுக்கும் காலவரம்பினை அரசு நிர்ணயித்துள்ளது.





80. இயங்கா அரிசி ஆலையை மீண்டும் இயக்க, அரிசி அரைவைத் தொழில் முறைப்படுத்தல் சட்டத்தின் கீழ் உரிமம் வழங்கும் அதிகாரத்தை மாவட்ட வருவாய் அதிகாரி, மாவட்ட கூடுதல் ஆட்சியர்களுக்கு வழங்கும்படி மத்திய அரசை கேட்டுக் கொள்வது பற்றிய கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

## XI தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்.

81. தமிழக அரசுக்கு முழுவதும் சொந்தமான தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம், நெல் கொள்முதல் செய்தல், கொள்முதல் செய்த நெல்லை அரிசியாக்கி, அதை கிட்டங்களில் சேமித்து வைத்தல், மற்றும் இன்றியாமையாப் பொருட்களை பொதுவிநியோகத்திற்கு வழங்குதல் ஆகிய பணிகளில் ஈடுபட்டுள்ளது. இக்கழகம் 1972 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதற் கொண்டு செயல்படத் துவங்கியதிலிருந்து, உணவுப் பொருள் வழங்கு துறையிடமிருந்து மேற்கண்ட பணிகளைச் செய்து வருகிறது. இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத் தொகை ரூ. 20 கோடி. செலுத்தப்பட்ட பங்கு மூலதனத் தொகை ரூ. 19.89 கோடி. இக்கழகத்தின் மொத்த ஆண்டு விற்பனை சுமார் ரூ. 450 கோடியை எட்டிவிட்டதால், இக் கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத் தொகையான ரூ. 20 கோடியை ரூ. 30 கோடியாக உயர்த்துவதற்கான கருத்துரு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

82. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் தமிழக அரசின் முகவராக இருந்து நெல், அரிசியை நேரடிக் கொள்முதல் திட்டத்திலும், லெவித் திட்டத்திலும் கொள்முதல் செய்து வருகிறது. இக்கழகம், பொது விநியோகமுறை மற்றும் அரசின் பல்வேறு நலத் திட்டங்களுக்காகத் தேவைப்படும் அரிசியை 1984-85 ஆம் ஆண்டில் தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் திருச்சிராப் பள்ளி, புதுக்கோட்டை, தென் ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களின் சில வட்டங்களிலும் ஏற்படுத்திய சுமார் 680 நேரடிக் கொள்முதல் நிலையங்கள் மற்றும் 147 லெவி சேகரிப்பு நிலையங்கள் மூலமாகக்

கொள்முதல் செய்துள்ளது. இக்கழகம் 1984 ஆம் ஆண்டு சம்பா மற்றும் குறுவைப் பட்டங்களில் 10.55 லட்சம் டன்கள் மொத்த கொள்முதல் செய்துள்ளது.

83. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திடம் 3.20 இலட்சம் மெட்ரிக் டன்கள் கொள்ளளவு கொண்ட விஞ்ஞான ரீதியிலான சேமிப்புக் கிடங்கு வசதி உள்ளது. 62,900 டன்கள் மொத்த கொள்திறன் கொண்ட 37 கிட்டங்கிகளை ரூ. 314 இலட்சம் செலவில் கட்டுவதற்கான பணி நடைபெற்று வருகிறது.

84. இக்கழகம், சாதாரணமாக 8 இலட்சம் டன்கள் இன்றியமையாப் பொருட்களை இருப்பு வைத்துக்கொள்கிறது. எனவே இக்கழகம் தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம் மற்றும் மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனம் ஆகியவற்றின் சேமிப்புக் கிடங்கு வசதிகளை வாடகை கொடுத்து பயன்படுத்திக் கொள்கிறது. இதுவன்றி தனியார் கிட்டங்கிகளையும் பொருட்களை சேமித்து வைக்க வாடகைக்கு இக்கழகம் எடுத்துக் கொள்கிறது.

85. 1984-85 ஆம் ஆண்டு சம்பாப் பட்டத்தில், கணிசமான அளவில் அரிசி மற்றும் நெல் கொள்முதல் இருந்ததால், முற்றிலும் மூடப்பட்ட கிட்டங்கி வசதி போதிய அளவில் கிடைக்கவில்லை. இப்பெருமளவிலான கொள்முதல் காரணத்தினால் ஏற்பட்ட சூழ்நிலையை சமாளிக்க வேண்டி, திறந்த வெளி நெல் சேமிப்பை நாட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதனால் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் திறந்த வெளிகளில் உணவுப் பொருட்களை சேமித்து வைத்தது. 1984 ஆம் ஆண்டு குறுவை மற்றும் 1985 ஆம் ஆண்டு சம்பாப் பட்டங்களில் இக்கழகம் சுமார் 3 இலட்சம் டன்கள் நெல்லை திறந்தவெளி சேமிப்பு முறையில் வைக்க வேண்டியிருந்தது.

86. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் கொள்முதல் செய்யும் நெல்லை அரைத்து அரிசியாக்க வேண்டியுள்ளது. இக்கழகத்திடம் ஆண்டுக்கு 1.50 இலட்சம் டன்கள் அரைவைத் திறனுள்ள 13 நவீன அரிசி ஆலைகள் உள்ளன. இக்கழகம் 1984-85 ஆம் ஆண்டில் மொத்தம் 1.57 இலட்சம் டன்கள் நெல்லை அரைத்துள்ளது. இந்த நவீன அரிசி ஆலைகளில் 1977 ஆம் ஆண்டுவரை எண்ணெய்யைப் பயன்படுத்தி வந்த உலைக் கலன்களை மாற்றி உமியைக் கொண்டு செயல்படும் உலைக் கலன்கள் நிறுவப்பட்டன. இதன் காரணமாக இக்கழகத்திற்கு சுமார் ரூ. 4.29 கோடி சேமிப்பு கிடைத்துள்ளது.



87. தஞ்சாவூர் மாவட்டத்தில், சீர்காழி வட்டத்திலுள்ள எருக்கூரில், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், ரூ. 2 கோடி செலவில் நாளொன்றுக்கு 100 டன்கள் அரைவைத் திறன் கொண்ட ஒரு நவீன அரிசி ஆலை மற்றும் அரிசித் தவிட்டிலிருந்து சமையல் எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலையும் நிறுவ அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கான பணி ஏற்கெனவேயே துவங்கப்பெற்று கட்டிடவேலை நடைபெற்று வருகிறது. சமையலுக்குப் பயன்படுத்தத்தக்க அரிசித் தவிட்டெண்ணெய் தயாரிப்பதற்கான தொழிற்சாலையை அமைப்பதே இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும்.

88. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் சாதாரணமாக ஓராண்டில் ஏறத்தாழ 10 இலட்சம் மெட்ரிக் டன்கள் நெல்லை கொள்முதல் செய்கிறது. இந்நெல் அனைத்தும் பொது விநியோகமுறையின் தேவையை நிறைவு செய்வதற்காக அரிசியாக மாற்றப்பட வேண்டும். இக்கழகத்திடம் தற்போது இருந்து வரும் 13 அரிசி ஆலைகளும் ஆண்டுக்கு ஏறத்தாழ 1.5 இலட்சம் மெட்ரிக் டன்கள் மட்டுமே அரைவைத் திறன் கொண்டவை. ஆகவே, இக்கழகம் கொள்முதல் செய்த மீதமுள்ள நெல்லை அரைப்பதற்கு பெருமளவு தனியார் அரைவை முகவர்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது. தனியார் அரைவை முகவர்களைச் சார்ந்திருப்பதை குறைக்கும் பொருட்டும், தரமான அரிசியைப் பெறுவதற்காகவும், இக்கழகம் சுமார் 950 இலட்சம் ரூபாய் செலவில் 8 புதிய நவீன அரிசி ஆலைகளை நிறுவ உத்தேசித்துள்ளது. இவை ஒவ்வொன்றும் வேகவைத்தல் மற்றும் உலர்த்தும் வசதிகளுடன் நாளொன்றுக்கு 100 டன்கள் அரைவைத்திறன் கொண்டவை.

89. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மத்திய அரசு ஒதுக்கீடு செய்யும் சர்க்கரை, கோதுமை, கோதுமைப் பொருட்கள், சமையல் எண்ணெய் ஆகிய பல பொருட்களுக்கு மொத்த விற்பனையாளராக செயல்படுகிறது. குறித்த நோக்கில் பாமோலின் எண்ணெய்யை எடுத்து விநியோகித்ததால், பிற சமையல் எண்ணெய்களின் விலை உயர்வை கட்டுப்படுத்துவதில் பெரும் பங்கு வகித்தது. இதைப் போன்றே, இக்கழகம் 7,000 டன்கள் சர்க்கரையை முடையிருப்பில் வைத்திருந்ததும், வெளிச் சந்தையில் சர்க்கரை விலையேற்றத்தை கட்டுப்படுத்த பெரிதும் உதவியது.

90. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மொத்த விற்பனையாளராக செயல்படுவதுடன், தஞ்சாவூர், திருநெல்வேலி, தர்மபுரி மற்றும் தென்ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் சில்லறை விற்பனையையும் மேற்கொண்டுள்ளது. இக்கழகம் குடும்ப அட்டைதாரர்களுக்கு இன்றியமையாப் பொருட்களை விநியோகிப்பதற்காக 4,430 ஊரகக் கடைகளையும் 656 நகர்புறக் கடைகளையும் நடத்தி வருகிறது. மாநிலத்திலுள்ள 118.88 இலட்சம் குடும்ப அட்டைகளில் 27.81 இலட்சம் குடும்ப அட்டைகள் இக்கழகத்தினால் நடத்தப்படும் நியாயவிலைக் கடைகளில் இணைக்கப்பட்டுள்ளன. இக்கழகம், சோப்பு, பிளேடு, சைக்கிள் டயர் மற்றும் டியூபுகள் போன்ற கட்டுப்பாடற்ற பொருட்களின் விற்பனையை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுத்து வருகிறது. 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 20.22 கோடியாக இருந்த இக்கழகத்தின் கிராமப்புற நியாயவிலைக் கடைகளின் மொத்த விற்பனை அளவு 1983-84 ஆம் ஆண்டில் ரூ. 35.89 கோடியாக உயர்ந்துள்ளது.

## XII தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்.

91. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் 1957 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு, 1958-59 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இந் நிறுவனம், விவசாய விளைப் பொருட்கள், எண்ணெய் வித்துக்கள், உரங்கள் மற்றும் ஏனைய விளைப் பொருட்களை தமிழகம் முழுவதும் சேமித்து வைப்பதற்கு விஞ்ஞான ரீதியில், நவீன முறையில் கிடங்குகளைக் கட்டியுள்ளது. இவற்றில் தனி நபர்கள், கூட்டுறவு இயக்கங்கள், தமிழக அரசு சார்பு நிறுவனங்கள், மத்திய அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் இதர தனியார் நிறுவனங்கள் தங்கள் சரக்குகளை நவீன முறையில் சேமித்து வைக்க வசதி செய்யப்படுகிறது. இந் நிறுவனம், இதன் கிடங்குகளில் சரக்கு வைப்பவர்களுக்கு உதவியாக சரக்குகளை வாங்கி அடுக்க ஆவன செய்து வருகிறது. இந் நிறுவனம் வெளி இடங்களுக்கும் சென்று சரக்குகளுக்கு மருந் தடித்தல் மற்றும் புகை மருந்தடித்தல் போன்ற பணியையும் ஆற்றி வருகிறது.

92. தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் பங்குத் தொகை, தமிழக அரசாலும், மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தாலும், 50 : 50 என்ற வீதத்தில் செலுத்தப்படுகிறது.



இந் நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட பங்குத் தொகை ரூ. 6 கோடி. இந் நிறுவனத்திற்கு 31—3—1984 வரை செலுத்தப் பட்ட மூலதனம் ரூ. 4.81 கோடி. இந்தத் தொகை தமிழக அரசாலும், மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தாலும் சரிசமமாகச் செலுத்தப்பட்டுள்ளது. 1984-85 ஆம் ஆண்டிற்கான பங்குத்தொகை ரூபாய் 40 லட்சம் அனுமதிக்கப்பட்டு தமிழக அரசின் பங்கான ரூ. 20 இலட்சம் செலுத்தப்பட்டுள்ளது: மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் பங்குத் தொகை இன்னும் பெறப்படவில்லை. தற்சமயம் இந்நிறுவனத்தின் செலுத்தப் பட்ட பங்கு மூலதனம் ரூ. 5.01 கோடி ஆக உள்ளது.

93. இந்நிறுவனம் 31—3—1984 நாள் வரை 2.65 இலட்சம் மெட்ரிக் டன் சேமிப்புக் கொள்ளளவு கொண்ட 104 கிடங்குகளை கட்டியுள்ளது. இந்நிறுவனம் 1984-85 ஆம் ஆண்டில், இதற்கு முந்தைய ஆண்டுகளில் மீதமிருந்த 15,000 மெட்ரிக் டன்கள் சேமிப்புக் கொள்ளளவு உள்ள கிடங்கு கட்டுமான வேலைகளுடன், 57,000 மெட்ரிக் டன் சேமிப்புக் கொள்ளளவு கொண்ட புதிய கட்டுமான வேலைகளையும் முடித்துள்ளது. இந் நிறுவனம் 1984-85 ஆம் ஆண்டில் 72,000 மெட்ரிக் டன் சேமிப்புக் கொள்ளளவு கொண்ட கிடங்குகளை கட்டி முடித்துள்ளது. இதையும் சேர்த்து 1984-85 ஆம் ஆண்டு இறுதியில் இந் நிறுவனம் 3.37 இலட்சம் மெட்ரிக் டன்கள் சேமிப்பு கொள்ளளவு உள்ள கிடங்குகளைக் கட்டி முடித்துள்ளது. இத்துடன் 69,000 மெட்ரிக் டன்கள் வாடகைக்கு எடுக்கப்பட்ட கிடங்குகளையும் சேர்த்து இந் நிறுவனம் தற்போது 4.06 இலட்சம் மெட்ரிக் டன்கள் சேமிப்புக் கொள்ளளவு கொண்ட கிடங்குகளை நிர்வகித்து வருகிறது.

94. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 1.22 இலட்சம் மெட்ரிக் டன்கள் கூடுதலாக சேமிப்புக் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்குகளை கட்டும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இந் நிறுவனம் 1.75 இலட்சம் மெட்ரிக் டன்கள் சேமிப்புக் கொள்ளளவு கொண்ட கிடங்குகளை கட்டி முடித்து அதற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் 140 விழுக்காட்டை எய்தியுள்ளது.

[1985 ஜூன் 17

95. இந் நிறுவனம் மொத்தத்தில் 4 இலட்சம் மெட்ரிக் டன்கள் சேமிப்புக் கொள்ளளவு கொண்ட கிடங்குகளை நிர்வகித்து வருகின்ற போதிலும், மாநிலத்தில் சேமிப்புக் கிடங்கு வசதியில் ஒரு பெரிய இடைவெளியிருப்பது உணரப்படுகிறது. இந் நிறுவனம், அதன் கிடங்குகளில் மிகச் சிறிய சரக்கு வைப்பவர்கள், மற்றும் விவசாயிகள் ஆகியோரின் சரக்குகளை ஏற்றுக் கொள்ளுவதுடன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், இந்திய உணவுக் கழகம் ஆகிய முகமைகள் கொள்முதல் செய்த உணவுப் பண்டங்களையும், விவசாயத்திற்குத் தேவையான இடு பொருள்களான உரம் முதலியவைகளையும் சேமித்து வைக்க முயற்சி செய்கிறது. உற்பத்தித் திட்டத்தைக் கருத்தில் கொண்டு, வரும் ஆண்டுகளுக்கான சேமிப்புக் கிடங்குகளுக்கானத் தேவை பகுத்தாயப்பட்டது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், மாநிலத்தில் உள்ள மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், இந்திய உணவுக் கழகம், வேளாண்மை விற்பனைச் சங்கங்கள், ஏனைய பிற நிறுவனங்களால் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட கிடங்கு வசதிகள் நீங்கலாக 6 இலட்சம் மெட்ரிக் டன்கள் சேமிப்புக் கொள்ளளவு தேவை என இந் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இந் நிறுவனம் ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 2 இலட்சம் மெட்ரிக் டன்கள் சேமிப்புக் கொள்ளளவும் திறனை ஏற்படுத்த திட்டத்தை சமர்ப்பித்துள்ளது.

96. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் கொள்முதல் இயக்கங்களில் சேமிப்புக் கிடங்கு வசதிகளை பெறுவதில் அடையும் இன்னல்களை களையும் பொருட்டு இந் நிறுவனம் அடுத்து வரும் இரண்டாண்டு காலத்தில் சுமார் 1.5 இலட்சம் மெட்ரிக் டன் சேமிப்புக் கொள்ளளவு கொண்ட கிடங்குகளைக் கட்ட பொறுப்புறுதி கட்டுமான திட்டத்தை இக் கழகத்துடன் இணைந்து செயல்படுத்த முனைந்துள்ளது. இதனையும் சேர்த்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஏற்கெனவே இந் நிறுவனத்திடம் பெற்றுள்ள 1.5 இலட்சம் மெட்ரிக் டன்கள் சேமிப்பு வசதியுடன் இக் கழகத்திற்கு 3 இலட்சம் மெட்ரிக் டன்களுக்குக் குறையாமல் சேமிப்பு வசதி செய்து தர இந் நிறுவனம் கருதியுள்ளது.



1985 ஜூன் 17]

97. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் கடந்த பல ஆண்டுகளாக தொடர்ந்து இலாபத்தில் இயங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம். இந் நிறுவனத்தின் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான செயல் திறன் கீழே தரப்பட்டுள்ளது :—

| ஆண்டு. | இலாபம். (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1979-80 | 22.35 |
| 1980-81 | 24.62 |
| 1981-82 | 69.31 |
| 1982-83 | 84.58 |
| 1983-84 | 100.10 |

98. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின், 1983-84 ஆம் ஆண்டுக்கான லாப ஈவுத் தொகையாக ரூ. 13.79 இலட்சம் தமிழக அரசுக்கு வழங்கப்பட்டுவிட்டது.

99. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின், 1983-84 ஆம் ஆண்டின் கணக்குகள் தணிக்கைக்கு பின்பு, 21—9—1984 அன்று பங்குதாரர் கூட்டத்தில் வைக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டது.